# எதிர்காலத்திற்கான
# சக்தி



**சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடெட்**

**ஆண்டறிக்கை - 2022**



# எதிர்காலத்திற்கான

சக்தி



# உள்ளடக்கம்


| | |
|---|---|
| நிறுவனம் பற்றிய தகவல்கள் | 05 |
| செயலாற்றுகை சிறப்புக்கூறுகள் | 10 |
| ஓரே பார்வையில் ஆண்டு | 12 |
| எமது தலைமைத்துவம் | 14 |
| தலைவரின் செய்தி | 16 |
| பணிப்பாளர் சபை | 20 |
| சிரேஷ்ட முகாமைத்துவ அணி | 26 |
| முகமைத்துவக் கலந்தரையாடல்கள் மற்றும் பகுப்பாய்வு | 31 |
| தொழிற்படுகின்ற சூழல் | 32 |
| நிதியியல் மூலதனம் | 44 |
| தயாரிக்கப்பட்ட மூலதனம் | 48 |
| மனித மூலதனம் | 55 |
| ஆளுகையும் இணங்குவித்தலும் | 64 |
| நிறுவன ஆளுகை | 66 |
| இடர்நேர்வு முகாமைத்துவம் | 78 |
| பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கை | 89 |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அறிக்கை | 92 |
| நிதி அறிக்கைகள் | 96 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 98 |
| நிதியியல் நிலைக் கூற்று | 111 |
| அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்று | 112 |
| பங்குரிமையில் மாற்றங்கள் கூற்று | 113 |
| காசுப் பாய்ச்சல் கூற்று | 114 |
| நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள் | 115 |
| விரிவான வருமானக் கூற்று | 151 |
| ஐந்து வருடகால நிதியியல் தொகுப்பு | 153 |

# நிறுவனம் பற்றிய தகவல்கள்

**நிறுவனத்தின் பெயர்**
சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடெட்

**சட்ட வடிவம்:**
அரசாங்கத்திற்கு உரித்தான வியாபாரத்தை பொதுக் கம்பனிகளாக மாற்றும் சட்டத்தின் 2 (1) ஆம் பிரிவின் நியதிகளுக்கு அமைவாக 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டது.

**பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்:**
நிரப்பு நிலையம், கொலன்னாவ
வெல்லம்பிட்டிய, இலங்கை

**தொலைபேசி**
+94 11 2694482
+94 11 2691643
+94 11 2532122
தொலைநகல் +94 11 2547827
மின்னஞ்சல் secret@cpstl.lk
இணையத்தளம் www.cpstl.lk

**வரி செலுத்துநர் அடையாள இல.:**
134011157

**நிதி ஆண்டு**
சனவரி 01 முதல் டிசம்பர் 31 வரை

**தலைவர்/முகாமைத்தவப் பணிப்பாளர்**
திரு. எம். உவைஸ் மொஹமட்

**பணிப்பாளர்கள்**
திரு. ஈ.ஏ. ரத்னசீல
திரு. திபக் தாஸ்
திரு. அசீம் பர்காவா
திரு. ராஜேஸ் குமார் பகாட்
திரு. டி.ஜி.ஆர். மனோஜ் குமார்
திரு. தர்மதாச பண்டிதரத்தன
திரு யசிரு லங்காதிலக்க

**தாய் நிறுவனம்**
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

**செயலாளர்கள்**
எக்கவுன்டிங் சிஸ்டம்ஸ் சேரவிஸஸ் (பிரைவெட்) லிமிடெட். இலக்கம் 11, காஸல் லேன், கொழும்பு 04

**கணக்காய்வாளர்**
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

**வங்கியாளர்கள்**
மக்கள் வங்கி, இலங்கை வங்கி



# தொலைநோக்கு

தெற்காசியாவில் மிகவும் வினைத்திறன்மிக்க பெற்றோலிய முனையத்தொழிற்படுத்துனராக திகழ்தல்.

# பணி

பங்தாரர்களின் எதிர்பார்க்கைகளை நிறைவுசெய்கின்ற மற்றும் வாடிக்கயாளர் திருப்தி மட்டத்தினை உணர்ந்து கொள்ளத்தக்க அத்துடன் தொடர்ச்சியான மேம்படுத்தலுக்கு அர்ப்பணித்துள்ள அதேவேளை முனைய வசதி பயன்பாட்டாளர்களுக்கு/வாடிக்கயாளர்களுக்கு வழங்கப்படுகின்ற பெற்றோலிய உற்பத்திகளின் தரத்தினை உறுதிசெய்தல், வாடிக்கையார்களினதும் பொதுமக்களினதும் பின்னூட்டல் மூலம் வழிநாடாத்தப்படும் விசுவாசமிக்க, கடுமையக முயற்சிக்கின்ற, சிறப்பாக பயிற்றப்பட்ட தொழிற்டையின் அர்ப்பணிப்புமிக்க பங்கேற்பின் ஊடாக செயற்பாட்டிலுள்ள ஆரோக்கிய, சுற்றாடல் மற்றும் பாதுகாப்பு தரநியமங்களுக்கு கௌரவமளித்து நாட்டில் மிகவும் வினைத்திறன்மிக்க முனையத்தொழிற்படுத்துனராக திகழ்தல்.

# எம்மைப் பற்றி

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட் (சிபெஸ்டேலி) நிறுவனமானது 2003 ஒக்டோபர் 13 ஆம் திகதிய 1310/8 ஆம் இலக்கத்தினை உடைய அதி விசேட அரசாங்க வர்த்தமானியில் மேலும் விபரிக்கப்பட்ட எரிபொருள் முனையங்கள், களஞ்சிய வசதிகள், குழாய் இணைப்பு மற்றும் பௌசர் தொகுதி ஆகிவற்றை உள்ளடக்குகின்ற பொதுப் பயன்பாட்டாளர் வசதியாக 1987 இன் 23 ஆம் இலக்க பொதுக் கூட்டுத்தாபனம் அல்லது அரசாங்கத்திற்கு உரித்தான வியாபாரத்தை பொதுக் கம்பனிகளாக மாற்றும் சட்டத்தின் 2 (1) ஆம் பிரிவின் நியதிகளுக்கு அமைவாக 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் முறையாக கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகும்.

இலங்கையில் நாம் மூன்றாம் நிலை பெற்றோலிய உற்பத்திகளைக் கையாளுவதற்கும் முகாமைசெய்வதற்கும் அதி நவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய பெற்றோலிய மொத்தக் களஞ்சிய மற்றும் விநியோக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள கம்பனியாவோம். ஆரோக்கியமான மற்றும் போட்டிமிக்க எரிபொருள் களஞ்சியப்படுத்தலையும் வினியோகத்தையும் கட்டியெழுப்பவதன் ஊடாக இலங்கையின் அபிவிருத்திப் பயணத்திற்கு ஆதரவளிப்பதற்கான எமது அர்ப்பணிப்பபை எடுத்தக்காட்டி, எமது பங்குதாரர் பெறுமதி மெய்ப்பித்தல்களை நாம் தொடர்ந்தும் நிலையாக மேம்படுத்தி வருகின்றோம்.

இந்நிறுவனமானது பங்குரிமைமூலதனத்தின் 2/3 பங்கை உரிமையாக் கொள்கின்ற இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் துணை நிறுவனமாவதுடன் மீதி லங்கா ஐஓசி பீஎல்சி நிறுவனத்திற்கு சொந்தமானது. சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட், இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியை மெய்ப்பிப்பதற்கு தாய் நிறுவனத்தின் கிட்டத்தட்ட ஆறு தசாப்த கால அனுபவத்திலிருந்தும் நிபுணத்துவத்திலிருந்தும் பயனடைந்து சக்தித் துறையில் புத்தாக்கத்தைச் செலுத்தி நிலைபெறுதன்மையினை உறுதிசெய்கின்றது.
நாட்டின் சில்லறை நுகர்வோரினதும் பொருளாதார அபிவிருத்தி செயன்முறையில் ஈடுபட்டுள்ள பல்வேறு கைத்தொழில் துறைகளிலும் காணப்படுகின்ற அதிக எண்ணிக்கையிலான மொத்த நுகர்வோர்களினதும் சக்திக்கான கேள்வியினை நிறைவுசெய்வதற்கும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கும் இலங்கை லங்கா ஐஓசி பீஎல்சி நிறுவனத்திற்கு உரித்தான நாடுமுழுவதும் சுமார் ஆயிரம் சில்லறை விநியோக நிலையங்களுக்கு சேவையளிக்கின்றோம். கம்பனியின் பல்வேறு நடவடிக்கைகளில் சுமார் 2,500 ஊழியர்களின் ஊக்கமிக்க பங்களிப்புடன் களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோக வலையமைப்பு என்பவற்றில் ஈடுபட்டுள்ள 11 மொத்தச் சாலைகள் மூலம் துணையளிக்கப்படும் இரண்டு பிரதான முனையங்கள் காணப்படுகின்றன.

கொலன்னாவ நிலையமானது 13 பெற்றோலிய உற்பத்திகளை கையாளுகின்ற அதேவளை முத்துராஜவெல நிலையம் 3 பெற்றோலிய உற்பத்திகளை கையாளகின்றது.

பிரதான முனையங்கள்
- கொலன்னாவ நிரப்பு நிலையம் மற்றும் முத்துராஜவெல முனையம்

மொத்தச் சாலைகள்
- அநுராதபுரம்
- கொட்டகல
- மட்டக்களப்பு
- மாத்தறை
- ஹபுதளை
- சரசவி உயன
- பதுளை
- குருநாகல்
- காலி
- பேராதனை
- காங்கேசன்துறை

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் விநியோகத் தொழிற்பாடானது இரண்டு சந்தைப்படுத்தும் கம்பனிகளான இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா ஐஓசி பீஎல்சி இரண்டின் சார்பிலும் உற்பத்திகளை விநியோகிப்பதனை பொறுப்பேற்கின்றது. கொலன்னாவ மற்றும் முத்துராஜவெல ஆகிய இடங்களில் இரண்டு பிரதான முனையங்கள் காணப்படுகின்றன. நாடுபூராகவும் பெற்றோலிய உற்பத்தி விநியோகத்தினை வலுப்படுத்தும் பொருட்டு சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட் 11 வெளிப்பிரதேச மொத்தச் சாலைகளையும் ஒரு உள்நாட்டு புகையிரத ஓரச்சாலையினையும் தொழிற்படுத்துகிறது. இவ்வமைவிடங்களுக்கும் உள்நாட்டு புகையிரத ஓரச்சாலைக்கும் உற்பத்திகளின் நிறைவாக்கம் கொலன்னாவ விநியோக நிலையத்தில் ஏற்றப்படும் புகையிரதக் கொள்கலன்கள் மற்றும் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட் அத்துடன் பிரதான முனையங்களில் இருந்து வாடகைக்கு அமர்த்தப்பட்ட வீதித்தாங்கிகள் என்பவற்றை பயன்படுத்தி வீதி மூலமும் மேற்கொள்ளப்படுகின்றன. விமான எரிபொருட்கள் கொலன்னாவ நிலையத்தில் மாத்திரம் களஞ்சியப்படுத்தப்பட்டு புகையிரதம் மூலம் நாளாந்த அடிப்படையில் கட்டுநாயக்காவில் உள்ள பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையத்திற்கு அனுப்பப்படுகின்றது. இரத்மலானை மற்றும் இலங்கை விமானப்படையினால் தொழிற்படுத்தப்படுகின்ற ஏனைய விமானத் தளங்களுக்காக வீதி மூலம் எரிபொருள் வசதி அளிக்கப்படுகின்றது. முத்துராஜவெல முனையங்களில் குறைந்த கந்தக உலை எண்ணெய் மாத்திரம் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதுடன் கெரவலப்பிட்டிய மின்னுற்பத்தி நிலையமான ஒரேயொரு வாடிக்கையாளருக்கு ஒதுக்கப்பட்ட குழாய் இணைப்பு ஊடாக அனுப்பப்படுகின்றது.


காங்கேசன்துறை
பிரதான முனையங்கள்
மொத்தச் சாலைகள்
அநுராதபுரம்
மட்டக்களப்பு
குருநாகல்
முத்துராஜவெல
கொலன்னாவ
பேராதனை
சரசவி உயன
கொட்டகல
பதுளை
ஹபுதளை
காலி
மாத்தறை

# செயலாற்றுகை சிறப்புக்கூறுகள்

| | | | 2022 | 2021<br>(மீளக்குறிப்பிட பட்டது) | 2020 | 2019 | 2018 | 2017 |
|---|---|---|---|---|---|---|---|---|
| நிதி மூலதனம் | உபாய முன்னுரிமை:<br>நிதியியல் வளர்ச்சி | | | | | | | |
| | வருவாய் | ரூ. மில். | 9,433 | 14,276 | 13,568 | 15,340 | 13,130 | 14,176 |
| | தொழிற்பாட்டு இலாபம் | ரூ. மில். | (989) | 1,377 | 1,906 | 1,966 | 1,405 | 3,208 |
| | வரிக்கு முன்னர் இலாபம்/(நட்டம்) | ரூ. மில். | (704) | 1,578 | 2,215 | 2,289 | 1,522 | 3,273 |
| | வரிக்கு பின்னர் இலாபம்/(நட்டம்) | ரூ. மில். | (1,059) | 1,169 | 2,001 | 1,305 | 197 | 2,800 |
| | பங்குரிமைமூலதனம் மீதான ஆதயம் | % | -4% | 4% | 7% | 5% | 1% | 11% |
| | நிதியியல் உறுதிப்பாடு | | | | | | | |
| | மொத்த சொத்துகள் | ரூ. மில். | 33,481 | 33,999 | 32,588 | 31,522 | 30,322 | 29,991 |
| | மொத்த பொறுப்புகள் | ரூ. மில். | 6,252 | 5,999 | 5,369 | 5,773 | 5,556 | 4,828 |
| | பங்குதாரர் நிதியம் | ரூ. மில். | 27,229 | 28,000 | 27,218 | 25,749 | 24,766 | 25,163 |
| | காசு மற்றும் காசுக்கு சமனானவை | ரூ. மில். | 2,006 | 2,257 | 3,442 | 3,999 | 3,149 | 1,474 |
| | பங்குதாரர் தகவல்கள | | | | | | | |
| | ஒரு பங்கிலிருந்தான ஆதாயம் | ரூ. | (1.41) | 1.56 | 2.67 | 1.74 | 0.26 | 3.73 |
| | ஒரு பங்கிற்கான பங்கிலாபம் (கொடுப்பனவு செய்யப்பட்டது) | ரூ. | - | - | 0.48 | 0.30 | 0.868 | 0.54 |
| தயாரிக்கப்பட்ட மூலதனம் | **ஒரு பங்கிற்கான தேறிய சொத்துப் பெறுமதி** | ரூ. | 36 | 37 | 36 | 34 | 33 | 33 |
| | சேர்க்கப்பட்ட பொருளாதாரப் பெறுமதி | ரூ. மில். | (704) | 1,812 | 2,458 | 2,319 | 1,613 | 3,616 |
| | உபாய முன்னுரிமை: தொழிற்பாட்டு உன்னதம் | | | | | | | |
| | ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | | | | | | | |
| | முனையங்கள் மற்றும் சாலைகள் | எண் | 13 | 13 | 13 | 13 | 13 | 14 |
| | மூலதனச் செலவினம் | ரூ. மில். | 925 | 1,358 | 1,085 | 981 | 375 | 833 |
| மனித மூலதனம் | உபாய முன்னுரிமை:<br>மக்கள் மீது முதலிடுதல் | | | | | | | |
| | மொத்த ஊழியர்கள் | எண் | 2,474 | 2,629 | 2,766 | 2,856 | 2,932 | 3,045 |
| | பெண்கள் பிரதிநிதித்துவம் | எண் | 308 | 343 | 321 | 326 | 334 | 343 |
| | மொத்த ஊழியர்கள் | ரூ. மில். | 6,745 | 6,908 | 5,918 | 6,636 | 6,853 | 5,570 |
| | ஊழியர் ஊதிய வீதம் | மூ | 6% | 6% | 4% | 5% | 6% | 1% |
| | பயிற்சியில் முதலீடுகள் | ரூ. மில். | 2 | 3 | 4 | 17 | 22 | 32 |
| | மொத்த பயிற்சி மணித்தியாலங்கள் | மணி | 5,006 | 3,806 | 6,245 | 9,706 | 12,609 | 21,832 |
| | ஊழியரொருவருக்கான சராசரி பயிற்சி மணித்தியாளங்கள் | மணி | 8 | 4 | 6 | 5 | 7 | 9 |
| | ஊழியரொருவருக்கான வருவாய் | ரூ. மில். | 3.81 | 5.43 | 4.91 | 5.37 | 4.48 | 4.66 |
| | ஊழியரொருவருக்கான தேறிய இலாபம் (நட்டம்) | ரூ. மில். | (0.43) | 0.44 | 0.68 | 0.42 | 0.09 | 0.89 |
| சமூக மற்றும் உறவு மூலதனம் | மறைமுக ஊழியர் (அண்ணளவாக) | எண் | 70 | 75 | 61 | 71 | 63 | 105 |
| | வாடிக்கையாளர் தொடர்பு மையங்கள் | எண் | 40 | 40 | 40 | 40 | 40 | 40 |
| | நிறுவன சமூக பொறுப்புகளில் முதலீடு | ரூ. மில். | 0.3 | 6.5 | 1.7 | 3.8 | 2.1 | 6.1 |
| | பயன்பெறுனர்களின் எண்ணிக்கை (அண்ணளவாக) | எண் | 775 | 8,600 | 4,000 | 8,800 | 8,700 | 8,500 |
| இயற்கை மூலதனம் | அரசாங்கத்திற்கான பங்களிப்பு | ரூ. மில். | 1,796 | 1,608 | 1,683 | 2,441 | 2,579 | 2,175 |
| | உபாய முன்னுரிமை: நிலைபெறுதன்மை | | | | | | | |
| | வலுச்சக்தி நுகர்வு | கிவோம | 4,717,569 | 5,342,888 | 5,602,794 | 6,360,903 | 6,397,024 | 5,554,900 |
| | நீர் நுகர்வு | கி லீ | 204,872 | 280,239 | 270,023 | 299,011 | 333,344 | 276,214 |
| | கசடு அகற்றல் | கி லீ | 99.6 | 32.4 | 244.2 | 118.8 | 165 | - |



# ஒரே பார்வையில் ஆண்டு

**விற்பனை அளவு**

**3,954,237** கி லீ

**வருவாய்**

ரூ. **9.43** பில்லியன்

**சொத்து தளம்**

ரூ. **33.5** பில்லியன்

**வரிக்குப் பிந்திய இலாபம்**

ரூ. **-1.0** பில்லியன்













மொத்த சொத்து வளர்ச்சி (ரூ. மில்)
40,000
35,000
30,000
25,000
20,000
15,000
10,000
5,000
-
2017
2018
2019
2020
2021
2022
நடைமுறையற்ற சொத்துகள்
நடைமுறைச் சொத்துகள்


பங்குரிமை மூலதனம் மீதான ஆதாயம் %
15%
10%
5%
0%
-5%
2017
2018
2019
2020
2021
2022


நடைமுறை/துரித சொத்து விகிதம் (தடவைகள்)
9.00
8.00
7.00
6.00
5.00
4.00
3.00
2.00
1.00
0.00
2017
2018
2019
2020
2021
2022
நடைமுறைச் சொத்து விகிதம்
துரித சொத்து விகிதம்


பங்கொன்றிற்கான தேறிய சொத்துப் பெறுமதி (ரூ.)
38
36
34
32
30
2018
2019
2020
2021
2022


சொத்து புரள்வு விகிதம்
60%
50%
40%
30%
20%
10%
0%
2017
2018
2019
2020
2021
2022


கடன்பெற்ற நிதியத்திற்கான பங்குரிமை விகிதம் (தடவை)
0.24
0.23
0.22
0.21
0.20
0.19
0.18
0.22
0.22
0.20
0.21
0.23
2018
2019
2020
2021
2022

# எமது  தலைமைத்துவம்



# தலைவரின் செய்தி

"இலங்கைப் பொருளாதாரமானது பொருளாதார இன்னல்கள் மற்றும் கொள்கைக் குறைபாடுகள் மூலம் உருவான சவால்களை இக்காலப் பகுதியில் எதிர்கொண்டது. பொறுப்புமிக்க தொழில் நடத்தைகள் மற்றும் நிறுவனப் பிரசை ஆகியன ஊடாக தேசியப் பொருளாதார உறுதிப்பாட்டுக்கு ஆதரவளிப்பதற்கு சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடெட் இச்சவால்களை முறியடிப்பதற்கு அர்ப்பணித்து காணப்பட்டது."



2022 ஆம் ஆண்டுக்கான சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடெட் ஆண்டறிக்கையினை பணிப்பாளர் சபை சார்பில் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். 2022 இல் உலகளாவிய எரிபொருள் கைத்தொழில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை அனுபவித்ததுடன் முக்கிய சவால்களையும் எதிர்கொண்டது. 2022 ஆம் ஆண்டில், உலகளாவிய எண்ணெய் கைத்தொழில் கணிசமான மாறுதல்களைக் கண்டதுடன் குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொண்டது. 2020 இல் கொவிட்-19 தொற்றுநோயால் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியைத் தொடர்ந்து, 2022 இல் எண்ணெய் விலையில் குறிப்பிடத்தக்க மீட்சி இடம்பெற்றது.

மீளாயப்படுகின்ற நிதியாண்டில் எமது சேவைகள் எதிர்கொண்ட சவால் மிக்க தொழிற்பாட்டு தோற்ற மைப்புக்கு மத்தியில் உள்நாட்டு மற்றும் பேரண்ட சூழல்களின் அபிவிருத்தியிலிருந்து உருவான அதேபோன்று பெற்றோலிய தொழிற்துறையில் துறைக்கு குறிப்பான சவால்கள் என்பவற்றுக்கு மத்தியில் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடடெட் தெற்காசியாவில் மிகவும் வினைத்திறன்மிக்க பெற்றோலிய முனையத் தொழிற்பாட்டாளராக உருவாவதற்கான அதன் பயணத்தை தொடர்ந்தும் முன்னெடுத்தது. எமது நிபுணத்துவம் மிக்க தொழில்சார் நிபுணர்களின் அர்ப்பணிப்பு மற்றும் விசுவாசம், திருப்தி அத்துடன் நன்கு பயிற்றப்பட்ட தொழிற்படையின் அயராத ஆதரவு என்பன ஊடாக இது சாத்தியமாக்கப்பட்டது.

**தொழிற்பாட்டுக் கட்டமைப்பு:**

2022 ஆம் ஆண்டில், வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மைப் பற்றாக்குறை காரணமாக இலங்கை கடுமையான எரிபொருள் நெருக்கடியை சந்தித்தது. இந்நெருக்கடி சமூக அமைதியின்மை, பதுக்கல் மற்றும் எரிபொருள் நிலையங்களில் நீண்ட வரிசைகளுக்கு வழிவகுத்தது. நெருக்கடியைத் தணிக்க, அரசாங்கம் குறுகிய கால கடன் வசதிகளைப் பெற்று, விலைச் சூத்திரங்களைத் திருத்தியதுடன் எரிபொருள் விநியோகத்தை நிர்வகிப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகளை செயற்படுத்தியது. ஏற்றுமதியாளர்களுக்கான முன்னுரிமை முறைமைகள், கியூஆர் குறியீடு அடிப்படையிலான எரிபொருள் விநியோகம் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கான முற்கொடுப்பனவு அட்டைகள் ஆகியவை இதில் அடங்கும்.

2022 ஆம் ஆண்டில், உலகளாவிய எண்ணெய் கைத்தொழில் கணிசமான மாறுதல்களைக் கண்டதுடன் குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொண்டது. 2020 இல் கொவிட்-19 தொற்றுநோயால் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியைத் தொடர்ந்து, 2022 இல் எண்ணெய் விலையில் குறிப்பிடத்தக்க மீட்சி இடம்பெற்றது. பல்வேறு காரணிகளால் செலவாக்குச்செலுத்தி உலகளாவிய மசகு எண்ணெய் விலைகள் குறிப்பிடத்தக்க ஏற்ற இறக்கங்களை வெளிப்படுத்தின. ஆரம்பத்தில், ஆண்டின் முதல் பாதியில் விலைகள் அதிகரித்தன, மார்ச் மாதத்தில் ப்ரெண்ட் மசகு எண்ணெய் ஒரு பீப்பாய்க்கு ஐ.அ.டொலர் 140 ஆக உயர்ந்தது. இவ் அதிகரிப்புக்கு கிழக்கு ஐரோப்பாவின் புவிசார் அரசியல் பதட்டங்கள் மற்றும் பாரிய பெற்றோலிய ஏற்றுமதியாளரான ரஷ்யா மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகள் என்பன முதன்மையாக காரணமாகக் கூறப்பட்டது. எவ்வாறாயினும், ஆண்டின் இரண்டாம் அரை தொடங்குகையில், உலகளாவிய பொருளாதார மந்தநிலை பற்றிய கவலைகள் காரணமாக கீழ்நோக்கிய அழுத்தங்கள் வெளிப்பட்டன.

இக்காலகட்டத்தில் இலங்கையின் உள்நாட்டுப் பொருளாதாரம் சவால்களை எதிர்கொண்டது, இது பொருளாதார சிக்கல்கள் மற்றும் கொள்கை குறைபாடுகளால் வகைப்படுத்தப்பட்டது. இச்சவால்கள் முழுவதும், சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடெட், பொறுப்பான வணிக நடைமுறைகள் மற்றும் நிறுவன பிரசை மூலம் தேசிய பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு துணையளிப்பதில் உறுதியாக இருந்தது.

**மூலதனச் சொத்து:**

2022 இல் சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேமினல் லிமிடெட் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வருவாயில் 34 சதவீத குறைவு உள்ளடங்கலாக குறிப்பிடத்தக்க பொருளாதார சவால்களை எதிர்கொண்டது. இவ்வீழ்ச்சிக்கு எரிபொருள் விநியோகச் சங்கிலி

# தலைவரின் செய்தி

நெருக்கடிக்கு மத்தியில் எரிபொருள் கையிருப்பு பற்றாக்குறைகளின் பெறுபேறு, குறைவடைந்த வியாபார அளவுகள் என்பன 2021 உடன் ஒப்பிடுகையில் விற்பனை அளவுகளில் 17 சதவீத வீழ்ச்சிக்கு வழிவகுத்தமை பிரதான காரணமாக அமைந்தது. இவ்வீழ்ச்சியானது வருமானத்தில் விளைவுத் தாக்கத்தினை கொண்டிருந்து, மொத்த இலாபத்தில் 56 சதவீத குறைவினை ஏற்படுத்தி மொத்த இலாப எல்லையினை 2021 இன் 41 சதவீதத்திலிருந்து 2022 இல் 28 சதவீதமாக குறைத்தது. இதன் விளைவாக 2021இல் 10 சதவீத தொழிற்பாட்டு இலாப எல்லையுடன் ஒப்பிடுகையில் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடெட் 2022இல் 0.9 பில்லியன் கொண்ட தொழிற்பாட்டு நட்டத்தினை பதிவுசெய்தது.

இவ்வாறான சிக்கல்களுக்கு மத்தியில் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடெட், உபாய சரிப்படுத்தல்களில் நம்பிக்கை மற்றும் தோற்றம்பெறுகின்ற வியாபார சூழல் அமைப்பில் பயணிப்பதற்கான முன்னோக்கிய சிந்தனை அணுகுமுறை, வலிமையாகவும் விரைவாகவும் தோற்றம் பெற்று சுபீட்சம்மிக்க கம்பனியாக இடம்பெறுவதுடன் இம்மோசமான நிலையினை வெற்றி கொள்வதற்கு அர்ப்பணித்து காணப்படுகின்றது.

**உருவாக்கப்பட்ட சூழல்:**

2004 இல் நிறுவப்பட்ட சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடெட் முத்துராஜவெல முனையம் தொடக்கத்தில் 52 ஊழியர்களுடன் நாளாந்தம் 500 மெ.தொ டீசல். உலை எண்ணெய், மற்றும் மண்ணெணய் என்பவற்றை கையாண்டது. தற்போது அதிகரித்த எரிபொருள் கேள்வியின் காரணமாக அது 306 ஊழியர்களுடன் நாளாந்தம் 6000 மெ.தொ எரிபொருட்களை முகாமைசெய்கின்றது. இதன் கொள்ளளவினை அதிகரிப்பதை எதிர்கால திட்டங்கள் இலக்காக கொண்டுள்ளன. அரைவாசியளவு தன்னியக்கமாக்கப்பட்ட முனையமானது வீதித் தாங்கிகளுக்கு பணி நிறைவு செய்வதற்கான நேரத்தினை விரைவுபடுத்தல், துறைமுக கட்டணங்களின்றி இறக்கும் மிதவை - 2 இலிருந்து நேரடியாக மாற்றுதல் என்பன போன்ற வினைத்திறன் மிக்க அனுகூலங்களை வழங்குகின்றது. வெளிச்சுற்றுவட்ட அதி வேகப் பாதை நுழைவாயிலில் அதன் உபாய ரீதியான அமைவிடம் நாடு பூராகவும் செலவுச் சிக்கனமிக்க விநியோகத்தை இயலச்செய்கின்றது.

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடெட் நிலைத்தூண் நிரப்பு இயலளவினை விசேடமாக பெற்றோலுக்காக மேம்படுத்துவதற்கு உத்தேசிக்கின்றது. 7 ஆம் வலயத்தில் உயர் இயலளவுடன் கூடிய பம்பிகளை பொருத்துதல் 6 ஆம் வலயத்தில் புதிய உற்பத்திப் பம்பி நிலையத்தினை நிர்மாணித்தல் (ரூ. 36 மில்லியன்) மற்றும் குழாய்களுக்காக அகழிகளை தோண்டுதல் போன்ற 2024இன் ஆரம்பப் பகுதியில் நிறைவுசெய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற பணிகளை உள்ளடக்குகின்றது.

அமெரிக்க பெற்றோலிய நிறுவனத்தின் பரிந்துரைகளுக்கு அமைவாக சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடெட் ஆவியாகும் இழப்புகளை குறைப்பதற்க உள்ளக மிதக்கும் கூரைகளை அறிமுகப்படுத்துகின்றது. உள்ளக மிதக்கும் கூரைகள் 2023 டிசம்பர் அளவில் லங்கா மொத்தச் சாலை மாகல்ல இல் 4ஆம் இலக்க தாங்கி மற்றும் 5 ஆம் இலக்க தாங்கி என்பவற்றை நிறைவு செய்வதற்கான திட்டங்களுடன் கொலன்னாவ நிரப்பு நிலையத்திலும் லங்கா மொத்த சாலைகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

குருநாகல் லங்கா மொத்தச் சாலை கருத்திட்டமானது புதிய நிரப்பு நிலைத்தூண், உற்பத்தி குழாய், உள்ளக மிதக்கும் கூரையுடன் கூடிய LS 92 களஞ்சிய தாங்கிக்கான தீயணைப்பு நுழை ஊட்டற் குழாய்கள் மற்றும் பாதுகாப்புக்கான தாங்கி புகட்டல் குழாய் இணைப்புகள் என்பவற்றை ஈடுபடுத்துகின்றது. 80 சதவீதமான பணிகள் நிறைவுசெய்யப்பட்டு 2023 பெப்ரவரியில் நிறைவு செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**தேர்ச்சிகளின் சேமிப்பகம்:**

நிறுவனம், ஊழியர்களின் அறிவு திறன்கள், அனுபவம் என்பவற்றை உள்ளடக்குகின்ற அதன் மனித மூலதனத்தை உயர்வாக மதிக்கின்றது. அதன் வெற்றிக்கு ஊழியர்கள் மிக முக்கியமானவர்கள் என்று அது நம்புவதுடன் அவர்களின் தொழில் வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதற்கும் அவர்களது வகிபாகங்களை

அங்கீகரிப்பதற்கும் அர்ப்பணித்துள்ளது. ஊக்கமளிக்கின்ற பணியாற்றும் சூழலை தோற்றுவிப்பதை நிறுவனம் முன்னுரிமைப்படுத்தியுள்ளதுடன் ஊழிய உற்பத்திறனை அதிகரிப்பதற்கு ஆளுகை கட்டமைப்புகள் செயற்படுத்தப்பட்டுள்ளது.

அதன் ஊழியர் படை அதன் உபாய குறிக்கோள்களை எய்துகின்ற அதேவேளை நிறுவன விழுமியங்களை நிலைநிறுத்துகின்ற 2,474 ஊழியர்களை கொண்டுள்ளது. எதிர்கால தொழில் கேள்விகளை நிறைவுசெய்வதற்கு முன்னோக்கி கற்பதன் முக்கியத்தவத்தை நிறுவனம் அங்கீகரிப்பதுடன் பயிற்சி மற்றும் மனித வள அபிவிருத்தி பிரிவினூடாக அதன் தொழிற்படையினை அபிவிருத்தி செய்வதற்கு அர்ப்பணித்துள்ளது.

**பாராட்டுதல்கள்:**

எமது தைரியம்மிக்க தொழிற்பாடுகள் எமது இயலளவுகளில் ஆழமாக வேரூன்றியுள்ள நம்பிக்கையின் மூலம் துணை நிரப்பு செய்யப்பட்டுள்ளன. உட்கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்பம் என்பவற்றில் உபாய ரீதியான முதலீடுகளை மேற்கொண்டு வினைத்திறனையும் நம்பகத் தன்மையினையும் மேம்படுத்துவதற்கு எமது களஞ்சிய மற்றும் விநியோக முறைமைகளை உகப்பாக்கம் செய்கின்றோம். எமது தொலைநோக்கில் பகிரப்பட்ட நம்பிக்கையின் மூலம் இயக்கப்படும் எமது தொழிற்படை அவர்களது இயலுமைகளில் குறிப்பிடத்தக்க நம்பகத்தன்மையினை காண்பித்து தேசத்தின் சக்தி தேவைகளை நிறைவுசெய்வதில் தங்குதடையற்று எமது வசதிகள் தொழிற்படுத்தப்பட்டுள்ளன என்பதனை உறுதிசெய்கின்றது. எமது செயற்பணியில் திடமான நம்பிக்கையில் இருந்து மாத்திரம் வருகின்ற செயல்திட்டத்துடன் ஒழுங்குமுறைப்படுத்தல் மாற்றங்களையும் சந்தை தளம்பல்களையும் நாம் திசைப்படுத்தகின்றோம். இவ் ஆண்டறிக்கையினை நாம் சமர்ப்பிப்பதற்கேற்ப இலங்கையின் மக்கள் மற்றும் அதன் செயற்படுகின்ற பொருளாதாரம் என்பவற்றின் அபிலாசைகளுக்கு ஊக்கமளிப்பதில் இன்றியமையாத வகிபாகத்தினை செயலாற்றுவதற்கு எமது விளிப்புமிக்க முயற்சிகள் தொடரும் என நம்பிக்கையுடன் திகழ்கின்றோம். 2022 இல் எமது துணிகர பணிகள் சக்தி துறையில் உறுதிப்பாட்டினதும் நம்பகத் தன்மையினதும் கலங்கரை விளக்கமாக எம்மை இடம்பெறச் செய்துள்ளதுடன் வரவிருக்கும் ஆண்டுகளிலும் மேலும் மிகுந்த வெற்றியினை அடைவதற்கான எமது கடமைப் பொறுப்பில் நாம் அசைக்க முடியாது காணப்படுகின்றோம்.

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடெட், செயல்திறன் வாய்ந்த ஆளுகை மற்றும் நேர்மையினை உறுதி செய்வதற்கு சபை அர்ப்பணித்துள்ளது. 2022 சவால்மிக்க ஆண்டு முழுவதும் அவர்கள் வழங்கிய வழிகாட்டலுக்கும் ஆதரவுக்கும் எனது சக உறுப்பினர்களுக்கு நான் மிகவும் நன்றி கூறுகின்றேன். ஆண்டின் சவால்களை எதிர்கொள்வதில் அவர்களது தாக்குப்பிடிக்கும் தன்மைக்கும் வலிமைக்கும் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடெட் அணிக்கும் எனது நன்றிகள் உரித்தாகும்.

கௌரவ மின்வலு எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர மற்றும் இராஜாங்க அமைச்சர் டி.வி. சானக அத்துடன் இந்திக அனுருத்த ஆகியோர் எம் மீது நம்பிக்கை வைத்தமைக்காகவும் அவர்களது வழிகாட்டல்களுக்காகவும் எனது உளமார்ந்த நன்றியினை தெரிவிப்பதற்கு இச்சந்தர்ப்பத்தினை பயன்படுத்துகின்றேன். எனது ஊக்கமிக்க சக பணிப்பாளர்கள், அர்ப்பணிப்பு மிக்க முகாமைத்துவ அணி மற்றும் விசுவாசம் மிக்க ஊழியர்கள் அத்துடன் மதிப்பு மிக்க தொழிற் பங்காளர்கள் போன்றோருக்கு அவர்களது அசைக்கமுடியாத விசுவாசத்துக்கும் தீர்க்கமான ஆதரவிற்கும் எமது உளமார்ந்த நன்றிகள் உரித்தாகும். நாம் முன்னோக்கிய பயணத்தில் கால் பதிப்பதால் எமது கூட்டான ஐக்கியமும் ஒருமித்த அர்ப்பணிப்பும் எம்முன்னே காணப்படுகின்ற புதிய சவால்களை எதிர்கொண்டு முறியடிப்பதற்கு எம்மை இயலச்செய்யும்.



**எம். யு. மொஹமட்**
தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர்

# பணிப்பாளர் சபை

01



திரு.எம். உவைஸ் மொஹமட்
தலைவர் / முகாமைத்துவப் பணிப்பாளர்

02



திரு. ஈ.ஏ. ரத்னசீல
பணிப்பாளர்

## 01 திரு.எம். உவைஸ் மொஹமட்
### தலைவர் / முகாமைத்துவப் பணிப்பாளர்

"மக்களை நன்கு பயிற்றுவியுங்கள், அதனால் அவர்கள் விட்டுச் செல்லலாம், அவர்களை நன்றாக நடாத்துங்கள் அதனால் அவர்கள் அவ்வாறு செய்யத் துணிய மாட்டார்கள்" - ரிச்சர்ட் ப்ரன்ஸ்சன்.

திரு. மொஹமட் உவைஸ் மொஹமட் அவரது தொழிற்படையின் உள்ளார்ந்தம் பற்றி வலுவான நம்பிக்கையாளரும் உற்பத்தித்திறன்மிக்க விதத்தில் முன்னோக்கி செல்வதற்கான ஒரேவழி ஐக்கியமும் ஒன்றிணைவும் ஆகும் என நம்புகின்றார்.

கடந்த அண்மைக் காலத்தில் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட்டில் நியமிக்கப்பட்ட இளமையான தலைவர் என்ற வகையில், திரு. உவைஸ் மக்களின் பிரச்சினைகளை சாதுரியமாக தீர்க்கும் திறன்களை நிரூபித்துள்ள அதேவேளை நோய்த்தொற்று நிலவிய காலம் முழுவதும் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்ட புத்தாக்கம்மிக்க வியாபார ஆலோசனைகளுடனும் தீர்வுகளுடனும் முன்னோக்கிக் கொண்டு சென்றார்.

தற்போது அவர் தொழில் முயற்சி வளத் திட்டமிடலுக்காக சக்தி அமைச்சின் தலைவராகவும் பணியாற்றுகின்றார். இவர் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையின் பணிப்பாளர் ஒருவராகவும் பணியாற்றகின்றார்.

இவர். தொழிற்பாட்டு சேவைகள், தொழில்முயற்சி வளத் திட்டமிடல், சக்தி போன்றன உள்ளடங்கலாக பல துறைகள் முழுவதும் இரண்டு தசாப்தகால நிரூபிக்கப்பட்ட பரந்த சிரேஷ்ட முகாமைத்துவ அனுபவத்தை கொண்டுள்ளார். அவரது பணி அனுபவமும் தேர்ச்சி வெளிப்பாடுகளும் ஐரோப்பா மற்றும்

03



**திரு. திபக் தாஸ்**
**பணிப்பாளர்**

04



**திரு. அசீம் பர்காவா**
**பணிப்பாளர்**

தெற்காசியாவின் ஏனைய பாகங்கள் உள்ளடங்கலாக உலகின் பல்வேறு பிராந்தியங்களுக்கும் நீடிக்கின்றது.

அவர் லண்டன் மெட்ரோ பொலிடன் பல்கலைக்கழகத்திலிருந்து விஞ்ஞானமானி (கௌரவ பட்டத்தினையும்) வேல்ஸ் பல்கலைக்கழகத்திலிருந்து வியாபார நிருவாகத்தின் முதுமானி பட்டத்தினையும் பெற்றுள்ளார். பல ஆண்டுகளாக இவர் பல எண்ணிக்கையான தொழில்சார் நிபுணத்துவத் தகமைகளை சுயமாக வளர்த்துக் கொண்டுள்ளதுடன் தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணக்கீடு என்பன உள்ளடங்கலாக அவரது ஆற்றல்மிக்க துறையில் சான்றிதழ்களையும் பெற்றுள்ளார். குறிப்பாக தொழில்முயற்சி மட்டத்தில் நிறுவன தொழில்முயற்சி வள திட்டமிடல்களை நடைமுறைப்படுத்துவதில் ஆற்றல் மிக்கவராக திகழ்கின்றார்.

**02** **திரு. ஈ.ஏ. ரத்னசீல**
**பணிப்பாளர்**

பொது நிதி திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகமான தொழில் ரீதியாக இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு I ஐச் சேர்ந்த திரு. ஈ.ஏ. ரத்னசீல ஐக்கிய அமெரிக்காவின் மஞ்செஸ்டர் வில்லியம்ஸ் கல்லூரியில் கொள்கைப் பொருளியலில் கலை முதுமாணி - 2007/2008 பட்டத்தை பெற்றவராவார். அவர் உருகுணைப் பல்கலைக்கழத்திலிருந்து 1993/1995 ஆண்டில் தனது விஞ்ஞானி பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். இவர் கொழும்பு பல்கலைகழகத்தில் 2002 இல் பொருளாதார அபிவிருத்தியில் பட்டப் பின்படிப்பு டிப்ளோமாவையும், ஜப்பான் சிபா IAE பொருளியல் உயர்தர கல்லாரியில் இருந்து அபிவிருத்திக் கல்வியில் பட்டப் பின்படிப்பு டிப்ளோமா - 2003/2004 டிப்ளோமா கற்கைநெறிகளையும் நிறைவுசெய்துள்ளார்.

# பணிப்பாளர் சபை

05



திரு. ராஜேஸ்குமார் பகாட்
பணிப்பாளர்

06



திரு. டி ஜி ஆர் மனோஜ் குமார்
பணிப்பாளர்

திரு. ஈ.ஏ. ரத்னசீல தனது தொழில் வாழ்க்கையை 2001 தொடக்கம் 2006 வரை அரசிறைக் கொள்கை திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளராக தொடங்கியதுடன் 2007 தொடக்கம் 2010 வரை வர்த்தக மற்றும் தீர்வை திணைக்களத்தில் பிரதிப் பணிப்பாளராக பதவியுயர்த்தப்பட்டார். மேலும், இவர் 2011 - 2013 வரை தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளராக பணியாற்றியதுடன் 2013 தொடக்கம் 2016 வரை இலங்கை சுங்கத்தின் பணிப்பாளராகவும் பணியாற்றினார். 2016 ஆம் ஆண்டு தொடக்கம் இவர் அரச நிதி திணைக்களத்தின் பணிப்பாளராக/மேலதிகப் பணிப்பாளர் நாயகமாக பணியாற்றுகின்றார். திரு. ஈ.ஏ. ரத்னசீல அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம், கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம், தேசிய ஆராய்ச்சி மன்றம், தேசிய அபிவிருத்தி வங்கி போன்ற பல அரச நிறுவனங்களில் பணிப்பாளர் சபையில் பணிப்பாளராக பொது திறைசேரியினை பிரதிநிதித்துவப்படுத்தியதுடன் தற்போது இவர் தேசிய வியாபார முகாமைத்துவப் பாடசாலை மற்றும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு என்பவற்றின் பணிப்பாளர் சபைகளில் பணிப்பாளர் ஒருவராக பணியாற்றுகின்றார்.

## 03 திரு. திபக் தாஸ்
பணிப்பாளர்

திரு. திபக் தாஸ் என்ஐடி சில்சாரில் இயந்திரவியல் பொறியியல் பட்டத்தையும் மற்றும் பெற்றோலிய முகாமைத்தவத்தில் சான்றிதழையும் பெற்றவராவார். பெற்றோலியத் துறையில் 27 ஆண்டுகளுக்கும் மேலான நிபுணத்துவத்துடன், திரு. தாஸ், இந்தியாவின் முதன்மைக் கம்பனியும் 500 போர்ச்சூன் உலகளாவிய கம்பனியுமான இந்தியன் ஒயில் கோப்பரேசன் லிமிடெட்டின் பல்வேறு வகிபாகங்களில் பரந்த அனுபவம் பெற்றவர்.

07



**திரு. தர்மதாச பண்டிதரத்ன**
**பணிப்பாளர்**

08



**திரு. யசிரு லங்காதிலக்க**
**பணிப்பாளர்**

கேரளா, தெலுங்கானா, ஆந்திரப் பிரதேசம், ராஜஸ்தான், மேற்கு வங்காளம் மற்றும் இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் பரந்த புவியியல் பகுதிகளை உள்ளடக்கிய பல்வேறு பதவிகளில் அவர் முக்கிய பங்கு வகித்தார்.

சில்லறை விற்பனை மற்றும் செயல்பாட்டுத் துறையில் அவரது பல்வேறு முக்கிய பதவிகளுக்குப் புறம்பாக, திரு. தாஸ், லக்ஷ்வதீப் தீவுகளை இந்தியாவின் எரிசக்தி வரைபடத்தில் கொண்டு வருவதற்கு முக்கியப் பங்கு வகித்ததுடன் கேரளா மாநிலத்தில் அவர் சில்லறை விற்பனைத் தலைவராக இருந்த காலத்தில் இரு தீவுகளிலும் களஞ்சிய முனையங்கள் உட்பட லக்ஷ்வதீப் கவரட்டி, மினிகொய், ஆண்ட்ரோட் மற்றும் கல்பெனி தீவுகளில் பெற்றோலிய சில்லறை விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டன.

லங்கா ஐஓசி பிஎல்சியின் முகாமைத்துவப் பணிப்பாளராக அவரு முக்கியப் வகிபாகத்திற்கு மேலதிகமாக,

திரு. தாஸ் சிலோன் பெட்ரோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல்ஸ் லிமிடெட் சபைப் பணிப்பாளராகவும் பணியாற்றுகிறார். இலங்கை பெற்றோலியத் துறையில் தனது நிபுணத்துவத்தை வழங்கி இலங்கைப் பெற்றோலிக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா ஐஓசி ஆகியவற்றின் கூட்டுமுயற்சியான ரிங்கோ பெற்றோலியம் டேர்மினல்ஸ் (பிரைவெட்) லிமிடெட்டின் முகாமைத்துவப் பணிப்பாளராகவும் உள்ளார். மேலும், இவர் இந்திய பிரதம நிறைவேற்று அலுவலர்கள் மன்றத்தின் அரசாங்க ஒருங்கிணைப்பு தலைவராக பணியாற்றுவதுடன் இலங்கை வர்த்தக சம்மேளனம், தேசிய வர்த்தக சம்மேளனம், இலங்கை சர்வதேச வர்தகக சம்மேளனம், இலங்கை இந்தியச் சங்கம் போன்ற பல எண்ணிக்கையான சம்மேளனங்களில் உறுப்பினராக முனைப்புடன் செயற்படுவதுடன் நாடுபூராகவும் ஏழைகளுக்கு உதவுவதற்கு பல்வேறு நிறுவன சமூக பொறுப்பு நிகழ்ச்சித்திட்டங்களிலும் முனைப்புடன் பங்கேற்கின்றார்.

# பணிப்பாளர் சபை

## 04 திரு. அசீம் பர்காவா
பணிப்பாளர்

திரு. அசீம் பர்காவா இந்திய ஒயில் கோப்பரேசன் லிமிடெடில் நிதி, சர்வதேச வர்த்தகம் மற்றும் எரிபொருள் மற்றும் எரிவாயு துறையின் வர்த்தக நோக்குகள் ஆகிய துறைகளில் இரண்டு தசாப்தத்திற்கும் மேற்பட்ட பல்வேறுபட்ட பணி அனுபவத்தைக் கொண்டவராவார். இவர் கணிசமான காலமாக சுத்தகரிப்புச்சாலை அமைவிடத்திலும் பணியாற்றியுள்ளார்.

பல்வேறுபட்ட துறைசார் அனுபவம் விருப்பப்பட்ட நிறுவனசார் உபாயங்களை எய்தும் பொருட்டு தொழில் குறிக்கோள்களுடன் கூடிய நிதியியல் குறிக்கோள்களை ஒத்திசையச்செய்வதற்கு அவரை இயலச்செய்துள்ளன. சிரேஷ்ட துணைத் தலைவர் (நிதி) என்ற வகையில் கம்பனியின் ஒட்டுமொத்த நிதியியல் கருமங்களையும் கவனிக்கின்றார்.

இவர் இந்திய பட்டய கணக்காளர்கள் நிறுவனத்தின் (ICAI) உறுப்பினராவதுடன் டெல்லி பல்கலைக்கழகத்தலிருந்து வணிகமானி (கௌரவ) பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் கம்பனிச் செயலாளர்கள் நிறுவனத்திலிருந்து திறமைப்பட்டியலில் இந்தியாவில் 10 ஆவது நிலையினை பெற்று கம்பனிச் செயலாளர் உறுப்புரிமையினை வெற்றிகரமாக நிறைவுசெய்துள்ளதுடன் இந்தியாவின் பூனேயின் சிம்போஸிஸ் முகாமைத்துவக் கற்கைகள் நிறுவனத்திலிருந்து வியாபார நிருவாகத்தில் பட்டப் மேற்படிப்பு (நிதி) டிப்ளோமாவையும் பெற்றுள்ளார். இந்தியன் ஒயில் கோப்பரேசன் நிறுவனத்தில் அவரது தொடர்ச்சியான சேவைக்காலத்தின் போது இவர் சுத்தகரிப்புச்சாலை நிதி, சுத்திகரிப்புசாலைகள் தலைமை அலுவலகம், நிறுவன நிதி, சர்வதேச விவகாரங்கள் போன்ற பல்வேறு நிறுவனசார் மட்ட துறைகளில் செயன்முறைசார்ந்த அனுபவத்தையும் பெற்றவராவார். திரு. பர்காவா சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட் பணிப்பாளராகவும் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு உறுப்பினராகவும் விளங்குகின்றார்.

## 05 திரு. ராஜேஸ்குமார் பகாட்
பணிப்பாளர்

திரு. ராஜேஸ்குமார் பகாட் பெற்றோலிய துறையில் 20 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தை பெற்றுள்ளதுடன் தற்போது லங்கா இந்தியன் ஒயில் ஐஓசி பிஎல்சியில் சிரேஷ்ட துணைத் தலைவராகப் (தொழிற்பாடுகள், இறக்குமதிகள் மற்றும் கப்பல் எரிபொருள் விற்பனைகள்) பணியாற்றுகின்றார். 2001 இல் முகாமைத்துவ பயிலுநராக இந்தியன் ஒயில் கோப்பரேசன் லிமிடெட்டில் இவர் இணைந்து கொண்டதுடன் இந்தியாவின் தெற்குப் பாகத்தில் அமைந்துள்ள தூத்துக்குடி முனையத்தில் நான்கு ஆண்டுகள் தொழிற்பாடுகளில் பணியாற்றினார். 2005 ஆம் ஆண்டு தொடக்கம் ONGC மற்றும் ஏனைய கப்பற் தொழிந்துறைகளுக்கு கப்பல் எரிபொருள் விற்பனைகள் உள்ளடங்கலாக டாடா குழுமம், அதானி குழுமம் பாரிய அரசாங்க துறைகள் போன்ற பாரிய கைத்தொழிலுக்கு தேவையான பல்வேறு பெற்றோலிய உற்பத்திகளின் விற்பனைகளை கவனித்து மஹாராஷ்டிரா மாநிலத்தில் மும்பாய் மற்றும் பூனே நகரங்களில் நிறுவனசார் விற்பனை திணைக்களத்தில் பணியாற்றினார். தற்போது இவர் லங்கா ஐஓசி பிஎல்சியின் கப்பல் எரிபொருள் வழங்கல் தொழிலுக்கு தலைமைவகித்து நாட்டின் தேவைக்கான பெற்றோலிய உற்பத்திகளை இறக்குமதி செய்தல் உள்ளடங்கலாக தலைமைத்துவம் வழங்கி வருகின்றார்.

திரு பகாட் முகாமைத்துவத்திற்கான கீர்த்திமிக்க கல்லூரியான மும்பாயின் நர்சி முன்ஜி கல்லூரியிலிருந்து உற்பத்தி பொறியியலில் முதுமாணி தொழில்நுட்ப பட்டத்தினையும் வியாபார முகாமைத்துவத்தில் பட்டப்பின்படிப்பு டிப்ளோமாவையும் பெற்றுள்ளார். சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட் சபையின் பணிப்பாளர் ஒருவராக திரு. பகாட் எரிபொருள் முனைய தொழிற்பாடுகள் மற்றும் கப்பல் எரிபொருள் வழங்கல் தொழிற்பாடுகள் போன்றவற்றில் சபை மட்ட தீர்மனங்களை மேற்கொள்வதை மேலும் மேன்படுத்தும் விதத்தில் கப்பல் எரிபொருள் விற்பனை உள்ளடங்கலாக அவரது அளவற்ற அனுபவத்தை வழங்குகின்றார்.

## 06 திரு. டி ஜி ஆர் மனோஜ் குமார்
**பணிப்பாளர்**

திரு. டி ஜி ஆர் மனோஜ் கமகே (டி ஜி ஆர் மனோஜ் குமார்), இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானம் மற்றும் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட் சபைகளுக்கு 2022 டிசம்பர் 13 அன்று நியமிக்கப்பட்டார். இவர் இலங்கையின் உயர்நீதிமன்றத்தின் சட்டத்தரணியாவதுடன் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் சிரேஸ்ட சபை உறுப்பினருமாவார்.

திரு. ஆர் திரு. டி ஜி ஆர் மனோஜ் கமகே கௌரவ சனாபதி ரணில் விக்கரமசிங்க அவர்களின் சட்டப் பணிப்பாளராகவும், தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை மற்றும் புரோபேர்டி டிவெலொப்மென்ட் லிமிடெட் (இலங்கை வங்கியின் துணைக்கம்பனி) சபைகளின் பணிப்பாளராகவும் பணியாற்றுவதுடன் தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையின் உறுப்பினராகவும் பணியாற்றுகின்றார்.

இவர் பல ஆண்டுகளாக இலங்கையின் தேசிய ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் மற்றும் ரிவி தெரண இரண்டிலும் பணியாற்றிய நன்கு அனுபவம்பெற்ற ஊடகவியளாளருமாவார். நீதிக்கான சட்டத்தரணிகள் அமைப்பின் தலைவர் என்ற வகையில் இவர் முக்கிய சிவில் செயற்பாடுகளில் ஈடுபட்டு பங்கேற்கின்றார்.

மேற்குறித்தவற்றுக்கு மேலதிகமாக, இவர் முன்னால் பிரதம அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் பொதுமக்கள் ஒருங்கிணைப்புச் செயலாளராக விருந்ததுடன் முன்னால் சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் சட்டப் பணிப்பாளராகவும், தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை பணிப்பாளராகவும், கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் பணிப்பாளராகவும் இருந்தார்.

## 07 திரு. தர்மதாச பண்டிதரத்ன
**பணிப்பாளர்**

திரு. தர்மதாச பண்டிதரத்ன சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடெட் இன் பணிபாளர் குழாமில் 2022 ஆகஸ்ட் முதல் சேவையாற்றுகின்றார். சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிட்டெடின் பொறியியல் பிரிவில் ஊழியராக 1990 களில் பணியாற்றினார். அவருக்கு 25 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம் உள்ளது. கெஸ்பேவ மாநகர சபையின் உறுப்பினராக பணியாற்றினார். தன்னம்பிக்கை, தெளிவான மற்றும் பலராலும் நன்கு மதிக்கப்படும் ஒரு பன்முக அரசியல்வாதியாகும். சமூக நீதிக்கான அவரது ஆர்வம் சமூகத்தில் ஒரு உறுதியான மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பது மக்களின் மனங்களை அவர் வெல்ல வழிவகுத்தது.

## 08 திரு. யசிரு லங்காதிலக்க
**பணிப்பாளர்**

திரு. யசிரு லங்காதிலக்க மார்ச் 2023 முதல் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட் பணிபாளர் சபைக்கு பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் உறுப்பினராகவும் பணியாற்றுகிறார்.

அவர் இலங்கை ஷேக்ஸ்பியர் நிலையத்தில் அரகேற்றக்கலை பட்டம் பெற்றுள்ளதுடன் ஐக்கிய இராச்சிய சிட்டி என்ட் கில்டஸ் நிறுவனத்தில் மோட்டார் வாகனப் பொறியியலில் உயர் டிப்ளோமா பெற்றுள்ளார். மேலும், அவர் இலங்கையின் வாகனப் பொறியியலாளர்கள் நிறுவனத்தின் இணை உறுப்பினருமாவார்.

அவர் வாகனப் பொறியியல் துறையில் தொழில்நுட்பம் மற்றும் வணிகத்தில் ஆழ்ந்த ஆர்வம் கொண்ட புத்தாக்கமிக்க மற்றும் செயல்திறன் சார்ந்த தொழில்முயற்சியாளர் ஆவார். அவர் 2022 முதல் லக்சன்ஸ் டிரேடிங் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட்டின் தலைவர்/முகாமைத்தவ்ப பணிப்பாளராக உள்ளார், இந்நிறுவனம் தற்போது சமூகத்தில் உள்ள ஒட்டுமொத்த வலுச் சேமிப்பு பிரிவுகளுக்கான தீர்வுகளை வழங்குகிறது. நிறுவனங்களைத் திட்டமிடுதல் மற்றும் நிர்வகித்தல், நிதியளித்தல் மற்றும் மனித வளங்களைக் கையாளுதல் மற்றும் பல்கலாச்சார சங்கங்களுடன் இணைந்து பணியாற்றுதல் மற்றும் சமூகத்திற்கான சிறந்த தீர்வுகளைப் பெறுதல் போன்ற பல்வேறு துறைகளில் திரு. லங்காதிலக்க பரந்த அனுபவம் கொண்டவராவார்

# சிரேஷ்ட முகாமைத்துவ அணி



**திரு. ஓ.பி. காக்கொட ஆராச்சி**
பிரதிப் பொது முகாமையாளர் (நிதி)



**திரு. ஜி.எம்.ஏ. பண்டார**
பிரதிப் பொது முகாமையாளர்
(பொறியியல் மற்றும் துணைச் சேவைகள்)



**திரு. டி.வி. சரத்சந்திரா**
பிரதிப் பொது முகாமையாளர்
(தொழிற்பாடுகள்)



**திரு. எச்.என்.பி.யு ஜயவர்த்தன**
முகாமையாளர் (பாதுகாப்பு)



**திரு. டி.ஏ.ஜே.எஸ். தர்மப்ரியா**
தொழிற்பாடுகள் முகாமையாளர்
(வாகனங்கள்)



**திருமதி எஸ்.என் கமகே**
முகாமையாளர் (நிறுவன விவகாரங்கள்)



**திரு. ஈ.ஏ.ஆர்.டி பண்டார**
பதில் பிரதிப் பொது முகாமையாளர் (மனித வளம் மற்றும் நிர்வாகம்) / முகாமையாளர் (பயிற்சி மற்றும் உற்பத்தித்திறன் அபிவிருத்தி)



**திரு. ஜே.ஏ.யு.ஆர்.கே. ஜயலத்**
முகாமையாளர் (நிதி)



**திரு. டி.ஆர்.எப். டயஸ்**
முகாமையாளர் (தகவல் முறைமைகள்)



**திரு. ஆர்.எஸ்.எஸ். பிரேமகுமார**
முகாமையாளர் (பெறுகை)



**திரு. டப்லிவ். எம்.ரி. டப்லிவ்.ஏ பண்டார**
முகாமையாளர் (வினியோகம்)



**திரு. அஜித் விஜேசூரிய**
முகாமையாளர் (வளாகம் மற்றும் பொறியியல் சேவைகள்)

# சிரேஷ்ட முகாமைத்துவ அணி



**திரு. டப்லிவ். எஸ் ஹேமந்த குமார**
முகாமையாளர் (மொத்த இயக்கங்கள் மற்றும்
மொத்த உற்பத்திகள்)



**வைத்தியர் திருமதி ஆர். சுசிறிவர்தன**
மருத்துவ அலுவலர்



**திரு. கே.எச்.எம். ஜெயசேகர**
முகாமையாளர் (உள்ளகக் கணக்காய்வு)



**திரு. என்.எம் முனாஸ்**
மனித வள முகாமையாளர்



**திருமதி டப்லிவ்.ஜி.ஏ.பீ. ஜயவர்தன**
பிரதம சட்ட அலுவலர்



**திரு. ஜி.எச்.என்.எம். சந்திரசிறி**
முகாமையாளர் (ஆய்வுகூடம்)



**மேஜர். ஆர்.எம்.என். ஜயதிலக**
WWV RWP RSP (ஓய்பெற்ற)
முகாமையாளர் (விசாரணைகள்)



**குரூப் கெப்டன் பி.எம்.சி.பி. டயஸ்**
முகாமையாளர் (தீயணைப்பு மற்றும் பாதுகாப்பு)



**திரு. எச்.எம்.யு. பண்டார**
பொறியியல் முகாமையாளர்



**திரு. டி.ஜே.ஏ.எஸ்.டி எஸ். ராஜகருண**
பதில் முகாமையாளர் (முத்துராஜவெல முனையம்)



**திரு. டி.ஆர்.ஜே. போபேராச்சி**
பதில் முகாமையாளர் (கரைகடந்த தொழிற்பாடுகள்)



**திரு. எம்.டி.ஏ. அசோக குமார**
பதில் முகாமையாளர் (களஞ்சியசாலைகள்)



# முகமைத்துவக் கலந்தரையாடல்கள் மற்றும் பகுப்பாய்வு

# தொழிற்படுகின்ற சூழல்

**2022 நிதியாண்டில் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல் லிமிடெட் நிறுவனத்திற்கான தொழிற்பாட்டுச் சூழலானது புவிசார் அரசியல் இயக்கவாற்றல், பொருளாதாத் தளம்பல், தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் காலநிலை மாற்றத்திற்கான உலகளாவிய அக்கறை ஆகியவற்றின் சிக்கலான தொடர்புகளால் வகைப்படுத்தப்பட்டது. இக்காரணிகள் எமது தொழிற்பாடுகள் மற்றும் மூலோபாய தீர்மானச் செயன்முறைகளில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தின. இவ் இயக்கவாற்றல்மிக்க மற்றும் பன்முக தொழிற்பாட்டுச் சூழலில், சிபெஸ்டேலி அதன் சுறுசுறுப்பையும் மூலோபாய புத்திக்கூர்மைமையினையும் வெளிப்படுத்தியது. இச்சூழலில் வெற்றிபெறுவதற்கு, மாறிவரும் சந்தை நிலைமைகளுக்குத் தொடர்ந்து மாற்றியமைத்தல், தொழில்நுட்ப முன்னேற்றங்களைத் தழுவுதல் மற்றும் வளர்ந்துவரும் நுகர்வோர் விருப்பங்களுடன் அணிசேர்தல் ஆகியவை தேவை என்பதை நாம் உணர்ந்தோம். எமது தொழிற்பாட்டு தாக்குப்பிடிக்கும்தன்மைக்கும் வளர்ந்துவரும் வாய்ப்புகளை கைப்பற்றும் இயலுமைக்கும் அடிப்படையினை இத்தழுவுதிறன் உருவாக்குகின்றது.**

## உலகளாவிய பெற்றோலியச் சந்தை

2022 ஆம் ஆண்டில், உலகளாவிய எரிபொருள்க் கைத்தொழில் கணிசமான மாறுதல்களைக் கண்டதுடன் குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொண்டது. 2020 இல் கொவிட்-19 தொற்றுநோயால் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியைத் தொடர்ந்து, 2022 இல் எண்ணெய் விலையில் குறிப்பிடத்தக்க மீட்சி இடம்பெற்றது. பல்வேறு காரணிகளால் செலவாக்குச்செலுத்தி உலகளாவிய மசகு எண்ணெய் விலைகள் குறிப்பிடத்தக்க ஏற்ற இறக்கங்களை வெளிப்படுத்தின. ஆரம்பத்தில், ஆண்டின் முதல் பாதியில் விலைகள் அதிகரித்தன, மார்ச் மாதத்தில் ப்ரெண்ட் மசகு எண்ணெய் ஒரு பீப்பாய்க்கு ஐ.அ.டொலர் 140 ஆக உயர்ந்தது. இவ் அதிகரிப்புக்கு கிழக்கு ஐரோப்பாவின் புவிசார் அரசியல் பதற்றங்கள் மற்றும் பாரிய பெற்றோலிய ஏற்றுமதியாளரான ரஷ்யா மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகள் என்பன முதன்மையாக காரணமாகக் கூறப்பட்டது. எவ்வாறாயினும், ஆண்டின் இரண்டாம் அரை தொடங்குகையில், உலகளாவிய பொருளாதார மந்தநிலை பற்றிய கவலைகள் காரணமாக கீழ்நோக்கிய அழுத்தங்கள் வெளிப்பட்டன.

2022 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் மசகு எண்ணெய் விலையில் சரிவுப் போக்கிற்குப் பல காரணிகள் பங்களித்தன. உலகளாவிய வளர்ச்சி குறைதல், உலகளவில் முக்கிய மத்திய வங்கிகளால் தீவிர நாணயக் கொள்கை இறுக்கமாக்கல் (உலகளாவிய சக்தி தேவையைக் குறைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது), சீனாவில் நடந்து வரும் கொவிட்-19 கட்டுப்பாடுகள், மற்றும் அமெரிக்காவின் மூலோபாய இருப்புக்களில் இருந்து கணிசமான அளவு மசகு எண்ணெய் விடுவித்தல் எனபவற்றை இவை உள்ளடக்கியிருந்தன. ஆயினும் கூட, 2022 ஆம் ஆண்டின் இறுதியில் அவ்வப்போது விலை ஏற்றம் கண்டன. ஒக்டோபரில் பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பு (ஒபெக்) மற்றும் அதன் நட்பு நாடுகளின் உற்பத்திக்குறைப்பு பற்றிய அறிவிப்பு, ஜி7 நாடுகள் மூலம் விதிக்கப்பட்ட ரஷ்ய மசகுஎண்ணெய் மீதான விலை வரம்பு, டிசம்பரில் ரஷ்ய மசகுஎண்ணெய் இறக்குமதிக்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை மற்றும் சீனாவில் தேவை மீண்டுவருவதற்கான சமிக்ஞைகள் என்பவற்றையும் இவை உள்ளடக்கியிருந்தன.

2022 ஆம் ஆண்டில் ப்ரெண்ட் மசகு எண்ணெயின் சராசரி விலை பீப்பாய் ஒன்றுக்கு முன்னைய ஆண்டின் சராசரி ஐ.அ.டொலர் 70.80 உடன் ஒப்பிடுகையில் 39.9% அதிகரித்து ஐ.அ.டொலர் 99.06 ஆக இருந்தது. இதேபோன்று, மேற்கு டெக்சாஸ் இடைநிலை (WTI) மசகு எண்ணெயின் விலை 2021 இன் பீப்பாய் ஒன்றுக்கு ஐ.அ.டொலர் 67.94 உடன் ஒப்பிடும்போது, 2022 இல் சராசரியாக ஐ.அ.டொலர் 94.41 ஆக உயர்ந்தது. எனினும், 2023 இன் முதல் காலாண்டில் உலகளாவிய மசகு எண்ணெய் விலையில் சிறிது மிதமான நிலை காணப்பட்டது. மேலும், பெற்றோல் (92 ஒக்டேன் மற்றும் 95 ஒக்டேன்), ஓட்டோ டீசல், சுப்பர் டீசல் மற்றும் மண்ணெண்ணெய் உள்ளிட்ட முக்கிய சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்களின் விலைகள், 2022 ஆம் ஆண்டில் ஆண்டுக்கு ஆண்டு 40% முதல் 75% வரை உயர்வடைந்தன. உலகளாவிய மசகுஎண்ணெய் விலையில் அதிகரித்து வரும் போக்குகளுக்கு ஏற்ப இவ் உயர்வுகள் இருந்தன.

### உலகளாவிய் மசகெண்ணை விலைகளின் போக்குகள்




மூலம் : ப்ளூம்பேர்க்

## உலகளாவிய தொழிற்படும் சூழல்

**2022 ஆம் ஆண்டில், உலகளாவிய தொழிற்படும் சூழல், புவிசார் அரசியல், பொருளாதாரம், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழலை உள்ளடக்கிய சவால்கள் மற்றும் வாய்ப்புகளின் பன்முக தோற்றவமைப்பைக் கொண்டிருந்தது.**

புவிசார் அரசியல்: இவ்வாண்டானது அதிகார இயக்கவாற்றலில், குறிப்பாக சீனா ஒரு உலகளாவிய சக்தியாக தோற்றம்பெற்ற தொடர்ச்சியான மாற்றங்களைக் அவதானித்தது. வணிகரீதியான பதற்றங்கள் பாரிய பொருளாதாரங்களிடையே நீடித்த, அதேநேரத்தில் பிராந்திய நெருக்கடிகள், ஸ்திரத்தன்மை சவால்களை தோற்றுவித்து, அமைதியான தீர்மானங்களுக்கு சர்வதேச முயற்சிகளைத் தேவைப்படுத்தின. மேலும், ரஷ்யா-உக்ரைன் நெருக்கடியானது ரஷ்யாவிற்கு எதிராக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விரிவான பொருளாதாரத் தடைகளைத் தூண்டி, ஐரோப்பாவில் எரிவாயு விநியோகம் மற்றும் விலைகள் பற்றிய கவலைகளை உருவாக்கியுள்ளது. 2021 இன் பிற்பகுதியில் குறைக்கப்பட்ட ரஷ்யா எரிவாயு விற்பனைகள் உயர்வான எரிவாயு விலைகளுக்கு ஏற்கனவே பங்களித்துள்ளன.

பொருளாதாரம்: உலகப் பொருளாதார வளர்ச்சி வாய்ப்பில் வீழ்ச்சியை எடுத்துக்காட்டி, 2022 இல் மதிப்பிடப்பட்ட 3.5 சதவீதத்திலிருந்து 2023 மற்றும் 2024 ஆகிய இரண்டிற்கும் எதிர்வுகூறப்பட்ட 3.0 சதவீதத்திற்கு மாறுதலடைந்துள்ளது. 2023 ஆம் ஆண்டுக்கான எதிர்வுகூறல் 2023 ஏப்ரலில் உலகப் பொருளாதார கண்ணோட்டம் (World Economic Outlook) முன்னைய கணிப்புகளுடன் ஒப்பிடுகையில் சிறிது முன்னேற்றத்தைக் காட்டுகின்ற போதிலும், அது இன்னும் வரலாற்றுரீதியான வளர்ச்சி தரங்களை விட குறைவாகவே உள்ளது. இறைவரித் தூண்டல்கள், நாணயக் கொள்கைகள் மற்றும் தடுப்பூசி பிரச்சாரங்கள் மூலம் தூண்டப்பட்டு, உலகப் பொருளாதாரம் மீட்சிக்கான அறிகுறிகளைக் காட்டியது. எனினும், மீட்சியில் ஏற்றத்தாழ்வுகள் நீடித்ததுடன், பணவீக்க அழுத்தங்கள் தோன்றுவதற்கு வழங்கல் சங்கிலி சீர்குலைவுகள் மற்றும் அதிகரித்த அரசாங்க செலவுகள் காரணமாக கூறப்பட்டது. பணவீக்கத்தைப் பொறுத்தவரை, உலகளாவிய பணவீக்கம் 2022 இல் 8.7 சதவீதத்தில் இருந்து 2023 இல் 6.8 சதவீதமாகவும், 2024 இல் 5.2 சதவீதமாகவும் குறையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும், அடிப்படையான (மையப்) பணவீக்கம் இன்னும் படிப்படியான வேகத்தில் குறையும் என்று எதிர்பார்க்கப்படுவதுடன் 2024 இல் பணவீக்கம் கணிப்புகள் மேல்நோக்கி திருத்தம்செய்யப்பட்டுள்ளன.

தொழில்நுட்பம்: வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்வது உத்வேகமடைந்து, பல்வேறு தொழிற்துறைகளையும் மறுவடிவமைத்து புத்தாக்கங்களைப் பேணியவளர்க்கின்றது. எனினும், அதிகரித்து வரும் இணைய பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் வலுவான பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் சர்வதேச ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறன. 2022 ஆம் ஆண்டில், செயற்கை நுண்ணறிவு ற்றும் இணையத்தில் விடயங்கள் போன்ற டிஜிட்டல் தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்வது தொழில்துறையில் அதிகரித்து வந்தன.

சுற்றுச்சூழல்: காலநிலை மாற்றத்தை கையாள்வதற்கான அவசரம் முக்கிய இடத்தைப் பிடித்து, பச்சை வீட்டு வாயு வெளியேற்றத்தைக் குறைப்பதற்கான முயற்சிகள், சுத்தமான எரிசக்தி மூலங்களை நோக்கி மாறுதலடைதல் ஆகியவற்றைக் குறித்துக்காட்டியது. கடுமையான வானிலை நிகழ்வுகளின் அதிகரிப்பானது காலநிலை மாற்றத்துடன் தொடர்புடைய அபாயங்களை அடிக்கோடிட்டுக் காட்டி, தாக்குப்பிடிக்கும்தன்மை மற்றும் ஏற்றதாக்கிக்கொள்ளல் பற்றிய கலந்துரையாடல்களுக்கு தூண்டியது. இதற்கு மேலதிகமாக, சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாத்தல் மற்றும் மீளமைப்பதில் கவனம் செலுத்துகின்றமை மூலம் உயிர்பல்வகைமை, பாதுகாப்பு முயற்சிகள் என்பன அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டுள்ளன.

சக்தி மாறுதல்: உயிர்ச்சுவட்டு எரிபொருட்களிலிருந்து மீள்புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களை நோக்கி மாறுதலடைதல் துரிதப்படுத்தப்படுகின்றது. முக்கிய வாகன உற்பத்தியாளர்கள் உள்ளக தகனஇயந்திர வாகனங்களை படிப்படியாக அகற்றுவதாக உறுதியளித்துள்ளமையுடன், மின்சார வாகனங்களை தேர்ந்தெடுப்பது வேகமாக வளர்ந்து வருகின்றது. காற்று மற்றும் சூரிய மின் உற்பத்தி உலகளவில் விரிவடைவதால், மின் அமைப்பின் நம்பகத்தன்மை மீதான அவற்றின் மாறுபாடு மற்றும் தாக்கம் பற்றிய கரிசனைகள் அதிகரித்து வருகின்றன. இதற்கு பதிலளிக்கும் விதமாக, 2023 ஆம் ஆண்டில் உறுதியான மற்றும் நெகிழ்வான சுத்தமான சக்தி தீர்வுகளில் ஆர்வம் அதிகரித்து வருகின்றது. சக்தி சேமிப்பு, குறிப்பாக யப்பான், கலிபோர்னியா மற்றும் சீனா போன்ற சந்தைகளில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் காணும் என எதிர்பார்க்கப்படுகின்றது. யப்பான், தென் கொரியா மற்றும் சீனா போன்ற நாடுகளிலும் அணுசக்தி விரிவாக்கத்திற்கு தயாராக உள்ளது.

சகதிக் கொள்கைகள்: கடுமையான சுற்றுச்சூழல் கட்டுப்பாடுகள் மற்றும் புகை வெளியேற்ற குறைப்பு இலக்குகளை அறிமுகப்படுத்துதல். பச்சை வீட்டு வாயு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்தவதற்கு கார்பன் விலையிடல் வழிமுறைகள், மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி ஊக்கத்தொகைகள் மற்றும் புகைவெளியேற்ற வர்த்தக முறைமைகள் என்பன நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றன.

## உலகலாவிய எரிபொருள் தொழிற்துறை இயக்கவாற்றல்கள்

**அறிக்கையிடுகின்ற காலப்பகுதியில், பல சவால்களை எதிர்கொண்ட போதிலும், உலகளாவிய எரிபொருள் தொழிற்துறை கேள்வியில் படிப்படியாக மீட்சியை அவதானித்தது. வழங்கல் சீராக்கங்கள், புவிசார் அரசியல் முன்னேற்றங்கள் மற்றும் இடம்பெறுகின்ற நிலைபெறத்தக்க சக்தி மூலங்களை நோக்கிய உலகளாவிய மாறுதல் உள்ளடங்கலாக காரணிகளின் நுட்பமான சமநிலை தளம்பல்மிக்க எரிபோருள் விலைகளுக்கு செல்வாக்கு செலுத்தியது. சிக்கலான இச்சூழ்நிலையினை கையாளுதலானது விழிப்புடனான கண்காணிப்பை பேணுவதற்கும் செயலூக்கமான உபாயங்களைச் நடைமுறைப்படத்தவதற்கும் எம்மைத் தேவைப்படுத்தியது.**

2022 ஆம் ஆண்டில், உலகளாவிய எரிபொருள் தொழிற்துறை குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களையும் சிரமங்களையும் சந்தித்தது. 2020 இல் கொவிட்-19 தொற்றுநோயால் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியைத் தொடர்ந்து, நாடுகள் மீண்டும் திறக்கப்பட்டு பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதால் எரிபொருள் விலைகள் மீளத் தொடங்கின. இம்மீட்சியானது உலகளாவிய பொருளாதார நிலைமைகள் மேம்படுவதுடன் நெருக்கமாகப் பிணைந்திருந்தன. எனினும், அனைத்துப்

# தொழிற்படுகின்ற சூழல்

பிராந்தியங்களிலும் மீட்சி சீராக இடம்பெறவில்லை என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும், சில நாடுகள் ஏனையவற்றைவிட விட வலுவான மீட்சியைக் காட்டின.

இக்காலப்பகுதி முழுவதும், எரிபொருள் சந்தைகளுக்குள் ஸ்திரத்தன்மையை பேணுவதில் பெற்றோலியம் ஏற்றுமதி நாடுகளின் அமைப்பு (ஒபெக்) மற்றும் ஒபெக் நேச நாடுகள் ஆகியவற்றின் பங்கு முக்கிய பங்குவகித்தது. 2022 ஆம் ஆண்டில், தொற்றுநோய்க்கு பதிலளிக்கும் வகையில் நடைமுறைபடுத்தப்பட்ட உற்பத்திக் குறைப்புகளை தளரத்துவதற்தற்கு ஒபெக் நேச நாடுகள் படிப்படியான அணுகுமுறையை பின்பற்றின. இவ் அளவிடப்பட்ட மூலோபாயம் திடீர் அதிகப்படியான விநியோகத்தைத் தடுத்தது, இதன் மூலம் விலைகளுக்கு அத்தியாவசிய ஆதரவை வழங்கியது. நாம் 2023 ஆண்டினுள் நுழைகின்றபோது, எரிபொருள் சந்தையானது, ஒப்பீட்டளவில் நிலையான விலைகளால் குறிக்கப்பட்ட நிலைநிறுத்தப் பாதையில் பயணிக்கனிறது.

புவிசார் அரசியல் காரணிகள் எரிபொருள் தொழிற்துறைக்கு தொடர்ந்தும் கரிசனையாக விளங்கின. எரிபொருள் உற்பத்தியில் மிக முக்கியமான பகுதியான மத்திய கிழக்கில் நிலவும் பதற்றங்கள், விநியோகச் சங்கிலிகளை சீர்குலைக்கும் மற்றும் உலகளாவிய விலையில் தெளிவான செல்வாக்கை செலுத்துவதற்கான சாத்தியக்கூறுகளைக் கொண்டிருந்தன. எரிபொருள் உற்பத்தி செய்யும் பிராந்தியங்களில் மோதல்கள் மற்றும் புவிசார் அரசியல் நிகழ்வுகள் என்பன சந்தையில் குறிப்பிடத்தக்க தளம்பலை அறிமுகப்படுத்தும் திறனைக் கொண்டிருந்தன. ஒபெக் நேச நாடுகள் கட்டப்படுத்தலைத் தாண்டி ஒபெக் அல்லாத உற்பத்தி, குறிப்பாக அமெரிக்காவின் களிப்பாறை எரிபொருள் உட்பட, உலகளாவிய எரிபொருள் விநியோகத்தில் தொடர்ந்தது கணிசமான பங்களிப்பாளராக விளங்கியது. சந்தை நிலைமைகளுக்கு மாறுவதற்கான ஒபெக் அல்லாத உற்பத்தியாளர்களின் பதிலிறுத்தல், விலை மட்டங்கள், முதலீட்டுத் தீர்மானங்கள் எனபன ஆதிக்கமிக்க விநியோக இயக்கவாற்றவை வடிவமைப்பதில் முக்கிய ஏதுவாக இருந்தன. ஒபெக் மற்றும் ஒபெக் அல்லாத உற்பத்தியாளர்களுக்கிடையேயான தொடர்பு உலகளாவிய எரிபொருள் விநியோக தோற்ற அமைப்பை கட்டமைப்பதில் அதன் முக்கிய பங்கை தக்கவைத்துக்கொண்டது.

காலநிலை மாற்றத்தைத் தணிப்பதை நோக்கிய உலகளாவிய மாறுதல் எரிபொருள் நிறுவனங்கள் மீது கணிசமான அழுத்தத்தை இடம்பெறச்செய்துள்ளது. அரசாங்கங்கள், பெருநிறுவனங்கள் மற்றும் நுகர்வோர் பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தை குறைப்பதற்கும் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களுக்கு மாறுவதற்கும் வலியுறுத்தப்படுகின்றனர். இம்மாற்றம் பல எரிபொருள் நிறுவனங்கள்




| உலகளாவிய பெற்றோலிய மற்றும் ஏனைய திரவங்கள் | 2021 | 2022 | 2023 | 2024 |
|---|---|---|---|---|
| **ப்ரெண்ட் மசகு எண்ணெய்** | | | | |
| உடனடி விலை (பீப்பாய் ஒன்றுக்கு டொலர்) | 70.89 | 100.94 | 84.09 | 94.91 |
| **உலகளாவிய திரவ எரிபொருள் உற்பத்தி** | | | | |
| (நாளொன்றுக்கு மில்லியன் பீப்பாய்கள்) | 95.70 | 99.95 | 101.26 | 102.19 |
| **ஒபெக் திரவ எரிபொருள் உற்பத்தி** | | | | |
| (நாளொன்றுக்கு மில்லியன் பீப்பாய்கள்) | 31.66 | 34.17 | 33.30 | 33.19 |
| **ஒபெக் அல்லாத திரவ எரிபொருள் உற்பத்தி** | | | | |
| (நாளொன்றுக்கு மில்லியன் பீப்பாய்கள்) | 64.04 | 65.78 | 67.96 | 69.01 |
| **உலகளாவிய திரவ எரிபொருள் நுகர்வு** | | | | |
| (நாளொன்றுக்கு மில்லியன் பீப்பாய்கள்) | 97.14 | 99.16 | 100.92 | 102.24 |
| **உலகளாவிய மொ.உ.உ** | | | | |
| (சதவீத மாற்றம்) | 6.4 | 3.3 | 2.9 | 2.6 |

மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி திட்டங்களில் முதலீடு செய்வதன் மூலம் தங்கள் நிதிச்சொத்துப் பட்டியலை பன்முகப்படுத்தவதற்கு வழிவகுத்தது, இது குறிப்பாக போக்குவரத்து போன்ற துறைகளில் குறிப்பாக எரிபொருள் கேள்வி வளர்ச்சியை பாதிக்கின்றது. சுற்றுச்சூழல் நிலைபெறுத்தன்மை முன்னுரிமை பெறுவதால், வளர்ந்து வரும் கேள்வியை நிறைவுசெய்வதில் எரிபொருள் தொழிற்துறை தொடர்ந்து சவால்களை எதிர்கொள்கின்றது.

மேலும், தொழில்நுட்ப முன்னேற்றங்கள் ஊடாக எரிபொருள் தொழிற்துறை குறிப்பிடத்தக்க மாற்றங்களுக்கு உட்பட்டது. டிஜிட்டல்மயமாக்கல், தானியக்கபடுத்தல், செயற்கை நுண்ணறிவு என்பன தொறிற்பாடுகளை ஒழுங்குபடுத்துதல், செயல்திறனை அதிகரித்தல் மற்றும் எரிபொருள் நிறுவனங்களுக்கான செலவுகளைக் குறைதத்ல் என்பவற்றில் முக்கிய பங்கு வகித்தன. இதற்கு மேலதிகமாக, மேம்பட்ட துளையிடும் நுட்பங்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட எரிபொருள் மீட்பு முறைகள் என்பன முன்னர் பயன்படுத்தப்படாத இருப்புகளிலிருந்து எண்ணெயைப் பிரித்தெடுக்க இயலச்செய்துள்ளன. இத்தொழில்நுட்ப புத்தாக்கங்கள், உற்பத்தி அளவுகளை பேணுகின்ற அதேவேளை மாறிவரும் சந்தை இயக்கவாற்றலுக்கும் தூய்மையான சக்தி மூலங்களுக்கான அதிகரித்து வரும் தேவைக்கும் ஏற்றவாறு ஆக்கிக்கொள்வதற்கு தொழில்துறையை இயலச்செய்துள்ளது.

### உள்நாட்டு பொருளாதார இயக்கவாற்றல்கள்

இலங்கையின் உள்நாட்டு பொருளாதாரத்தின் பின்னணியில், மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதி குறிப்பிடத்தக்க சவால்களால் குறிக்கப்பட்டது. சீராக்க நடவடிக்கைகள் மற்றும் பொருளாதார சமநிலையை நோக்கிய மாறுதல் வழிமுறைகள் பற்றிய கலந்தாராய்வை வேண்டுகின்ற பொருளாதார நெருக்கடிகள் மற்றும் கொள்கை குறைபாடுகள் என்பனவற்றைக் கொண்டிருந்தது. நாட்டின் எரிசக்தி தோற்றஅமைப்பில் முக்கிய செயற்பாட்டாளர் என்ற ரீதியில், சிபெஸ்டேலி முன்மதிமிக்க நடைமுறைகள் மற்றும் பொறுப்பான நிறுவன பிரசை ஊடாக தேசிய பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு ஆதரவபளிப்பதில் உறுதியாக இருந்தது.

### பொருளாதார சவால்கள்

**செலாவணி வீத நிலைப்படுத்தல்:** கேள்வி அழுத்தங்களை நிவர்த்தி செய்வதற்கும் நாணய ஸ்திரத்தன்மையை அடைவதற்கும் மிதக்கும் செலாவணி வீத கட்டமைப்பிற்கு மறுதலைத் தொடர்ந்து தொடர்ந்து வேண்டுமென்றே சரிசெய்தல்.

**நாணயக்கொள்கை இறுக்கமாக்கல்:** பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துதல் மற்றும் கேள்வி அழுத்தங்களை நிர்வகித்தல் ஆகியவற்றை இலக்காகக் கொண்டு நாணயக் கொள்கையை இறுக்கமாக்குவதற்கு உறுதியான நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தல்.

**வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவம்:** அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு வெளிநாட்டுச் செலாவணி கிடைப்பதை உறுதிசெய்தல், இறக்குமதி முன்னுரிமை மற்றும் மூலதன வெளியேற்றத்தை நிர்வகிக்க கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைச் செயற்படுத்துதல்.

| இலங்கைப் பொருளாதாரத் தரவுகள் | | | | | |
|---|---|---|---|---|---|
| | **2018** | **2019** | **2020** | **2021** | **2022** |
| **குடித்தொகை** | | | | | |
| (மில்லியன்) | 21.8 | 21.9 | 22.2 | 22.4 | **21.7** |
| **மொத்த உள்நாட்டு உற்பத்தி** | | | | | |
| (ஐ.நா. டொலர் பில்.) | 89.0 | 84.5 | 88.7 | 74.2 | 94.4 |
| **தலைக்குரிய மொ.உ.உ** | | | | | |
| (ஐ.நா. டொலர்) | 4,084 | 3,855 | 4,003 | 3,315 | 4,357 |
| **மொத்த உள்நாட்டு உற்பத்தி** | | | | | |
| (ரூபா பில்லியன்) | 15,911 | 15,672 | 17,600 | 24,148 | 15,352 |
| **பொருளாதார வளர்ச்சி** | | | | | |
| (பெயரளவு மொ.உ.உ, ஆ. மாறுபாடு %) | 3.6 | -1.5 | 12.3 | 37.2 | 6.7 |
| **பொருளாதார வளர்ச்சி** | | | | | |
| (மொ.உ.உ, ஆ. மாறுபாடு %) | -0.2 | -4.6 | 3.5 | -7.8 | 2.3 |

**அரசாங்க முன்முயற்சிகள்:** வருவாயை அதிகரித்தல், செலவினங்களைக் குறைத்தல், அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களைச் சீர்திருத்தம்செய்தல், இறக்குமதிக் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்துதல் மற்றும் எரிசக்தி விநியோகத்தை சீரமைத்தல் உள்ளடங்கலாக பல்வேறு அரசாங்கத் தலைமையிலான முன்முயற்சிகளைச் செயற்படுத்துதல்.

# தொழிற்படுகின்ற சூழல்

**சர்வதேச உதவியை நாடுதல்:** சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடுதல் மற்றும் கடன் மறுசீரமைப்பு முயற்சிகளில் தீவிரமாக ஈடுபடுதல் உட்பட சர்வதேச ஆதரவிற்கான வழிகளைப் பின்தொடர்தல்.




**2023 ஆம் ஆண்டுக்கான வாய்ப்பு:** வரவிருக்கும் ஆண்டானது நிலைபேறான பொருளாதார முன்னேற்றம் மற்றும் சுபீட்சத்தை அடைவதை நோக்கமாகக் கொண்டு முக்கிய கட்டமைப்பு சீர்திருத்தங்களைச் செயற்படுத்துதல், பங்குதாரர்களிடையே செயல்திறன்வாய்ந்த ஒருங்கிணைப்பை வளர்த்தல் மற்றும் கொள்கைகளை சரியான நேரத்தில் நடைமுறைப்படுத்துவதை உறுதிசெய்தல் ஆகியவற்றில் கவனம்செலுத்துவதற்கு தயாராக உள்ளது.

### முக்கிய சிறப்பம்சங்கள்

- இலங்கையின் பொருளாதாரம், 2022 இல் 7.8% இனால் சுருக்கமடைந்து, உள்ளீடு பற்றாக்குறை மற்றும் விநியோகச் சங்கிலி சீர்குலைவுகள் காரணமாக அனைத்து முக்கிய துறைகளிலும் குறிப்பாக உற்பத்தி மற்றும் கட்டுமானத்தில் பாதிப்பை ஏற்படுத்தியது.
- செப்டம்பரில் முதன்மைப் பணவீக்கம் 69.8% ஆக உயர்ந்தது, ஆனால் உலகளாவிய பண்ட விலைகள், நிதிப் பற்றாக்குறைக்கு பணமாக்குதல், நாணயத் தேய்மானம் மற்றும் உணவு வழங்கல் தடைகள் ஆகியவற்றின் தாக்கத்தால் ஆண்டுக்கு 57.2% ஐ அண்மித்தது.
- மத்திய வங்கி, பணவீக்கத்தை முறியடிப்பதற்கு 2022 சனவரி தொடக்கம் கொள்கை வீதங்களை 1,050 அடிப்படை புள்ளிகளால் உயர்த்தியது.
- தொழிற்துறை மற்றும் சேவைகளில் அரை மில்லியன் தொழில்களை இழந்து, குறிப்பாக நகர்ப்புற மற்றும் மலையகப் பிரதேசங்களில் வறுமை வீதங்கள் அதிகரிக்க வழிவகுத்தது,
- அதிகரித்த ஏற்றுமதிகள் காரணமாக 2022 இல் வர்த்தகப் பற்றாக்குறை ஐ.அ.டொலர் 5.2 பில்லியனாகக் குறைக்கப்பட்டது, ஆனால் குறைந்த பணம் அனுப்புதல் மற்றும் சுற்றுலா பெறுகைகள் என்பன வருமான இழப்புகளுக்கும் உணவுப் பாதுகாப்பின்மைக்கும் பங்களித்தன.
- இலங்கை ரூபாய் அமெரிக்க டொலருக்கு எதிராக 78% வீழ்ச்சியடைந்து, ஆனால் குறைந்த சந்தை நம்பிக்கைக்கு மத்தியில் உறுதியடைந்தது.
- வருவாய் வழிமுறைகள் மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட செலவினங்கள் மூலம் அரசிறைப் பற்றாக்குறை குறைந்துள்ளது, ஆனால் வட்டி கொடுப்பனவுகள் உயர்வாகவே காணப்பட்டன.
- நாடு கடுமையான வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மை தடைகளை எதிர்கொண்டு, எரிபொருள் மற்றும் மருந்து போன்ற அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறைக்கு வழிவகுத்தது.
- 2022 ஏப்ரலில் இலங்கை வெளிநாட்டுக் கடன் தீர்ப்பனவு இடைநிறுத்தத்தை அறிவித்தது, மேலும் வெளிநாட்டு செலாவணி முகாமைத்துவ மூலோபாயம் வெளிநாட்டுத் துறையை ஓரளவு உறுதிப்படுத்தியது.
- 2023 மார்சில் சர்வதேச நாணய நிதியம் ஐ.அ. டொலர் 2.9 பில்லியன் விரிவாக்கப்பட்ட நிதி வசதி திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது.
- கடன் மறுசீரமைப்பு மற்றும் சீர்திருத்தங்களுடன் பிணைக்கப்பட்டுள்ள வளர்ச்சி வாய்ப்புகள் நிச்சயமற்றதாக காணப்பட்ட அதே நேரத்தில் அரசிறைத் திரட்டல் வளர்ச்சியைக் குறைக்கலாம். பணவீக்கம் குறைவடையும் என எதிர்பார்க்கப்படுவதுடன் நடைமுறைக் கணக்கு பற்றாக்குறை குறைவடையும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.
- எதிர்மறையான இடர்நேர்வுகள், மெதுவான கடன் மறுசீரமைப்புச் செயன்முறை, வரையறுக்கப்பட்ட வெளிநாட்டு நிதியிடல், உலகளாவிய பொருளாதார மந்தநிலை மற்றும் வறுமை மற்றும் நிதித் துறையின் மீதான எதிர்மறையான விளைவுகள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது.
- வறுமையானவர்கள் மீதான தாக்கங்களைக் குறைப்பது முக்கியமானது, மேலும் சர்வதேச ஆதரவு, நம்பிக்கையை மீட்டெடுக்கவும் பொருளாதார மீட்சிக்கான மூலதன உட்பாய்ச்சல்களை ஈர்க்கவும் உதவும்.

### உள்நாட்டு சக்தி துறை

2022 ஆம் ஆண்டில், வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மைப் பற்றாக்குறை காரணமாக இலங்கை கடுமையான எரிபொருள் நெருக்கடியை சந்தித்தது. இந்நெருக்கடி சமூக அமைதியின்மை, பதுக்கல் மற்றும் எரிபொருள் நிலையங்களில் நீண்ட வரிசைகளுக்கு வழிவகுத்தது.

நெருக்கடியைத் தணிக்க, அரசாங்கம் குறுகிய கால கடன் வசதிகளைப் பெற்று, விலைச் சூத்திரங்களைத் திருத்தியதுடன் எரிபொருள் விநியோகத்தை நிர்வகிப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகளை செயற்படுத்தியது. ஏற்றுமதியாளர்களுக்கான முன்னுரிமை முறைமைகள, கியுஆர் குறியீடு அடிப்படையிலான எரிபொருள் விநியோகம் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கான முற்கொடுப்பனவு அட்டைகள் ஆகியவை இதில் அடங்கும்.

புவிசார் அரசியல் பதற்றங்கள் மற்றும் விநியோகத் தடைகளால் உந்தப்பட்ட உலகளாவிய மசகு எண்ணெய் விலைகள் 2023 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஓரளவு மிதமான நிலையைக் காட்டிய போதிலும் அதிகமாகவே இருந்தன.

இச்சவால்கள் இருந்தபோதிலும், எரிபொருள் விநியோகம் மற்றும் விலை நிர்ணயம் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை விழிப்புடன் செயற்பட்டு, கைத்தொழில், விவசாயம் மற்றும் சுற்றுலா போன்ற அத்தியாவசிய துறைகளுக்கு ஆதரவளித்தது. கொவிட்-19 நோய்ப்பரவலுக்கு பிந்திய பொருளாதாரச் தொழிற்பாடுகளைத் நிலைநிறுத்துவதற்கும், சுற்றுலாத் துறையின் மீட்சியை வசதிப்படுத்தவதற்கும் இம்முயற்சிகள் முக்கியமானவையாக அமைந்தன.

எரிபொருள் மற்றும் நிலக்கரி பற்றாக்குறை, வெளிநாட்டுச் செலாவணி தடைகள் மற்றும் நீர்த்தேக்க அளவு குறைந்தமை காரணமாக மின்சாரம் வழங்குவதில் மின்சார துறைகளும் குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொண்டன. இதனால் மின்சாரம் தடைப்பட்டு பொருளாதாரம் பாதிக்கப்பட்டது. நிலக்கரி கொள்வனவு நிதியத்தை நிறுவுதல் உட்பட இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மத்திய வங்கியும் அதிகாரிகளும் நடவடிக்கை எடுத்தனர். இதன் விளைவாக, நீர் மின்சாரம், எரிபொருள் எண்ணெய் அடிப்படையிலான மற்றும் நிலக்கரி மின் உற்பத்தி ஆகியவற்றின் பங்களிப்பு குறைந்தமையுடன் மொத்த மின் உற்பத்தி 2022 இல் 4.6% இனால் குறைவடைந்தது.

**மின்சார மற்றும் வலுத் துறையில் அதிகரித்த பாதிப்புக்கள் உடனடி பதிலிறுப்புக்களை அவசியமாக்கின**



# தொழிற்படுகின்ற சூழல்

### உள்நாட்டு பெற்றோலியக் கைத்தொழில்

இலங்கையின் சிக்கலான தொழிற்பாடுடுச் சூழல் பெற்றோலியத் கைத்தொழிற்துறையை நேரடியாகப் பாதித்ததுடன் இரண்டு முக்கிய முக்கிய நிறுவனங்களான இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஐஓசி நிறுவனம் ஆகியன ஒழுங்குமுறைப்படுத்தல் மேற்பார்வையின் கீழ் உள்நாட்டு பெற்றோலியக் கைத்தொழிலில் ஈடுபட்டன.

ஆண்டு முழுவதும், இலங்கையில் எரிபொருள் விலைகள் உலகளாவிய எண்ணெய் விலை ஏற்ற இறக்கங்கள், இறக்குமதி செலவுகள், வரிகள் மற்றும் அரசாங்க ஒழுங்குவிதிகள் என்பன் மூலம் செல்வாக்குச்செலுத்தப்பட்டன. பாதிக்கப்பட்டன. பொதுமக்கள் எதிர்கொள்ளும் பொருளாதாரச் சிரமங்களைக் கருத்தில் கொண்டு, செலவு மீட்பு மற்றும் நுகர்வோருக்கு வசதியான விலை இடையே சமநிலையை ஏற்படுத்த, எரிபொருள் விலையை அதிகாரிகள் கவனமாக நிர்வகித்தனர்.

சீன, அமெரிக்க மற்றும் அவுஸ்திரேலிய நிறுவனங்கள் உட்பட வெளிநாட்டு எரிபொருள் நிறுவனங்களுக்கு இலங்கையில் உள்நாட்டு சில்லறை விற்பனைச் சந்தை அண்மையில் திறக்கப்பட்டமை முழுத் தொழில்துறைக்கும் உள்ளார்ந்தங்களை கொண்டிருக்கும்.

2022 ஆண்டு காலப்பகுதியில் குறைந்தளவிலான வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மை, உள்நாட்டுப் பெற்றோலிய உற்பத்திகளின் உயர்வடைந்த விலைகள், எரிபொருள் பங்கீடு மற்றும் மெதுவடைந்த பொருளாதார நடவடிக்கைகள் என்பவற்றிற்கு மத்தியில் குறைந்தளவிலான இறக்குமதிகளின் ஒருங்கிணைந்த தாக்கத்தின் காரணமாக உள்நாட்டுச் சந்தையில் பெற்றோலிய உற்பத்திகளின் ஒட்டுமொத்த விற்பனை அளவு 2022 காலப்பகுதியில் வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது.

இந்நிலைமையினை முகாமைசெய்யும் நோக்கில், 2022 ஓகத்திலிருந்து கியுஆர் குறியீட்டின் அடிப்படையிலமைந்த எரிபொருள் பங்கீட்டு முறைமையினை நடைமுறைப்படுத்துவதன் மூலம் கேள்வி முகாமைத்துவ உபாயங்களை அறிமுகப்படுத்துவதற்கான வழிமுறைகளை அரசாங்கம் மேற்கொண்டது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன எரிபொருள் நிரம்பல் இடையூறுகளுக்குட்பட்ட மத்தியில் லங்கா ஐஓசி பிஎல்சியின் விற்பனை அளவுகள் குறிப்பிடத்தக்க வளர்ச்சியொன்றினை மீளாய்விற்கு உட்பட்ட காலப்பகுதியில் பதிவுசெய்தன.

வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மைப் பற்றாக்குறை காரணமாக வரையறுக்கப்பட்ட எரிபொருள் நிரம்பலிற்கு மத்தியில் சாதகமான நீர்த்தேக்க மட்டங்கள் மற்றும் மின் வெட்டுக்கள் என்பவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு நீர்மின் உற்பத்தி மீதான அதிகரித்தளவிலான தங்கியிருத்தலானது ஆண்டு காலப்பகுதியில் மின் உருவாக்கத் துறையிலிருந்தான எரிபொருள் கேள்வியில் ஒட்டுமொத்த வீழ்ச்சியொன்றினைத் தோற்றுவித்தது. இதற்கமைய, மின் உருவாக்கத்திற்கான எரிபொருளின் விற்பனைகள், மீளாய்விற்குட்பட்ட காலப்பகுதியில் 6.8 சதவீத ஆண்டிற்கு ஆண்டு சுருக்கமொன்றினைப் பதிவுசெய்தன.

2022 காலப்பகுதியில், சுத்திகரிப்பு தொழிற்பாடுகளுக்கான மசகெண்ணெய்யின் கிடைப்பனவின்மையின் காரணமாக ஏறத்தாழ 225 நாட்களுக்கு சபுகஸ்கந்த சுத்திகரிப்பு ஆலை தொடர்ந்தும் மூடப்பட்டிருந்தது. இதற்கமைய, ஒட்டுமொத்த மசகெண்ணெய் செயன்முறைப்படுத்தலானது 58.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில், டீசல், பெற்றோல், எரிபொருள் எண்ணெய் மற்றும் நப்தா போன்ற முக்கிய உற்பத்திகளின் சுத்திகரிப்பு ஆலை வெளியீடானது மீளாய்விற்கு உட்பட்ட காலப்பகுதியில் முறையே 65.4, 68.8, 45.7 மற்றும் 71.2 சதவீதங்களினால் சுருக்கமடைந்தன

அமைதியின்மையைக் கொண்ட 2022 ஆம் ஆண்டில், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது முக்கிய தடைகளால் குறிக்கப்பட்ட சாவால்மிக்க நிதியியல் சூழலலமைப்பை எதிர்கொண்டது.

2022 இல் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதியியல் செயலாற்றத்தின் முக்கிய பண்புகளில் அதன் தொழிற்பாட்டு நட்டங்களில் மேம்பாடு காணப்பட்டமையாகும். ஒன்று 2022இல் மேலும் மோசமடைந்தது. கணக்காய்விற்கு உட்படுத்தப்படாத நிதியியல் கூற்றுக்களின் பிரகாரம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்பாட்டு நட்டங்கள் முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூ.41.3 பில்லியன் தொழிற்பாட்டு நட்டத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் ரூ.6.2 பில்லியனிற்கு வரையறுக்கப்பட்டது. இம்மேம்பாடானது உலகளாவிய மசகெண்ணெய் விலைகளில் குறிப்பிடத்தக்க தளம்பல்களிற்கு மத்தியில் விலைத் திருத்தங்களின் தாக்கத்தின் பகுதியாக அமைந்தது. எனினும், 2022 மார்ச் தொடக்கம் மே வரையான காலப்பகுதியில் ஐ.அ.டொலரிற்கு எதிராக இலங்கை ரூபாவின் சடுதியான பெயரளவு தேய்வடைதலானது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு ரூ.527.0 பில்லியன் கொண்ட குறிப்பிடத்தக்க செலாவணி வீத வேறுபாட்டு நட்டமொன்றினை விளைவித்து, அது இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதியியல் செயலாற்றத்தின் மீது பாரிய இழப்பினை ஏற்படுத்தி முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூ.81.8 பில்லியன் கொண்ட நட்டத்துடன் (வரிகளுக்கு முன்னர்) ஒப்பிடுகையில் 2022இல் ரூ.615.1 பில்லியன் கொண்ட ஒட்டுமொத்த நட்டமொன்றினைப் (வரிகளுக்கு முன்னர்) பதிவுசெய்தது.

இச்சவால்களுக்கு மத்தியில், மாதாந்த அடிப்படையில், செலவைப் பிரதிபலிக்கக்கூடிய விலைச் சீராக்கங்கள் மற்றும் செலாவணி வீத தளம்பல்களின் படிப்படியான உறுதிப்பாடு என்பன காரணமாக 2022 யூலையிலிருந்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இலாபமொன்றினைத் (வரிக்கு முன்னர்) தொடர்ந்தும் பதிவுசெய்தது. அதேவேளை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதியியல் ஆற்றலினை மேம்படுத்துவதற்கான வழிமுறையொன்றாக ஐ.அ.டொலர் 2.5 பில்லியனாக விளங்கிய இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உத்தரவாதமளிக்கப்பட்ட வெளிநாட்டு நாணய படுகடன் கையிருப்பினை அரசாங்கத்திற்கு மாற்றுவதற்கான அரசாங்கத்தின் தீர்மானத்துடன், வங்கித்தொழில் துறைக்கான இலங்கை

அட்டவணை 3.1
**பெற்றோலியத் துறையின் செயலாற்றம்**

| விடயம் | | 2021 (அ) | 2022 (ஆ) | வளர்ச்சி வீதம் (%) 2021 (அ) | வளர்ச்சி வீதம் (%) 2022 (ஆ) |
|---|---|---|---|---|---|
| இறக்குமதிகளின் அளவு ('000 மெ.தொ) | | | | | |
| மசகு எண்ணெய் | | 1,182 | 649 | -29.1 | -45.1 |
| சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள் | | 4,553 | 3,927 | 13.0 | -13.8 |
| நிலக்கரி | | 2,206 | 1,707 | -15.1 | -22.6 |
| திரவப் பெற்றோலிய வாயு | | 422 | 290 | -3.3 | -31.2 |
| உள்நாட்டு திரவப் பெற்றோலிய வாயு உற்பத்தி ('000 மெ.தொ) | | 17 | 6 | -34.1 | -65.8 |
| இறக்குமதிகளின் பெறுமதி (ச.உ.செ) | | | | | |
| மசகு எண்ணெய் | (ரூ.மில்) | 123,865 | 157,408 | 15.0 | 27.1 |
| | (ஐ.அ.டொ.மில்) | 625 | 484 | 7.2 | -22.6 |
| சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள் | (ரூ.மில்) | 564,681 | 1,294,311 | 75.5 | 129.2 |
| | (ஐ.அ.டொ.மில்) | 2,840 | 4,048 | 63.0 | 42.5 |
| நிலக்கரி | (ரூ.மில்) | 55,118 | 99,949 | 37.1 | 81.3 |
| | (ஐ.அ.டொ.மில்) | 278 | 365 | 27.8 | 31.3 |
| திரவப் பெற்றோலிய வாயு | (ரூ.மில்) | 64,436 | 75,882 | 47.1 | 17.8 |
| | (ஐ.அ.டொ.மில்) | 324 | 234 | 37.2 | -27.8 |
| மசகு எண்ணெயின் சராசரி விலை (ச.உ.செ) | | | | | |
| | (ரூ.மில்) | 13,645 | 32,573 | 62.2 | 138.7 |
| | (ஐ.அ.டொ.மில்) | 68.86 | 100.11 | 51.1 | 45.4 |
| பெற்றோலிய ஏற்றுமதிகளின் தொகை ('000 மெ.தொ) | | 853 | 641 | 7.0 | -24.9 |
| பெற்றோலிய ஏற்றுமதிகளின் பெறுமதி (ரூ.மில்) | | 100,975 | 177,194 | 46.7 | 75.5 |
| | (ஐ.அ.டொ.மில்) | 506 | 568 | 35.6 | 12.2 |
| உள்நாட்டு விற்பனைகள் - சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள் ('000 மெ.தொ) | | 4,447 | 3,833 | -3.3 | -13.8 |
| இதில்: பெற்றோல் (92 ஒக்டேன்) (இ) | | 1,238 | 1,119 | 8.7 | -9.6 |
| பெற்றோல் (95 ஒக்டேன்) | | 116 | 69 | -3.5 | -40.7 |
| தன்னியக்க டீசல் (ஈ) | | 1,875 | 1,693 | 7.1 | -9.7 |
| சிறப்பு டீசல் | | 75 | 78 | 8.2 | 5.0 |
| மண்ணெண்ணெய் | | 185 | 98 | 5.6 | -46.9 |
| உலைஎண்ணெய் | | 720 | 496 | -25.8 | -31.1 |
| அவ்டூர் | | 224 | 246 | 18.6 | 9.8 |
| நப்தா | | 11 | 32 | -93.5 | 203.6 |
| உள்நாட்டு விற்பனைகள் - திரவப் பெற்றோலிய வாயு ('000 மெ.தொ) | | 457 | 294 | -3.3 | -35.6 |
| உள்நாட்டு விலை (காலமுடிவில்) (ரூ/லீற்றர்) | | | | | |
| பெற்றோல் (92 ஒக்டேன்) | | 177.00 | 370.00 | 29.2 | 109.0 |
| பெற்றோல் (95 ஒக்டேன்) | | 207.00 | 510.00 | 28.6 | 146.4 |
| தன்னியக்க டீசல் | | 121.00 | 420.00 | 16.3 | 247.1 |
| சிறப்பு டீசல் | | 159.00 | 510.00 | 30.5 | 220.8 |
| மண்ணெண்ணெய் | | 87.00 | 365.00 | 24.3 | 319.5 |
| உலைஎண்ணெய் | | | | | |
| 800 செக்கன்கள் | | 110.00 | 320.00 | 57.1 | 190.9 |
| 1,500 செக்கன்கள் | | 110.00 | 320.00 | 57.1 | 190.9 |
| திரவப் பெற்றோலிய வாயு (ரூ/கி.கி) | | | | | |
| லிட்றோ வாயு | | 214.00 | 368.80 | 79.2 | 72.3 |
| லாவ்ஸ் வாயு | | 227.20 | 424.00 | 90.2 | 86.6 |
| பன்னாட்டு மசகு எண்ணெய் விலைகள் (ஐ.அ.டொலர்/பீப்பாய்) | | | | | |
| பிரென்ட் | | 70.80 | 99.06 | 63.3 | 39.9 |
| வெஸ்ட் டெக்சாஸ் இன்டமீடியட் (WTI) | | 67.94 | 94.41 | 70.8 | 39.0 |
| பெற்றோலியம் மற்றும் ஏனைய திரவங்கள் | | | | | |
| உலக எண்ணெய் நிரம்பல் (நாளொன்றுக்கான மில்லியன் பீப்பாய்கள்) | | 95.7 | 99.9 | 1.9 | 4.3 |
| உலக எண்ணெய் கேள்வி (நாளொன்றுக்கான மில்லியன் பீப்பாய்கள்) | | 97.1 | 99.4 | 5.6 | 2.4 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) எக்ஸ்ரா பிரீமியம் யூரோ 3 உள்ளடங்கலாக
(ஈ) எக்ஸ்ராமைல் டீசல் உள்ளடங்கலாக

மூலங்கள்: இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
லங்கா ஐ.ஓ.சி பிஎல்சி
வரையறுக்கப்பட்ட லங்கா மரைன் (தனியார்) சேவிஸ் கம்பனி
வரையறுக்கப்பட்ட லிட்றோ காஸ் லங்கா கம்பனி
வரையறுக்கப்பட்ட லாவ்ஸ் காஸ் பீஎல்சி
இலங்கைச் சுங்கம்
புளும்பேர்க்
ஐக்கிய அமெரிக்கா வலுத் தகவல் நிர்வாகம்

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வெளிநின்ற வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட கடன்கள் மற்றும் இறக்குமதி உண்டியல்கள் 2021 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 3.4 பில்லியனிலிருந்து 2022 இறுதியளவில் ஐ.அ.டொலர் 0.2 பில்லியனிற்குக் குறைவடைந்தது.

பொது நிறுவனங்களிடமிருந்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மொத்த வெளிநின்ற வர்த்தகக் கிடைக்கப்பெறத்தக்கவைகள் 2021 இறுதியிலிருந்து 2022 இறுதியளவில் ரூ.220.3 பில்லியனிற்கு ரூ.59.3 பில்லியன் தொகையினால் அதிகரித்தன. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வெளிநின்ற மொத்த வர்த்தகக் கிடைக்கப்பெறத்தக்கவைகளில் சிறிலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் இலங்கை மின்சார சபை என்பன 2021 இறுதியில் அறிக்கையிடப்பட்ட முறையே 38.6 சதவீதத்திலிருந்தும் 51.5 சதவீதத்திலிருந்தும் 2022 இறுதியில் முறையே 49.3 சதவீதமாகவும் 31.1 சதவீதமாகவும் விளங்கின. செலாவணி வீதத்தின் சடுதியான தேய்வடைதலுடன் இசைந்து செல்லும் விதத்தில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கான சிறிலங்கன் எயார்லைன்ஸின் பொறுப்புக்களின் சமநிலைச் சீராக்கத்துடன் சிறிலங்கன் எயார்லைன்ஸிலிருந்தான வர்த்தக கிடைக்கப்பெறத்தக்கவைகளின் ரூபாப் பெறுமதி 2022 ஆண்டு காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது

## திரவப் பெற்றோலிய எரிவாயு

2022இல் குறிப்பாக அண்டின் முதலரைப் பகுதியில் வெளிநாட்டுச் செலாவணிப் பற்றாக்குறை காரணமாக நாட்டில் திரவ பெற்றோலிய எரிவாயு நிரம்பல் கணிசமானளவு இடையூறுக்குட்பட்டு, நகரத்திலும் நகர்சார் பகுதிகளிலும் வாழும் குடியிருப்பாளர்களைப் பாரியளவில் பாதித்தது. இருப்பினும், உலக வங்கியிடமிருந்தான நிதியியல் உதவியுடன் வங்கியியல் முறைமையில் வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மையினை அதிகரிப்பதற்கான மத்திய வங்கியின் நடவடிக்கைகள் திரவ பெற்றோலிய எரிவாயுவின் இறக்குமதிக்கு உதவியதுடன் அதன்மூலம் உள்நாட்டுச் சந்தையில் திரவ பெற்றோலிய எரிவாயு நிரம்பலின் இயல்புநிலை மீட்டெடுக்கப்பட்டது.

2022 ஓகத்தில், உள்நாட்டு திரவ பெற்றோலிய எரிவாயு விலைகளை நிர்ணயிப்பதற்கான செலவைப்

# தொழிற்படுகின்ற சூழல்

பிரதிபலிக்கக்கூடிய சூத்திரமொன்றின் பின்பற்றுதலிற்கு அரசாங்கம் ஒப்புதலளித்ததுடன் இதன் அமுலாக்கம் 2022 ஓகத்திலிருந்து தொடங்கப்பட்டது. லிட்றோ கேஸ் லங்கா லிமிடெட் என்பன உலகளாவிய விலைத் தளம்பல்களுக்கேற்ப ஆண்டுமுழுவதும் உள்நாட்டு விலைகளை திருத்தின. மாறுபடுகின்ற சந்தை நிலைமைகளுடன் அணிசேர்வதற்கு விலைகள் பல தடவைகள் மேல்நோக்கி மற்றும் கீழ்நோக்கி திருத்தம்செய்யப்பட்டன.

மேலும், திரவ பெற்றோலிய எரிவாயு இறக்குமதிகள் மீதான நிதியியல் சுமையினை தளர்த்தவதற்கு திரவ பெற்றோலிய எரிவாயு இறக்குமதிகளுக்கான துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தித் தீர்வை 2023 சனவரி 01இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் 7.5 சதவீதத்திலிருந்து இறக்குமதிச் செலவின் 2.5 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. திரவ பெற்றோலிய எரிவாயு வாடிக்கையாளர்களுக்கு அதிகம் வசதியானதாகவும் கிடைக்கத்தக்கதாகவும் ஆக்குவதை இக்குறைப்பு நோக்காகக் கொண்டிருந்தது.

உலகளாவிய சந்தைகளில் திரவ பெற்றோலிய எரிவாயுவின் சராசரி உலகளாவிய வலுச்சக்தி சந்தையில் உயர்வடைந்த நிரம்பல் பக்க கரிசனைகள் காரணமாக 2022 ஏப்பிறலில் மெ.தொன்னொன்றிற்கு ஐ.அ.டொலர் 954 ஆக உயர்வடைந்து, எனினும் படிப்படியாக மிதமடைந்து, 2022 திசெம்பரில் மெ.தொன்னொன்றிற்கு ஐ.அ.டொலர் 650இற்கு ஏறத்தாழ 31.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையானது. உலகளாவிய நுகர்வுக் கேள்வியில் மிதமடைதலினைப் இது பிரதிபலித்தது.

இம்மிதமடைதலுக்கு மத்தியல், 2023 முதற் காலாண்டில் உலகளாவிய திரவ பெற்றோலிய எரிவாயு விலைகள் மெ.தொன்னொன்றிற்கு ஐ.அ.டொலர் 700இற்கு அதிகமாக தொடர்ந்தும் காணப்பட்டது. 2022 காலப்பகுதியில் விலைகளில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காணப்பட்ட அதேவேளை, 2023 ஆரம்ப காலம்வரை அவை உயர்வடைந்து காணப்பட்டன என்பதை இது எடுத்துக்காட்டுகின்றது.






## மோட்டார் வாகனங்களின் புதிய பதிவு

| வகை | 2021 | 2022 (அ) | வளர்ச்சி வீதம் (%) 2021 | வளர்ச்சி வீதம் (%) 2022 (அ) |
|---|---|---|---|---|
| **மோட்டார் வாகனங்களின் புதிய பதிவு (எண்.)** | **33,850** | **20,510** | **-83.3** | **-39.4** |
| பேருந்துகள் | 281 | 404 | -51.4 | 43.8 |
| மோட்டார் கார்கள் | 3,495 | 1,489 | -83.4 | -57.4 |
| முச்சக்கர வண்டிகள் | 2,093 | 36 | -70.7 | -98.3 |
| இரட்டை நோக்கு வாகனங்கள் | 771 | 760 | -91.9 | -1.4 |
| மோட்டார் சைக்கிள்கள் | 8,011 | 9,060 | -94.7 | 13.1 |
| பொருட் போக்குவரத்து வாகனங்கள் | 4,432 | 1,832 | 12.5 | -58.7 |
| நில வாகனங்கள் | 14,764 | 6,929 | 77.8 | -53.1 |
| நான்கு சக்கர சைக்கிள்கள் மற்றும் மோட்டார் இல்லங்கள் | 3 | - | -99.4 | - |

(அ) தற்காலிகமானது

மூலம் : மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம்

# தொழிற்படுகின்ற சூழல்

### புகையிரதப் போக்குவரத்து

2022 ஆண்டு காலப்பகுதியில் இலங்கைப் புகையிரதம் மிதமடைந்த தொழிற்பாட்டு மேம்பாடொன்றினைப் பதிவுசெய்தமையானது கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினைத் தொடர்ந்து பொதுமக்களது நகர்வின் படிப்படியான மீட்டெடுத்தலினைப் பிரதிபலித்தது. இலங்கைப் புகையிரதத்தின் மதிப்பிடப்பட்ட ஒட்டுமொத்த தொழிற்படுத்தப்பட்ட கிலோமீற்றர் தூரம் மற்றும் பயணிகள் கிலோமீற்றர் தூரம் என்பன 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் முறையே 67.3 சதவீதத்தினாலும் 205.9 சதவீதத்தினாலும் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துக் காணப்பட்டன. இருப்பினும், சரக்குக் கி.மீ. தூரமானது கடந்த ஆண்டின் தொடர்புடைய காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 161.6 மில்லியன் மெ.தொன் கி.மீ. தூரத்துடன் ஒப்பிடுகையில் மீளாய்விற்குட்பட்ட காலப்பகுதியில் 138.7 மில்லியன் மெ.தொன் கி.மீ. தூரத்திற்கு 14.2 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது.

2022இல் இலங்கைப் புகையிரதத்தின் நிதியியல் செயலாற்றமானது தொடர்ந்தும் மெதுவடைந்து காணப்பட்டது. தற்காலிக நிதியியல் கூற்றுக்களின் பிரகாரம், இலங்கைப் புகையிரதத்தினால் உறப்பட்ட தொழிற்பாட்டு நட்டமானது 2021இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.10.3 பில்லியன் கொண்ட தொழிற்பாட்டு நட்டத்துடன் ஒப்பிடுகையில் ஆண்டு காலப்பகுதியில் ரூ.12.4 பில்லியனிற்கு மேலும் உயர்வடைந்தது. எனினும்இ இலங்கைப் புகையிரதத்தின் மொத்த வருவாய்கள் ரூ.11.1 பில்லியனாக விளங்கிய முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022இல் 8.4 பில்லியனிற்கு குறிப்பிடத்தக்களவு அதிகரித்தன. 2022 யூலை தொடக்கம் நடைமுறைக்குவந்த புகையிரதக் கட்டண உயர்விலிருந்து தோற்றம்பெற்ற பயணிகள் போக்குவரத்து நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட வருவாய்களில் ஏற்பட்ட மேம்பாடுகள் இதற்கு முதன்மைக் காரணமாயமைந்தன.

அதேவேளை, இலங்கைப் புகையிரதத்தின் மொத்த செலவினம் ரூ.2.1 பில்லியனிலிருந்து ரூ.42.5 பில்லியனிற்கு அதிகரித்ததுடன் இது ஆண்டு காலப்பகுதியில் எரிபொருள் விலைகளில் மேற்கொள்ளப்பட்ட மேல்நோக்கிய சீராக்கங்களுடன் மீண்டெழுகின்ற செலவினத்தில் ஏற்படுத்தப்பட்ட கணிசமானளவிலான அதிகரிப்பிற்கு முதன்மையாகப் பங்களித்திருக்க முடியும். மூலதனச் செலவினம் ரூ.19.0 பில்லியனிற்கு 30.7 சதவீதத்தினால் சுருக்கமடைந்து காணப்பட்டது.

### வான்வழிப் போக்குவரத்து

கொவிட்-19 நோய்த்தொற்றிலிருந்து உலகம் மீட்சியடைந்து வருவதனால் உலகளாவிய போக்குவரத்து நடவடிக்கைகளில் ஏற்படுத்தப்பட்ட படிப்படியான மீட்டெடுத்தலுடன் வான்வழிப் போக்குவரத்துத் துறையின் செயலாற்றமானது 2022இல் மேம்பட்டுக் காணப்பட்டது. இதற்கமைய, 2022இல் பயணிகளின் வருகைகளானது உலகளாவிய போக்குவரத்து நடவடிக்கைகளின் மீளாரம்பம் மற்றும் 2021இல் காணப்பட்ட தாழ்ந்தளவிலான புள்ளிவிபர தளம் என்பவற்றினால் பாரியளவில் ஆதரவளிக்கப்பட்டு 5.5 மில்லியனிற்கு 266.8 சதவீத குறிப்பிடத்தக்க ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தன. ஆண்டு காலப்பகுதியில், சரக்குக் கையாளல் 166,969 மெற்றிக்தொன்களிற்கு 9.3 சதவீதத்தினால் ஆண்டிற்கு ஆண்டு சுருங்கியது.

2022 இறுதியளவில், நாட்டில் 33 பன்னாட்டு விமான நிலையங்களும் ஐந்து உள்நாட்டு விமான நிலையங்களும் தொழிற்பாட்டிலிருந்தன. பண்டாரநாயக்க பன்னாட்டு விமான நிலையம் ஆண்டு காலப்பகுதியில் 41,547 வானூர்தி நடமாட்டங்களுக்கு 70.7 சதவீத குறிப்பிடத்தக்க வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்ததுடன் வானூர்தி நடமாட்டங்களின் மொத்த எண்ணிக்கையில் 42,196இற்கு 68.2 சதவீதம் கொண்ட அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது.

### பெற்றோலிய உற்பத்தி விலை




### விநியோகிக்கப்பட்ட அளவு




மூலம் : இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்
லங்கா ஐஓசி பீஎல்சி

## ஒழுங்குமுறைப்படுத்தல் சூழல்

### தற்போதய ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு

எரிசக்தி அமைச்சர் பெட்ரோலிய தொழில்துறையின் ஒட்டுமொத்த ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரத்தையும் கொண்டுள்ளார்.

இலங்கையில் மூன்றம் நிலைப் பெற்றோலியத் தொழிற்துறையின் ஒழுங்குமுறைப்படுத்தலானது தற்போது 2002 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பெற்றோலியப் பொருட்கள் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம் மற்றும் 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டம் ஆகியவற்றால் நிர்வகிக்கப்படுகின்றது.

இதற்கு மேலதிகமாக, பின்வரும் ஒழுங்குவிதிகள் தொழில்துறையின் தொடர்புடைய தொழிற்பாடுகளை ஒழுங்குபடுத்தும்.

- 2007 ஆம் ஆண்டின் 7 அம் இலக்க கம்பனிகள் சட்டம்
- 1995 ஆம் ஆண்டின் 15 இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம்
- 1954 ஆம் ஆண்டின் கடை மற்றும் அலுவலக பணியாளர்கள் சட்டம்
- 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டம்.

### விநியோக சங்கிலி மற்றும் உட்கட்டமைப்பு

எமது விநியோகச் சங்கிலியின் ஒருங்கிணைந்த கூறுகள் மற்றும் எமது தொழிற்பாடுகளுக்கு ஆதரவளிக்கும் முக்கியமான உட்கட்டமைப்பு உள்ளடக்குவன.

சுத்திகரிப்பு கொண்டுசெல்லல் மற்றும் குழாய் விநியோகங்கள்: எமது சுத்திகரிப்பு நிலையத்தை கொலன்னாவையுடன் இணைக்கும் மூன்று குழாய்களின் வலையமைப்புகளை நாம் பயன்படுத்துகிறோம், இது பாதுகாப்பான மற்றும் வினைத்திறன்மிக்க உற்பத்திப் பரிமாற்றங்களை உறுதி செய்கின்றது.

மொத்த விநியோக தொழிற்பாடு: எமது நாடளாவிய விநியோக வலையமைப்பானது சாலை மற்றும் புகையிரதம் உட்பட பல்வேறு முறைகள் மூலம் மொத்த பெற்றோலியப் பொருட்களை வினைத்திறனுடன் விநியோகிக்கினற்து. தரம் I மற்றும் தரம் II சாலைகளில் உபாய கையிருப்பு முகாமைத்துமானது எமது விநியோகச் சங்கிலியை மேம்படுத்துகின்றது. விமான நிலையங்களுக்கு தினசரி விமான எரிபொருள் விநியோகம் தடையற்ற விமான தொழிற்பாடுகளை உறுதிசெய்கின்றது.

முத்துராஜவெல முனையம்: 2004 ஆம் ஆண்டு முதல் செயற்படும் இம்முனையம் 2008 ஆம் ஆண்டில் பெற்றோல் 92 ஒக்டேன் மற்றும் குறைந்த கந்தக எரிபொருள் எண்ணெய் ஆகியவற்றைக் கையாளும் வகையில் விரிவாக்கப்பட்டது. இது இரண்டு பிரத்யேக பெறுதல் குழாய் மற்றும் ஒரு இரட்டை பாதை மிதவை என்பவற்றைப் பயன்படுத்துகின்றது.

கரைகடந்த தொழிற்பாடுகள்: முத்துராஜவெல மிதவைக்கு தாங்கி வருகைகளை எமது கடல்சார் குழு நிர்வகித்து சவாலான சூழ்நிலையில் பாதுகாப்பாக பயணிக்கின்றது. நங்கூரமிதவை முதல்வர், சுழியோடிகள் மற்றும் கடல்சார் பொருத்துநர்கள், போன்றோர் துல்லியமான இறக்கத்தை உறுதிசெய்கின்ற அதேவேளை எமது பராமரிப்பு மற்றும் அவசரகால பதில் கப்பல் (MERV) அவசரநிலைக்கு தயாராக உள்ளது.

கொலன்னாவ முனையத்திலிருந்து விநியோகம்: எமது கொலன்னாவ முனையம் மைய அமைவிடமாக செயற்பட்டு, புகையிரத விநியோகங்கள், குழாய் பரிமாற்றங்கள் மற்றும் பிரீமியம் பெற்றோலியப் பொருட்கள் களஞ்சியப்படுத்தல் போன்றவற்றுக்கு துணையளிக்கின்றது.

# நிதியியல் மூலதனம்

## நிதியியல் செயலாற்றும்

### வருவாய்

2022 ஆம் ஆண்டில் பல பொருளாதார சவால்களின் கீழ், நிறுவனத்தின் வருவாய் முன்னைய ஆண்டை விட 34 சதவீதத்தினால் குறைந்துள்ளது, நிறுவனத்தின் விற்பனை அளவு குறைவடைந்தமை இதற்கு முக்கிய காரணமாகவிருந்தது. 2022 ஆம் ஆண்டில் எரிபொருள் விநியோகச் சங்கிலியில் நிலவிய நெருக்கடியின் காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட எரிபொருள் இருப்பு நிறுவனத்தின் விற்பனை அளவை மிகவும் பாதித்தது. 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2022 ஆம் ஆண்டில் விற்பனை அளவு 17 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது.

விற்பனை அளவு (கி.லீ. மில்)




### இலாபத்தன்மை

வருவாயில் வீழ்ச்சியினைத் தொடர்ந்து முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்த இலாபம், 2022 இல் 56 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. அதற்கமைய, மொத்த இலாப எல்லை 2022 இல் 28 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த அதேவேளை முன்னைய ஆண்டில் இது 44 சதவீதமாக இருந்தது.

வருவாய் மற்றும் மொத்த இலாப எல்லை (ரூ. மில்)




நிறுவனம் 2022 இல் ரூ.0.9 பில்லியன் தொழிற்பாட்டு இழப்பையும் 10 சதவீதம் கொண்ட தொழிற்பாட்டு இழப்பு எல்லையினையும் பதிவுசெய்த அதேவேளை 2021 இல் தொழிற்பாட்டு இலாப எல்லை 10 சதவீதமாகவிருந்தது.

தொழிற்பாட்டுச் செயலாற்றும்




வரிக்கு முந்திய மற்றும் வரிக்கு பிந்திய இலாபம் (ரூ. மில்)




மீளாய்வுக்குட்படுகின்ற காலப்பகுதியில் வரிக்கு முந்திய இலாபமானது ரூ. 0.7 பில்லியானக அறிக்கையிடப்பட்டிருந்தது இது 2021 இன் வரிக்கு முந்திய இலாபத்தின் 324 சதவீத வீழ்ச்சியாகும். 2022 ஆம் ஆண்டில் ஆளணிச் செலவு, பணியாளர் நலன் போன்ற செலவுகளிலிருந்து சில செலவு மீதப்படுத்தல்கள் இருந்தபோதிலும், வருவாய் வீழ்ச்சியை சமாளிக்க அத்தகைய சேமிப்பு போதுமானதாக இருக்கவில்லை. பொருளாதாரத்தின் பணவீக்க சூழ்நிலையிலும் கூட, நேரடிச் செலவுகள் மற்றும் நிர்வாகச் செலவுகள் முறையே 19 சதவீதத்தினாலும் 3 சதவீதத்தினாலும் குறைவடைந்துள்ளன.

நிதி வருமானமானது நிலையான வைப்புகள், மீள்கொள்வனவு ஒப்பந்தங்கள் ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் வட்டி வருமானம் மற்றும் ஊழியர்களின் கடனுக்கான வட்டி என்பவற்றை உள்ளடக்குகின்றது. வைப்புகள் மீதான வட்டி வீதங்களின் அதிகரிப்பு 2022 ஆம் ஆண்டில் நிதி வருவாயை

42 சதவீதத்தினால் உயர்த்தியது. மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான வரிக்குப் பிந்திய நட்டமானது 210 சதவீத வீழ்ச்சியை எடுத்துக்காட்டி, ரூ. 1 பில்லியன் ஆகவிருந்தது. 2022 இல் விற்பனை அளவு குறைந்ததன் விளைவாக வருவாயில் வீழ்ச்சி முக்கிய காரணமாக அமைந்திருந்தது. ரூ. 2022 இல் 24 சதவீதமாகவிருந்த 30 சதவீதமாக வரிகளில் அதிகரிப்பின் விளைவாக, அதிகரித்திருந்த பிற்போடப்பட்ட தாக்கத்தின் காரணமாக வருமான வரிச்செலவுகள் ரூ. 354 மில்லியனாக காணப்பட்டது.

நிறுவனத்தின் ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் முக்கியமாக வரையறுக்கப்பட்ட நன்மைக் கடப்பாடுள் மீதான கணிப்பீட்டு இழப்பை உள்ளடக்கியது.

## நிதியியல் நிலை

### மொத்த சொத்துக்கள்







ஐந்தொகையானது அதிகளவில் நடைமுறையல்லாச் சொத்துக்களை நோக்கி காணப்படுகின்றது. இது மொத்த சொத்துக்களின் 49 சதவீதத்திற்கு வகைகூறுகின்றது. நடைமுறை சொத்துக்களில் மொத்த சொத்துகளின் 32 சதவீதத்திற்கு வகைகூறுகின்றது. நிலுவைகளை உரிய காலத்தில் தீர்ப்பனவு செய்யாமை காரணமாக வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்கப்பெறத் தக்கவைகள் திரண்டு காணப்படுகின்றன. ஏனைய நிதியியல் சொத்துக்களும் காசும் முறையே 5 சதவீதத்தினையும் 6 சதவீதத்தினையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

மொத்த சொத்து தளமானது 2021 இன் ரூ. 34 பில்லியனுடன் ஒப்பிடுகையின் இவ் ஆண்டின் இறுதியில் ரூ. 33.4 பில்லியனாக 2022 இல் 2 சதவீதத்தினால் அதிகரித்தது. பணவீக்கம், மற்றும் பொருளாதாரம் மெதுவடைந்தமையின் காரணமாக வருவாயில் குறைவு என்பவற்றின் விளைவாக காசும் காசுக்கு சமமானவைகளும் குறைவடைந்தன.

### தொழிற்படு மூலதனம்

நடப்புச் சொத்துக்கள் விகிதமும் குறுகியகால திரவத்தன்னை சொத்து விகிதமும் 2022 இறுதியில் உள்ளவாறு முறையே 5.36 மற்றும் 5.06 ஆகவிருந்த அதேவேளை இரு விகிதங்களும் நடைமுறைச் சொத்துக்களில் உள்ளவற்றைவிட நடைமுறை பொறுப்புக்களில் கணிசமான அதிகரிப்பின் விளைவாக முன்னைய ஆண்டை விட கணிசமாக குறைவடைந்தன.

# நிதியியல் மூலதனம்

நிதியியல் கட்டமைப்பு




நடைமுறை/துரித சொத்து விகிதம் (தடவைகள்)




### சொத்துப் புரள்வு விகிதம்

சொத்துப் புரள்வு விகிதமானது விற்பனைகளை உருவாக்குவதற்கான கம்பனியின் அதன் சொத்துக்களின் பயன்பாட்டின் வினைத்திறனை அளவிடுகின்றது. சொத்து புரள்வு விகிதமானது 2022 இல் வருவாயில் கணிசமான வீழ்ச்சியின் விளைவாக 2021 இன் 43 சதவீதத்திலிருந்து 2022 காலப்பகுதியில் 28 சதவீதத்திற்கு குறைவடைந்தது. அதற்கமைய, விற்பனைகளை உருவாக்குவதற்கான சொத்துக்களின் பயன்பாட்டின் வினைத்திறன் கம்பனியின் கட்டுப்பாட்டை தாண்டியதாகவிருந்த 2022 இல் நிலவிய பொருளாதார நிலைமையின் காணமாக குறைவடைந்துள்ளது.

சொத்து புரள்வு விகிதம்




### பங்குரிமை மூலதனமும் பொறுப்புகளும்

கம்பனியின் சொத்துக்களின் 81 சதவீதம் நிதியிடுகின்ற ரூ. 27.2 பில்லியன் கொண்ட பங்குடமையாளர் நிதியங்களுடன் சிபெஸ்டேலி நிறுவனம் சிறப்பாக மூலதனத்தை திரட்டியுள்ளது. 2016 இல் கம்பனி அனைத்து கடன்பெறுதல்களையும் கம்பனி கொடுப்பனவுசெய்துள்ளதுடன் இவ்வாண்டிலும் புதிய கடன்கள் பெற்றுக்கொள்ளப்படவில்லை. சிபெஸ்டேலி நிறுவனத்தின் மொத்தப் பொறுப்பு 2021இன் ரூ. 6.0 பில்லியனில் இருந்து ரூ. 6.2 பில்லியனாக அதிகரித்துள்ளது.

### பங்குரிமை மூலதனம் மீதான ஆதாயம்

கம்பனியானது முன்னைய ஆண்டின் +4 சதவீதம் கொண்ட பங்குரிமை மூலதனம் மீதான ஆதாயத்துடன் ஒப்பிடுகையில் மீளாய்விற்கு உட்பட்ட ஆண்டுக்கு -4 சதவீதத்தை பதிவுசெய்துள்ளது.

பங்குரிமை மூலதனம் மீதான ஆதாயம் %




### முடுக்கு விகிதமும் மூலதன கட்டமைப்பும்

கம்பனியின் சொத்துக்களில் 77 சதவிகிதமானவை பங்குரிமைமூலதனம் ஊடாக நிதியளிக்கபட்டுள்ளதுடன் மிகுதி 23 சதவீதமானவை நீண்டகால மற்றும் குறுகியகால படுகடன் ஊடாக நிதியளிக்கப்பட்ட அதேவேளை 2021 இல் பங்குரிமை மூலதனத்திலிருந்து 79 சதவீதமும் குறுகிய நீண்ட மற்றும் கால மூலதனத்திலிருந்து 21 சதவீதமாகவும் இது இருந்தது. வரைபடங்களில் காட்டப்பட்வாறு பங்குரிமை மூலதனத்திலிருந்தான பங்களிப்பானது வரிக்கு பிந்திய இலாபத்தில் ஒன்றுசேர்தலில் காரணமாக 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022 இல் சிறிதளவு குறைவடைந்தள்ளது.

கம்பனியின் சுயநிதி படுகடன் வேறுபாட்டு விகிதம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்த 21 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் 23 வீதமாக அதிகரித்துள்ளது.

### நிதியிடல் மூலங்கள் ரூ. (மில்லியன்)




### பங்குதாரர் பெறுமதி உருவாக்கம்

| | 2022 | 2021 |
|---|---|---|
| பங்கொன்றிற்கான உழைப்பு (ரூ.) | (1.41) | 1.56 |
| பங்கொன்றிற்கான தேறிய சொத்து (ரூ.) | 36 | 37 |

பங்கொன்றிற்கான உழைப்பு 2022 இல் (1.41) ஆகவிருந்த வேளை அது 2021இல் 1.56 ஆகவிருந்தது. பங்கொன்றிற்கான தேறிய சொத்துக்கள் பெறுமதி 2022 இன் இறுதியிலுள்ளவாறு 37 தடவைகளிலிருந்து 36 தடவைகளாக அதிகரித்துள்ளது. பங்கொன்றிற்கான உழைப்பில் குறைவிற்கு 2022 ஆம் ஆண்டுக்காக அறிக்கையிடப்பட்ட வரிக்கு பிந்திய இழப்பு காரணமாகவிருந்ததுடன் பங்கொன்றிற்கான தேறிய சொத்து பெறுமதியில் குறைவிற்கு மீளாய்வுக்குட்படுகின்ற காலப்பகுதியில் தேறிய சொத்துக்களின் குறைவும் காரணமாக அமைந்தது.

### கடன்பெற்ற நிதியத்திற்கான பங்குரிமை விகிதம் (தடவை)




### பங்கொன்றிற்கான உழைப்பு (ரூ.)




### பங்கொன்றிற்கான தேறிய சொத்துப் பெறுமதி (ரூ.)



# தயாரிக்கப்பட்ட மூலதனம்

## 1. முத்துராஜவலையில் உட்கட்டமைப்பு அபிவிருத்தி வசதிகள்

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிட்டெட் (சிபெஸ்டேலி) முத்துராஜவெல முனையம் மொத்தமாக 52 அலவலர்களுடன் நாளொன்றுக்கு 3 உற்பத்திகளினதும் (டீசல், உலை எண்ணெய், மண்ணெண்ணெய்) 500 மெ.தொன்களை வழங்குவதற்கு 2004 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. எவ்வாறாயினும், நாட்டில் எரிபொருளுக்கான அதிகரித்த தேவைகள் காரணமாக மேற்குறித்த 3 உற்பத்திகளுக்கு மேலதிகமாக பெற்றோல் வழங்குதல் தொடங்கப்பட வேண்டியிருந்ததுடன் தற்போது முத்துராஜவெல முனையத்திலிருந்து 306 அலுவலர்களுடன் நாளொன்றுக்கு சுமார் 6000 மெ.தொ எரிபொருள் வழங்கப்படுகிறது. நாட்டில் எரிபொருளுக்கான கேள்வி எதிர்காலத்தில் பேணப்பட அல்லது அதிகரிக்கப்படவுள்ளதுடன் முத்துராஜவெல முனையத்திலிருந்து விநியோகிக்கப்படும் தற்போதைய அளவு தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதற்கு அவசியமாக காணப்பாடுகிறது.

முத்துராஜவெல முனையத்தின் திட்டமிடும்போது ஊழியர்களுக்காக வழங்கப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள் 52 ஊழியர்களுக்காக மாத்திரம் காணப்பட்டதுடன் தற்போது காணப்படுகின்ற வசதிகள் தற்போதுள்ள அலுவலர்களுக்கு மிகவும் போதாமல் காணப்படுகின்றது. வாகன தரிப்பிடம், பராமரிப்பு பணிகளுக்கான பொருட்கள் தேவையினை நிறைவுசெய்வதற்கான அதிகரிக்கப்பட்ட களஞ்சிய வசதிகள், பாதுகாப்பு அலுவலம், பணியாளர் ஓய்வு அறைகள் மற்றும் சிற்றுண்டிச்சாலை விஸ்தரிப்புகள் என்பன நடைமுறைப்பமுடுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ள மேம்படுத்தல்களாகும். மேலும், அலுவலர் விடுதிகள், விலைப்பட்டியல் அலுவலகம், மாநாட்டு மண்டபம் என்பனவும் கருத்திட்டத்தில் கூட்டிணைக்கப்படவுள்ளன. சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிட்டெட், பசுமைக் கட்டட எண்ணக்கருக்களுடனம் சக்தி வினைத்திறன் கட்டடக் கோவையுடனும் இணங்கியொழுகின்ற கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் தீர்மானித்துள்ளது.

முத்துராஜவெல முனையமானது ஓரளவு தானியக்கம்பெற்ற முனையமாவதுடன் எரிபொருள் நிரப்பு நிலையம் மற்றும் வேறு சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிட்டெட்டின் கொலன்னாவ நிரப்புநிலையம் மற்றும் மொத்த சாலைகளுடன் ஒப்பிடுகையில் வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறன் என்ற நியதிகளில் பல அனுகூலங்களை கொண்டதாகும். நிரப்பும் நிலைதூண்களின் அனைத்து தளங்களும் 10 தடுப்பு அறை வீதித் தாங்கிகளை நிரப்பும் இயலளவுடையதுடன் வீதித்தாங்கிகளின் செயன்முறைப்படுத்தல் நேரம் வேறு நிரப்பு நிலையங்களுடன் ஒப்பிடுகையில் மிகக்குறைவானதாகும். இதற்கு மேலதிகமாக, SPMB-02 மிதவையில் இறக்கப்படும் உற்பத்திகள் துறைமுக கட்டணங்களுக்குட்படாது முத்துராஜவெல முனையத்திற்கு நேரடியாக அனுப்பப்படுகின்றன. இம்முனையம் 2019 ஆம் ஆண்டளவில் தொழிற்பாட்டுக்கு வந்த வெளிச்சுற்றுவட்ட அதிவேகப் பாதையின் நுழைவில் அமையப்பெற்றுள்ளமை மற்றுமொரு முக்கிய அனுகூலமாகும். வெளிச்சுற்றுவட்ட பாதை கொழும்பிலிருந்து தொடங்குகின்ற அனைத்து அதிவேக பாதைகளையும் இணைப்பதுடன் குறைந்த தொழிற்படுத்தல் செலவுகளுடன் நாட்டின் எப்பாகத்தினையும் சென்றடைவதற்கு முத்துராஜவெல முனையத்தை இயலச்செய்கின்றது. புவியியல் அமைவிடத்தின் இவ் உபாயமிக்க அனுகூலமானது முத்துராஜவெல முனையத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் உச்சப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

தேவைப்பாட்டினை கருத்திற்கொண்டு, கட்டட வடிவமைப்பு மற்றும் கட்டமைப்புசார் சேவைகள் அளவிடுகள் மற்றும் இடப் பரிசோதனைப் பணிகள் என்பவற்றை மேற்கொள்வதற்கான ஆலோசகர் ஒருவரின் பணியை சிபெஸ்டேலி மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டன. முன்னுரிமைப் பொருட்கள் பயன்பாட்டாளர் பிரிவுகளால் இனங்காணப்பட்டுள்ளன. அதற்கேற்றவாறு விலைக்குறிப்பீட்டு ஆவணம், மதிப்பீடு மற்றும் வரைபடங்கள் திருத்தப்பட்டுள்ளன. கிடைக்கப்பெறுகின்ற வரவுசெலவுத்திட்டத்தினுள் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவதற்கு சபை அனுமதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.





## 2. 6 ஆம் வலயத்தில் குழாய் முறைமையினை தரமுயர்த்தல்

நாட்டின் எரிபொருளுக்கான கேள்வி வருடாந்தம் உறுதியாக வளர்ச்சியடைகின்றது. இக்கேள்வியை நிறைவுசெய்வதற்கு நிலைத்தூண்களின் நிரப்பும் இயலளவினை அதிகரிப்பதற்கு சிபெஸ்டேலி திட்டமிட்டுள்ளது. பெற்றோல் நிரப்பும் இயலளவினை மேம்படுத்துதல் இக்குறிக்கோளின் கீழ் திட்டமிடப்பட்டுள்ளது. புதிய உயர் இயலளவு பம்பிகளை பொருத்தவதன் மூலம் 7 ஆம் வலயத்தில் உள்ள முக்கிய பெற்றோல் நிரப்பும் நிலைத்தூணின் இயலளவு அதிகரிக்கப்படும். கொலன்னாவ எரிபொருள் விநியோக நிலையத்தில் 6 ஆம் வலயத்தில் புதிய உற்பத்தி பம்பி நிலையம் நிர்மாணிக்கப்பட்டது. இக்கருத்திட்டத்தின் மொத்த ஒப்பந்த பெறுமதி ரூ. 36 மில்லியன் என்பதுடன் பம்பி நிலைய நிர்மாணப் பணிக்கு சமாந்திரமாக குழாய் நீடிப்பு நிர்மாணமும் மேற்கொள்ளப்பட்டது. நீடிப்பு நிர்மாணம் வெற்றிகரமாக நிறைவடைந்ததுடன் இக்கருத்திட்டத்திற்கான மொத்த முதலீடு ரூ. 50 மில்லியன் ஆகும்.

வேண்டப்பட்ட குழாய்கள், வால்வுகள் மற்றும் அழுத்த அளவிகள் போன்ற ஏனைய துணைப்பொருட்கள் கொள்வனவு 2019 ஆம் நிதி ஆண்டில் திட்டமிடப்பட்டிருந்தது. பெறுகையின் மொத்த பெறுமதி ரூ. 55.7 மில்லியன் ஆகும்.

குழாயினை தயாரித்தல் ருமேனியாவில் API 54L - தரம் B உற்பத்தி விபரத்துடன் உருக்கு ஆலையில் ருமேனியாவில் B தரத்திற்கு இணங்க மேற்கொள்ளப்பட்டது. நிதி ஆண்டின் இறுதியளவில் குழாய்கள் 3 ஆம் தரப்பு பரிசோதனையினைக் கொண்டு வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டன. 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ரூ. 60 மில்லியன் முதலீட்டில் குழாய் ஆதரவுகளின் நிரமாணம் தொடங்கப்பட்டு 2024 இன் முதலாவது காலாண்டுக்குள் கருத்திட்டம் நிறைவுசெய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.









# தயாரிக்கப்பட்ட மூலதனம்

### 3. கொலன்னாவ எரிபொருள் விநியோக நிலையத்திற்கு கொழும்பு துறைமுகத்திலிருந்துதற்போதுள்ள 14" விட்டம் குழாயினை புனரமைத்தல்

இறக்குமதி செய்யப்பட்ட தொகையான எரிபொருளை கொழும்பு துறைமுகத்தில் உள்ள டொல்பின் தாங்கி இறங்குதுறையிலிருந்து (DTB) இருந்து கொலன்னாவை எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அனுப்புவதற்கு 14" விட்டக் குழாய் பயன்படுத்தப்படுகிறது. குழாயின் மொத்த நீளம் 7200 மீ. ஆவதுடன் துணை கடல் மற்றும் கரையோரப் பகுதிகளைக் கொண்டது. கொழும்பு துறைமுகத்தில் உள்ள டொல்பின் தாங்கி இறங்குதுறையிலிருந்து சுரங்க வாயில் வரையிலான பகுதி 23 ஆண்டுகள் பழமையானது (1750 மீ) அத்துடன் கொழும்பு துறைமுகத்தில் உள்ள சுரங்க வாயில் முதல் கொலன்னாவை வரையிலான பகுதி 50 ஆண்டுகள் பழமையானது (5750) மீ). கொழும்பு துறைமுகத்தில் உள்ள சுரங்க வாயில் முதல் கொலன்னாவை வரையிலான பகுதியில் அடிக்கடி உற்பத்திக் கசிவுகள் ஏற்படுவதுடன் நிலைமையை மதிப்பீடு செய்வதற்காக அப்பகுதி பொறியியல் பிரிவின் ஆய்வுப் பிரிவினால் பரிசோதிக்கப்பட்டது. ஆய்வு முடிவுகளின்படி, குழாயின் சுவர் தடிப்பம் ஏற்றுக்கொள்ளத்தக்கது என்றும் ஏற்கனவே உள்ள பூச்சுகளை மாற்றுவதன் மூலமும், உள்ளகமயமாக்கப்பட்ட துருப்பிடித்தலை கொண்ட பகுதிகளை சரிசெய்வதன் மூலமும் 10 ஆண்டுகளுக்கும் மேல் குழாயைப் பயன்படுத்தலாம்.

தேவையைக் கருத்திற்கொண்டு, சீரமைப்பு பணிகள் நடந்து வருகிறது. 90% கருத்திட்டப் பணிகள் முடிவடைந்துள்ளதுடன் மீதமுள்ள பணிகள் 2023.09.30 அளவில் முடிக்கப்பவுள்ளது.









### 4. மாகல்ல லங்கா மொத்தச் சாலையில் 4 ஆம் இலக்க, 5 ஆம் இலக்க தாங்கிகளுக்கான உள்ளக மிதக்கும் கூரைகளை வடிவமைத்தல் வழங்குதல் மற்றும் பொருத்துதல் மற்றும் பழுதுபார்த்தல்

உள்ளக மிதக்கும் கூரைகளை பொருத்துதல் என்பது நிலையான குவிந்த கூரைகள் மீது ஆவியாதலை குறைப்பதற்கு அமெரிக்க பெற்றொலிய நிறுவனத்தினால் பரிந்துரைக்கப்பட்ட முறையாகும்.

ஆவியாதல் இழப்புகளைக் குறைப்பதற்காக கொலன்னாவ நிரப்பு நிலையத்தில் மற்றும் லங்கா மொத்தச் சாலைகளில் பெற்றொல் தாங்கிகளுக்கு உள்ளக மிதக்கும் கூரைகளை அறிமுகப்படுத்தவதில் சிபெஸ்டேலி ஈடுபட்டது. ஆவியாதல் இழப்புகளைக் குறைப்பதற்காக தொடர்புடைய குறியீடுகள் மற்றும் தரநியமங்கள் (API 650) பொருத்துவதற்கு பரிந்துரைக்கப்பட்டது.

மாகல்ல லங்கா மொத்தச் சாலையில் அமைந்துள்ள 4 ஆம் இலக்கத் தாங்கி செங்குத்து, கூம்பு/நிலையான வெல்டிங்செய்யப்பட்ட 425கமீ கொள்ளளவு கொண்டதுடன் 5 ஆம் இலக்கத் தாங்கி செங்குத்து, கூம்பு/நிலையான வெல்டிங்செய்யப்பட்ட 335கமீ கொள்ளளவு கொண்டது. அவை 20 ஆண்டுகளுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்டவை.

ஆவியாதல் இழப்புகளைக் குறைக்க 4 ஆம் இலக்கத் தாங்கி மற்றும் 5 ஆம் இலக்கத தாங்கிகள் அழுத்த வெற்றிட வால்வுகளுடன் (PVV) இயக்கப்பட்டுவருகின்றது. எனினும், தாங்கிக்கு உற்பத்தினைப் பெறும் போதும் வெப்பம் காரணமாகவும் பெட்றோல் ஆவி தாங்கிகளில் இருந்து வெளியேறுவதனால் அழுத்த வெற்றிட வால்வுகளுடன் கூடிய இழப்புகள் உயர்வானதாகும்.

மாகல்ல லங்கா மொத்தச் சாலையில் 4 ஆம் இலக்கத் தாங்கி மற்றும் 5 ஆம் இலக்கத தாங்கிகளுக்கு உள்ளக மிதக்கும் கூரைகளை பொருத்தி பழுதுபார்க்கும் கருத்திட்டம் தற்போது நடைபெற்று வருகிறது, மேலும் 2023 டிசம்பர் அளவில் நிறைவுசெய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.





### 5. குருநாகல் லங்கா மொத்தச் சாலையில் குழாய் முறைமை அபிவிருத்தி

குருநாகல் லங்கா மொத்தச் சாலை அபிவிருத்தி கருத்திட்டத்தின் கீழ் புதிய நிரப்பு நிலைத்தூண் நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் அதே கருத்திட்டத்தின் கீழ் உற்பதி குழாய் நோக்கெல்லையும் நிறைவுசெய்யப்படும்.

இத்தயாரிப்பு குழாய்கள் பிரதான பம்பி நிலையத்திலிருந்து தரைக்கு மேல் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதுடன் நிலைத்தூண் குழாய்களுடன் இணைக்கப்படவுள்ளது. பாதுகாப்பான செயல்பாட்டிற்காக எல்எஸ் 92 சேமிப்பு தாங்கிகளுக்கு உள்ளக மிதக்கும் கூரைகளுடன் தீ நுரை ஊட்ட குழாய்கள் அமைக்கப்பட்டு ஒரு இடத்தில் நுரை ஊட்ட நிலையம் நிறுவப்படும். பாதுகாப்பான செயற்பாட்டிற்காக ஒரு இடத்தில் தாங்கி புகட்டும் குழாய்களும் ஊட்டல் நிலையத்தினதும் ஆகியவற்றின் முறையான ஏற்பாடுகளும் நிறுவப்படும்.

கைவிடப்பட்ட மற்றும் தற்காலிக குழாய்களை அகற்றுதல் மற்றும் உற்பத்திப் பம்பிகளை பிரதான பம்பி நிலையத்திற்கு இடமாற்றம்செய்தல், முற்றத்தில் கான்கிரீட் இடல், மற்றும் தேவையான மின்சாரப் பொருத்துகள் ஆகியவை மேற்கூறப்பட்ட விருத்திகளில் நிறைவுசெய்யப்படுவதற்கு கவனிக்கப்படவுள்ளது. தேவைகளைக் கருத்தில் கொண்டு, மொத்தமாக ரூ. 29.9 மில்லியன் ஒதுக்கப்பட்டது. தற்போது, 80% பணிகள் நிறைவடைந்துள்ளதுடன் 2023 பெப்ரவரிக்குள் கருத்திட்டத்தை நிறைவுசெய்வுதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

# தயாரிக்கப்பட்ட மூலதனம்









### 6. சிபெஸ்டேலி கொலன்னாவ எரிபொருள் விநியோக நிலையத்தில் CCTV கெமரா முறைமையை வழங்குதல் மற்றும் பொருத்துதல் மற்றும் தொடங்குதல்

சிபெஸ்டேலி கொலன்னாவ எரிபொருள் விநியோக நிலையமானது பாதுகாப்பு அம்சங்களைப் பொறுத்தமட்டில் பாதிக்கப்படக்கூடிய இடமாகக் காணப்படுவதுடன் இணையவழியில் கண்காணிப்பதற்கும் தடயவியல் நோக்கங்களுக்காக தரவுகளைச் சேமிப்பதற்கும் CCTV கெமரா முறைமையைக் கொண்டிருப்பது அவசியம். மேலும், தாங்கிப் பண்ணைகள், பம்பி நிலையம், ஏனைய முக்கிய இடங்கள் இணையவழியில் கண்காணிப்பதற்கும் தடயவியல் நோக்கங்களுக்காகவும் கண்காணிக்கப்பட வேண்டும். எனவே, இந்த நோக்கத்திற்காக கொலன்னாவையில் எரிபொருள் விநியோக நிலையத்தில் நம்பகமான மற்றும் செயல்திறன்வாய்நத ஊஊவுஏ முறைமை நிறுவப்பட வேண்டும்.

கொலன்னாவ எரிபொருள் விநியோக நிலையத்தில் CCTV கமெரா முறைமையை நிறுவுவதற்காக. ரூ. 125.0 மில்லியனுக்கு சிபெஸ்டேலி சபை அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டது. முறையான பெறுகைச் செயன்முறையைப் பின்பற்றி பகிரங்க விலைக்குறிப்பீடுகள் அழைக்கப்பட்டு, ஒப்பந்ததாரர் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஒப்பந்தம் வழங்கப்பட்டதுடன் மற்றும் 2021.11.01 அன்று பிரதசம் ஒப்படைக்கப்பட்டது.

ஒப்பந்ததாரர் வேலையைத் முன்னெடுத்து, பெரும்பாலும் 34% களப் பணியை முடிவடைந்துள்ளது. இருப்பினும், உலகலாவிய பொருளாதாரச் நிலைமை காரணமாக வெளிநாட்டு நாணயத் தட்டுப்பாடு மற்றும் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் காரணமாக கெமராக்கள் கொள்வனவு ஒப்பந்ததாரரால் தொடர முடியவில்லை. நெருக்கடி பதில் திட்டம் இணங்கிக் கொள்ளப்பட்டது, மேலும் திருத்தப்பட்ட கால அட்டவணையுடன் கருத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

## 7. சிபெஸ்டேலி முத்துராஜவெல முனையத்தில் பவுஸர் தரிப்பிட வசதி

முத்துராஜவெல முனையத்திற்கு அருகாமையில் 2 ஏக்கர் மற்றும் ரூட்கள், 3 34.51 பேர்ச்களை ஒதுக்கீடுசெய்ய இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் (SLLDC) இணங்கியது.. காணியை கொள்வனவுசெய்வதற்கு ரூ. 66.62 மில்லியன நிதி ஒதுக்கீட்டுடன் வாகன நிறுத்துமிடத்தை அபிவிருத்திசெய்வதற்கு சிபெஸ்டேலி சபையின் அங்கீகாரம் பெறப்பட்டது. ரூ. 272,622,128.00 கொடுப்பனவுடன் காணி கொள்வனவிற்கான உறுதிப்பத்திரம் 2019.12.17 அன்று மற்றும் கைச்சாத்திட்டு காணியைக் கையகப்படுத்தியது. உடைமை சிபெஸ்டேலி மூலம் கையகப்படுத்தப்பட்டது. தரிப்பிட வசதிகளை அபிவிருத்திசெய்வதற்கான விலைக்குறிப்பீட்டு ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, சிபெஸ்டேலி காணிக்கு பின்னால் உள்ள காணி இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் மூலம் நிரப்பப்பட்டுள்ளது, எனவே சிபெஸ்டேலி காணியும் நிரப்பப்பட வேண்டும். ஆகையினால், காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திமிருந்து ரூ. 42.4 மில்லியன் தொகைக்கு விலைமனு பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் வேலியுடன் தடுப்புச்சுவர் நிர்மாணிக்கப்பட வேண்டும். இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் மூலம் நிரப்புதல், சுற்று வேலி மற்றும் பவுசர் தரிப்பிட் வசதி ஆகியவற்றிற்காக 123.02 மில்லியனுக்கு சபை அனுமதி பெறப்பட்டுள்ளது.

காணி நிரப்பும் கருத்திட்டம் ஏற்கனவே இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. ஏனைய இரண்டு கருத்திட்டங்களுக்கான விலைக்குறிப்பீடுகள் தேசிய போட்டி விலைக்கறிப்பீடுகள் முறை மூலம் அழைக்கப்படவுள்ளது. இருப்பினும், வீதி அபிவிருத்தி அதிகாரசபை வீதிகள் 0.8 மீ உயர்த்த வேண்டியுள்ளதுடன் மற்றும் தளமும் மேலும் உயர்த்தப்படவுள்ளது. அதற்கமைய, மேலதிக காணிகளை தேவையான மட்டத்திற்கு நிரப்பி, பவுசர் தரிப்பிட வசதி அபிவிருத்திசெய்யப்படவுள்ளது. பகிரங்க விலைக்குறிப்பீட்டு முறை மூலம் விலைக்குறிப்பீடு அழைக்கப்படவுள்ளது.

## 8. SPMB மிதவை செப்பனிடல் - முத்துராஜவெல

முத்துராஜவெல இரட்டை வழி மிதவையானது முத்துராஜவெல தாங்கி பண்ணைக்கு தனியான 18 அங்குல குழாய் இணைப்பு ஊடாக தூய சுத்தகரிக்கப்பட்ட உற்பத்திகளை (டீசல் மற்றும் பெற்றோல்) மற்றும் எரிபொருள் எண்ணெய் இறக்கும் நோக்கத்திற்காக 2010 ஆம் ஆண்டில் பொருத்தப்பட்டது. இந்நோக்கத்திற்காக இது இரு வேறான குழாய்ச் சுருள்களை கொண்டுள்ளது. முத்துராஜவெல SPBM, சிபெஸ்டேலி நிறுவனத்திற்கு மாத்திரமன்றி ஒட்டுமொத்த தேசத்திற்கும் இன்றியமையாத கட்டமைப்பொன்றாகும். இது நாட்டிற்கு பிரதான சுத்திகரிகப்பட்ட உற்பத்திகளை இறக்கும் மையமாகக் காணப்படுவதுடன் முத்துராஜவெல முனையத்திற்கு உள்நோக்கி வரும் உற்பத்தியினை இறக்குவதற்கு ஒரேயொரு வசதியமாகும். முத்துராஜவெல SPBM ஊடாக சராசரியாக வருடாந்தம் சுமார் 40 எண்ணிக்கையான தாங்கி கப்பல்களில் 1 மில்லியன் மெ. தொன்னுக்கும் அதிகமாக சுத்தகரிக்கப்பட்ட உற்பத்திகளை இறக்கப்படுகின்றன.

8 வருடங்கள் கொண்ட வெற்றிகரமான தொழிற்பாட்டுக்கு பின்னர் 2017 செப்டெம்பர் தொடக்கம் உலை எண்ணெய் முறைமையில் மிதவையின் பல்பொருள் விநியோக பிரிவில் முத்திரை கசிவு எற்பட்டது. இதன் காரணமாக முக்கிய பராமரித்தலுக்கான சரியான காலப்பகுதியினை இனங்காண்பதற்கு முறைமையினை சிபெஸ்டேலி நிறுவனம் உன்னிப்பாக கவனித்தது. மேற்குறித்த முத்திரை கசிவுக்கு மேலதிகமாக 2019 இல் தொழில்நுட்பக்குழு பெற்றோல் பல்பொருள் விநியோக பிரிவு முறைமையிலிருந்து மற்றுமொரு சிறிய முத்திரை கசிவினை அடையாளப்படுத்தியது.

மிதவையின் நிலமையினை தொழில்நுட்பக் குழு பகுப்பாய்வுசெய்து தயாரிப்பாளரின் பரிந்துரையுடன் தாமதமின்றி மிதவை தயாரிப்பாளரின் மேற்பார்வையின் கீழ் மிதவைக்கு முக்கிய பழுதுபார்த்தலை மேற்கொள்வதற்கு திர்மானிக்கப்பட்டது.

கடலில் மேலும் 5 தொடக்கம் 8 ஆண்டுகள் பயன்பாட்டிற்காக மிதவையின் பழுதுபார்த்தலுக்காக மிதவை செப்பனிடல் முன்னெடுக்கப்பட்டது. இது முத்துராஜவெல மிதவையின் முதலாவது செப்பனிடலாகும். மிதவை செப்பனிடலின் கீழ் முக்கிய பராமரிப்பு செயற்பாடுகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

1. பல் பொருள் விநியோக பிரிவின் பழுதபார்த்தலை நிறைவுசெய்தல்.
2. மிதவையின் உட்பகுதியை சுத்தம்செய்து. பழுதுபார்த்து, வரணப்பூச்சினை முடிவுறுத்தல்.
3. சுழலும் முறைமையில் பழுதுபார்த்தலை நிறைவுசெய்தல்.
4. மிதவையின் கதோட்டு பாதுகாப்பு முறைமையினை மாற்றீடுசெய்வதை நிறைவுசெய்தல்.

இப்பழுதுபார்த்தல்கள் மிதவை தயாரிப்பாளரான IMODCO Services நிறுவனத்தின் மேற்பார்வையின் கீழும் 3 ஆம் தரப்பு அளவீட்டாளராக அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச ரீதியான வழிக்காட்டல்களின் கீழும் மேற்கொள்ளப்பட்டது.

SPMB மிதவையின் பாதுகாப்பையும் வினைத்திறன்மிக்க தொழிற்பாட்டினையும் செப்பனிடலை நடாத்துவதன் மூலம் 5 ஆண்டு காலப்பகுதிக்கு உத்தரவாதமளிக்கப்பட்டுள்ளது. ஏனைய நன்மைகளானவை மிதவை தொழிற்பாடுகளுக்கான இரட்டை பாதை கிடைக்கப்பெறுகின்ற தன்மையினை உள்ளடக்குகின்றது. செப்பனிடலுக்கு முன்னர் தொழிற்பாடுகளுக்காக ஒரு வழி மாத்திரம் கிடைக்கப்பெற்றது. மிதவை தொழிற்பாடுகளின் நம்பகத்தன்மை செப்பனிடலுடன் அதிகரிக்கப்பட்டுள்ளது.

# தயாரிக்கப்பட்ட மூலதனம்







# மனித மூலதனம்




எமது நிறுவனத்தில், மனித மூலதனம் எமது மிகவும் விலைமதிப்பற்ற சொத்தாகக் காணப்படுகின்றது. கூட்டான அறிவு, திறன்கள், அனுபவம் மற்றும் பயிற்சி முதலீடுகள் மற்றும் நல்வாழ்வு என்பவற்றை இது உள்ளடக்குகின்றது. சிபெஸ்டேலி நிறுவனத்தில், எமது பணியாளர்கள் எமது தொழில்முயற்சியின் முக்கிய தூணாக விளங்கி, எமது வணிகத்தை உன்னதத்தை நோக்கி வழிநடாத்துவதில் கூட்டாகவும் தனித்தனியாகவும் முக்கிய ஏதுவாக பங்காற்றுகிறார்கள் என்று நாம் உறுதியாக நம்புகிறோம். எமது மனித மூலதனத்தின் தரத்தை மேம்படுத்துவதற்கும் அபிவிருத்திசெயவதற்கும் நாங்கள் உறுதியுடன் இருக்கிறோம். எமது ஊழியர்களின் தொழில் அபிலாசைகளை உணர்ந்து, அவர்களின் செயல்திறன்மிக்க பங்களிப்பை சமமாக அங்கீகரிப்பதற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு வலுவான மனித வள முகாமைத்துவக் கட்டமைப்பை விடாமுயற்சியுடன் பின்பற்றுவதன் மூலம் இது அடையப்படுகிறது.

நாம் கவனம்செலுத்தும் முக்கிய துறைகள்

- ஊழியர் பலவகைமை மற்றும் சமவாய்ப்பு
- நியாயமான கொடுப்பனவு மற்றும் ஏனைய நன்மைகள்
- வெகுமதிகளும் அங்கீகரித்தலும்
- பயிற்சி மற்றம் தொழில்சார் அபிவிருத்தி
- ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு

சிபெஸ்டேலி நிறுவனம், உன்னதமான பணிச்சூழலை வளர்ப்பதன் மூலம் அதன் பணியாளர்களுக்கு பெறுமதியை உருவாக்குவதில் முக்கிய கவனம்செலுத்துகிறது. இந்தச் சூழலானது, சிறந்து விளங்குவதற்கு உந்தப்பட்ட நபர்களுடன் இணைந்து பணிபுரியும் அதிகம் ஊக்குவிக்கப்படும் குழுக்களைக் கொண்டமைந்தது. இந்நோக்கத்திற்கான எமது அர்ப்பணிப்பானது ஆற்றல்வாய்நத ஆளுகைக் கட்டமைப்புகள், அனைத்தையும் உள்ளடக்கிய கொள்கை கட்டமைப்புகள் மற்றும் வினைத்திறன்மிக்க முறைமைகள் மற்றும் செயன்முறைகள் என்பவற்றை நிறுவுவதில் பிரதிபலிக்கிறது. பணியாளர்களின் உற்பத்தித்திறனை அதிகரிக்கவும், நிறுவனம் அதன் பணியாளர்களுக்கான பெறுமதியை எவ்வாறு பேணிவளர்க்கிறது என்பதை அடிக்கோடிட்டுக்காட்டவும் இவை உன்னிப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளன. 2,474 அர்ப்பணிப்புள்ள பணியாளர்களை உள்ளடக்கிய சிபெஸ்டேலி நிறுவனத்தின் பணியாளர்கள், எமது மைய நிறுவன விழுமியங்களை எடுத்துக்காட்டி, எமது உபாயக் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு உந்து சக்தியாகச் பணியாற்றுகின்றனர்.

### ஊழியர் பல்வகைமையும் சம வாய்ப்பும்

அனைவரையும் உள்ளடக்கிய சமத்துவத்திற்கான எமது அர்ப்பணிப்பானது பாலினம், இனம், மதம், வயது, தேசியம், சிவில் அந்தஸ்து, அல்லது அரசியல் விருப்பு என்பவற்றை பொருட்படுத்தாது ஆட்சேர்ப்பு மற்றும் பயிற்சி வாய்புகளிலிருந்து மற்றும் பதவி உயர்வுகள் வரை எமது மனித வளச் செயன்முறைகள் முழுவதும் உட்பொதிந்துள்ளன. பன்மைத்துவ பின்னணிகள், சமூக அந்தஸ்துகள், கல்வி, ஆக்கத்திறன் மட்டம், அனுபவம் மற்றும் சனத்தொகை போன்றவற்றிலிருந்து வருகின்ற மக்களை எமது கம்பனிக்கு நாம் வரவேற்கின்றோம். பல்வகைமையானது சிறந்த பெறுபேறுகளை தருவதற்கு நிறுவனத்திற்கு உதவுகின்ற தனித்துவம், ஆக்கத்திறன்கள், ஆலோசனைகள் என்பவற்றுடன் பங்களிப்பதற்கு ஒவ்வொரு ஆளையும் ஊக்கவிக்கின்றது. சிபெஸ்டேலி நிறுவனத்தில் நாம் ஊழியர் பல்வகைமையினதும் சமவாய்ப்பினதும்

# மனித மூலதனம்

முக்கியத்துவத்தினை புரிந்துகொள்கின்றோம் என்பதுடன் பல்வகைமையினையும் அனைவரையும் உள்ளடக்குவதனையும் பேணி ஊக்கவிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இக்கடமைபொறுப்பினை நாம் மனதிற்கொண்டு, தற்போது நாம் கம்பனியின் வேறுபட்ட பிரிவுகளில் 03 மாற்றுத்திறனாளிகளுக்கு தொழில் வாய்ப்பை வழங்கி வருகின்றோம். அனைத்து இனங்களையும் மதத்தையும் உள்ளடக்கி நாட்டின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் ஊழியர்கள் ஆட்சேர்க்கப்படுவதுடன் 12 சதவீதமான பெண் ஊழியர்கள் பிரதிநிதிப்படுத்துகின்றனர். பெண்களின் பிரதிநிதித்துவம் நிறைவேற்று தரமல்லாத தரத்தில் ஒப்பீட்டளவில் குறைவாக காணப்படுகின்ற அதேவேளை நிறைவேற்று தரங்களில் அது 30 சதவீதமாக காணப்படுகின்றது. அதற்கு காரணம் நாம் ஈடுபட்டுள்ள தொழிற்துறையின் தன்மையாகும்.




### நன்மைகள், வெகுமதிகள் மற்றும் அங்கீகாரம்

நெருக்கடி நிலமையிலும் கூட சிபெஸ்டேலி நிறுவனம் அதன் ஊதியக் கொள்கைகள் மற்றும் நியமங்களை பேணிய அதேவேளை ஊழியர்களின் 100% தொழில் பாதுகாப்பை உறுதிசெய்தது.

சிபெஸ்டேலி நிறுவனத்தின் வெகுமதி கட்டமைப்புகள் வெளிப்படைத்தன்மை மிக்கதாக வடிவமைக்கப்பட்டுள்ளன. தரங்களுக்கெதிரான அதன் நியாமான மற்றும் சமத்துவமான அளவீடுகள் ஆண் பெண்களுக்கிடையில் வேறுபாடின்றி தொழில் முழுவதும் ஒரேமாதிரியான நியமங்களை பேணுகின்றன. அனைத்து ஊழியர்களும் வரைவிலக்கனம் செய்யப்பட்ட தகமைக் கட்டமைப்பு ஒன்றின் அடிப்படையில் வருடாந்த செயலாற்றுகை மதிப்பீடுகளுக்கு உட்படுகின்றனர்.

சிபெஸ்டேலி நிறுவனத்தின் நிரந்தர தொழிற்படைக்கு வழங்கப்படும் நன்மைகள் பின்வருமாறு

| நிரந்தர பணியாளர்களுக்கு வழங்கப்படும் நன்மைகள் | விபரம் |
|---|---|
| விடுமுறை | |
| ▪ வருடாந்த விடுமுறை | 14 நாட்கள் |
| ▪ அமைய விடுமறை | 7 வேலை நாட்கள் |
| ▪ மருத்துவ விடுமறை | 21 வேலை நாட்கள் |
| ▪ மகப்பேற்று விடுமுறை | ▪ 84 வேலை நாட்கள் |
| | ▪ அரை கொடுப்பனவு 84 வேலை நாட்கள் |
| | ▪ சம்பளமற்ற விடுமுறை 84 நாட்கள் |
| ▪ விபத்து விடுமுறை | பணியில் இருக்கும் போதான விபத்து |
| ▪ பதில் விடுமறை | ஒரு மாதத்தில் 4 சனிக்கிழமைகள் வேலை செய்யும் ஊழியர் ஒருவர் 2 நாட்கள் விடுமுறையையும் மேலதிக நேரக்கொடுப்பனவையும் பெற்றுக்கொள்வர் |
| ▪ விசேட விடுமுறை | சட்ட நிகழ்வுகளுக்கு (தேர்தல், ஊரடங்கு போன்றன) |
| ▪ கடமை விடுமுறை | அலுவலக கடமைகளுக்கான விசேட நிகழ்வுகள் |
| ▪ சம்பளமற்ற விடுமுறை | வெளிநாட்டு கற்கைகள், பயிற்சி, செயலமர்வு போன்றன. |
| சம்பள உயர்வு | ஊழியரின் பணி, வரவு மற்றும் நடத்தை மதிப்பீடு செய்யப்படும் |
| கொடுப்பனவுகள் | உணவுக் கொடுப்பனவுகள், பயணக் கொடுப்பனவுகள், முன்னைய கொடுப்பனவுகள், வருகைக்கான ஊக்குவிப்பு, இடமாற்றல் கொடுப்பனவுகள், வருடாந்த விடுமுறைக் கொடுப்பனவுகள், வாழ்க்கைப்படிக் கொடுப்பனவுகள், தொழில்சார் கொடுப்பனவுகள், வாராந்த விடுமுறை நாள் கொடுப்பனவுகள், உத்தியோகபூர்வ தொலைபேசி நன்மைகள். |

| நிரந்தர பணியாளர்களுக்கு வழங்கப்படும் நன்மைகள் | விபரம் |
|---|---|
| மிகையூதியம் | வருடாந்த மிகையூதியம் |
| கடன்கள் | |
| ▪ இடர் கடன் | 10 மாத சம்பளம். 60 மாதத்தில் மீளச் செலுத்த வேண்டியதும் சலுகை வட்டி வீதத்தை உடையதுமான கடன். |
| ▪ வீட்டுக் கடன்கள் | காணி அல்லது வீட்டை வாங்குவதற்கு அல்லது வீட்டைக் கட்டுவதற்கு வழங்கப்படும் சலுகை வட்டி வீதத்தில் வழங்கப்படும் 300 மாதங்களில் அல்லது ஊழியரின் மீதிச் சேவைக்காலத்தில் எது குறைவானதோ அதில் மீளப் பெறப்படும். |
| ▪ வீட்டுத் திருத்தக் கடன் | வீட்டைத் திருத்துவதற்கு வழங்கப்படும், 120 மாதங்களில் மீளச் செலுத்த வேண்டியதும் சலுகை வட்டி வீதத்தை உடையதுமான கடன். |
| ▪ வீட்டு வசதிக் கடன் | தளபாடங்களை வேண்டுவதற்கு. 60 மாதங்களில் மீளச் செலுத்த வேண்டியதும் சலுகை வட்டி வீதத்தை உடையதுமான கடன். |
| ▪ சிக்கன சங்கக் கடன் | 03 மாத சம்பளம். 60 மாதங்களில் மீளச் செலுத்த வேண்டியதும் சலுகை வட்டி வீதத்தை உடையதுமான கடன். |
| ▪ கார் கடன் | நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர்களுக்கு மட்டும் ஏற்புடையது எளிமையான சலுகை வட்டி வீதம். 60 மாதங்களில் மீளச் செலுத்த வேண்டியது. |
| ▪ மோட்டார் சைக்கில் கடன் | 60 மாதங்களில் மீளச் செலுத்த வேண்டியதும் சலுகை வட்டி வீதத்தை உடையதுமான கடன். |
| ▪ முச்சக்கர வண்டிக் கடன் | 60 மாதங்களில் மீளச் செலுத்த வேண்டியதும் சலுகை வட்டி வீதத்தை உடையதுமான கடன். |
| முற்பணங்கள் | |
| ▪ விழாக்கால முற்கொடுப்பனவு | வட்டி இல்லாதது. 10 மாதங்களில் மீளச் செலுத்தல் வேண்டும் |
| ▪ புது வருட முற்கொடுப்பனவு | வட்டி இல்லாதது. 10 மாதங்களில் மீளச் செலுத்தல் வேண்டும் |
| ▪ பாடசாலைப் புத்தகங்களுக்கான | வட்டி இல்லாதது. 10 மாதங்களில் மீளச் செலுத்தல் வேண்டும் |
| விருது வழங்கல் | ஊழியரின் சேவை அடிப்படையில் தங்கியுள்ளது |
| நலன்புரி சார் நன்மைகள் | - ஒவ்வொரு ஊழியரும் 3 பகல் மற்றும் 2 இரவுகள் குடும்பத்துடன் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அல்லது சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் விடுமுறை பங்களாவில் தங்குவதற்கு உரித்துடையவர்கள்.<br>- சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் விளையாட்டு கழக நிகழ்வுகளில் பங்குபற்றல்<br>- வருடாந்த சுற்றுலா<br>- இரத்ததான நன்கொடை முகாம்<br>- சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் முனையங்களில் உள்ள கூட்டுறவுக் கடைகள<br>- சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் வளாகத்தில் சிற்றுண்டிச்சாலைகள் நடத்தப்படுகின்றது |
| மருத்துவ நன்மைகள் | மருத்துவச் செலவு மீளளிப்புகள்<br>- வைத்தியசாலையில் தங்கியிருத்தலுக்கு மருத்துவ காப்புறுதி.<br>- மருத்துவ ஆய்வுகூட பரிசோதனைகளுக்கான மீள் செலுத்தல்.<br>- விசேட மருத்துவ ஆய்வுகூட பரிசோதனைகளுக்கான மீள் செலுத்தல். (CT scan,MRI போன்றன). |
| மரண நன்மைகள் | மரண இழப்பீடு |
| சிக்கன சங்க நன்மைகள் | - ஊழியரின் மரணம் உள்ளடங்கலாக நெருங்கிய குடும்ப அங்கத்தவரின் மரணத்தின் போதான மரண நன்கொடை<br>- நியதிச்சட்ட பணக்கொடை போன்ற பணிக்கொடை வழங்கப்படும். |
| ஓய்வூதிய ஏற்பாடு | நியதிச்சட்ட பணிக்கொடை |
| ஏனைய வசதிகள் | விசேட கடமைகளுக்கான சீருடைகள், ஊழியர்களின் இரவு நேர கடமைகளுக்கான உணவுகளை வழங்கல் |

# மனித மூலதனம்

கம்பனி, ஊழியர்களை மட்டுமல்லாது உயர் கல்விக்கான புலமைப்பரிசில்களை வழங்குதன் மூலம் ஊழியர்களின் பிள்ளைகளை ஊக்குவிக்கின்றது. இவ்வருடம் வேறுபட்ட துறைகளில் உள்ள பல்கலைக்கழக மாணவர்களுக்கு 129 புலமைப்பரிசில்களை மீளாய்வு வருடத்தில் வழங்கியது




ஊழியர்களின் குழந்தைகளுக்கு வழங்கப்பட்ட புலமைமைப்பரிசில் உதவித்தொகை – 2022

கம்பனியில் குறிப்பிட்ட வருட கால சேவையை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்த ஊழியர்கள் வருடாந்தம் கௌரவிக்கப்படுகின்றனர்.

| நிறைவுசெய்த சேவைக் காலம் | உழியர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 20 வருடங்கள் | 14 |
| 30 வருடங்கள் | 01 |
| 35 வருடங்கள் | 21 |
| 40 வருடங்கள் | 01 |

### பயிற்சி மற்றம் தொழில்சார் அபிவிருத்தி

இன்றைய இயக்கவாற்றல் மிக்க சிக்கலான சூழல் அமைப்பில் முன்னேற்றகரமாக கற்கின்ற உபாயமானது எதிர்கால தொழில் தேவைகளை நிறைவுசெய்வதற்கு முக்கியத்துவம்மிக்க அடிப்படைத் தேவைப்பாடாக விளங்குகின்றது. அதன் ஊழியர்களின் இயலுமை இக்கம்பனியின் தொலைநோக்கை மெய்ப்பிப்பதிலும் பெறுமதி உருவாக்க குறிக்கோள்களை நாடிச்செல்வதிலும் இன்றியமையாத பங்காற்றுகின்றது என கம்பனி அங்கீகரிக்கின்றது. இதன் விளைவாக, போட்டித் திறன்மிக்க ஊழியர்களை விருத்திசெய்தலும் தக்கவைத்தலும் கம்பனியின் உபாய வழிகாட்டலை நடைமுறைப்படுத்துவதற்கும் அதன் வளர்ச்சி இலக்குகளை நிறைவேற்றுவதற்கும் முக்கியமானதாக விளங்குகின்றது. சிபெஸ்டேலி நிறுவனத்தின் பயிற்சி மற்றும் மனிதவள பிரிவு அதன் ஊழியர்களின் தொடர்ச்சியான தனிப்பட்ட அபிவிருத்திக்கு ஒட்டுமொத்தமாக அர்ப்பணித்துள்ளதுடன் அதேபோன்று அனைத்து ஊழியர்களினதும் பயிற்சி தேவையினை கிரகமாக கண்காணித்து நிறைவேற்றுகின்றது.

செயலாற்றுகைப் பின்னூட்டல் மற்றும் ஆற்றல் கலந்துரையாடல்கள் என்பன ஊடாக கம்பனி, அதன் ஊழியர்களின் பயிற்சி தேவைகளை அடையாளப் படுத்துகின்றது. உள்ளக பயிற்சி நிகழ்ச்சிதிட்டங்களுக்கு மேலதிகமாக தொழில்சார் நிறுவனங்கள் மற்றும் பயிற்சியளிக்கும் நிறுவனங்கள் போன்ற மூன்றாம் தரப்பினரால் நடாத்தப்படுகின்ற பயிற்சித் திட்டங்களில் பங்கேற்பதற்கு ஊழியர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

ஆண்டு காலப் பகுதியில் ஊழியர்களின் தொழில்நுட்ப அறிவு, மென்திறன்கள் மற்றும் தலைமைத்துவ தேர்ச்சிகள் என்பவற்றை விருத்திசெய்வதற்காக பல்வேறு பயிற்சி நிகழ்ச்சிதிட்டங்கள் நடாத்தப்பட்டன. இது 5,006 பயிற்சி மணித்தியாலங்களாக அமைந்திருந்தது.

| நிகழ்ச்சிகள் / செயலமர்வுகள் / கருத்தரங்ககள் | கால அளவு | பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை | பயிற்சிக் காலம் |
|---|---|---|---|
| பாதுகாப்பு பிரிவற்கான ஊழியர் ஒழுக்காற்று விருத்தி | 7 மணி | 31 | 217 மணி |
| தாங்கி அளவீட்டாளர்களுக்கான பயிற்சி | 21 மணி | 8 | 168 மணி |
| இசை மருத்தவம் | 3 மணி | 25 | 75 மணி |
| பொறியில் பிரிவற்கான ஊழியர் ஒழுக்காற்று விருத்தி | 7 மணி | 17 | 119 மணி |
| இடர்நேர்வு மதிப்பீடு | 7 மணி | 37 | 259 மணி |
| விலை அதிகரிப்பு செயலமர்வு | 7 மணி | 88 | 616 மணி |
| தொழிலாளர் சட்டம் | 7 மணி | 127 | 889 மணி |
| ஊழியர் ஒழுக்காற்று விருத்தி | 7 மணி | 80 | 560 மணி |
| தனிப்பட்ட நேர்த்தி | 7 மணி | 52 | 364 மணி |
| தாங்கி நிரப்பிகளுக்கான பயிற்சி | 21 மணி | 11 | 231 மணி |
| தனிப்பட்ட திறன்கள், விழுமியங்கள் மற்றும் பணி வாழ்க்கை சமநிலை | 7 மணி | 37 | 259 மணி |
| ஊழியர் ஒழுக்காற்று விருத்தி | 3 மணி | 12 | 36 மணி |
| சான்றுப்படுத்தபட்ட உள்ளகக் கணக்காய்வாளர் தொடர் | 32 மணி | 25 | 800 மணி |
| உணர்வுபூர்வ நுண்ணறிவு | 7 மணி | 59 | 413 மணி |
| மொத்தம் | | | 5006 மணி |

கம்பனியானது ஊழியர்களின் தொழில் விருத்தியில் எப்போதும் ஆர்வமாக காணப்படுவதுடன் தராதரச் சான்றளிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனங்களுடன் இணைந்து கொள்வதற்கு விரும்புகின்ற ஊழியர்களுக்கு அதன் ஆதரவினை வழங்கி தொழில்சார் அபிவிருத்திக்காக அவர்களை ஊக்குவித்து வியாபார நிருவாக முதுமாணி மற்றும் ஏனைய பட்டப்பின் படிப்புக்களை தொடருவதற்கு நிதியியல் உதவியினையும் வழங்குகின்றது. கம்பனி வருடாந்த தொழில்சார் நிறுவன சந்தாக்களையும் மீளச் செலுத்துவதுடன் தொழில்சார் நிறுவனங்களால் நடாத்தப்படுகின்ற மாநாடுகள் மற்றும் செயலமர்வுக்கான கட்டணங்களை மீளளிப்பதன் வாயிலாக தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தியினையும் ஊக்குவிக்கின்றது.





# மனித மூலதனம்

### தொழில்சார் ஆரோக்கியமும் பாதுகாப்பும்

கம்பனி, அனைத்து ஊழியர்களுக்கும் பாதுகாப்பான மற்றும் காயங்கள் ஏற்படாத பணியாற்றும் சூழலை வழங்குவதன் மூலம் அதன் தொழிற்பாடுகள் முழுவதும் ஆராக்கியம் மற்றும் பாதுகாப்பின் உயர்வான தரநியமங்கள் மீதான அதன் பொறுப்பினை நிறைவுசெய்கின்றது.

சிபெஸ்டேலி நிறுவனம் இலங்கையில் பாரிய பெற்றோலிய முனையங்களின் முதன்மைத் தொழிற்படுத்துனராகவிருந்து, எளிதில் தீப்பற்றக் கூடிய பெற்றோலிய உற்பத்திகளை முகாமைசெய்வதையும் விநியோகிப்பதையும் மேற்கொள்கின்றது. இத்தொழிற்பாட்டு நடவடிக்கைகளுடன் இணையப்பெற்ற உள்ளார்ந்த இடர்நேர்வுகளைக் கருத்திற்கொள்கையில் அவை அவை உயர் இடர்நேர்வு வகையின் கீழ் வருகின்றன. பொருளார உயிரோட்ட நிலையமாக சிபெஸ்டேலி நிறுவனம் பாரிய அளவு தீ நாட்டின் பொருளாதாரத்தை முடங்கச்செய்யலாம். ஆகையினால், கைத்தொழில் மற்றும் தொழில்சார் ஆரோக்கியமும் பாதுகாப்பும் சிபெஸ்டேலி நிறுவனத் தொழிற்பாடுகளில் மிகவும் உயர் முக்கியத்துவம் மிக்க காரணியாக விளங்குகின்றது. சிபெஸ்டேலி நிறுவனம் பின்வரும் பிரத்தியேக நிலையங்களை கொண்டுள்ளது.

- 24x7நாட்கள் பணிக்கமர்த்துவதற்கு உடனடியான, தொழிற்பாடுகளை பாதுகாப்பாக ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான தீயணைப்பு படை என்பவற்றுடன் கூடிய தீயணைப்பு மற்றும் பாதுகாப்பு பிரிவு
- ஆரோக்கியத்தை கண்காணிப்பதற்கும், 24x7 நாட்களுடன் கூடிய ஊழியர்களின் மருத்துவ அவசர நிலைமைகளை கவனிப்பதற்கும் உள்ளக நோயாளர் அவசர வண்டிச் சேவையுடனும் கூடிய மருத்துவ நிலையம்





கம்பனியானது பின்வருவன தொடர்பில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு கருமங்களையும் அத்துடன் இடர்களை இல்லாதொழிப்பதன் மீதும் விசேட கவனம்செலுத்துகின்றது.

- இயந்திரங்கள், உபகரணம் மற்றம் பணி முறைமைகளை வழங்குதலும் பேணுதலும்
- எரிபொருட்களை கையாளுதல், களஞ்சியப்படுத்தல் மற்றும் கொண்டுசெல்லல்
- தொடர்புடைய தகவல்கள் பயிற்சி மற்றும் மேற்பார்வையினை வழங்குதல்
- பணி நிலைமைகளைப் பராமரித்தல்
- பணியில் ஆரோக்கிய மற்றும் பாதுகாப்பு அபாயங்களை தடுத்தல்
- அனைத்து ஊழியர்களும் ஆரோக்கிய மற்றும் பாதுகாப்பு அறிவுறுத்தல்களை கண்டிப்பாக கடைப்பிடித்தல்

## ஊழியர் நிகழவுகள்

### இரத்ததான பிரச்சாரம்

வருடாந்த இரத்ததான பிரச்சாரம் 2022 ஆம் ஆண்டிலும் தொடர்ச்சியாக 8 ஆவது ஆண்டாக கம்பனியின் ஊழியர்களின் முழுமையான முனைப்பான பங்கேற்புடன் முத்துராஜவெல முனையத்தில் வெற்றிகரமாக நடாத்தப்பட்டது.




### சிரமதானப் பிரச்சாரம்

சிபெஸ்டேலி ஊழியர்கள் மூலம் அனைத்தச் சாலைகள் உள்ளடங்கலாக சிரமதானப் பணி நடாத்தப்பட்டது.




# மனித மூலதனம்

### பௌத்த மத நிகழ்வுகள்

சிபெஸ்டேலி பௌத்த அமைப்பு நோன்மதி தினங்களில் அலுவலக வளாகத்தில் பௌத்த நிகழ்வுகளை நடாத்துவதுடன் பங்குபற்றுவதற்கு அனைத்து ஊழியர்களுக்கும் அழைப்புவிடுக்கின்றது.





### இசை சிகிச்சை பற்றிய செயலமர்வு

வேலைக்கும் வாழ்க்கைக்கும் இடையே சமநிலையை பேணும் நோக்குடன், வார்த்தைகள் இல்லாமல் இசையை எவ்வாறு புரிந்துகொள்வது, மெல்லிசை, தாளம், இசைவு, இசை சிகிச்சையின் தொழில்நுட்ப மற்றும் நடைமுறை அம்சங்கள் போன்றவற்றை உள்ளடக்கும் நோக்கத்துடன் பயிற்சி மற்றும் மனித வள அபிவிருத்தி பிரிவனால் இசை சிகிச்சை பற்றிய செயலமர்வு நடத்தப்பட்டது.






# ஆளுகையும்
# இணங்குவித்தலும்



# நிறுவன ஆளுகை

### சபையின் பிரகடனம்

**கம்பனி முழுவதும் நிறுவன ஆளுகை கோட்பாடுகளை பிரயோகிப்பதில் சிபெஸ்டேலி நிறுவனத்தின் பணிப்பாளர் சபை பிரயோகிப்பதை அவதானிப்பதற்கு சபை உறுதியாக அர்ப்பணித்துள்ளது என்றும் நிறுவன ஆளுகை அறிக்கையானது கம்பனியினுள் நிறுவன ஆளுகை பற்றிய நியாயமான பொறுப்புக்கூறலை வழங்குகின்றது என்றும் நான் சபை சார்பில் நான் உறுதிப்படுத்த விளைகின்றேன்.**

**அதற்கமைய, பணிப்பாளர் சபையும் அனைத்து ஆளணியும் ஏற்புடைய ஒழுங்குமுறைப்படுத்தல் நியதிச்சட்ட தேவைப்பாடுகளுடன் இணங்கிச் செயற்பட்டுள்ளனர் என்று நான் பிரகடனப்படுத்துகின்றேன்.**

**திரு. உவைஸ் மொஹமட்**
**தலைவர்/முகாமைத்துவப் பணிப்பாளர்**

அனைத்து கொடுக்கல்வாங்கல்களிலும் சபையினதும் முகாமைத்தவத்துவத்தினதும் பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை, நேர்மை என்பவற்றை வலுப்படுத்துகின்ற ஆற்றல்வாய்ந்த மற்றும் செயல்திறன்மிக்க நிறுவனக் கலாசாரம் ஒன்றினை தோற்றுவிக்கும் வகையிலும் நிறுவனம் பற்றிய பொதுமக்கள் நம்பிக்கையினை கட்யெழுப்புவதற்கு உதவும் வகையிலும் சிபெஸ்டேலி நிறுவனத்தின் நிறுவன ஆளுகை வடிவமைக்கப்பட்டுள்ளது. நிறுவன ஆளுகையின் நோக்கம் கம்பனியின் நீண்டகால வெற்றியினை கொண்டுசேர்க்கூடிய செயல்திறன்மிக்க, தொழிற்முயற்சியாண்மை அத்துடன் முன்மதிமிக்க முகாமைத்துவத்தை எனபவற்றை வசதிப்படுத்தவதாகும். பரந்த நோக்கில் இது உள்ளடக்குவன:

- தொலைநோக்கு, பணி, குறிக்கோள்கள், மற்றும் உபாயம் என்பன எவ்வாறு வடிவமைக்கப்பட்டு தொடர்பூட்டப்படுகின்றன
- விழுமியங்கள் எவ்வளவு நன்றாக இணங்கியொழுகப்படுகின்றன
- இடர்கள் எவ்வாறு முகாமைசெய்யப்படுகின்றன
- வெளிப்படைத்தன்மை எவ்வாறு ஊக்கவிக்கப்படுகின்றது
- தொழிற்பாடுகளை நிலைபெறத்தக்கவகையில் எவ்வாறு முகாமைசெய்வது
- எதிர்காலத் தலைவர்கள் எவ்வாறு ஊக்குவிக்கப்பட்டு விருத்திசெய்யப்படுகின்றனர்
- பங்குடமையாளர் பெறுமதியினை அதிகரிப்பதற்கு நிறுவன கலாசாரம் எவ்வாறு ஊக்குவிக்கப்படுகின்றது.

இலங்கையின் பெற்றோலிய உற்பத்திகளின் களஞ்சியம் மற்றும் விநியோகத்தை பிரதானமாக வசதிப்படுத்தும் கம்பனி என்ற வகையில் நிறுவனமானது சட்டவாக்கங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் நாட்டின் ஒழுங்குபடுத்தல் நிறுவனங்களினால் எடுத்துரைக்கப்பட்ட நடத்தைக் கோவைகள் என்பவற்றுடனான இணங்குவித்தலில் நிறுவன ஆளுகை கோட்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு உறுதியளிப்பதுடன் கம்பனி மூலம் விதந்துரைக்கபட்ட உள்ளக கொள்கைகள் மற்றும் வழிகாட்டல் தொகுதிகளுடன் அது கடைப்பிடிப்பதனையும் உறுதிசெய்கின்றது.

### நிறுவன ஆளுகைக் கட்டமைப்பு

சபை, அதன் துணைக்குழுக்கள், சிரேஷ்ட முகாமைத்துவம், பங்குதாரர்கள், ஒழுங்குபடுத்துனர்கள் மற்றும் ஏனைய ஆர்வலர்கள் என்பவற்றுக்கிடையிலான அடிப்படை உறவுகள் சிபெஸ்டேலி நிறுவன ஆளுகை கட்டமைப்பினால் வழிநடாத்தப்படுகின்றன.

சிபெஸ்டேலி நிறுவனத்தில் நிறுவன ஆளுகைக் கட்டமைப்பு பின்வரும் 3 தூண்களின் கீழ் எடுத்துக் காட்டப்படக்கூடியது.

1. இணங்குவித்தல்
2. உள்ளக ஆளுகைக் கட்டமைப்பு
3. உத்தரவாதமும் கட்டுப்பாடும்

**இணங்குவித்தல்**

**ஒழுங்குமுறைப்படுத்தல் அளவுகோல்**

2007 இன் கம்பனிகள் சட்டம்

2017 இல் இலங்கை பட்டய கணக்காளர்கள் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட நிறுவன ஆளுகை சிறந்த நடத்தைக் கோவை

2021 இல் நிதி அமைச்சின் பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அரசுக்கு சொந்தமான தொழில்முயற்சிகளுக்கான நிறுவன ஆளுகை மற்றும் தொழிற்பாட்டு கையேடு மீதான வழிகாட்டல்கள்.

2017 இன் 24 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டம் மற்றும் அதற்கான திருத்தங்கள் மற்றும் வேறு நியதிச்சட்டங்கள்

**உள்ளக அளவுகோல்**

சபையின் அகவிதிகள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள் கம்பனி ஒழுங்குவிதிகள் தொழில் நடத்தைக் கோவை பணிப்பாளர் சபையின் ஆய்வெல்லை துணைக் குழுக்கள் மற்றும் முகாமைத்துவம்

**உள்ளக ஆளுகைக் கட்டமைப்பு**

**பங்குதாரர்கள்**

**தலைவர் / முகாமைத்துவப் பணிப்பாளர்**

தலைவர் / முகாமைத்துவப் பணிப்பாளர் சபையின் நடவடிக்கைகளையும் வியாபர நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்வதற்கு பொறுப்பானவராவார்

**பணிப்பாளர் சபை**

பங்குதாரர்கள் வருடாந்த பொதுக் கூட்டத்தில் பணிப்பாளர்கள் சபையைத் தேர்ந்தெடுக்கின்றார்கள் நிறுவனத்தின் வெற்றிகரமான செயல்பாட்டிற்கான உபாயமார்க்க வழிகாட்டலை வழங்குவதிலும், பலமான கட்டுப்பாட்டுக் கட்டமைப்பை நிறுவுவதிலும் சபை தலைமைத்துவத்தை வழங்குகின்றது.

AC | SRC | DPC

**உத்தரவாதமும் கட்டுப்பாடும்**

**வெளிவாரிக் கணக்காளர்கள்**

வெளிவாரிக் கணக்காளர்கள் சுயாதீன அமைப்பாவதுடன் அவர்களுடைய பொறுப்பு கம்பனியின் நிதியியல் கூற்றுகளை கணக்காய்வு செய்தல் மற்றும் நியாயமான உத்தரவாதத்தை வழங்குதலாகும்

**உள்ளகக் கணக்காளர்கள்**

உள்ளகக் கணக்காய்வானது, முழுமையான இடர்நேர்வு முகாமைத்துவம், உள்ளகக் கட்டுப்பாட்டு கட்டமைப்பு பற்றிய சுதந்திரமான மதிப்பீட்டை வழங்குவதுடன் கணக்காய்வுக் குழுவுக்கு சுயாதீனமான அறிக்கையிடுகின்றது.

AC - கணக்காய்வுக் குழு
SRC - பங்கு மீளாய்வுக் குழு
DPC- திணைக்களம்சார் பெறுகைக் குழு

# நிறுவன ஆளுகை

### 01. இணங்குவித்தல்

கம்பனியின் நிறுவன ஆளுகை நடைமுறைகள் கீழ்வரும் சட்டம், கோவைகள் மற்றும் தன்னார்வ நடத்தைகளைக் கொண்ட கட்டமைப்பின் தேவைப்பாடுகளை கடைப்பிடிக்கின்றது.

- இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் விநியோகிக்கப்பட்ட நிறுவன ஆளுகை மீதான சிறந்த நடத்தைக் கோவை.
- 2021 இல் நிதி அமைச்சின் பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அரசுக்கு சொந்தமான தொழில்முயற்சிகளுக்கான நிறுவன ஆளுகை மற்றும் தொழிற்பாட்டு கையேடு மீதான வழிகாட்டல்கள்.
- 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்.
- 2017 இன் 24 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டம் மற்றும் அதற்கான திருத்தங்கள் மற்றும் வேறு நியதிச்சட்டங்கள்.
- கம்பனியின் அகவிதிகள்.
- சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள்.
- கம்பனி ஒழுங்குவிதிகள்.
- தொழில் நடத்தைக் கோவை.
- பணிப்பாளர் சபையின் ஆய்வெல்லை, துணைக் குழுக்கள் மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்.

### 02. உள்ளக ஆளுகைக் கட்டமைப்பு

#### பணிப்பாளர் சபை

கம்பனியின் அனைத்து செயற்பாடுகள் முழுவதும் உயர்தர நிறுவன ஆளுகைத் தரநியமங்களைப் பேணுவதற்கு சபை அர்ப்பணித்துள்ளது. ஆளுகையின் நோக்கம், முன்மதியுடைய மற்றும் வினைத்திறன்மிக்க் முகாமைத்துவத்தின் ஊடாக நீண்ட கால பங்குதாரர் பெறுதியை உருவாக்குதல் ஆகும்.

#### சபையின் பொறுப்புகள்

- நிறுவனத்தின் நீண்ட கால வெற்றியை ஊக்குவிக்கும் நோக்குடன் அவசியமான உபாய மார்க்கங்களை உருவாக்குவதற்கான வழிகாட்டலையும் பணிப்புரையையும் வழங்குதல்.
- வழிகாட்டலை வழங்குவதுடன் கம்பனியின் நிறுவன உபாயம், செயலாற்றுகை குறிக்கோள்களை மதிப்பீடு செய்தல், மீளாய்வுசெய்தல் மற்றும் அனுமதித்தல்.
- வருடாந்த திட்டங்களையும் நீண்ட கால வியாபாரத் திட்டங்களையும் மீளாய்வுசெய்தல் மற்றும் அனுமதியளித்தல்.
- ஆளுகை மற்றும் இணங்குவித்தலை, கண்காணித்தல்.
- கம்பனியினால் மேற்கொள்ளப்படும் நிதியியல் மற்றும் ஏனைய அறிக்கையிடல் நடைமுறைகளுக்கு அனுமதியளித்தல் மற்றும் கண்காணித்தல்.
- பிரதான கையகப்படுத்தல்கள், அகற்றல்கள் மற்றும் மூலதன செலவுகளை மீளாய்வுசெய்தல் மற்றும் அனுமதியளித்தல்.
- சபையிலிருந்து நிறைவேற்றுதர மட்டம் வரை வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கான / அதிகாரங்களுக்கான ஏதேனும் மாற்றங்கள் செய்வதை தீர்மானித்தல்.
- உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகள் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைமைகளைக் கண்காணித்தல்.

#### சபையின் உள்ளமைப்பு

2022 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு சபையின் உள்ளமைப்பு பினவருமாறு:

| பெயர் | பதவி |
|---|---|
| திரு. எம்.யு மொஹமட் | தலைவர் |
| திரு எல் ஈ சுசந்த சில்வா | முகாமைத்துவப் பணிப்பாளர் |
| திரு. ஈ.ஏ. ரத்னசீல | பணிப்பாளர் |
| திரு. மனோஜ் குமார் குப்தா | பணிப்பாளர் |
| திரு. அசீம் பார்காவா | பணிப்பாளர் |
| திரு. ராஜேஸ் பகத் | பணிப்பாளர் |
| திரு. தர்மதாச பண்டிதரத்ன | பணிப்பாளர் |
| திரு. மனோஜ் கமகே | பணிப்பாளர் |

2021 ஆம் ஆண்டின் போதான பணிப்பாளர்களின் மாற்றங்கள்

| | பணிப்பாளரின் பெயர் | சபைக்கு நியமிக்கப்பட்ட திகதி | சபையிலிருந்து பதவிவிலகிய திகதி | பதவி |
|---|---|---|---|---|
| 01 | திரு. நாலக பெரேரா | 21/12/2021 | 07/03/2022 | தலைவர் |
| 02 | ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் எம் ஆர் டபிள்யூ டி. சொய்சா | 09/03/2022 | 02/08/2022 | தலைவர்/முகாமைத்துவப் பணிப்பாளர் |
| 03 | திரு. எம். யு மொஹமட் | 05/08/2022 | | தலைவர் |
| 04 | திரு.சமீந்திர அபேசேகர | 21/12/2021 | 07/03/2022 | முகாமைத்துவப் பணிப்பாளர் |
| 05 | திரு எல். ஈ. சுசந்த சில்வா | 05/08/2022 | | முகாமைத்துவப் பணிப்பாளர் |
| 06 | திரு. புத்திக ருவன் மதிஹா ஹேவா | 27/01/2020 | 13/07/2022 | நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளர் |
| 07 | திரு. ஈ.ஏ. ரத்னசீல | 27/01/2020 | | நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளர் |
| 08 | திரு. மனோஜ் குமார் குப்தா | 20/05/2019 | | நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளர் |
| 09 | திரு. திலின பீரிஸ் | 15/03/2021 | 07/03/2022 | நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளர் |
| 10 | திரு. அசீம் பர்கவா | 18/08/2021 | | நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளர் |
| 11 | திரு. ராஜேஸ் பகத் | 18/08/2021 | | நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளர் |
| 12 | திரு. பிரசன்ன அமரதுங்க | 28/12/2021 | 07/03/2022 | நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளர் |
| 13 | திரு. எச் டி பந்துல சமன் குமார | 09/03/2022 | 18/10/2022 | நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளர் |
| 14 | திரு. தர்மதாச பண்டிதரத்ன | 09/03/2022 | | நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளர் |
| 15 | திரு. மனோஜ் கமகே | 13/12/2022 | | நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளர் |

ஆண்டறிக்கையின் 22-25 ஆம் பக்கங்களில் காணப்படும் தற்போதய பணிப்பாளர்களின் முகக்குறிப்புகள் கம்பனிக்கு இன்றியமையாததாகக் காணப்படுகின்ற உபாயம், செயலாற்றம், வளங்கள் மற்றும் தொழில் நடத்தைகள் பற்றிய விடயங்கள் மீது சுயாதீன தீர்மானத்தை வழங்குவதற்கான அதிக அனுபவத்தையும் போதுமான திறமைகளையும் எடுத்துக்காட்டுக்கின்றது.

- **சபை பன்மைத்துவமும் சபையின் சமநிலையும்**

பணிப்பாளர் சபையானது நிறுவன ஆளுகை கட்டமைப்பின் முக்கிய கூறாகும். வேறுபட்ட திறன்கள், அறிவு, அனுபவம், தொழில்சார் தகமைகள், வயது, தேசியம் என்பவற்றின் சபையின் பன்மைத்துவம் மிகவும் வினைத்திறன்மிக்க தீர்மானங்களை மேற்கொள்ளல், ஆற்றல்மிக்க தொகுதி மற்றும் மூலவளங்களை சிறப்பாக உபயோகித்தல் என்பவற்றிலிருந்து நன்மையடைவதற்கு முனைகின்றது.

மீளாய்வுக்குட்படுகின்ற ஆண்டுகாலப்பகுதியில் சபையானது வேறுபட்ட துறைகளில் உகப்பான கலந்த தேர்ச்சிகள், நிபுணத்துவம் மற்றும் அனுபவத்தை கொண்ட 8 பணிப்பாளர்களை உள்ளடக்கியிருந்தது.

- **பணிப்பாளர்களின் நியமனம்**

பணிப்பாளர்கள் அகவிதி நியமங்களுக்குட்பட்டு வருடாந்த பொதுக்கூட்டமொன்றினூடாக சபைக்கு நியமிக்கப்படுகின்றனர். பணிப்பாளர் உறுப்புரிமைக்கான அபேட்சகர்களை பரிசீலனையில் கொண்டு ஏனையவற்றுக்கு மத்தியில் அனுபவத்தின் அளவு, தொழிலைப் புரிந்துகொள்ளல், தொழில் மற்றும் நிதியியல் பிரச்சினைகளை புரிந்துகொள்ளுதல், ஆற்றல் வாய்ந்த தீர்மானத்தை பிரயோகிப்பதற்கான இயலுமை, பல்வகைமை, தலைமைத்துவம் மற்றும் சாதனைகள் அத்துடன் தொழிற்துறையினை பாதிக்கின்ற கருமங்களில் அனுபவம் போன்றன உள்ளடங்கலாக அது பொருத்தமானதாக கருதுகின்ற அனைத்து காரணிகளையும் சபை கவனத்தில் கொள்ளும்.

- **பொறுப்புக்களை வகுத்தல்**

திரு. நாலக பெரேரா தனது தலைவர் பதவியை வகித்த அதேவேளையில், திரு. சமிந்திர அபேசேகர முகாமைத்துவப் பணிப்பாளராக 2022 மார்ச் 07 ஆம் திகதி வரையில் பதவி வகித்தார்.

திரு. நாலக பெரேரா மற்றும் திரு. சமிந்திர அபேசேகர ஆகியோர் சபையிலிருந்து விலகியதன் பின்னர், ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் எம்.ஆர்.டபிள்யூ. டி சொய்சா 2022 மார்ச் 09 முதல் நிறுவனத்தின் தலைவர்/முகாமைத்துவப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். 2022 ஆகஸ்ட் 02 வரை சபையின் செயற்பாடுகளை மேற்பார்வைசெய்தல் மற்றும் நிறுவனத்தின் வணிகத்தை மேற்பார்வை செய்தல் பொறுப்புகள் வகித்தர். இது, தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறையை விரைவுபடுத்தவும், சர்ச்சைகளைத் தவிர்க்கவும் உதவுகிறது. பங்குதாரர்களின் நோக்கங்களைச் நிறைவுசெய்வதில் வேகமான மற்றும் சுறுசுறுப்பான தலைமைத்துவத்தின்

# நிறுவன ஆளுகை

தேவையைக் கருத்தில் கொண்டு, இக்கட்டத்தில் இரண்டு பதவிகளையும் ஒன்றிணைத்தல் மிகவும் பொருத்தமானது என்று நிறுவனம் அதன் நிலைப்பாட்டை தக்கவைத்துக் கொண்டது.

ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் எம். ஆர். டபிள்யூ. டி சொய்சா சபையிலிருந்து விலகியதைத் தொடர்ந்து, தலைவர் மற்றும் முகாமைத்தவப் பணிப்பாளர் ஆகியோருக்கு இடையேயான பொறுப்புகள் தெளிவான வேறுபாட்டுடன் பிரிக்கப்பட்டது, இது சபைக்கும் வணிகத்தை நடத்துவதற்கான நிறைவேற்றுப் பொறுப்புக்கும் இடையே பொறுப்புக்கூறல் மற்றும் அதிகாரம் என்ற சமநிலையை உறுதிசெய்கிறது. அதற்கமைய, 2022 ஆகஸ்ட் 05 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் நிறுவனத்தின் தலைவராக திரு.எம். உவைஸ் மொஹமட் நியமிக்கப்பட்டார் மற்றும் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராக திரு. எல்.ஈ.சுசந்த சில்வா நியமிக்கப்பட்டார்.

சிபெஸ்டேலி நிறுவனத்தின் தொழிற்பாடுகள் துணை வகைகளாக பிரிக்கப்படலாம். அவை கொலன்னாவ எரிபொருள் விநியோக நிலையத்தின் தொழிற்பாடுகள், முத்துராஜவெல முனையத்தின் தொழிற்பாடுகள், கொழும்பு துறைமுக எரிபொருள் வளாக அலவலகம் மற்றும் நாடுபூராகவுமுள்ள இலங்கை மொத்த சாலைகளில் தொழிற்பாடுகள் என்பனவாகும். முத்துராஜவெல முனைய தொழிற்பாடுகளுக்கு முனைய முகாமையாளர் (முத்துராஜவெல) தலைமைத்துவம் வகிக்கின்றார். தொழிற்பாட்டு முகாமையாளர் (கரைகடந்த தொழிற்பாடுகள்) கொழும்பு துறைமுக எரிபொருள் வளாக அலுவலகத்திற்கு தலைமை வகிப்பதுடன் இலங்கை மொத்தச் சாலைகள் பிரதிப் பொது முகாமையாளரின் (தொழிற்பாடுகள்) மேற்பார்வையின் கீழ் சாலை கண்காணிப்பாளர்களால் தலைமை வகிக்கப்படுகின்றன.

- **சபை கூட்டங்களும் சமூகமளித்தலும்**

கிரமமான சபைக் கூட்டங்கள் மாதாந்தம் நடாத்தப்படுகின்ற அதேவேளை வேண்டப்படுகின்ற போதும் விசேட சபை கூட்டங்கள் கூட்டப்படுகின்றன. சிரேஷ்ட முகாமையாளர்களும் அழைப்பின் பேரில் கலந்து கொள்கின்றனர்.

சபைக்கூட்டங்கள் முறையான நிகழ்ச்சிநிரல் ஒன்றின் மீது நடத்தப்படுவதுடன் பணிப்பாளர்களுக்கு கூட்டங்களுக்கு முன்னர் நிறுவன முகாமைத்துவத்தின் மூலம் தொடர்புடைய அனைத்தையும் உள்ளடக்கிய பின்னணித் தகவல்கள் வழங்கப்படுகின்றன. 2022 காலப்பகுதியில் 12 சபைக்கூட்டங்கள் இடம்பெற்றன.

இக்கூட்டங்களில் பணிப்பாளர்கள் சமூகமளித்தல்கள் கீழேயுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன:

| பெயர் | 27/ ஜன | 23/ பெப் | 16/ மார் | 9/ ஏப் | 25/ மே | 20/ ஜூன் | 28/ ஜூலை | 19/ ஓக் | 12/ செப் | 14/ ஓக் | 24/ நவ | 14/ டிச |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| திரு. நாலக பெரேரா | P | P | N/A | N/A | N/A | N/A | N/A | N/A | N/A | N/A | N/A | N/A |
| ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் எம் ஆர் டபிள்யூ டி சொய்சா | N/A | N/A | P | P | P | P | P | N/A | N/A | N/A | N/A | N/A |
| திரு. எம் யு மொஹமட் | N/A | N/A | N/A | N/A | N/A | N/A | N/A | P | P | P | P | P |
| திரு. சமிந்திர அபேசேகர | P | P | N/A | N/A | N/A | N/A | N/A | N/A | N/A | N/A | N/A | N/A |
| திரு. எல். ஈ. சுசந்த சில்வா | N/A | N/A | N/A | N/A | N/A | N/A | N/A | P | P | P | P | P |
| திரு. புத்திக ருவன் மதிஹஹேவா | P | P | P | P | P | AB | N/A | N/A | N/A | N/A | N/A | N/A |
| திரு. இ. ஏ. ரத்னசீல | P | P | P | P | P | P | P | P | P | P | P | P |
| திரு. மனோஜ் குமார் குப்தா | P | P | P | P | P | P | P | P | P | P | P | P |
| திரு. திலின பீரிஸ் | P | P | N/A | N/A | N/A | N/A | N/A | N/A | N/A | N/A | N/A | N/A |
| திரு. அசீம் பர்கவா | P | P | P | P | P | P | P | P | P | P | P | P |
| திரு. ராஜேஸ் பகத் | P | AB | P | AB | P | P | P | P | P | P | P | P |
| திரு. பிரசன்ன அமரதுங்க | P | P | N/A | N/A | N/A | N/A | N/A | N/A | N/A | N/A | N/A | N/A |
| திரு. எச். டி. பந்துல சமன் குமார | N/A | N/A | P | P | P | P | P | P | P | P | N/A | N/A |
| திரு. தர்மதாச பண்டிதரத்ன | N/A | N/A | P | P | AB | AB | P | P | P | P | AB | P |
| திரு. மனோஜ் கமகே | N/A | N/A | N/A | N/A | N/A | N/A | N/A | N/A | N/A | N/A | N/A | P |

P - சமூகமளித்துள்ளார் / AB - சமூகமளிக்கவில்லை

- **அதிகார ஒப்படைப்பும் குழுக்களும்**

சபைக்கு ஒதுக்கப்பட்டுள்ள கருமங்களை தவிர சபைத் துணை குழுக்களுக்கு சபை அதிகாரங்களை ஒப்படைத்துள்ளது.

குறிப்பான பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ள பின்வரும் குழுக்கள் சபைக்கு துணையளிக்கின்றன.

**அ) கணக்காய்வுக் குழு**

கணக்காய்வுக்குழுவானது கம்பனியின் பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்படுவதுடன் சபைக்கு நேரடியாக அறிக்கையிடுகின்றது. கணக்காய்வுக்குழு கம்பனியின் பணிப்பாளர் சபையினால் தாபிக்கப்பட்ட ஒட்டுமொத்த ஆளுகைச் செயன்முறையினுள் தொழிற்படுவதுடன் அதன் பொறுப்புகளை செயல்திறன் வாய்ந்த விதத்தில் நிறைவேற்றுவதில் சபைக்கு உதவுகின்றது.

சிபெஸ்டேலி நிறுவனக் கணக்காய்வுக்குழு பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்படும் நிறைவேற்று தரமல்லாத 3 உறுப்பினர்களை உள்ளடக்குகின்றது. கணக்காய்வு குழுவின் உள்ளடக்கமும் மேற்கொள்ளப்படும் தொழிற்பாடுகளும் ஆண்டறிக்கையின் 83 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளன.

**ஆ) கையிருப்பு மீளாய்வுக் குழு**

கையிருப்பு மீளாய்வுக் குழுவானது சிபெஸ்டேலி நிறுவன அலுவலர்கள் மற்றும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அத்துடன் லங்கா ஐஓசி நிறுவனம் ஆகிய பிரதிநிதிகளின் பங்கேற்புடன் வாராந்தம் கூடுகின்றது. கையிருப்பு நிலை மீளாய்வுசெய்யப்பட்டு அடுத்த மூன்று மாதங்களுக்கான தேவைப்பாடுகள் முன்கூட்டியே திட்டமிடப்படுகின்றன. நாட்டில் எதிர்வுகூறப்பட்ட கேள்வி, சுத்தகரிப்பு சாலையின் இயலளவுகள் மற்றும் தாங்கி களஞ்சிய கொள்ளளவு என்பவற்றை பரிசீலனைக் கொள்ளப்பட்டதன் பின்னர் இறக்குமதி செய்யப்பட வேண்டிய அளவு இனங்காணப்படுகின்றது. நாட்டில் இடைத்தடங்களற்ற எரிபொருள் விநியோகத்தை உறுதிசெய்வதற்கு கிரமமான மற்றும் உன்னிப்பான கண்காணித்தல் கூட்டுத்தாபனத்தை இயலச்செய்கிறது.

**இ) திணைக்களசார் பெறுகைக் குழு**

பொருட்கள், உற்பத்திகள், பணி, சேவைகளைக் கொள்வனவு செய்வதற்காக கம்பனி தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் திணைக்களசார் பெறுகைக் குழு தொழிற்பாடுகள் ஊடாக தேசிய பெறுகை முகவராண்மையால் வழங்கப்பட்ட வழிகாட்டல்களை கம்பனி பின்பற்றி, வழங்கல் தாமதங்களை குறைத்து கம்பனிக்கு மிகவும் அனுகூலமான அத்துடன் தரம் வாய்ந்த சிறந்த சேவைகளையும் வழங்களையும் பெற்றுக்கொள்வதை பெறுகைப் பிரிவின் வெளிப்படத்தன்மையினை உறுதி செய்கிறது.

இக்குழுவிற்கு சிபெஸ்டேலி நிறுவனத் தலைவர்/ முகாமைத்தவப் பணிப்பாளர் தலைமைவகிப்பதுடன் பிரதிப் பொது முகாமையாளர் -தொழிற்பாடுகள் மற்றும் பெற்றோலிய வள அமைச்சின் பிரதிநிதிகள் ஆகியோரை இது உள்ளடக்குகின்றது.

- **தகவலுக்கும் மூலவளங்களுக்கும் சபைக்கான பெறுவழி**

கடமைகளையும் பொறுப்புக்களையும் செயல்திறன்வாய்ந்த விதத்தில் மேற்கொள்வதற்கு முகாமைத்துவ மற்றும் நிறுவனசார் தகவல்களுக்கும் அதேபோன்று வேண்டப்பட்ட மூலவளங்களுக்கும் பணிப்பாளர்கள் மட்டுப்பாடற்ற பெறுவழியினை கொண்டுள்ளனர். தொழிற்பாட்டு திட்டங்கள். உபாயம், நிதியியல் முகாமைத்துவம் செலவீடு. சொத்து முகாமைத்துவம், இடர் முகாமைத்துவம், இணங்குவித்தல், ஒழுங்குமுறைப்படுத்தல், மாற்றங்கள் என்பவற்றுக்கெதிரான செயலாற்றம் உள்ளடங்கலாக விடயங்கள் பற்றிய எடுத்துரைப்பினை நிறைவேற்று முகாமைத்துவம் மேற்கொள்கின்றது. அவசியமானது என கருதப்படுகின்றவிடத்து கம்பனியின் செலவில் பணிப்பாளர்களுக்கு தொழில்சார் ஆலோசனை மற்றும் தகவல்களுக்கான பெறுவழியும் கிடைக்கப்பெறுகின்றது.

- **கம்பனிச் செயலாளர்கள்**

எக்கவுன்டிங் சிஸ்டம் செக்கடேரியல் சேர்விசஸ் (பிரைவட் லிமிட்டெட்) சபைக்கான செயலாளர்களாக செயல்பட்டு அதன் கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றுவதில் சபைக்கு வழிகாட்டுவதுடன் நிறுவன ஆளுகையில் சிறந்த நடத்தைகளை ஊக்கவிக்கின்றது. அனைத்து பணிப்பாளர்களும் கம்பனிச் செயலாளருக்கான பெறுவழியினை கொண்டுள்ளனர். கம்பனிச் செயலாளர் சபைக் கூட்டங்களையும் வேறு துணைக்குழுக் கூட்டங்களையும் ஒருங்கிணைத்து கூட்ட குறிப்புகளையும் ஏனைய தொடர்புடைய பதிவுகளையும் பேணுகின்றது.

**03. உத்தரவாதமும் கட்டுப்பாடும்**

- **நிதியியல் அறிக்கையிடல்**

நிதியியல் கூற்றுக்களை உண்மையாகவும் நியாயமான நோக்கிலும் எடுத்துரைப்பது பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும். முன்கூட்டி நியமிக்கப்பட்ட இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இரண்டுக்கும் அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளதுடன் நிதியியல் அறிக்கைகள் வெளியிடப்படுவதற்கு முன்னர் இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குகின்ற விதம், பொருத்தமான தன்மை மற்றும் கணக்கீட்டு கொள்கைகளின் மாற்றங்கள் அத்துடன் முக்கிய தீர்மான கருமங்கள் என்பன உள்ளடங்கலாக முகாமைத்துவம் மற்றும் வெளிவாரி கணக்காய்வாளர்களுடன் கணக்காய்வு குழு, மீளாய்வுசெய்து கலந்துரையாடுகின்றது.

- **வெளிப்படைத்தன்மையும் இணங்குவித்தலும்**

அதன் அனைத்து கொடுக்கல்வாங்கல்களிலும் வெளிப்படைத்தன்மையைப் பேணுவதற்கும் சட்டங்கள், வழிகாட்டல்களுடனான கண்டிப்பான இணங்குவித்தலை உறுதிசெய்கின்ற அதேவேளை ஒழுக்கநெறிசார் நியமங்கள், தொழில் மற்றும் வணிக உரிமைகள் அத்துடன் கம்பனிக் கொள்கைகள் என்பவற்றை பேணிகாப்பதற்கும் சபை பொறுப்புடையதாகும்.

- கம்பனியின் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையானது 1961 இன் 28 ஆம் இலக்க இலங்கை பெற்றோலியக்

# நிறுவன ஆளுகை

கூட்டுத்தாபன சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைவாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

- 1971 இன் 31 ஆம் இலக்க நிதிச் சட்டத்துடனான இணங்குவித்தலில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி நிறுவனத்தின் வெளிவாரி கணக்காய்வினை மேற்கொள்வதுடன் நிதியியல் கூற்றுக்கள் ஆண்டுதோறும் வெளியிடப்பட்டு பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.
- பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்காக நிறுவனம் புதிய இலங்கை கணக்கீட்டு நியமங்களையும் வேறுதொடர்புடைய ஒழுங்குவிதிகளையும் கடைப்பிடிக்கின்றது.

- **உள்ளகக் கட்டுப்பாடுகள்**

தொழிற்பாடுகளின் வினைத்திறன்கள் மற்றும் செயல்திறன்வாய்ந்ததன்மை மற்றும் வினைத்திறன் என்பவற்றை எய்துதல், நிதியியல் அறிக்கையிடல் பற்றிய நம்பகத்தன்மை மற்றும் ஏற்புடைய சட்டங்கள் அத்துடன் ஒழுங்குவிதிகளுடனான இணங்குவித்தல் அதேபோன்ற இடர்முகாமைத்துவம் என்பன தொடர்பில் நியாயமான உத்தரவாதத்தை வழங்குவதற்கும் ஆற்றல்வாய்ந்ததும் செயல்திறன்மிக்கதுமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை முறையாக நிறுவப்பட்டு, பேணப்படுகின்றதை சபை உறுதி செய்கின்றது. நிதியியல் மற்றும் கணக்கீட்டு தகவல்களின் நேர்மை, தொழிற்பாட்டு மற்றும் இலாபத் தன்மை இலக்குகளை நிறைவேற்றுதல் மற்றும் முகாமைத்தவ கொள்கைகளை நிறவனம் முழுவதும் ஊடுகடத்தல் என்பன பற்றி அது உறுதிசெய்கின்றது. ஏதேனும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமை நியாயமான உத்தரவாதத்தை மாத்திரம் உறுதி செய்யக்கூடியது என்பதும் தவறுகள் அல்லது முறைகேடுகள் முன்வைக்கப்படலாம் அல்லது நியாயமான காலப்பகுதிக்குள் கண்டுபிடிக்கப்படலாம் என்பதற்கு முற்றுமுழுதான உத்தரவாதம் இல்லை என்பதனையும் குறிப்பிடுவது அவசியமாகும்.

உள்ளகக் கணக்காய்வு பிரிவானது சிபெஸ்டேலி நிறுவனத்தின் நிறுவப்பட்ட உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினுள் நிறுவனம் வினைத்திறன்மிக்கவாறு தொழிற்படுகின்றது என்பதனை உறுதி செய்கின்றது.

- **உள்ளகக் கணக்காய்வு**

முகாமைத்துவத்தின் சுயாதீனமாகவுள்ள உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் உள்ளக கணக்காய்வுகள் கொண்டு நடாத்தப்படுகின்றன. உள்ளக கணக்காய்வொன்றின் குறிக்கோள் நிறுவனம் ஒன்றின் அனைத்து நடவடிக்கைகள் மீதும் கண்டிப்பான கட்டுப்பாட்டினை பேணுவதாகும். நிதியியல் பதிவுகளின் உண்மையான தன்மை மற்றும் நிறுவனத்தின் தொழிற்பாடுகளின் வினைத்திறன் பற்றிய உத்தரவாதம் முகாமைத்துவத்திற்கு தேவைப்படுகின்றது. உள்ளகக் கணக்காய்வொன்று இவை இரண்டினையும் உறுதிசெய்வதற்கு உதவுகின்றது. எடுத்துரைக்கப்பட்ட நடைமுறைகள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் எனபவற்றுக்கு இசைவாக நிறுவனத்தினுள் முறையான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை பேணப்படுவதை இது உறுதி செய்கின்றது.

உள்ளகக் கணக்காய்வு பிரிவின் நோக்கலை பின்வருமாறு:

- அனைத்து வியாபார கொடுக்கல்வாங்கல்களும் நிறைவேற்றுவதற்கு முன்னர் ஏற்கனவே காணப்படுகின்ற விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக முறையாக அதிகாரமளிக்கப்படுகின்றன என்பதை உறுதிசெய்தல்.
- அனைத்து கணக்கீட்டு தகவல்களும் SAP முறைமையில் முறையாக பதிவுசெய்யப்படுகின்றன அதேபோன்று முதல்நிலை பதிவுகள் செம்மையாக பேணப்படுகின்றன அத்துடன் வினைத்திறன்மிக்க முகாமைத்துவத்தை உறுதிசெய்வதற்கு தொடர்புடைய புள்ளிவிபரங்கள் மற்றும் கட்டுப்பாட்டு தரவுகள் முறையாக வடிவமைக்கப்பட்டுள்ளன என்பதை உறுதிசெய்தல்.
- நிதியியல் மற்றும் கணக்கீட்டு கூற்றுகள் நிறுவனத்தின் உண்மையான மற்றும் நியாயமான நோக்கொன்றினை வெளிப்படுத்துவதை உறுதிசெய்தல்.
- தொழிற்பாடுகளில் உள்ளக கட்டுப்பாட்டின் முறைமைகளின் வினைத்திறனை மதிப்பிடுதல்.
- பின்வருவனவற்றை மீளாய்வு செய்வதற்கும் மதிப்பிடுவதற்கும் முறைமை அடிப்படையில் அமைந்த அணுகுமுறையினை பின்பற்றுதல்
    - திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்களும் ஏனைய தொழிற்பாடுகளும் கொள்கைக் குறிக்கோள்களை எய்துவதில் வெற்றிகரமானவையாக காணப்படுகின்றன என்ற ரீதியில் அளவிடுவதற்கு முகாமைத்துவத்தினால் பயன்படுத்தப்படுகின்றவை உள்ளடங்கலாக திணைக்களம் ஒன்றின் தொழிற்பாட்டை கட்டுப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள அனைத்து முறைமைகளையும் செயன்முறைமைகளையும் வடிவமைத்தலும் தொழிற்படுத்தலும்.
    - சட்டம் மற்றும் முன்வைக்கப்பட்ட ஏனைய தேவைப்பாடுகள் அத்துடன் முகாமைத்துவ திட்டங்கள், நடைமுறைகள் மற்றும் கொள்கைகள் என்பவற்றுடன் இணங்குவித்தலின் அளவு.
    - சொத்துகளைக் கையகப்படுத்தல், கையுதிர்த்தல் மோசடி, துர்நடத்தை முறைகேடு உள்ளடங்கலாக சொத்துகளை அல்லது நலன்களை இழப்புகளிலிருந்து பாதுகாத்தல்.
    - மூலவளங்களை சிக்கனமாகவம் வினைத்திறன் மிக்கதாகவும் பயன்படுத்தவதற்கும் விரயங்களை தவிர்ப்பதற்குமான ஒழுங்குகள்.
    - தீர்மானங்களை மேற்கொள்வதற்கு அத்துடன் பொறுப்புக்கூறவதற்கு வழங்கப்படுகின்ற தகவல்களின் போதுமை, நம்பகத்தன்மை மற்றும் ஒருங்கமைவு மற்றும அத்தகவல்கள் பயன்படுத்தப்படுகின்ற அளவு.

- **வெளிவாரிக் கணக்காய்வு**

கம்பனியின் நிதியியல் கூற்றுக்களை கணக்காய்வு செய்வதற்கும் அத்துடன் கம்பனியின் நிதியியல் நிலை மற்றும் செயலாற்றம் என்பனவற்றின் நியாயமான மற்றும் உண்மையான எடுத்துரைத்தல் மீது நியாயமான உத்தரவாதத்தை வழங்குவதற்கும் வெளிவாரி கணக்காய்வாளர்கள் பொறுப்புடையவர்களாவர்

1971இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் மற்றும் 2018 இன் தேசிய கணக்காய்வு சட்டம் என்பவற்றுக்கு இணங்கி கணக்காய்வாளர் தலைமை அதிபதி நிறுவனத்தின் வெளிவாரி கணக்காய்வினை கொண்டு நடாத்துவதுடன் ஆண்டுதோறும் நிதியியல் கூற்றுகளை வெளியிட்டு பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

2017 இல் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட நிறுவன ஆளுகை சிறந்த நடத்தைக் கோவையுடனான இணங்குவித்தல்

| கோவைத் தொடர்பு | நிறுவன ஆளுகைக் கொள்கை கோட்பாடுகள் | இணங்குவித்தல் விபரங்கள் | இணங்குவித்தல் நிலை |
|---|---|---|---|
| **A** | **பணிப்பாளர்கள்** | | |
| A.1 | சபை | உபாய வழிகாட்டலை உருவாக்குவதற்கும் கம்பனியின் வெற்றிகரமான தொழிற்பாட்டுக்கு ஆற்றல்வாய்ந்த கட்டுப்பாட்டு கட்டமைப்பை உருவாக்குவதற்கும் பணிப்பாளர் சபை தலைமைத்துவத்தை வழங்கும். | இணங்கியது |
| A1.1 | வழமையான பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் | ▪ பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் மாதாந்தம் நடாத்தப்பட்டதுடன், அவசியமான வேளையில் விசேட கூட்டங்கள் நடாத்தப்படுகின்றன.<br>▪ பணிப்பாளர் சபைக்கான கூட்டத்திற்கு வருகை தந்தவர்களின் விபரங்கள் 70ஆம் பக்கத்தில் உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. | இணங்கியது |
| A1.2 | பணிப்பாளர் சபையின் வகிபாகம் மற்றும் பொறுப்புகள் | சபை கீழ்வருவனவற்றுக்கான பொறுப்புகளை எடுத்துக்கொள்வதன் ஊடாக தொழில்முயற்சி தலைமைத்துவத்தை வழங்குகின்றது<br>▪ உபாய வடிவமைப்பு மற்றும் அமுல்படுத்தல்<br>▪ முக்கிய முகாமைத்துவ ஆளணியின் திறன்கள் மற்றும் பதவியுரிமை<br>▪ தகவல், உள்ளக கட்டுப்பாடுகள், வியாபார தொடர்ச்சி மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவம் பற்றிய நேர்மை<br>▪ சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் நெறிமுறை நியமங்களுடனான இணகுவித்தல்.<br>▪ தீர்மானம் எடுத்தலின் போது அனைத்து பங்குதாரர்களின் நன்மைகள் தொடர்பாக கவனமெடுத்தல்.<br>▪ நிலைபேறான வியாபார அபிவிருத்தி.<br>▪ பொருத்தமான கணக்கீட்டுகொள்கைகளை பின்பற்றுதல் மற்றும் நிதியியல் ஒழுங்குவிதிகளுடன் இணங்குவித்தல் | இணங்கியது |
| A1.3 | நாட்டின் சட்டங்களுக்கு அமைவாக செயற்படல் | அனைத்து ஏற்புடைய விதிகள், சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் கம்பனி இணங்கியொழுகுவதை பணிப்பாளர் சபை உறுதிப்படுத்தும். | இணங்கியது |

# நிறுவன ஆளுகை

| கோவைத் தொடர்பு | நிறுவன ஆளுகைக் கொள்கை கோட்பாடுகள் | இணங்குவித்தல் விபரங்கள் | இணங்குவித்தல் நிலை |
|---|---|---|---|
| A1.4 | கமபனிச் செயலாளரின் ஆலோசனைக்கும் சேவைகளுக்கமான பெறுவழி | ▪ ஏக்கவுண்டிங் சிஸ்டம் செக்ட்டேரியல் சேர்விஸ் (பிறைவட்) லிமிடட் பணிப்பாளர் சபையின் செயலாளர்களாக தொழிற்படுவதுடன், பணிப்பாளர் சபை அதன் கடமைகள் மற்றும் பெறுப்புகளை நிறைவெற்றுவதில் வழிகாட்டி, நிறுவன ஆளுகையில் சிறந்த நடைமுறைகளை ஊக்குவிக்கின்றது.<br>▪ கடைப்பிடிக்க வேண்டிய புதிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் பற்றி பணிப்பாளர் சபைக்கு செயலாளர் அறிவிப்பார். | இணங்கியது |
| A1.5 | சுயாதீனமான தீர்மானம் | சபையின் நடவடிக்கைகள் தொடர்பாக அவர்களின் கருத்துக்களை சுதந்திரமாக வெளிப்படுத்துவதற்கான சமமான சந்தர்ப்பம் பணிப்பாளர்களுக்கு கிடைக்கப்பெறுகின்றது. | இணங்கியது |
| A1.6 | சபை மற்றும் கம்பனி விடயங்கள் தொடர்பாக போதிய நேரத்தை முயற்சிகளையும் ஒதுக்குதல் | அறிவித்தல், நிகழ்ச்சிநிரல் மற்றும் சபைப் பத்திரங்கள் என்பவற்றை மீளாய்வதற்கு பணிப்பாளர்களுக்கு போதிய நேரம் உள்ளென்பதையும் தேவையாயின், மேலதிக தகவல்களை அல்லது விளக்கங்களைப் பெற்றுக்கொள்வதையும் உறுதிசெய்வதற்கு ஒவ்வொரு கூட்டத்திற்கு முன்னரும் அனைத்துப் பணிப்பாளர்களுக்கும் அவை முன்கூட்டியே வழங்கப்படுகின்றன. | இணங்கியது |
| A1.7 | அவசியமாயின், கம்பனியின் நலனுக்காக மூன்றில் ஒரு பணிப்பாளர்கள் வாக்கெடுப்பினை கோரி தீர்மானத்தை பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்க முடியும். | | ஏற்புடையதல்ல |
| A1.8 | சபை அறிமுகம் மற்றும் பயிற்சி | உள்ளக மற்றும் வெளிவாரிச் சூழல் தொடர்பாக உரிய தகவல்களை தலைவர், முகாமைத்துவப் பணிப்பாளர், நிறைவேற்றுப் பணிப்பாளர் மற்றும் சிரேஸ்ட முகாமைத்துவம் தொடர்ச்சியாக பணிப்பாளர்களை இற்றைப்படுத்துகின்றது. | இணங்கியது |
| A.2 | தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அலுவலர் இருவருக்கும் இடையிலான பொறுப்புகளின் வகைப்படுத்தல் | மீளாய்வுக்குட்பட்ட இந்த வருடம் தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர் எனும் இரு வகிபாகங்களும் ஒன்றிணைக்கப்பட்டன. நியாயப்படுத்தலுக்கு தயவுசெய்து A.2.1 ஐப் பார்க்க | A.2.1 ஐப் பார்க்க |
| A.2.1 | ஒரு நபராக தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அலுவலர் வகிபாகங்களின் இணைக்கப் பட்டமையின் நியாயப்படுத்தல் | ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் எம் ஆர் டபிள்யூ டி சொய்சா 2022 மார்ச் 09 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டு, 2022 ஆம் ஒகஸ்ட் 02 ஆம் திகதி வரை தலைவர் பதவிக்கு மேலதிகமாக முகாமைத்துவப் பணிப்பாளராகவும் தொடர்ந்து பணியாற்றினார். இக்கட்டத்தில், பங்குதாரர்களின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதில் மிகவும் பொருத்தமானது என்றும் வேகமான மற்றும் சுறுசுறுப்பான தலைமையின் தேவையை கரத்திற்கொண்டும் இரு வகிபாகங்களையும் ஒன்றிணைப்பது பொருத்தமானது என்ற அதன் நிலையினை கம்பனி பேணியது. | இணங்கியது |

| கோவைத் தொடர்பு | நிறுவன ஆளுகைக் கொள்கை கோட்பாடுகள் | இணங்குவித்தல் விபரங்கள் | இணங்குவித்தல் நிலை |
|---|---|---|---|
| A.3 | சிறந்த நிறுவன ஆளுகையைப் பெறுவதில் தலைவரின் வகிபாகம் | தலைவர், பணிப்பாளர் சபைக்கு தலைமைத்துவத்தை வழங்குவதுடன் கீழ்வருவனவற்றை உறுதிசெய்கின்றார்,<br>▪ பணிப்பாளர்களின் வினைத்திறனான பங்களிப்பு மற்றும் பங்குபற்றல்<br>▪ பரிசீலனையில் உள்ள பிரச்சினைகள் தொடர்பாக பணிப்பாளர்களின் கருத்துகள் உறுதிப்படுத்தபட்டுகின்றன.<br>▪ கம்பனி விவகாரங்கள் தொடர்பாக சபை பூரணக் கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பதுடன் அனைத்து பங்குதாரர்களுக்கும் அதன் கடப்பாடுகள் தொடர்பாக விழிப்பூட்டுகின்றது. | இணங்கியது |
| A.4 | நிதிசார் புத்திஜீவிகளின் கிடைக்கப்பெறுதல் | கம்பனியின் நிதி விடயங்களைக் கையாளுவதற்கு சபைக்கு வழிகாட்டலை வழங்குவதற்கு அவசியமான நிதி அறிவினைக் கொண்ட அனுபவமுள்ள 2 தொழில்சார் நிபுணர்கள் சபையில் உள்ளனர்.<br>▪ திரு. எம் யு மொஹமட், ஐக்கிய இராச்சியத்தின் லண்டன் மெட்ரோபொலிட்டன் பல்கலைக்கழகத்தில் வணிகக் கணக்கியலில் கலைமானி (கௌரவ) பட்டத்தையும் பட்டய முகாமைத்தவ கணக்காளர் (CIMA) நிறுவனத்தின் இறுதி நிலையும் பெற்றவராவார்<br>▪ திரு. எல் ஈ சுசந்த சில்வா ICASL இன் சக உறுப்பினர் (FCA), CMASL (FCMA) இன் சக உறுப்பினர், அவுஸ்திரேலியாவின் சான்றளிக்கப்பட்ட பயிற்சிக் கணக்காளர்களின் (CPA அவுஸ்திரேலியா) உறுப்புரிமை, இலங்கையின் பொது நிதிக் கணக்காளர்களின் (APFASL)இணை உறுப்பினர் மற்றும் பபுவா நியு கினிய சான்றளிக்கப்பட்ட பயிற்சிக் கணக்காளர்களின் இணை உறுப்பினர் போன்ற பல நிதி தொடர்பான தொழில்சார் தகைமைகளைப் பெற்றுள்ளார். | இணங்கியது |
| A.5 | சபையின் சமநிலை | | இணங்கியது |
| A.6 | உரிய நேரத்தில் சரியான தகவல்களை சபைக்கு வழங்குதல் வேண்டும் | | இணங்கியது |
| A.7 | பணிப்பாளர் சபைக்கான நியமனங்கள் | | இணங்கியது |
| B | பணிப்பாளர்களின் ஊதியம் | | |
| B.1 | நிறைவேற்றுத் தரத்தினருக்கும் பணிப்பாளர்களுக்குமான ஊதியம் மீது கொள்கையொன்றை உருவாக்கும் செயன்முறையொன்றை நிறுவல். | | இணங்கியது |
| B.2 | ஊதிய மட்டம் மற்றும் எல்லை | | இணங்கியது |
| B.3 | கொடுப்பனவு செய்யப்பட்ட சபைக்கான ஊதியம் பற்றிய வெளிப்படுத்தல் | நிதியியல் தகவல்கள் - விரிவான வருமானக்கூற்று | இணங்கியது |

# நிறுவன ஆளுகை

| கோவைத் தொடர்பு | நிறுவன ஆளுகைக் கொள்கை கோட்பாடுகள் | இணங்குவித்தல் விபரங்கள் | இணங்குவித்தல் நிலை |
|---|---|---|---|
| **C** | **பங்குதாரர்களுடனான உறவுகள்** | | |
| C.1 | வருடாந்த பொதுக் கூட்டத்தின் ஆக்கபூர்வமான பயன்பாடு மற்றும் பொதுக் கூட்டங்களை நடாத்துதல் | | இணங்கியது |
| C.3 | தொடர்புடைய தரப்பினர்களுடன் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் உள்ளடங்கலாக அனைத்து முன்மொழியப்பட்ட முக்கியமான கொடுக்கல் வாங்கல்களையும் பணிப்பாளர்கள் வெளிப்படுத்தல் வேண்டும் | | இணங்கியது |
| **D** | **பொறுப்புக்கூறல் மற்றும் கணக்காய்வும** | | |
| D.1 | நிதியியல் அறிக்கையிடல் | ▪ வருடாந்த அறிக்கையில் நிதியியல் நிலமை, செயலாற்றுகை, வியாபார மாதிரி, ஆளுகைக் கட்டமைப்பு, இடர் முகாமைத்துவம், உள்ளகக் கட்டுப்பாடுகள், சவால்கள் மற்றும் சந்தர்ப்பங்கள் தொடர்பான நடுநிலையான மீளாய்வினை வெளிப்படுத்துவதை உறுதிப்படுத்தும் வகையில் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br>▪ வருடாந்த அறிக்கை மற்றும் ஏனைய இடைக்கால அறிக்கைகளை கம்பனி தயாரிக்கும் போது கம்பனிக்கு பொருத்தமான சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்கியுள்ளது.<br>▪ கோவையில் குறிப்பிட்டவாறு வருடாந்த அறிக்கையில் கீழ்வருவன வெளிப்படுத்தப்பட்டுள்ளது.<br>i. முகாமைத்துவ கலந்துரையாடல்கள் மற்றும் பகுப்பாய்வுகள் 31 - 62ஆம் பக்கம் வரை<br>ii. பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கை 89-91 ஆம் பக்கம் வரை<br>iii. கம்பனியின் நிதியியல் கூற்றுக்கள் தொடர்பாக பணிப்பாளர்களின் பொறுப்புகளின் கூற்று 111 ஆம் பக்கம்<br>iv. தொடர்ந்தியங்கும் நிலை மீதான கூற்று 115 ஆம் பக்கம்<br>v. உள்ளக கட்டுப்பாடுகள் தொடர்பான பணிப்பாளரின் கூற்று 89ஆம் பக்கம்<br>vi. சுயாதீன கணக்காய்வாளர்களின் அறிக்கை 98 - 110ஆம் பக்கம் வரை<br>vii. தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர்களின் பொறுப்புகளின் கூற்று 16 - 19ஆம் பக்கம் வரை<br>viii. நிதியியல் கூற்றுகளின் குறிப்பு 19இல் வெளிப்படுத்தப்பட்டுள்ள தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல்வாங்கல்கள்<br>ix. அழைக்கப்படுவதற்கு மூலதனத்தில் கடுமையான இழப்பு இல்லை<br>▪ அரச சுற்றுநிருபங்களுக்கு அமைவாக அமைச்சினால் கோரப்படும் ஏனைய இடைக்கால அறிக்கைகளை கம்பனி சமர்ப்பித்துள்ளது. | இணங்கியது |

| கோவைத் தொடர்பு | நிறுவன ஆளுகைக் கொள்கை கோட்பாடுகள் | இணங்குவித்தல் விபரங்கள் | இணங்குவித்தல் நிலை |
|---|---|---|---|
| D.2 | இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடு | கம்பனிக் கொள்கைகளுக்கு அமைவாக ஆற்றல்வாய்ந்த இடர்நேர்வு முகாமைத்துவ சட்டகம் உருவாக்கப்பட்டுள்ளது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் வழிகாட்டலுடனும் உதவியுடனும் உள்ளக கட்டுப்பாடுகள் காலமுறையான கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகின்றது. இது தொடர்பான விபரங்கள் வருடாந்த அறிக்கையில் இடர் முகாமைத்துவப் பிரிவு தொடர்பாக 78 - 88ஆம் பக்கத்திலும். கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அறிக்கை 92 - 95ஆம் பக்கத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது. | இணங்கியது |
| D.3 | கணக்காய்வுக் குழு | கணக்காய்வுக் குழு, பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்ட மூன்று நிறைவேற்றுத்தரமல்லாத பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது. இதற்கு உள்ளக கணக்காய்வுப் பிரிவு துணைபுரிகின்றது. கணக்காய்வுக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் ஆண்டறிக்கையின் அறிக்கையின் 92 - 95ஆம் பக்கத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | இணங்கியது |
| **E** | **நிறுவன முதலீட்டாளர்கள்** | | |
| | பங்குதாரர் வாக்கெடுப்பு | அனைத்து நிறுவனத்தின் பங்குதாரர்களும் பங்குதாரர் கூட்டத்தில் பங்கெடுப்பதற்கும் அனைத்து விடயங்கள் தொடர்பாக அவர்களுடைய கருத்தினை வழங்குவதற்கும் ஊக்குவிக்கப்படுகின்றனர். | இணங்கியது |
| | ஆளுகை வெளிப்படுத்துகை தொடர்பான மதிப்பீடு | ஆண்டறிக்கை அறிக்கை, நிறுவன ஆளுகை செயன்முறையை வெளிப்படுத்துகின்றது. | இணங்கியது |
| **G** | **இணையத்தில் விடயங்களும் சைபர் பாதுகாப்பும்** | | |
| | சைபர் இடர்வுகளைகளை முகாமை செய்வதற்கும் நிறுவன வலையமைப்புக்கு கம்பனியின் உள்ளேயும் வெளியேயும் தகவல் தொழில்நுட்ப கருவிகள் இணைக்கப் படுவதற்குரிய செயன் முறையையும் பணிப்பாளர் சபை கொண்டிருத்தல் வேண்டும். | ▪ முழுமையான தொழிற்படுத்தப்பட்ட அனர்த்த மீட்பு முகாமைத்துவ நிலையக் கருத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.<br>▪ வலையமைப்புப் பாதுகாப்பு, தரவு இழப்பு, இணைய வழியில் ஏமாற்றுதல், விநியோகிக்கப்பட்ட சேவை தாக்குதல், மொபைல் சாதனம் மற்றும் சந்தேகத்திற்கிடமான சைபர் நடவடிக்கைகள் கண்காணிப்பு என்பவற்றுடன் கூடிய வலையமைப்பு பாதுகாப்பு தொழில்நுட்ப அமுல்படுத்தல் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான அன்றாட பரிசோதனை மற்றும் உறுதிப்படுத்தல்.<br>▪ காப்பு சேவையகம் மற்றும் மீட்பு சேவையகம் மேலதிக விபரங்கள் 78 - 88ஆம் பக்கத்தில் உள்ள இடர்நேர்வு முகாமைத்துவ அறிக்கையில் விளக்கப்பட்டுள்ளது. | இணங்கியது |
| **H** | **சூழல் மற்றும் சமூகக் காரணி ஆளுகைகளை அறிக்கையிடல்** | | |
| H.1 | சூழல் மற்றும் சமூகக் காரணி ஆளுகை அறிக்கையிடல் செயலாற்றுகை தொடர்பாக போதிய வெளிப் படுத்துகைகளை வழங்குதல் | செயலாற்றுகை பற்றிய முழுமையான மீளாய்வினை ஆண்டறிக்கை அறிக்கை வழங்குகின்றது. அறிக்கையின் வேறுபட்ட பகுதிகளில் குழுக்களினால் பயன்படுத்தப்பட்ட பல்வேறுபட்ட மூலதனங்களின் செயலாற்றுகை வழங்கப்பட்டுள்ளது. | இணங்கியது |

# இடர்நேர்வு முகாமைத்துவம்

ஆற்றல்வாய்ந்த இடர்நேர்வு முகாமைத்துவ நடத்தைகள் நீண்டகால வளர்ச்சிக்கு அத்தியாவசியமானவையென சிபெஸ்டேலி நிறுவனம் உறுதியாக நம்புகின்றது. எமது அனைத்தையும் உள்ளடக்குகின்ற குறிக்கோள், அனைத்து எமது நிறுவனசார் முயற்சிகளினதும் நீண்டகாலம் நிலைத்திருக்கும் பெறுமதியினை மேம்படுத்துவதாகும். எமது முன்னெடுக்கப்படுகின்ற தொழிற்பாடுகளை மோசமாக பாதிக்கக்கூடிய காரணிகளுடன் இணையப்பெற்ற சாத்தியமான அநுகூலங்கள் மற்றும் பிரதிகூலங்கள் இரண்டினையும் நன்கு பரிசீலனையிற்கொள்வது வரை இது நீடிக்கின்றது. இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கான எமது அணுகுமுறையானது அதன் தொடர்ச்சியான மற்றும் ஏற்றதாக்கிக்கொள்கின்ற தன்மை மூலம் வகைப்படுத்தப்பட்டு, எமது நிறுவன உபாயத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதில் இன்றியமையாத கூறாக ஆக்குகின்றது.

எமது கம்பனி எதிர்கொள்ளும் தொழில் இடர்நேர்வுகள் பல எண்ணிக்கையான காரணிகளால் செல்வாக்குச்செலுத்தப்படுகின்றன என்பதுடன் அவற்றில் அனைத்தும் எமது நேரடியான கட்டுப்பாட்டுக்குட்பட்டவை அல்ல என்பதை ஏற்றுக்கொள்வது முக்கியமாகும். நிறுவனத்தின் கீர்த்தி, பாதுகாப்பு, சுற்றாடல் கரிசனைகள், ஆரோக்கியம், பாதுகாப்பு பிரச்சினைகள், உற்பத்தித் தரம், தகவல் தொழில்நுட்பம் போன்ற பொதுவான சவால்களால் தூண்டப்படும் தொழில் இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மையுடன் ஒன்றிணைந்த வெளிவாரியாக உந்தப்படுகின்ற சவால்கள் கம்பனியின் இடர்நேர்வு முகாமைத்துவ செயன்முறையின் பாகமாக இடையறாது மீளாய்வுசெய்யப்படுகின்றன.

### சமூக-பொருளாதார அமைப்பில் நிச்சயமற்ற தன்மை

2022 ஆம் ஆண்டில், இலங்கை ஆரம்பத்தில் கொவிட்-19 தொற்றுநோயிலிருந்து ஓரளவு மீண்டு வருவதற்கான அறிகுறிகளைக் காட்டியது. எனினும், வணிகங்கள் மற்றும் பொதுமக்கள் மீது அதிக தாக்கத்தை ஏற்படுத்திய புதிய சவால்களை நாடு விரைவாகவே எதிர்கொண்டது. 2022 ஆம் ஆண்டு முழுவதும், பணவீக்கம், அதிகரித்து வரும் பொருட்களின் விலைகள், மின்சாரப் பற்றாக்குறை மற்றும் கடுமையான எரிபொருள் பற்றாக்குறை ஆகியவற்றைக் கொண்ட முன்னெப்போதும் இல்லாத பொருளாதார நெருக்கடியில் இலங்கை சிக்கித் தவித்து வருகிறது, இந்நெருக்கடியானது தோல்வியுற்ற விவசாய மாற்றத்தால் தீவிரமடைந்து, விவசாய உற்பத்தியில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சிக்கு வழிவகுத்தது. இவ் இக்கட்டான சூழ்நிலைகளுக்கு விடையிறுக்கும் வகையில், உணவு, எரிபொருள் மற்றும் மருந்துகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் கடுமையான தட்டுப்பாடு காரணமாக மார்ச் 2022 இல் வெகுஜனப் போராட்டங்கள் வெடித்தன. ஜுலை 13 அன்று, சனாதிபதி நாட்டை விட்டு வெளியேறும் அளவுக்கு நிலைமை மோசமடைந்து, பிரதம அமைச்சர் அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தினார்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள சவால்களால் சக்தி துறையும் நேரடியாகப் பாதிக்கப்பட்டு, நாட்டின் பொருளாதார துயரங்களை அதிகப்படுத்தியது.

- 2022 இல் அதிகரித்த உலகளாவிய எரிபொருள் விலைகள் மற்றும் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி இலங்கைக்கான இறக்குமதி செலவினங்களை அதிகரித்தது.
- நாடு கடுமையான வெளிநாட்டுச் செலாவணி நெருக்கடியை எதிர்கொண்டு, எரிபொருள் இறக்குமதிக்குத் தேவையான வெளிநாட்டு நாணயத்தைப் பெறுவதை சவாலாக்கியது.
- நாட்டில் நிலவிய பொருளாதார இடர்பாடுகள், தொடர்ச்சியான எரிபொருள் விநியோகத்தை உறுதிசெய்வதை சவாலுக்குட்படுத்தியது.
- எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக, குறைந்த அளவிலான எரிபொருளை பொதுமக்களிடையே விநியோகிப்பது கடினமாகி, நீண்ட வரிசைகள் மற்றும் நியாயமான விநியோக முறையை பராமரிப்பதில் சவால்களுக்கு வழிவகுத்தது.

இவ்வெண்ணற்ற பேரண்ட மற்றும் நுண்பாக சூழல் அமைப்பு சவால்களுக்கு மத்தியில், நாட்டின் மக்களுக்கு தடையின்றி சேவையை உறுதிசெய்ய நிறுவனம் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டது. இதன் விளைவாக, நிறுவனத்தின் இடர்நேர்வுக் குறைப்பு உபாயமானது வலுவான தொழில் தொடர்ச்சி திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னுரிமையளித்தது. இத்திட்டங்கள், மாற்றுவழி பணியாற்று ஏற்பாடுகள் ஊடாக நிறுவனத்தின் செயல்பாடுகள் தடையின்றி தொழிற்படுகின்ற அதேவேளை அரசாங்கப் பணிப்புரைகளைப் கண்டிப்பாக கடைப்பிடிப்பதற்கும் ஆதரவளிப்பதற்கும் உதவின.

### சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிட்டெட் நிறுவனத்திற்கான தொழில்முயற்சி இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்ளை

இடர்நேர்வு முகாமைத்துவ உபாயமானது கம்பனியில் நிறுவன ஆளுகை, முகாமைத்துவ தீர்மானங்கள் மற்றும் தொழில் செயன்முறைகள் என்பவற்றின் மிக முக்கியமான பாகமாக காணப்படுகின்றது. ஒருங்கிணைங்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவமானது மேலிருந்து கீழ்நோக்கிய தொழிற்பாடுகளின் செயல்திறன்வாய்ந்த இயக்கத்திற்கு அத்தியாவசியமானதாகும். இடர்நேர்வு முகாமைத்துவ முன்முயற்சிகளை தொழில் திட்டமிடல் மற்றும் தீர்மானம் மேற்கொள்ளுதல் ஆகிய செயன்முறையினுள் இடம்பெறச் செய்வது திட்டமிடல், அறிக்கையிடல், கணக்காய்வு செய்தல் மற்றும் தகவல் முறைமைகளை முகாமைசெய்தல் என்பவற்றிற்கிடையில் காத்திரமான ஒருங்கிணைப்பொன்றை வழங்கும். சிபெஸ்டேலி இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளை பின்பற்றுவதாயினும், சிபெஸ்டேலி நிறுவனத்திற்கு முறையான தொழில்முயற்சி இடர்நேர்வு முகாமைத்துவ கொள்கையொன்று காணப்படவில்லை. தளம்பல் மிக்கதும் கொந்தளிப்பு மிக்கதுமான தொழில் சூழலில் இருந்து தொழிற்படுகின்ற கம்பனி என்ற ரீதியில் சிபெஸ்டேலி நிறுவனத்தின் தலைமைத்துவம் அதாவது தலைவரான திரு. உவைஸ் முஹமட் அதன் ஆளுகை செயன்முறையினை வலிமைப்படுத்துவதற்கான முயற்சியாக 2021.11.01 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் சிபெஸ்டேலி நிறவனத்திற்கான தொழில்முயற்சி இடர்நேர்வு முகாமைத்துவ தொழிற்பாட்டுக்கான தொழில்சார் கட்டமைப்பு ஒன்றை நிறுவுவதற்கு மிகவும் முன்மதிமிக்க தீர்மானத்தை மேற்கொண்டார்.

நிறுவனத்தின் முதன்மைக் தொழில் குறிக்கோள் சிபெற்கோ மற்றும் எல்ஐஓசி நிறுவனங்களின் மொத்த பெற்றோலிய உற்பத்திகளின் கட்டுக்காவலராக செயற்படுவதாகும் என்ற

காரணத்தின் அடிப்படையில் சிபெஸ்டேலி நிறுவனத்திற்கான கொள்கை முன்முயற்சியாக தொழில்முயற்சி இடர்நேர்வு முகாமைத்துவம் நீண்ட காலம் எதிர்பார்க்கபட்டிருந்ததாகும். சிபெஸ்டேலி நிறுவனத்தின் பொறுப்புகளை நிறைவேற்றுகையில் எதிர்பாராத நிகழ்வொன்றினால் அதன் குறிக்கோள் இடையூறுக்குள்ளாக்கப்படாது என்பதனை காத்திரமான இடர்முகாமைத்துவ உபாயங்களை உறுதிசெய்வதன் காரணமாக இடர்கள் உன்னிப்பாக அடையாளப்படுத்தப்படுகின்றன என்பது முக்கியமாக காணப்படுகின்றது. மேலும் தொழில்சார் கட்டமைப்பொன்றினுள் இடர்களை முகாமைசெய்வது ஏதேனும் நிறுவனத்திற்கு குறிப்பாக சிபெஸ்டேலி நிறுவனத்தை ஒத்த அதீதமாக தீப்பற்றக்கூடிய சூழல் ஒன்றில் தொழிற்படுத்தப்படுகின்ற ஒரு நிறுவனத்திற்கு பல எண்ணிக்கையான நன்மைகளை ஒன்றுசேர்ப்பதற்கு வழிவகுக்கும். சிபெஸ்டேலி நிறுவனத்தை பின்னணியாக கொண்டு, புதிதாக தயாரிக்கப்பட்ட இடர்நேர்வு கொள்கையானது பணிப்பாளர் சபை, சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றும் தனிப்பட்ட ஊழியர்கள் போன்றோரின் பொறுப்புகளை தெளிவாக வரையறைசெய்யும் இது நிறுவனத்தினுள் கலாசார மாறுதல் ஒன்றுக்கு வழியமைக்கும். இதற்குப் பிரதான காரணம் தொழிற்முயற்சி இடர்நேர்வு முகாமைத்துவ கொள்கையானது இடர்நேர்வு பற்றிய விழிப்புணர்வும் இடர்நேர்வு கலாசாரமும் அதன் வெற்றிக்கான தளமாக அமைந்திருக்கும் எனற உண்மையை வலியுறுத்துவதாகும். தொழில்முயற்சி இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பினை நடைமுறைப்படுத்தல் முகாமைத்துவ கடமைப்பொறுப்பினை மாத்திரமன்றி அடிமட்ட ஊழியர்களினது பங்களிப்பினையும் வேண்டி நிற்கின்றது. இது இடரினை தணிப்பதற்கான பங்கேற்பு அணுகுமுறையொன்றினை உருவாக்கும்.

## இடர்நேர்வு ஆளுகை

உபாய பணிப்புரையை வழங்குவதற்கும் இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கும் சபையே இறுதியாக பொறுப்புடையதாகும். உரிய காலத்தில் இடரை இனங்காண்பதற்கும் அதற்கான தெளிவான பொறுப்புக்கூறலை வசதிப்படுத்துவதற்கும் இடர்நேர்வு ஆளுகை கட்டமைப்பொன்றினை அவர்கள் நடைமுறைப்படுத்தியுள்ளனர். பணிப்பாளர் சபை, கணக்காய்வுக் குழு மற்றும் உள்ளகக் கணக்காய்வு திணைக்களம் என்பன கம்பனியின் முகாமையாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் இடர்நேர்வு முகாமைத்துவ செயன்முறையில் வழிகாட்டி ஆதரவளிக்கின்றனர்.

**பணிப்பாளர் சபை**

பணிப்பாளர் சபையானது இடர்நேர்வு ஏற்பை நிர்ணயிப்பதற்கும் இடர்நேர்வு உபாயத்தினை தொடர்பூட்டுவதற்கும் செயல்திறன்வாய்ந்த இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கான கொள்கைகளை அங்கீகரிப்பதற்கும் பொறுப்படையதாகும்.

**கணக்காய்வுக் குழு**

உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் வழங்கப்படும் அறிக்கைகளை மதிப்பிடுதல், அத்துடன் வெளிவாரி கணக்காய்வாளர்களின் சுயாதீனம் மற்றும் செயலாற்றுகையினை கணித்தல் என்பன வாயிலாக உள்ளக கட்டுப்பாடுகள் பற்றிய போதுமையினை குழு மீளாய்கின்றது. ஒவ்வொரு திணைக்களத்தின் மூலமும் அறிக்கையிடப்படுகின்ற இடர்களை மீளாய்வுசெய்து, அத்தகைய இடர்களிலிருந்து தோன்றுகின்ற தாக்கங்களை முகாமைசெய்து, தணிக்கக்கூடிய விதத்தில் கம்பனி மூலம் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளையும் குழு அனுமதிக்கின்றது.

**பிரிவுகளின் பிரதானிகள்**

பிரிவுகளின் பிரதானிகள் அவர்களது திணைக்களத்தினுள் இடரை முகாமைசெய்வதற்கும் பொருத்தமான இடர்நேர்வு தணிப்பு நிகழ்ச்சிதிட்டங்கள் செயற்பாட்டிலுள்ளன என்பதையும் அவை கம்பனியின் இடர்நேர்வு முகாமைத்துவ தரநியமங்களுக்கும் உள்ளக கட்டுப்பாடுகள் முறைமைக்கும் இணங்கி காணப்படுகின்றன என்பதனை உறுதிசெய்வதற்கும் முதன்மையாக பொறுப்புடையவர்களாவர்கள்.

**உள்ளக மற்றும் வெளிவாரி கணக்காய்வாளர்கள்**

உள்ளக கணக்காய்வின் வகிபாகமானது நிறுவனத்தின் இடர்நேர்வு முகாமைத்துவம், ஆளுகை. உள்ளக கட்டுப்பாட்டுச் செயன்முறைகள் எனபன செயல்திறன் வாய்ந்த விதத்தில் தொழிற்படுகின்றன என்ற சுயாதீன உத்தரவாதத்தை வழங்குவதாகும்.

வெளிவாரி கணக்காய்வாளர்கள் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைக் கணக்காய்வு செய்வதற்கும் கம்பனியின் நிதியியல் நிலை மற்றும் செயலாற்றுகை பற்றிய நியாயமான மற்றம் உண்மையான எடுத்துக்காட்டல் மீது நியாயமான உத்தரவாதத்தை வழங்குவதற்கும் பொறுப்புடையவர்களாவார்.

# இடர்நேர்வு முகாமைத்துவம்

### இடர்நேர்வு முகாமைத்துவச் செயன்முறை

இடர்நேர்வு முகாமைத்துவமானது தொடர்ச்சியான செயன்முறை ஒன்றாவதுடன் கம்பனியின் செயலாற்றுகை மீளாய்வு மற்றும் தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறைகள் என்பவற்றில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இடர்நேர்வு முகாமைத்துவத்தின் நோக்கம் இடரை கையாளுகின்ற செயற்பாடுகள் திட்டமிடப்படக்கூடிய அத்துடன் தேவைப்பட்டவாறு உருவாக்கப்படக்கூடிய அல்லது குறிக்கோள்களை எய்துவதன் மீது சாதகமான தாக்கங்களை தணிப்பதற்கு எதிர்வுகூறக்கூடிய விதத்தில் இடர்நேர்வு நிகழ்வதற்கு முன்னர் சாத்தியமான பிரச்சினைகளை இனங்காண்பதாகும்.

### இடர்நேர்வு முகாமைத்துவ செயன்முறையானது நான்கு படிமுறைகளை கொண்டுள்ளது.

### 01. இடர்நேர்வு மதிப்பீடு

தொழிலுக்கான உள்ளக மற்றும் வெளிவாரி சூழலிலிருந்து வருகின்ற நடப்பு, எதிர்கால, சாத்தியமான இடர்களை இனங்கண்டு, பகுப்பாய்வுசெய்து அத்துடன் மதிப்பிடுகின்ற முறைமைசார்ந்த செயன்முறை.

### 02. இடர்நேர்வுப் பரிகாரம் / இடர்நேர்வு தணிப்பு

இடர்நேர்வு பரிகாரம் என்பது இடரொன்றினை முகாமைசெய்வதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையாகும். அதாவது கம்பனி இடரொன்றை தவிர்ப்பதா, கைமாற்றுவதா, குறைப்பதா, அல்லது ஏற்றுக்கொள்வதா என்பதாகும். இது இடரின் தன்மை மற்றும் மதிப்பீடு என்பவற்றைச் சார்ந்துள்ளது.

### 03. கண்காணிப்பும் மீளாய்வும்

இடர்நேர்வு கண்காணித்தல் என்பது செயற்பாட்டிலுள்ள இடர்நேர்வு முகாமைத்துவ உபாயங்களுக்கான ஏதேனும் அவசியமான சீராக்கங்களை இனங்காண்கின்ற, முன்னெடுக்கப்படுகின்ற அல்லது தொடர்ச்சியான செயன்முறையாகும்.

### 04. தொடர்பூட்டலும் ஆலோசனையும்

தொடர்பூட்டலும் ஆலோசனையும் இடர்நேர்வு முகாமைத்துவத்தில் தனித்துவமான கட்டமொன்றல்ல, ஆனாலும் ஒட்டுமொத்த செயன்முறை முழுவதும் இயங்குகின்றது. ஒரு நிறுவனம் அதன் அலுவலர்கள் ஒவ்வொருவரும் அவர்களது வகிபாகத்திற்கு அமைவாக நிறுவனத்தின் இடர்நேர்வு உபாயத்தை அறிந்துள்ளனர், இடர்நேர்வு முன்னுரிமைகள் மற்றும் தொடர்புடைய பொறுப்புக்கூறல்களை அறிந்துள்ளனர் என்பதனை உறுதிசெய்ய வேண்டும். ஏனைய விடயங்களுக்கு மத்தியில், இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடு பற்றிய ஆற்றல்வாய்ந்த உள்ளக தகவல்கள் மற்றும் செயன்முறைகளை தொடர்பூட்டல் அத்துடன் பொறுப்பினை ஏற்றல் என்பவற்றை உறுதிசெய்வதற்கு சபை பொறுப்புடையதாகும்.



## இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கான நிறுவனத்தின் அணுகுமுறை

இடர்நேர்வை முறையாக அடையாளங்கண்டு, முகாமைசெய்து, தணிப்பதற்கு கீழே தொகுக்கப்பட்வாறு இரண்டு வகையான பாதுகாப்பு நிலைகளை நிறுவனம் பின்பற்றுகின்றது.

| 1 ஆம் நிலைப் பாதுகாப்பு |
|---|
| **பிரிவுகளின் பிரதானிகள்** |
| பிரிவுகளின் பிரதானிகள் அவர்களது தொழிற்பாடுகளுடன் தொடர்புடைய இடர்நேர்வை இனங்கண்டு, அளவிட்டு, கண்காணித்து முகாமைசெய்வதற்கும் பொறுப்புடையவர்களாவர்கள்.<br><br>இணையப்பெற்ற இடர்நேர்வுவைத் கண்டுபிடித்து, முகாமைசெய்து, தடுப்பதற்கு பிரிவுசார் பிரதானிகளை இயலச்செய்கின்ற அனைத்து கொள்கைகளையும் நடைமுறைகளையும் உள்ளடக்கிய அனைத்தையும் உள்ளடக்கிய உள்ளக கட்டுப்பாட்டு கட்டுப்பாட்டு முறைமையினை கம்பனி வடிவமைத்துள்ளது. |
| **2 ஆம் நிலைப் பாதுகாப்பு** |
| **உள்ளக மற்றும் வெளிவாரி கணக்காய்வு** |
| நிறுவனத்தின் ஒட்டுமொத்த இடர்நேர்வு முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டுச் கட்டமைப்பு எனபனவற்றின் போதுமை மற்றும் செயல்திறன் வாய்ந்த தன்மை பற்றிய சுயாதீன மதிப்பீட்டை உள்ளகக் கணக்காய்வுகள் வழங்குவதுடன் கணக்காய்வுக் குழுவிற்கு சுயாதீனமாக அறிக்கையிடுகின்றது.<br><br>வெளிவாரி கணக்காய்வாளர்கள் சுயாதீனமான நிறுவனமாவதுடன் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைக் கணக்காய்வு செய்வதற்கும் நியாயமான உத்தரவாதத்தை வழங்குவதற்கும் பொறுப்புடையவர்களாவார். |

**நிறுவனத்தை பாதிக்கும் முக்கிய இடர்நேர்வுகள் பற்றிய கண்ணோட்டம்**

| இடர்நேர்வு | முக்கிய ஊக்கிகள் | தணிப்பு உபாயங்கள் |
|---|---|---|
| **நோய்த்தொற்று இடர்நேர்வு** | | |
| 2022 இல் இலங்கை ஆரம்பத்தில் கொவிட்-19 தொற்றுநோயிலிருந்து மிகவும் விரிவான மீட்சிக்கான அறிகுறிகளை வெளிப்படுத்தியது. எனினும், அதனுடன் தொடர்புடைய இடர்நேர்வுக் காரணிகளை முற்றிலும் அகற்றாமல், ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் நிறுவனம் கவனம்செலுத்தியது  | | நிறுவனம் அதன்து ஊழியர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுத்தது.<br>• தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் ஆடைகளை வழங்கல்.<br>• பணியிடத்தில் சமூக இடைவெளியை கடைபிடித்தல்<br>• மிக உயர்ந்த சுகாதாரத் தரநியமங்களைப் பேணுதல்.<br>• ஊழியர்களுக்கும் வளாகத்திற்கான வேறு வருகைதருநர்களுக்கும் தேவையான தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் தொற்றுநீக்கிகள் கிடைக்கப்பெறச்செய்யப்பட்டன.<br>• பணியாளர்களின் வெப்பநிலை சோதனை மற்றும் பரிசோதனை<br>• முக்கிய வேலைகளுக்கான ஆயத்த குழுவைப் பேணுதல்  |

# இடர்நேர்வு முகாமைத்துவம்

| நிறுவனத்தை பாதிக்கும் முக்கிய இடர்நேர்வுகள் பற்றிய கண்ணோட்டம் | | |
|---|---|---|
| **இடர்நேர்வு** | **முக்கிய ஊக்கிகள்** | **தணிப்பு உபாயங்கள்** |
| **போட்டியாளர் இடர்நேர்வு** | | |
| எமது வாடிக்கையாளர்களுக்கு ஒப்பிடக்கூடிய களஞ்சிய இயலளவை குறைந்த விலையில் வழங்கக்கூடிய வேறு முனைய நிறுவனங்களின் போட்டி, எமது நிதியியல் நிலை மற்றும் தொழிற்பாடுகளின் பெறுபேறுகளை மோசமாகப் பாதிக்கலாம்.<br><br>2022 ஆம் ஆண்டு ஒக்டோபர் 21 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட சட்டமூலத்தின் ஊடாக 2002 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பெற்றோலியப் பொருட்கள் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் திருத்தத்துடன், இலங்கையில் பெற்றோலியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கும் விநியோகிப்பதற்கும் தனியார் தரப்பினருக்கு உரிமம் வழங்கப்படும் இது எதிர்காலத்தில் போட்டியாளரை உருவாக்கும் இடர்நேர்வைக் கொண்டிருக்கலாம். | • சிபெஸ்டேலி நிறுவனத்தின் இரண்டு பங்குதாரர்களான ஏனைய முனையை நிறுவனங்களிடமிருந்து (இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஐஓசி) நாம் போட்டியை எதிர்கொள்கிறோம்.<br>• பெற்றோலிலியத் தொழிற்துறையில் தனியார் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்குவது எதிர்காலத்தில் போட்டி இடர்நேர்வை அதிகரிக்கலாம். | • களஞ்சிய கொள்ளளவை அதிகரிப்பதன் மூலம் அல்லது வேறுவிதமாக தற்போதுள்ள முனையங்களின் விரிவாக்கம்.<br>• பவுசர் தொகுதிகளை அதிகரித்தல்<br>• சரியான திறன் கொண்ட பணியாளர்களை ஆட்சேர்த்தல், பயிற்றுவித்தல் மற்றும் வழிகாட்டல் மூலம் உயர் சேவை தரநியமங்கள் பேணப்படுகின்றன.<br>• எமது போட்டியாளர்களை விஞ்சிச் செல்ல புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதன் மூலம் மாறிவரும் வாடிக்கையாளர் விருப்பங்களைப் பூர்த்திசெய்ய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மூலம் புத்தாக்கங்களில் தொடர்ந்து கவனம் செலுத்துகிறோம். |
| **ஊழியர் தக்கவைத்தல் இடர்நேர்வு** | | |
| எமது எதிர்கால வெற்றி எமது நிறைவேற்று அலுவலர்கள் மற்றும் ஏனைய முக்கிய பணியாளர்களின் தொடர்ச்சியான சேவையிலேயே தங்கியுள்ளது. எமது நிறைவேற்று அலுவலர்களில் அல்லது முக்கிய ஊழியர்களில் ஒருவரின் அல்லது பலரின் சேவைகளை நாம் இழந்தால், எமது வணிகம், தொழிற்பாட்டுப் பெறுபேறுகள், நிதியியல் நிலைமை என்பன பாதிக்கப்படலாம். நாட்டில் தற்போது நிலவும் நிச்சயமற்ற தன்மை காரணமாக, திறன்மிக்கோர் குடிபெயர்வுப் போக்கு காணப்படுகின்றது, அனுபவம்வாய்ந்த ஊழியர்களை இழப்பதன் மூலம் இது நிறுவனத்தை பாதிக்கலாம். | • நாட்டில் பொருளாதார மற்றும் அரசியல் நிச்சயமற்ற தன்மை<br>• தற்போதுள்ள பதவி உயர்வுத் திட்டம் மற்றும் நடைமுறைகள் பற்றிய ஊழியர்களின் ஏமாற்றம்.<br>• தொழில் அபிவிருத்தி வாய்ப்புகள் இல்லாமை.<br>• பெறுமதி குறைவாக உணர்தல்<br>• மோசமான தலைமைத்துவம்<br>• நெகிழ்வுத்தன்மை இல்லாமை | • முக்கிய வகிபாகங்களுக்கான பதவியுரிமை திட்டமிடல்.<br>• உயர் திறன்படைத்தோருக்கு “திறமைப் பொருத்தம்” திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.<br>• பணியாளர் அங்கீகாரம், மதிப்பீடுகள் மற்றும் பதவி உயர்வுகளை உள்ளடக்கிய வலுவான பணியாளர் மதிப்பு முன்மொழிவு மூலம் பணியாளர் ஊக்கத்தை பேணுதல்.<br>• தொழில் முன்னேற்றத்திற்கான வாய்ப்புகள்.<br>• தொடர்ச்சியான ஈடுபாடு மற்றும் சமூக மற்றும் நலன்புரி நிகழ்வுகளை நடத்துதல்.<br>• அனைத்து ஊழியர்களையும் உள்ளடக்கிய பயிற்சி மற்றும் அபிவிருத்தி மற்றும் கட்டமைக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிதிட்டத்தில் தொடர்ச்சியான முதலீடு. |

| நிறுவனத்தை பாதிக்கும் முக்கிய இடர்நேர்வுகள் பற்றிய கண்ணோட்டம் | | |
|---|---|---|
| **இடர்நேர்வு** | **முக்கிய ஊக்கிகள்** | **தணிப்பு உபாயங்கள்** |
| **பொருளாதார இடர்நேர்வு** | | |
| எமது முனையங்களில் நாம் செய்யும் இலகுவான சுத்திகரிக்கப்பட்ட பொருட்கள், கனரக சுத்திகரிக்கப்பட்ட பொருட்கள், மசகு எண்ணெய் மற்றும் ஏனைய தொடர்புடைய சேவைகளுக்கான கேள்வியிலேயே எமது நிதியியல் பெறுபேறுகள் தங்கியுள்ளன.<br><br>நாட்டில் நிலவும் மோசமான பொருளாதார நிலைமைகள் காரணமாக, கொவிட்-19 தொற்றுநோயின் விளைவாக வெளிநாட்டு செலாவணி நெருக்கடியால் மோசமாகி, தொடர்ச்சியான எரிபொருள் விநியோகத்தை பேணுவதில் நாடு சவால்களை எதிர்கொள்கிறது. இச்சூழ்நிலையில் எமது முனையைகளில் களஞ்சிய பயன்பாடு, விநியோகச் சேவை என்பவற்றில் கணிசமான குறைவு ஏற்பட வாய்ப்புள்ளது, இது எமது காசுப்பாய்ச்சலை மோசமாக பாதிக்கலாம். | • இலங்கையின் அனைத்து பிரசைகளின் நலனுக்காக கொவிட் -19 ஐக் கட்டுப்படுத்துவதற்கான அரசாங்க கொள்கை அதாவது, சமூக இடைவெளியை உறுதிசெய்வதற்காக ஊரடங்கு உத்தரவு மற்றும் வீட்டிலிருந்து வேலை செய்யும் திட்டங்கள் அடங்கிய கடுமையான நடவடிக்கைகளை அரசாங்கம் பின்பற்றியது.<br>• கொவிட்-19 இன் பொருளாதார வீழ்ச்சியைத் தொடர்ந்து 2020 மார்ச் முதல் இலங்கை ரூபா திடீர் தேய்மானத்தை வெளிப்படுத்தியது.<br>• மசகு எண்ணெய்க்கான விலை சூத்திரத்தின் தாக்கம் உலக சந்தையில் பீப்பாய் ஒன்றின் விலைக்கு ஏற்ப எரிபொருள் விலையை தொடர்ந்து மாற்றுவதற்கு வழிவகுக்கும்.<br>• தீர்வைகள்/வரிகள், வட்டி வீதங்கள், பணவீக்கம், சக்தி விலைகள் மீதான அரசின் கொள்கைகள் எரிபொருள் பொருட்களின் கேள்வியில் நேரடி தாக்கத்தை கொண்டிருக்கின்றன. | • பாதகமான பொருளாதார காரணிகளால் எழும் நிச்சயமற்ற நிதி நெருக்கடிகளை எதிர்கொள்ள குறுகிய கால மற்றும் நீண்ட கால நிதியியல் சாதனங்களில் முதலீடுகள்.<br>• வேறு மூலங்களில் இருந்து வருமானத்தை மேம்படுத்துதல், அதாவது ஆய்வுகூடப் பரிசோதனைக் கட்டணங்கள், தனியார் பவுசர்களுக்கான பயிற்சி். சுமையாளர் கட்டணங்கள், தீயணைப்பான்கள் நன்நிலைப்படுத்தல், அளவுத்திருத்தக் கட்டணங்கள், வாடகை வருமானம் போன்றவை.<br>• பெற்றோலிய தொழிற்துறையை தாராளமயமாக்குவதன் மூலம் வெளிநாட்டு செலாவணி மூலமான நெருக்கடியால் எரிபொருள் விநியோகத் இடையூறுகளின் இடர்நேர்வுகளைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இந்நடவடிக்கை தனியார் நிறுவனங்களை சந்தையில் நுழைய அனுமதிக்கின்றது, இது தொடர்ச்சியான எரிபொருள் விநியோகத்தை உறுதிசெய்ய உதவுகிறது மற்றும் வெளிநாட்டு செலாவணி கையிருப்பு மீதான அழுத்தத்தைத் தணிக்க உதவுகிறது. |
| **அரசியல் இடர்நேர்வு** | | |
| அரசியல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் காரணிகள் வணிகச் சூழலை கணிசமான அளவில் பாதிக்கக்கூடிய இலங்கையில் பெற்றோலியத் துறையில் தொழிற்படுவதை கருத்திற்கொள்கையில் நிறுவனம் பல அரசியல் இடர்நேர்வுகளை எதிர்கொள்ளக்கூடும். சிபெஸ்டேலி சந்திக்கக்கூடிய சில சாத்தியமான அரசியல் இடர்நேர்வுகள் பின்வருமாறு: | • ஒழுங்குவிதி மாற்றங்கள்: இலங்கையில் பெற்றோலிய தொழிற்துறையை தாராளமயமாக்க 2002 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பெற்றோலிய உற்பத்திகள் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் திருத்தம்.<br>• எரிபொருள் விலைக் கட்டுப்பாடுகள் | • இவ்வரசியல் இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கு, சிபெஸ்டேலி நிறுவனம் செயலூக்கமான இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் அரசாங்க உறவு முயற்சிகள் என்பவற்றில் ஈடுபடலாம். இது அரசாங்க அதிகாரிகளுடன் தொடர்ந்து கலந்துரையாடல், ஒழுங்குவிதிப்படுத்தல் மற்றும் இணங்குவித்தல் தரநியமங்களைக் கடைப்பிடித்தல் என்பவற்றை ஈடுபடுத்தலாம். |

# இடர்நேர்வு முகாமைத்துவம்

| நிறுவனத்தை பாதிக்கும் முக்கிய இடர்நேர்வுகள் பற்றிய கண்ணோட்டம் | | |
|---|---|---|
| **இடர்நேர்வு** | **முக்கிய ஊக்கிகள்** | **தணிப்பு உபாயங்கள்** |
| **அரசியல் இடர்நேர்வு** | | |
| | • அரசாங்கக் கொள்கை மாற்றங்கள்: விலையிடல் ஒழுங்குவிதிகள், வரிவிதிப்பு மற்றும் இறக்குமதி/ ஏற்றுமதி கொள்கைகள் உட்பட பெற்றோலியத் தொழில் தொடர்பான அரசாங்கக் கொள்கைகளில் ஏற்படும் மாற்றங்கள் சிபெஸ்டேலி நிறுவனத்தின் தொழிற்பாடுகளை மற்றும் இலாபத்தை நேரடியாகப் பாதிக்கலாம்.<br>• வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாடுகள்: நாணய நெருக்கடிகள் அல்லது பொருளாதார சவால்களுக்கு பதிலளிக்கும் வகையில், அரசாங்கம் வெளிநாட்டு செலாவணி கட்டுப்பாடுகளை விதிக்கலாம், இது சிபெஸ்டேலி நிறுவனத்தின் இறக்குமதி மற்றும் கொடுப்பனவுகளுக்கான வெளிநாட்டு நாணயத்தை அணுகும் திறனை பாதிக்கிறது.<br>• புவிசார் அரசியல் பதற்றங்கள்: அண்டை நாடுகள் மற்றும் உலக வல்லரசுகளுடன் இலங்கையின் புவிசார் அரசியல் உறவுகள் பெற்றொலிய தொழிலில் தாக்கத்தை ஏற்படுத்தலாம் மற்றும் நிச்சயமற்ற தன்மையை அறிமுகப்படுத்தலாம். | • வணிக நடவடிக்கைகளை பன்முகப்படுத்தல். |
| **ஊழியர் உறவுகள் இடர்நேர்வுகள்** | | |
| ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்திற்கான உரிமையை நாம் அங்கீகரிப்பதால், எமது ஊழியர்களில் சுமார் 99% ஊழியர்கள் தொழிற்சங்கங்களுடன் இணைந்துள்ளனர் உதாரணமாக, அரச நிறுவனங்களை தனியார்மயமாக்குவதற்கும், பெற்றோலிய சட்டத் திருத்தத்துக்கும் எதிராக பல போராட்டங்கள் இவ்வாண்டில் நடத்தப்பட்டன. | • தொழிற்சங்க வேலைநிறுத்தங்கள் தேவையற்ற இடையூறுகளை ஏற்படுத்தலாம். | • தொழிற்சங்கங்களுடனான உறவுகளை வலுப்படுத்துதல் மற்றும் இடர்நேர்வு அச்சுறுத்தல்களாக இவை உருவாகும் முன்னர் குறைகளைத் தீர்ப்பதற்கான தளமாக இதனைப் பயன்படுத்துதல்.<br>• கரிசனைக்குரிய துறைகளை அடையாளங்காண தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் கிரமமான கட்டமைக்கப்பட்ட கலந்துரையாடல்<br>• கரிசனைக்குரிய பகுதிகளைப் பற்றிக் கலந்துரையாடுவதற்கு ஊழியர்களுக்கான திறந்த கதவு கொள்கை. |

| நிறுவனத்தை பாதிக்கும் முக்கிய இடர்நேர்வுகள் பற்றிய கண்ணோட்டம் | | |
|---|---|---|
| **இடர்நேர்வு** | **முக்கிய ஊக்கிகள்** | **தணிப்பு உபாயங்கள்** |
| **இயற்கை ஆபத்துகள் மற்றும் நிச்சயமற்ற தன்மைகள்** | | |
| இயற்கை அனர்த்தங்கள் மற்றும் எமது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட வேறு நிகழ்வுகளால் எமது தொழிற்பாடுகள் பாதிக்கப்படலாம்.  | • வெள்ளம், நிலச்சரிவு, கடுமையான புயல் போன்றவற்றின் குறுக்கீடுகள்.<br>• பயங்கரவாத செயற்பாடுகள். | • அடையாளம் காணப்பட்ட சில இடர்நேர்வுகளுக்கு எதிராக காப்புறுதிகள் பெறப்படுகின்றன.<br>• நிறுவனம் பொருளாதாரத்தின் மையமாக நரம்பாகவிருப்பதனால், உயர் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் கட்டுப்பாடுகள் செயல்படுத்தப்படுகின்றன. |
| **தொழிற்பாட்டு இடர்நேர்வுகள்** | | |
| தொழிற்பாடு தொடர்பான அபாயங்கள் நிறுவனத்தை பாதிக்கலாம் | • எதிர்பாராத கசிவுகள் / குழாய்களில் ஏற்படும் சேதங்கள் தொழிற்பாட்டு தாமதத்தை ஏற்படுத்தலாம்.<br>• விநியோக உட்கட்டமைப்பு அல்லது ஏற்பாட்டுச் சேவைகளில் இடையூறுகள்.<br>• விபத்துக்கள்<br>• பாரிய அளவிலான தீ | • கசிவுகளை மற்றும் சேதங்களைக் குறைக்க குழாய்களின் வழக்கமான நன்னிலைப்படுத்தல் மற்றும் பராமரிப்பு.<br>• எந்தவொரு தீங்கு விளைவிக்கும் விளைவையும் குறைக்க பணியாளர்களுக்கு போதுமான பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.<br>• சிபெஸ்டேலி நிறுவனம் உள்ளக தீயணைப்பு பிரிவைக் கொண்டுள்ளது.  |
| **சட்ட ரீதியான இடர்நேர்வுகள்** | | |
| எமது தொழிற்பாடுகள் உற்பத்தி தர விவரக்குறிப்புகள் தொடர்பான இலங்கை சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு உட்பட்டது, மேலும், நாம் விநியோகிக்கும் உற்பத்திகளின் சில தர விவரக்குறிப்புகளை பூர்த்திசெய்ய தவறுவதன் விளைவாக எமது விநியோகத்தர்கள் மூலம் எமக்கு எதிராக கொண்டு வரும் உரிமைகோரல்களின் அடிப்படையில் நாம் சேதங்களுக்கு உட்பட்டிருக்கலாம். | • ஆவி அழுத்தம், கந்தக உள்ளடக்கம், எத்தனோல் உள்ளடக்கம் மற்றும் பயோடீசல் உள்ளடக்கம் அடங்கலாக உற்பத்தி தர விவரக்குறிப்புகள் அல்லது கலவை தேவைகள் மீதான சட்டத் தேவைப்பாடுகள்.<br>• எமது தொழிற்பாடுகளுக்குக் காரணமான உற்பத்தித் தரச் சட்டங்களை மீறுதல் கணிசமான அபராதம் மற்றும் தண்டப்பணம் மற்றும் எதிர்மறையான பிரச்சாரம் என்பவற்றுக்கு நாம் ஆளாகலாம். | • சிபெஸ்டேலி நிறுவனம் எந்த வகையான பெற்றோலிய எரிபொருள் பரிசோதனைகளுக்கும் அதிநவீன ஆய்வுகூடத்தைக் கொண்டுள்ளதுடன் கடுமையான தரக் கட்டுப்பாட்டு பொறிமுறைகளையும் ஒழுங்குவிதிப்படுத்தல் மற்றும் சான்றிதலுடன் இணங்குவித்தலையும் பின்பற்றுகிறது. |

# இடர்நேர்வு முகாமைத்துவம்

| நிறுவனத்தை பாதிக்கும் முக்கிய இடர்நேர்வுகள் பற்றிய கண்ணோட்டம் | | |
|---|---|---|
| **இடர்நேர்வு** | **முக்கிய ஊக்கிகள்** | **தணிப்பு உபாயங்கள்** |
| **சட்டம் சார்ந்த இடர்நேர்வுகள்** | | |
| | • பொதுமக்களுக்கு பயன்பாட்டிற்காக விநியோகிக்கப்படும் உற்பத்தி தர விவரக்குறிப்புகளை தாண்டிய (தரமற்ற) உற்பத்தி, மோசமான இயந்திர செயல்திறன் அல்லது இயந்திர சேதத்தை விளைவிக்கலாம், இது சேதங்கள் மற்றும் எதிர்மறையான விளம்பரம் தொடர்பான பொறுப்புக் கோரிக்கைகளை ஏற்படுத்தலாம். |  |
| **ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் இடர்நேர்வு** | | |
| சிக்கலான மற்றும் அடிக்கடி மாற்றமடையும் சுற்றுச்சூழல், சுகாதாரம் மற்றும் பாதுகாப்புச் சட்டங்களுடன், ஒழுங்குவிதிகளுடன் இணங்கியொழுகுவதில் குறிப்பிடத்தக்க செலவுகள் மற்றும் பொறுப்புகள் எமக்கு ஏற்படலாம் | • கம்பனியினால் உயர் தீப்பற்றக்கூடிய பிரதான பண்டங்கள் கயாளப்படுவதனால் தொழிற்பாட்டு செயற்பாடுகள் உயர் இடர்நேர்வு வகையீட்டினுள் வருகின்றன. சிறிய தவறு பாரிய தீயினை ஏற்படுத்தக்கூடும். இது கம்பனியினதும் நாட்டின் பொருளாதாரத்தினதும் தொழிற்பாடுகளில் பாரிய தாக்கத்தை உருவாக்கும்<br>• பெற்றோலியப் பண்டங்களின் களஞ்சியப்படுத்தல், கையாளுகை மற்றும் போக்குவரத்து என்பன சுற்றாடலுக்கு அபாயமான பதார்த்தங்கள் மற்றும் வாயுக்களையும் புகையையும் வெளியிடக்கூடும்.<br>• எமது வணிகமானது இயற்கையாகவே பெற்றோலிய உற்பத்திகளின் தற்செயலான கசிவுகள், சிந்துதல்கள், வெளியேற்றங்கள் அல்லது வேறு வெளியேற்றல்கள் அல்லது சுற்றுச்சூழலுக்கும் மற்றும் அண்டை பகுதிகளில் ஏற்படும் அபாயகரமான சம்பவங்களுக்கும் உட்பட்டது, இதற்காக நாங்கள் விசாரணை மற்றும் பரிகாரமளிப்பதற்கு கணிசமான பொறுப்புகளை சந்திக்க நேரிடும்.<br>• பொருந்தக்கூடிய சுற்றுச்சூழல், சுகாதாரம் மற்றும் பாதுகாப்புச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கத் தவறுதல், நிர்வாக, சிவில் அல்லது குற்றவியல் தண்டனைகள், அனுமதி இரத்துகள் மற்றும் எமது தொழிற்பாடுகளில் சில அல்லது அனைத்தையும் கட்டுப்படுத்தும் அல்லது தடைசெய்யும் மதிப்பிடுதல்கள் அல்லது தடைகள் உட்பட பொருளாதாரத் தடைகளுக்கு வழிவகுக்கலாம். | • சிபெஸ்டேலி நிறுவனம் பிரத்தியேக உள்ளக தீயணைப்பு அலகு, முதலுதவி பயிற்சி, தீயணைப்பு படை, பாதுகாப்புப் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றைக் கொண்டுள்ளது. தீயணைப்பு உபகரணங்கள் தொடர்ச்சியாக பரிசோதனை செய்யப்பட்டு அவை நல்ல நிலைமையில் உள்ளன என உறுதிப்படுத்தப்படுகின்றன. அதாவது தீயணைப்பு வழிப்பூட்டல் கிரமமாக பரிசீலிக்கப்படுகின்றது. அலுவலக உபரகணங்கள், குழாய்கள் கிரமமாகப் பரிசோதிக்கப்படுகின்றன<br>• எண்ணெய்ப் படிவுகள் உரிய கேள்விப்பத்திர முறை ஊடாக காலத்திற்கு காலம் அகற்றப்படுகின்றதுடன், அது சுற்றாடலில் எவ்வித சேதத்தையும் உருவாக்கவில்லை என்பதை உறுதிப்படுத்துகின்றது.<br>• வேண்டப்பட்ட நியமத்தினுள் கழிவுநீரை வைத்திருப்பதற்கான கழிவுநீர் அகற்றல் முறைமையை ஒழுங்குமுறைப்படுத்தப்படுகின்றது.<br>• உரிய முறையிலான கழிவு வேறாக்கல் மற்றும் அகற்றல் முறைமை அமுல்படுத்தப்பட்டுள்ளது.<br>• குழாய் இணைப்புகள் மற்றும் கரைகடந்த கசிவுகளை கையாளுவதற்கு ஊழியர்கள் உரிய முறையில் பயிற்றப்பட்டுள்ளனர். |

| நிறுவனத்தை பாதிக்கும் முக்கிய இடர்நேர்வுகள் பற்றிய கண்ணோட்டம் | | |
|---|---|---|
| **இடர்நேர்வு** | **முக்கிய ஊக்கிகள்** | **தணிப்பு உபாயங்கள்** |
| **இணைய இடர்நேர்வு** | | |
| எமது சொத்துக்களை இயக்குவதற்கும் எமது வணிகங்களை நிர்வகிக்கவும் தொழில்நுட்ப முறைமைகளைப் நாம் பயன்படுத்துகிறோம். எமது தகவல் தொழில்நுட்ப முறைமைகளின் இணையத் தாக்குதல் அல்லது வேறு பாதுகாப்பு மீறல் முக்கியமான தொழிற்பாட்டு அல்லது நிதிக் கட்டுப்பாடுகளை மீறுவதற்கு வழிவகுத்து எமது தெரிற்பாடுகள், வணிக நடவடிக்கைகள் அல்லது நிதி செயன்முறைகளில் இடையூறுகள் ஏற்படலாம்.<br> | • கொவிட்-19 பரவல் காரணமாக, வீட்டிலிருந்து பணிபுரியும் ஊழியர்கள் திறந்த இணையம் ஊடாக உள்நுழைந்தமை தகவல் மற்றும் சாதனப் பாதுகாப்பு இடர்நேர்வுள்ளாகியுள்ளது.<br>• தாக்குதல்காரர்களின் இலக்கிடப்பட்ட தாக்குதல், இலக்கு அல்லாத தாக்குதலின் விளைவாக இணையச் சேதம், உள்ளகத் தாக்குதல், தற்செயலான இணைய சம்பவம் அல்லது இவற்றின் ஒருங்கிணைதல் ஊடாக இணைய சம்பவங்களின் தாக்கம். | • வலையமைப்பு சுற்றயல் பாதுகாப்பு, தரவுகள் இழப்பு, இணைய ஏமாற்று, பகிரப்பட்ட சேவைத் தாக்குதலை நிராகரித்தல், மொபைல் சாதனங்கள் மற்றும் சந்தேகத்திற்கிடமான இணையச் செயற்பாடுகளை கண்காணித்தல் செயற்பாடுகளுடன் சேர்த்து கிரமமான பரிசோதனை மற்றும் கட்டுப்பாடுகளின் உறுதிப்படுத்தல் ஆகியவற்றை முகாமைசெய்வதற்கு வலையமைப்பு பாதுகாப்பு தொழில்நுட்பத்தை நடைமுறைப்படுத்தல்<br>• முழுமையாக தொழிற்பாட்டில் உள்ள அனர்த்த மீட்பு முகாமைத்துவ நிலையம்.<br>• காப்பெடுப்பு சேமிப்பகம் மற்றும் மீட்பு சேமிப்பகம். |
| **பொருட்பதிவேடு, ஆதனம் மற்றும் உபகரணங்கள் மீதான இடர்நேர்வு** | | |
| களஞ்சியப்படுத்தும் உற்பத்திகளின் தீபற்றக்கூடியதன்மை காரணமாக, காப்புறுதி காப்பீட்டில் ஏதேனும் போதிய /தெளிவற்ற தன்மை, காப்புறுதி நிறுவனங்களால் காப்பீட்டுக் உரிமைக் கோரிக்கைகள் நிராகரிக்கப்படுவதற்கு வழிவகுக்கலாம். | | • இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் கீழ் பதிவுசெய்யப்பட்ட புகழ்பெற்ற நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட காப்புறுதி.<br>• சிபெஸ்டேலி நிறுவனம் தீ மற்றும் வணிகக் காப்பீடு, நீர்க்கல பூட்கை (கரைகடந்த குழாய் இணைப்பு) உற்பத்திக் காப்பீடு, வாகனக் காப்பீடு, களஞ்சிய தாங்கிகள் மற்றும் உபகரணக் காப்பீடு போன்ற போதுமான காப்பீட்டுக் பூட்கைகளை எடுத்துள்ளது. |
| **எரிபொருள் முனையம் தொடர்பான குறிப்பிட்ட பணிகளுக்கு ஒப்பந்ததாரர்கள் கிடைக்கப்பெறாமை / வரையறுக்கப்பட்டளவில் கிடைக்கின்றமை.** | | |
| வேலைகளை நிறைவேற்றும் வேகத்தைப் பாதிப்பதுடன் அதிக வேலைச் செலவு | | • வேலைகளை ஒப்படைப்பதற் மூலம் உளநாட்டு தரப்பினர் முன்னேற்றப்பட்டு வருகின்றனர். உள்நாட்டு தரப்பினர்களுடன் கூட்டமைப்பு பங்காளிகளாக வெளிநாட்டு திறன் கொண்ட தரப்பினரை பங்கேற்பு இயலச்செய்யப்பட்டது. |
| **உள்ளூர் சமூக உறவுகளில் மீதான இடர்நேர்வு** | | |
| நாம் செயற்படும் சமூகங்களின் சமூக-பொருளாதார முன்னேற்றத்தை வலுவூட்டி பங்களிப்பது நிறுவனம் பற்றிய எண்ணப்பாங்கிற்கு முக்கியமானது. உதாரணம்: கொழும்பில் இருந்து கொலன்னாவை வரையிலான புதிய குழாய்த் திட்டம் தொடர்பாக கிராம மக்கள்/குடியிருப்பாளர்களிடையே பிணக்கு. | | • உயர் மட்ட சமூக ஈடுபாடும் நமது சமூகங்களுடன் அர்த்தமுள்ள உறவுகளை வளர்த்தலும்<br>உதாரணம்: நாட்டிற்குள் கொவிட்-19 ஐக் கட்டுப்படுத்துவதற்கு பொது இடங்களை கிருமிநீக்கம் செய்தல் மற்றும் தொற்றுநீக்கிகளை பொதுமக்களுக்கு விநியோகித்தல். |

# இடர்நேர்வு முகாமைத்துவம்

| நிறுவனத்தை பாதிக்கும் முக்கிய இடர்நேர்வுகள் பற்றிய கண்ணோட்டம் | | |
|---|---|---|
| **இடர்நேர்வு** | **முக்கிய ஊக்கிகள்** | **தணிப்பு உபாயங்கள்** |
| **உள்ளூர் சமூக உறவுகள் சார்ந்த இடர்நேர்வு** | | |
|  | | • முன்னெடுக்கப்படும் சமூக அபிவிருத்தி கருத்திட்டங்களில் முதலீடு.<br>உதாரணம்: கொழும்பு கோட்டையில் இருந்து கொலன்னாவ முனையம் வரையிலான எரிபொருள் குழாய்க்கு அருகில் சட்டவிரோதமாக வசித்து வரும் குடிசைவாசிகளுக்கு புதிய வீடுகளை வழங்குதல். |
| **மோசடிகள் மற்றும் சட்டவிரோத செயல்கள்** | | |
| முகாமைத்துவ மோசடி, ஊழியர் மோசடி மற்றும் வேறு சட்டவிரோத செயல்களின் இடர்நேர்வு | | • உள்ளகக் கட்டுப்பாட்டு செயன்முறைகள் பற்றிய சுயாதீனமான உத்தரவாதத்தை வழங்குவதற்கு சிபெஸ்டேலி நிறுவனம் தனியான உள்ளகக் கணக்காய்வுப் பிரிவைக் கொண்டுள்ளது.<br>• பிரிவுத் தலைவர்களின் மேற்பார்வை மற்றும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் வழிகாட்டுதலின் கீழ் ஒவ்வொரு செயன்முறைக்கும் அதிகாரப் ஒப்படைப்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.<br>• வெளிவாரி கணக்காய்வாளர்களால் மதிப்பிடப்பட்ட நிதியியல் நிலை அறிக்கையின் நேர்மைத்தன்மை. |

# பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கை

2007ஆம் ஆண்டு 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட கம்பனியின் விவகாரங்கள் பற்றிய 2022 டிசம்பர் 31 அன்று முடிவுற்ற ஆண்டுக்கான ஆண்டறிக்கையினை சமர்ப்பிப்பதில் பணிப்பாளர் சபை மகிழ்ச்சியடைகின்றது.

இவ்அறிக்கை 2023 ஒகஸ்ட் 31 ஆம் திகதி பணிப்பாளர்களினால் அங்கீகரிக்கப்பட்டது.

### முதன்மை நடவடிக்கை

கம்பனியின் முதன்மை நடவடிக்கையானது, இலங்கையில் பெற்றோலிய களஞ்சிய மற்றும் விநியோக நடவடிக்கைகளை வசதிப்படுத்தல் மற்றும் எண்ணெய் முனையங்கள், களஞ்சிய வசதிகள், குழாய்த்தொகுதிகள் மற்றும் பவுசர் தொகுதி ஆகியவற்றை உள்ளடக்குகின்ற இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் களஞ்சிய மற்றும் விநியோக உட்கட்டமைப்பை உரித்தாகக் கொள்ளுதல், தொழிற்படுதல் 2003 ஒக்டோபர் 13ஆம் திகதி வெளியிடப்பட்ட 1310-8 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட அரச வர்த்தமானியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளவாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் களஞ்சியம் மற்றும் கொலொன்னாவை, முத்துராஜவெல மற்றும் நாடு முழுவதிலும் உள்ள மொத்தக் சாலைகள் மற்றும் தொடர்புடைய வசதிகள் மற்றும் முத்துராஜவெல எண்ணெய் நிலையத்திற்கான தனி நிலைய நங்கூர மிதவை, கொழும்பு துறைமுகம் முதல் கொலொன்னாவை நிலையம் வரை மற்றும் வாடிக்கையாளர் சேகரிப்பு எல்லைகள் வரை அவற்றின் கிளைகள், காலி துறைமுகம் தொடக்கம் மாகல்ல வரை மொத்தக் சாலைகள் மற்றும் மேலே குறிப்பீடு செய்யப்பட்ட நிலையங்கள் மொத்தச் சாலைகளிலுள்ள குழாய்த் தொகுதி போன்றன தொடர்பில் பயன்படுத்தவதற்கான உரிமை அத்துடன் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினால் அனுபவிக்கப்படும் குத்தகை உரித்து உரிமையுடன் தாபிக்கப்பட்டுள்ள பொதுப் பயன்பாட்டாளர் வசதியாகும்.

### தொழிற்பாடுகள் மற்றும் நிதி சிறப்புக்கூறுகள் பற்றிய மீளாய்வு

தொழிற்பாடானது (ரூ. 704,084,703) தேறிய தேறிய நட்டத்துடன் ரூ. 9,433,316,086 வருவாயைக் காண்பித்தது.

| விபரங்கள் | 31.12.2022<br>ரூபா. | 31-12-2021<br>ரூபா.<br>(மீளக்குறிப்பிடப்படது) |
|---|---|---|
| புரள்வு | 9,433,316,086 | 14,276,189,292 |
| வரிக்கு முந்திய இலாபம் | (704,084,743) | 1,578,247,372 |
| வரிக்குப் பிந்திய இலாபம/(நட்டம்) | (1,058,696,799) | 1,169,211,614 |

### கூறப்பட்ட மூலதனம்

2022 டிசம்பர் 31ஆம் திகதியில் உள்ளவாறு குறிக்கப்பட்ட மூலதனம் ரூ. 7,500,000,000 ஆகும். பங்குரிமை விநியோகம் பின்வருமாறு:

| | சாதாரண பங்குகள் |
|---|---|
| இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | 500,000,000 |
| இலங்கை இந்தியன் ஒயில் கம்பனி லிமிடெட் | 250,000,000 |

# பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கை

### ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

இவ் ஆண்டின் போது ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றின் அசைவுகள் நிதியியல் கூற்றுக்கான குறிப்பு 10 இல் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

### பங்கிலாபம்

2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த நிதியாண்டிற்காக பணிப்பாளர்கள் பங்கிலாபம் எதனையும் பரிந்துரைக்கவில்லை.

### நிறுவன அன்பளிப்புகள்

ஆண்டின் போது கம்பனி ரூ. 317,000 தொகையை நன்கொடைகள் மற்றும் அனுசரணைக் கொடுப்பனவுகளாக வழங்கியது.

### 2022 டிசம்பர் 31ஆம் திகதியில் உள்ளவாறு

2022 டிசம்பர் 31ஆம் திகதியில் உள்ளவாறு சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் பணிபாளர் சபை பின்வருமாறு:

திரு. மொஹமெட் உவைஸ் மொஹமட்
திரு. எல்.ஈ. சுசந்த சில்வா
திரு. ஈ. ஏ. ரத்னசீல
திரு. மனோஜ் குமார் குப்தா
திரு. அசீம் பர்காவா
திரு. ராஜேஸ் பகாத்
திரு. தர்மதாஸ பண்டிததரத்ன
திரு. டி.ஜி. ரவீந்திர மனோஜ் குமார்

### பணிப்பாளர்களின் வேதனாதிகள்

பணிப்பாளர்களுக்கு கிடைக்கப்பெறுகின்ற வேதனாதிகள் நிதிக்கூற்றக்கான வருமானக் கூற்றில் விபரமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

### நலன்கள் பற்றிய பதிவேடு

கம்பனியானது 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கு அமைவாக நலன்கள் பற்றிய பதிவேடு ஒன்றினைப் பேணுகின்றது. 2017 இன் 07ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 192 (2)ஆம் பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு அனைத்துப் பணிப்பாளர்களும் பிரகடனங்களை மேற்கொண்டுள்ளனர். தொடர்புடைய பதிவுகள் மீளாய்விற்கு உட்படுகின்ற ஆண்டின் போது நலன்கள் பற்றிய பதிவேட்டில் மேற்கொள்ளப்பட்டன.

### நியதிச்சட்ட கொடுப்பனவுகள்

பணிப்பாளர்கள் அவர்களது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் அரசாங்கத்துடன் தொடர்புடைய மற்றும் ஊழியர்களுக்கான அனைத்து நியதிச்சட்ட கொடுப்பனவுகளுக்கும் உரிய திகதியில் தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளன. அல்லது கம்பனியின் ஏடுகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என திருப்தியடைகின்றனர்.

### தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு

வியாபார தொழிற்பாடுகளை தொடர்வதற்கு கம்பனி போதிய வளங்களைக் கொண்டுள்ளது என பணிப்பாளர்கள் நம்புகின்றனர். அதற்கமைய நிதி கூற்றுகளை தயாரிக்கையில் தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவினை பின்பற்றுவது பொருத்தமானது என பணிப்பாளர்கள் கருதுகின்றனர்.

### ஐந்தொகைக்கு பிந்திய நிகழ்வுகள்

நிதியியல் கூற்றுக்கான குறிப்பு இல. 30 இல் வெளிப்படுத்தப்பட்டவை தவிர பணிப்பாளர்கள் சபையினால் தீர்மானிக்கப்பட வேண்டிய சரிப்படுத்தல்களை வேண்டுகின்ற கம்பனி மீதான ஏதேனும் முக்கிய தாக்கத்தை கொண்டிருக்கக்கூடிய ஐந்தொகை திகதிக்கு பின்னர் நிகழ்ந்துள்ள முக்கிய நிகழ்வுகள் ஏதும் காணப்படவில்லை.

### கணக்காய்வாளர்கள்

அரசியலமைப்பின் 19ஆவது திருத்த நியதிகளுக்கு அமைய கம்பனியின் கணக்காய்வாளராக பணிப்பாளர்களாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினை அல்லது அவர் பெயர் குறிப்பிட்டவரை நியமிப்பதற்கு கம்பனி வேண்டப்பட்டுள்ளது.

31 டிசம்பர் 2021ஆம் ஆண்டு முடிவடைந்த நிதியாண்டுக்கான கணக்காய்வு தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டது. கணக்காய்வாளருக்கு செலுத்தப்பட்ட கட்டணங்கள் நிதியியல் கூற்றுக்களுக்கான விபரிக்கப்பட்ட வருமானக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

பணிப்பாளர்கள் அறிந்தவரையில் மேலே வெளியிடப்பட்டவை தவிர கணக்காய்வாளர்கள் கம்பனியுடன் ஏதேனும் உறவினை (கணக்காய்வாளர் ஒருவராகத் தவிர) கொண்டிருக்கவில்லை. கணக்காய்வாளர்கள் கம்பனியில் அல்லது அதன் குழுமக் கம்பனிகளில் ஏதேனும் நலனையும் கொண்டிருக்கவில்லை. இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் ஒழுக்கநெறிக் கோவைகளுக்கு அமைவாக அவர்கள் சுயாதீனமானவர்கள் என்பதை உறுதிசெய்கின்றனர்.

### கம்பனியின் வருடாந்த பொதுக்கூட்டம்

கம்பனியின் வருடாந்த பொதுக்கூட்டம் 2023 செம்டம்பர் 11 பி.ப 3 மணிக்கு கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தில் இடம்பெறும்.

பணிப்பாளர் சபை சார்பாக

உவைஸ் மொஹமட்
பணிப்பாளர்

தலைவர்

பணிப்பாளர் சபையின் கட்டளைக்கு அமைவாக

எக்கவுன்டிங் சிஸ்டம்ஸ் செக்கட்டேரியல் சேர்விஸஸ் (பிறைவட்) லிமிடெட்
**கம்பனி செயலாளர்கள்**

# கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அறிக்கை

### உள்ளமைப்பு

இலங்கை பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல் லிமிடெட் நிறுவனத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு, பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்ட சுயாதீன நிறைவேற்று தரமற்ற பணிப்பாளர்களைக் கொண்ட 03 அங்கத்தவர்களைக் கொண்டு அமைந்திருந்தது.

- திரு.ஈ.ஏ ரத்னசீல - தலைவர்
- திரு. புத்திக மதிஹஹேவா (2022.05.19 வரை மாத்திரம் வரை பணியாற்றனார்) - அங்கத்தவர்
- திரு.அசீம் பர்கவா - அங்கத்தவர்

அரசாங்க வர்த்தக தொழில் முயற்சிகளில் கணக்காய்வு குழுக்களை நடாத்துவது தொடர்பில் வெளியிடப்பட்ட திறைசேரி சுற்றறிக்கைகளில் எடுத்துரைக்கப்பட்ட பொறுப்புகள், அதிகாரங்கள் மற்றும் குறித்துரைத்த கடமைகளின் நோக்கெல்லையினை உள்ளடக்கி அதேபோன்று பணிப்பாளர் சபையினால் குறித்தொதுக்கப்பட்ட விடயங்களை உள்ளடக்கி கணக்காய்வுக் குழுவின் சாசனம் தயாரிக்கப்பட்டுள்ளது.

### கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் பணிகள்

குழு சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் நிதியியல் அறிக்கையிடல் செயன்முறை உள்ளக கணக்காய்வு செயன்முறை, உள்ளக கட்டுப்பாடுகள் முறைமை என்பவற்றை மேற்பார்வை செய்வதுடன் கம்பனியின் தொழிற்பாடுகள் மீதான சாத்தியமான தாக்கத்தினை புரிந்துகொள்வதற்கும் இதனூடாக நிதியியல் கூற்றுக்களில் தாக்கத்தினை புரிந்துகொள்வதற்கும் வெளிவாரி கணக்காய்வாளர்கள் மற்றும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு அத்துடன் அண்மைய தொழில்சார் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அறிவுறுத்தல்கள் மூலம் எழுப்பப்படும் முக்கிய கணக்கீட்டு மற்றும் அறிக்கையிடல் பிரச்சினைகளை மீளாய்வு செய்கின்றது. இதற்கு புறம்பாக, குழுவானது கம்பனி ஆட்பட்டுள்ள இடர் இடரினை தணிப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் செயற்திறனை மீளாய்வு செய்கின்றது.

### உள்ளக கணக்காய்வுகள்

சொத்துக்கள் பாதுகாக்கப்படுகின்றன என்றும் நிதியியல் கூற்றுக்களை தயாரித்து வெளிப்படுத்துவதில் நிதியியல் அறிக்கையிடல் முறைமை நம்பியிருக்கக்கூடியது என்றும் பணிப்பாளர்களுக்கு நியாயமான உத்தரவாதத்தை வழங்குகின்ற வகையில் வடிவமைக்கப்பட்ட கணக்கீட்டு முறைமையையும் வினைத்திறனான நிதியியல் கட்டுப்பாடுகளையும் மதிப்பிடுவதற்கு உள்ளகக் கணக்காய்வுச் செயன்முறையின் நோக்கெல்லை மற்றும் உள்ளடக்கத்தை குழு மீளாய்வு செய்தது. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு கம்பனியினுள் நிறுவப்பட்டுள்ளது. கணக்காய்வு விதப்புரைகள் உரிய முறையில் அமுல்படுத்தப்படுகின்றது என்பதை உறுதிசெய்வதற்கு பின்தொடர் நடவடிக்கை மீளாய்வுகள் கால முறையாக திட்டமிடப்படுகின்றன.

இடர்நேர்வு அடிப்படையிலான உள்ளக கணக்காய்வானது உள்ளக கணக்காய்வு நோக்கெல்லையினை விரிவுபடுத்துவதற்காக 2018 இல் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட அணுகுமுறையாகும். இடர்நேர்வுத் தரப்படுத்லானது உடனடி தீர்வு நடவடிக்கைகளுக்காக அத்தகைய பிரச்சினைகள் மீது மிகுந்த கவனத்தை முகாமைத்துவத்திற்கு வழங்குகின்றது. உள்ளகக் கணக்காய்வின் நோக்கெல்லை உள்ளகக் கணக்காய்வு சாசனத்தால் நிர்வகிக்கப்படுகிறது.

### நியதிச்சட்ட கணக்காய்வுகள்

2018 இன தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரகாரம் கணக்காய்வின் தன்மை, அணுகுமுறை மற்றும் நோக்கெல்லை ஆகியவற்றை மீளாய்வு செய்வதற்கு இலங்கையின் தேசிய கணக்காய்வு அலுவலகமான நியதிச்சட்ட கணக்காய்வாளர்களுடன் குழு ஆலோசிக்கிறது. எழுப்பப்படும் பிரச்சினைகளுக்கு பதிலிறுத்துவதில் முகாமைத்துவத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றியும் செயற்பாட்டில் உள்ள உள்ளக கட்டுப்பாடுகளின் செயல்திறன் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

### கூட்டங்கள்

மீளாய்வுக்கு உட்படுகின்ற ஆண்டின் போது மேலே குறிப்பிட்டவாறு குழுவிற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள பணிகளை

செயலாற்றுவதற்காக 06 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

ஆண்டின் போது கூட்டங்களில் பங்குபற்றிய மற்றும் அவதானிப்பு உறுப்பினர்களின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

| தொடர் இல. | திகதி | குழு உறுப்பினர் எண்ணிக்கை | பங்குபற்றிய உறுப்பினர்கள் | உறுப்பினர்களின் பெயர் |
|---|---|---|---|---|
| 01. | 21.01.2022 | 03 | 03 | திரு. ஈ.ஏ.ரத்னசீல<br>திரு. புத்திக மதிஹஹேவா<br>திரு. அசீம் பர்காவா<br>திரு. டி.ஜி.ஏ.எஸ் அனுலசிறி (அவதானிப்பாளர்)<br>திரு. டி.பி.எஸ்.ஜே. குமார (அவதானிப்பாளர்) |
| 02. | 22.02.2022 | 03 | 03 | திரு. ஈ.ஏ.ரத்னசீல<br>திரு. புத்திக மதிஹஹேவா<br>திரு. அசீம் பர்காவா<br>திரு. டீ.ஜி.ஏ.எஸ் அனுலசிறி (அவதானிப்பாளர்)<br>திரு. டி.பி.எஸ் ஜே. குமார (அவதானிப்பாளர்) |
| 03. | 19.05.2022 | 03 | 03 | திரு. ஈ.ஏ.ரத்னசீல<br>திரு. புத்திக மதிஹஹேவா<br>திரு. அசீம் பர்காவா<br>திரு. டி.ஜி.ஏ.எஸ் அனுலசிறி (அவதானிப்பாளர்)<br>திரு. டி.பி.எஸ்.ஜே. குமார (அவதானிப்பாளர்) |
| 04. | 25.08.2022 | 03 | 02 | திரு. ஈ.ஏ.ரத்னசீல<br>திரு. அசீம் பர்காவா<br>திரு. டி.ஜி.ஏ.எஸ் அனுலசிறி (அவதானிப்பாளர்)<br>திரு. டி.பி.எஸ்.ஜே. குமார (அவதானிப்பாளர்) |
| 05. | 12.10.2022 | 03 | 02 | திரு. ஈ.ஏ.ரத்னசீல<br>திரு. அசீம் பர்காவா<br>திரு. டி.ஜி.ஏ.எஸ் அனுலசிறி (அவதானிப்பாளர்)<br>திரு. டி.பி.எஸ்.ஜே. குமார (அவதானிப்பாளர்) |
| 06. | 28.12.2022 | 03 | 02 | திரு. ஈ.ஏ.ரத்னசீல<br>திரு. அசீம் பர்காவா<br>திரு. டி.ஜி.ஏ.எஸ் அனுலசிறி (அவதானிப்பாளர்)<br>திரு. டி.பி.எஸ்.ஜே. குமார (அவதானிப்பாளர்) |

# கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அறிக்கை

### கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு வகிபாகம்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவானது உபாயமார்க்க பிரச்சினைகள் மீது பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்காக பணிப்பாளர் சபைக்கு பல தீர்மானங்களையும் விதப்புரைகளையும் வழங்கியது.

- முகாமைத்துவம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி மற்றும் உள்ளக கணக்காய்வாளர்களுடன் இணைந்து உள்ளக கணக்காய்வு கட்டுப்பாட்டு முறைமையினை மீளாய்வு செய்தல்.
- வெளிப்படைத்தன்மை, புரிந்துகொள்ளல் மற்றும் நம்பகத்தன்மை ஆகியவற்றை உறுதிசெய்வதன் மூலம் நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் நியாயமான எடுத்துரைப்பினை உறுதி செய்வதற்கு நிதியியல் அறிக்கையினை மேற்பார்வை செய்தல்.
- நட்டங்களை உருவாக்கும் அலகுகளுக்கு பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்காக விதப்புரைகளை முன்மொழிவதற்காக ஏற்பட்ட நட்டங்களுக்கான காரணங்கள் மற்றும் தாக்கங்களை அடையாளம் காணுதல் மற்றும் விரிவான பகுப்பாய்வுகளை மேற்கொள்ளுதல் மற்றும் ஆய்வுசெய்தல்.
- வருடாந்த உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம், முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் மற்றும் செயற்பாட்டு திட்டத்தை மீளாய்வு செய்தல்.
- உயர் மட்டத்தின் தொனியிலிருந்து வெளிக்கொணருகின்ற வலுவான மற்றும் செயற்திறன் மிக்க உள்ளக கட்டுப்பாடுகளுக்காக நிறுவனம் முழுவதும் கடமைப்பொறுப்பொன்றினை உருவாக்குதல்.
- சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள், ஒழுக்கநெறிகள், ஆர்வமுரண்பாடு, துர்நடத்தை மற்றும் மோசடி விசாரணைகள் போன்றவற்றுடனான இணங்குவித்தல் தொடர்பில் நிறுவனக்கொள்கைகளை மீளாய்வு செய்தல்.
- நிலமைகள், முன்னேற்றங்கள், புதிய அபிவிருத்திகள், பிரச்சினை மிக்க விடயப் பரப்புகள் தொடர்பில் சிரேஸ்ட முகாமைத்துவத்துடன் தொடர்ச்சியான தொடர்பினை ஏற்படுத்துதல்.

### நிறுவனசார் விதைத்திறனையும் செயல்திறனையும் மேம்படுத்துவதற்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் பரிந்துரைகள்

- எரிபொருள் விரயத்தையும் வேறு முறைகேடுகளையும் கட்டுப்படத்தவதற்கான குறிக்கோளுடன் சிபெஸ்டேலி நிறுவனத்தின் பவுசர் வாகனத் தொகுதிக்கு GPS நோக்குதல் முறைமையினை அறிமுகப்படுத்தல் - ஏறத்தாழ ஆண்டுக்கு ரூ. 225 மில்லியன் மீதப்படுத்தல்.
- மோசடி இடர்நேர்வைத் தணிப்பதற்கு புதிய கொடுப்பனவு முறைமையை அறிமுகப்படுத்தல்.
- ஆளுகைச் செயன்துறையின் வினைத்திறனை மேம்படுத்தும் பொருட்டு, இடர்நேர்வுக் குழுவையும் இடர்நேர்வு அலுவரின் வகிபாகத்தையும் அறிமுகப்படுத்தவதற்கு குழு பரிந்துரைத்தது.
- ஐந்தொகையில் நிதியியல் தொகைகளின் சீர்மதிப்புப் பெறுமதியை எடுத்துக்காட்டுவதற்கு கம்பனியின் நிலையனா சொத்துக்களை மீள்விலைமதிப்பீடுசெய்வதற்கு பரிந்துரைத்தது.

### முடிவுரை

நிதியியல் கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (SLFRS/ LKAS) அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளது. நிதியியல் கூற்றுகள் வரலாற்று ஆகுசெலவு மாற்றீட்டின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளது. கணக்காய்வுக் குழு, கம்பனியின் விவகாரங்கள் அதன் கொள்கைகளுக்கு அமைவாக முகாமைத்துவம் செய்யப்பட்டுள்ளதுடன் அதனூடாக கம்பனியின் சொத்துக்கள் உரிய முறையில் கணக்கு வைக்கப்பட்டு போதிய பாதுகாப்பளிப்பதற்கு கம்பனியின் கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் உள்ளக கட்டுப்பாடு போதியளவான உத்தரவாதத்தை வழங்கியுள்ளது என்பது தொடர்பாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு திருப்தியடைகின்றது.



ஈ.ஏ. ரத்னசீல
தலைவர்
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

# நிதி
# அறிக்கைகள்



ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. } ENR/C/CPTSL/01/22/01    ඔබේ අංකය / உமது இல. / Your No. }    දිනය / திகதி / Date } 16 August 2023

தலைவர்

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடெட்

**2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் 2022 திசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடெடின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1.(அ) முனைப்பலியுள்ள அபிப்பிராயம்

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினலஸ் லிமிடெடின் (கம்பனி) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

எனது அபிப்பிராயத்தின் பிரகாரம், எனது அறிக்கையின் முனைப்பலியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விவரிக்கப்பட்ட விடயங்களுக்கான விளைவுகள் தவிர, இணைந்துள்ள நிதிக்கூற்றுகள், 2022 டிசம்பர் 31 அன்று உள்ளவாறான கம்பனியின் நிதியியல் நிலைமை மற்றும் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக அப்போது முடிவுற்ற ஆண்டுக்கான அதன் நிதியியல் செயலாற்றும் மற்றும் அதன் காசுப்பாய்ச்சல் பற்றிய உண்மையான மற்றும் நியாயமான நோக்கொன்றினைத் தருகின்றன.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව   இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.   No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34   +94 11 2 88 72 23   ag@auditorgeneral.gov.lk   www.naosl.gov.lk

### 1.2 விடயங்கள் மீதான அழுத்தம்

வருமான வரி மற்றும் உழைக்கும் போது செலத்தும் வரி என்பவற்றின் மொத்தமாக ரூ. 791 மில்லியன் தொகையுடைய நீண்டகாலம் செலுத்தவேண்டியதாகவிருந்து வருகின்ற நிலவைகளை விபரிக்கின்ற கம்பனிக்கு உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் எழுப்பப்பட்ட நிச்சயமின்மையை மதிப்பீடு தொடர்பில் விபரிக்கின்ற நிதியியல் கூற்றகளுக்கான 20.1 (ஆ) குறிப்பிற்கு நான் கவனத்தை ஈர்க்கின்றேன். இவ் விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயம் முனைப்பலியற்றதாகும்.

### 1.3 முனைப்பலியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

அ. இ.க.நி 12- வருமான வரிகள் இன் 34 ம் பந்தியின் நியதிகளுக்கு அமைவாக மீளாய்வுக்குட்படுகின்ற ஆண்டுக்காக ரூ. 915.3 பில்லியன் கொண்ட பயன்படுத்தப்படாத வரி இழப்பு தொடர்பில் ரூ. 274.7 பில்லியன் கொண்ட பிற்போடப்பட்ட வரிச்சொத்தை கம்பனி இனங்கண்டிருக்கவில்லை.

ஆ. கம்பனியின் நிதியில் கூற்றுகளின் பிரகாரம் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திடமிருந்து கிடைக்கப்பெறத்தக்க தொகை ரூ.8,000.3 மில்லியனாக இருந்தது. எனினும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் உறுதிப்படுத்தப்பட்ட நிலவை ரூ.7,458 மில்லியனவாகவிருந்தது. அதற்கமைய, இரு நிலவைகளுக்குமிடையில் ரூ. 542.3 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன் ரூ. 110.2 மில்லியன் கொண்ட நீண்ட காலம் நிலுவையாக இருக்கின்ற கிடைக்கப்பெறத்தக்க நிலுவை அதில் அவதானிக்கபட்டது.

இ. கம்பனியின் 2022 ஆம் ஆண்டுக்கான நிதியியல் கூற்றுகளுக்களுக்கமைய இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தத்தக்க தொகை ரூ.836.2 மில்லியனாக இருந்தது. எனினும், இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் நிதியியல் கூற்றுகளில் சிபெஸ்டேலி இடமிருந்து கிடைக்கப்பெறத்தக்க தொகை ரூ1,247 பில்லியனாகும். அதற்கமைய, ரூ 410.8 மில்லியன் கொண்ட இணக்கம் காணப்படாத வேறுபாடு இவ்விரண்டு நிலுவைகளுக்குமிடையில் அவதானிக்கப்பட்டது.

ஈ. இ.க.நி 01 இன் 32 ஆம் பந்திக்கமைய நிறுவனமொன்று சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை எதிரீடு செய்தலாகாது. எனினும் ஏனைய கிடைக்கப் பெறத்தக்கவைகளுக்கெதிராக கம்பனி ரூ.3 மில்லியன் தொகையுடைய ஏனைய கிடைக்கப்பெறத்தக்க தொகைகளிலுள்ள 03 வரவு மீதிகளையும் நிதியியல் கூற்றுகளில் ஏனைய செலுத்தத்தக்கவைகளுக்கெதிராக ரூ.111.3 மில்லியன் தொகையுடைய ஏனைய செலுத்தத்தக்க தொகைகளிலுள்ள ஐம்பது பற்று மீதிகளையும் மீளாய்வுக்குட்படுகின்ற ஆண்டுக்காக எதிரீடு செய்திருந்தது.

உ. மீளாய்வுக்குட்படுகின்ற ஆண்டின் இறுதியிலுள்ளவாறு ரூ 97.3 மில்லியன் தொகையுடைய ஏனைய கிடைக்கப்பெறத்தக்க நிலுவைகள் (தொடர்புடைய தரப்பினர்கள் நீங்கலாக) காணப்பட்டன. எனினும், 12 ஏனைய கிடைக்கப் பெறத்தக்க கணக்குகள் தொடர்பில் ரூ7.6 மில்லியன் தொகை 5 ஆண்டுகளுக்கு மேல் அறவிடப்படாது இருந்தது.

ஊ. அத்தகைய சொத்துக்களின் பயன்பாடுமிக்க பொருளாதார ஆயுட்காலத்தினை மீள மதிப்பிடாது கம்பனியினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற 24,175 பொருட்களை உள்ளடக்குகின்ற முழுமையாகத் தேய்மானம்செய்யப்பட்ட சொத்துக்கள் ரூ 8,391.6 மில்லியனாக பெறுமதிமதிப்பீடு செய்யப்பட்டதுடன் இகநி 16 இன் 51ஆம் பந்திக்கு முரணாக அவை கணக்கிடப்பட்டிருந்தது. மேலும், 2003 இல் கம்பனி

# கணக்காய்வு அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

தொடங்கப்பட்டதிலிருந்து அதன் சொத்துக்களை கம்பனி மீள்விலை மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லையென்பதுடன் இந்நோக்கத்திற்காக முறையான மீள்விலை மதிப்பீட்டுக் கொள்கை உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

எ. ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்களின் 36.8 மில்லியன் பெறுமதியுடைய தொகை 2022 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு அச்சொத்துக்களின் நிர்மாண நடவடிக்கைகள் நிறைவுசெய்யப்பட்டு பயன்பாட்டிற்காக கிடைக்கப்பெறுகின்றமைக்கு மத்தியில் முன்னெடுக்கப்படும் பணியாக மீளாய்வுக்குட்படுகின்ற நிதியியல் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அத்தகைய சொத்துக்களின் பெறுமானத்தேய்வு இ.க.நி 16இன் 55 ஆம் பந்திக்கமைவாக தொடங்கப்பட்டிருக்கவிலலை.

ஏ. முன்னைய ஆண்டுடன் தொடர்புடைய ரூ 4.1 மில்லியன் தொகையைக் கொண்ட எரிபொருள் தாங்கிகளின் கையுதிர்த்தல் இலாபம் மீளாய்வுக்குட்படுகின்ற ஆண்டில் தவறாக இனங்காணப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டின் ஒப்பீட்டு மீதிகளில் தொழிற்பாட்டுச் செலவு மற்றும் சில்லறை கடன் கொடுநர்களை மிகைத்துக் குறிப்பிடுகின்ற விதத்தில் தவறான பதிவேட்டுப் பதிவுகள் உருவாக்கப்பட்டிருந்தன. மேலும், மீளாய்வுக்குட்படுகின்ற ஆண்டுகான முதலீட்டு காசுப் பாய்ச்சல்கள் அதே தொகையினால் மிகைத்துக் கூறப்பட்டிருந்தன.

ஐ. 2021 ஒப்பீட்டு தகவல்களை மீளக் குறிப்பிடுவதன் மூலம் ரூ. 12.8 மில்லியன் தொகையுடைய 2021ம் ஆண்டுக்கான பதிவு செய்யப்படாத அதன் சொந்த எரிபொருள் நுகர்வினை கம்பனி இனங்கண்டிருந்தது. எனினும் நேரடி செலவுகளை மீளக் குறிப்பிடுவதற்கு பதிலாக கம்பனி ஏனைய தொழிற்படுத்தல் செலவுகளை தவறாக மீளக் குறிப்பிட்டிருந்தது. அதற்கமைய 2021ம் ஆண்டுக்கான மொத்த இலாபம் அத் தொகையினால் மிகைத்துக் கூறப்பட்டிருந்தது.

ஒ. இ.க.நி 01 இன் 32 ஆம் பந்திக்கமைவாக நியமம் ஒன்றினால் வேண்டப்பட்டால் அல்லது அனுமதிக்கப்பட்டாலன்றி நிறுவனமொன்று வருமானம் மற்றும் செலவுகளை எதிரீடு செய்தலாகாது. எனினும், கம்பனியானது மீளாய்வுக்குட்படுகின்ற ஆண்டுக்காக அனைத்தையும் உள்ளடக்கிய வருமான கூற்றில் ஏனைய வருமானமாக எடுத்துரைப்பதற்கு பதிலாக நிருவாகச் செலவுகளில் இருந்து ரூ. 9.5 மில்லியன் தொகையுடைய அலுவரலர் கடன் சேதஇழப்பு இலாபத்தினை கம்பனி கழித்திருந்தது.

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக எனது கணக்காய்வை நான் நடாத்தினேன். அந்நியமனங்களின் கீழ் எனது பொறுப்புகள், எனது அறிக்கையின் நிதிக்கூற்றுகள் பிரிவின் கணக்காய்விற்கான கணக்காய்னாளரின் பொறுப்புகளில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. நான் பெற்றுக்கொண்ட கணக்காய்வுச் சான்றானது எனது முனைப்பலியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதுமானதும், பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

**1.3 கம்பனியின் 2022 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்**

கம்பனியின் 2022 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட தகவல்களை ஏனைய தகவல்கள் கொண்டுள்ளன ஆனால் நிதிக் கூற்றுகளையும் அதன் மீதான எனது கணக்காய்வாளரின் அறிக்கையையும் அது உள்ளடக்கவில்லை. இது

கணக்காய்வாளரின் இவ்வறிக்கையின் திகதியின் பின்னர் எனக்கு கிடைக்கப்பெறச் செய்யப்பட்ட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்புடையதாகும்.

நிதிக் கூற்றுகள் மீதான எனது அபிப்பிராயம் வேறு தகவல்களை உள்ளடக்குவதுடன் அதன் மீதான உத்தரவாத தீர்மானத்தினை எவ்வடிவிலும் நான் வெளிப்படுத்துவதில்லை.

நிதிக் கூற்றுகள் பற்றிய எனது கணக்காய்வு தொடர்பில் எனது பொறுப்பானது ஏனைய தகவல்கள் கிடைக்கப்பெறுகின்றதாகின்ற போது மேலே இனங்காணப்பட்ட வேறு தகவல்களை வாசிப்பதாகும். என்பதுடன் அவ்வாறு செய்கையில் ஏனைய தகவல்கள் நிதியியல் கூற்றுடன் அல்லது கணக்காய்வில் பெற்றுக்கொண்ட எனது அறிவுடன் முக்கியமாக முரண்படுகின்றதா அல்லது முக்கிய பிறழ் கூற்றாக உள்ளதாக அல்லது வேறு வகையில் தவறாக குறிப்பிடப்பட்டதாக தென்படுகின்றதா என்பதை பரிசீலிப்பதாகும்.

கம்பனியின் 2022 ஆண்டறிக்கையினை நான் வாசிக்கின்ற போது அதில் முக்கிய பிறழ் கூற்றுகள் காணப்படுகின்றன என நான் தீர்மானிப்பதாயின், சரிப்படுத்தலுக்கான ஆளுகையுடன் பொறுப்பானவர்களுக்கு அவ்விடயத்தினை அறிவிப்பதற்கு வேண்டப்படுகின்றேன். மேலும், முக்கிய சரிப்படுத்தப்படாத தவறுக் கூற்றுகள் காணப்படுமாயின், காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படவுள்ள அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளை அநுசரித்து பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கையில் அவை உள்ளடக்கப்படும்.

### 1.5 முகாமைத்துவத்தினதும் நிதி கூற்றுக்களின் நிர்வாகத்துக்கு பொறுப்பளிக்கப்பட்டோரினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கிட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனி கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாகவுள்ளது.

கம்பனி நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ்ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது**.**

2018 ஆம் ஆண்டின 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) இன் பிரகாரம் கம்பனியானது, கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு கம்பனி அதன் அனைத்து

# கணக்காய்வு அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

வருமானம், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளுக்கான முறையான ஏடுகளையும் பதிவுகளையும் பராமரித்தல் வேண்டும்.

**1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாகக் காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதியியல் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாகக் கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வு முழுவதன் போதும் நான் தொழில்சார் நிபுணத்துவ கருதுகோள்களையும் தொழில்சார் நிபுணத்துவ ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதியியல் கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான இடர்நேர்வுகளை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்நேர்வுகளை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான விளக்கத்தைப் பெற்றுக்கொள்வது சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்றிறன் மீது அபிப்பிராயமொன்றைத் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் நாணயச் சபையால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்தவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனியிடமுள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாகக் காணப்படாதிருக்கையில், நிதியியல் கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்குக் காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதியியல் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதியியல் கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

ஏனைய விடயங்களிடையே, என்னுடைய கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்பட்ட உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏதாவது முக்கிய குறைபாடுகள் உள்ளடங்கலாக முக்கியமான கணக்காய்வு காண்புகள் தொடர்பாக ஆளுகைக்குப் பொறுப்பானவர்களுக்கு நான் தெரிவிக்கின்றேன்.

**2. ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் ரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை**

2.1 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டமும் 2007 இன் 7 ஆம் இலக்க பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன:

2.1.1 எனது அறிக்கையின் முனைப்பலியுள்ள அபிப்பிராயப் பிரிவில் விவரிக்கப்பட்ட விடயங்களுக்காக தாக்கங்கள் தவிர, கணக்காய்விற்கு அவசிமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 163(2) ஆம் பிரிவு மற்றும் 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவு என்பவற்றின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கம்பனியினால் முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் வைத்திருக்கப்படுகின்றன.

2.1.2 சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு அமைய கடந்த வருடத்துடன் ஒத்ததாகக் காணப்படுகின்றது.

# கணக்காய்வு அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

2.1.3 இவ் அறிக்கையின் 1.3(ஆ), 1.3 (இ), 1.3(ஊ), ஆம் பந்திகளின் விபரிக்கப்பட்ட விடயங்கள் தவிர்த்து, நிதிக் கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு அமைவாக கடந்த ஆண்டுகளின் என்னால் செய்யப்பட்ட அனைத்து பரிந்துரைகளையும் உள்ளடக்கியுள்ளது.

2.2 மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டடிருந்தன. ஆனால் வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

2.2.1 கம்பனியின் ஆளுகைக் குழுவின் எந்தவொரு அங்கத்தவரும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு அமைய வியாபாரத்தின் சாதாரன காரணங்களினல் கம்பனியால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களில் நேரடியான அல்லது நேரடியற்ற ஆர்வம் காணப்படுகின்றதா எனக் குறிப்பிடுதல்.

2.2.2 பின்வருவனவற்றைத் தவிர்த்து 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (உ) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு அமைய கம்பனியானது ஏதேனும் பிரயோகிக்கத்தக்க எழுத்து மூல சட்டங்கள், கம்பனியின் ஆளுகைக் குழுவினால் வழங்கப்பட்ட பொது மற்றும் விசேட வழகாட்டல்களுடன் இணங்கியொழுகவில்லை என குறிப்பிடுதல்.

| சட்டம் / பணிப்புரைக்கான தொடர் | விபரணம் |
|---|---|
| அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிக்களுக்கான நிறுவன ஆளுகை மீதான வழிகாட்டல்கள்<br>வழிகாட்டல் 11.3 | நடவடிக்கை திட்டம் வருடாந்த வரவுசெலவு திட்டம் என்பவற்றுடன் ஒன்று சேர்த்து உறுதிப்படுத்தப்பட்ட உபாயத்திட்டம் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு கம்பனியினால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை |

2.2.3 பின்வருவனவை தவிர 2018 ஆம் ஆண்டில் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாட்டிற்கு அமைவாக அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளுக்கு அமைவாக கம்பனி செயலாற்றியுள்ளது என்று குறிப்பிடுதல்.

அ. முன்னைய அறிக்கைகளில் வலியுறுத்தப்பட்டவாறு இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், எல்ஐஓசி மற்றும் சீபெஸ்டேலி நிறுவனங்கள் மத்தியில் பொதுவான பயன்பாட்டாளர் வசதிக்கான பங்குடமையாளர் உடன்படிக்கையும் பகிரப்பட்ட விற்பனை கொள்வனவு உடன்படிக்கையும் 2008 டிசம்பர் 31 அன்று காலாவதியடைந்திருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. எனினும், முறையான மதிப்பீடு மற்றும் சபை அனுமதி வாயிலாக தொடர்புடைய தரப்பினர்களுடன் புதிய உடன்படிக்கையினை கைச்சாத்திடுவதற்கு அல்லது காலப்பகுதியினை நீடிப்பதற்கான உடன்படிக்கையை மேற்கொள்வதற்கு கம்பனி நடவடிக்கை எதனையும் எடுத்திருக்கவில்லை. இதன் விளைவாக, அனைத்து தொடர்புடைய தரப்பினர்களினதும் சம்மதத்துடன் அடுக்கு

அறவீடுகள் உள்ளடங்கலாக செயன்முறைப்படுத்தல் கட்டணங்கள், போக்குவரத்து கட்டணங்கள் என்பவற்றை நிர்ணயிக்கும் நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும் விலையிடல் சூத்திரம் 2011 இற்கு பின்னர் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

ஆ. உள்ளக கட்டுப்பாட்டு பலவீனத்தை தடுப்பதற்கும் கண்டுபிடிப்பதற்கும் அல்லது கம்பனியின் அனைத்து தொழிற்பாடுகளுக்கும் நிகழக்கூடிய ஏதேனும் சாத்தியமான பிழைகளை அல்லது முறைகேடுகளை தடுப்பதற்கும், கண்டுபிடிப்பதற்கும் செயற்பாட்டில் இருந்த கட்டுப்பாடுகளை காண்பிக்கின்ற எழுத்திலான நடைமுறைக் கையேடு வடிவமைக்கப்பட்டு பிரயோகிக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. முகாமைத்துவம் குறித்துரைக்கப்பட்ட/வடிவமைக்கப்பட்ட செயன்முறை விதிவிலக்குகள் இன்றி தொழிற்பாட்டில் இருந்தன என்பதனை உறுதி செய்வதற்கு கம்பனியின் ஒவ்வொரு செயன்முறைக்காகவும் கட்டுப்பாடுகளின் பதிவுகளை பேணுவதற்கு செயற்பாட்டில் வைத்திருப்பது கம்பனிக்கு முக்கியத்துவம் மிக்கதும் நன்மை பயக்கக்கூடியதும் ஆகும். மேலும், நடைமுறைக் கையேடு வடிவமைக்கப்பட்டதுடன் அதன் தொடர்புத் தன்மையினை உறுதிசெய்வதற்கு நியாயமான கால இடைவெளிகளில் அது காலமுறையாக மதிப்பிடப்பட வேண்டும்.

இ. கம்பனியின் பிரதான தொழில், நாடு முழுவதும் பரந்துள்ள அதிகாரமளிக்கப்பட்ட விநியோகஸ்தர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் அவர்கள் விநியோகிப்பதற்கு இரண்டு முக்கிய முனையங்கள் மற்றும் 11 துணைச்சாலைகள் ஊடாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் ஐஓசி நிறுவனங்களுக்கு சொந்தமான எரிபொருள் கையிருப்புகளை அக்கம்பனிகளின் அறிவுறுத்தலுக்கு அமைவாக களஞ்சியப்படுத்துவதாகும்.

பெற்றோலிய உற்பத்திகளை வழங்கல்செய்யும் செயன்முறையில் முக்கிய செயற்பாடுகளான விநியோகத்தர்கள் மற்றும் நுகர்வோரிடம் இருந்து எரிபொருளுக்கான கட்டளைகளை ஏற்றுக்கொள்ளல், கொடுகடன் வரையறைகளை உறுதிசெய்தல் மற்றும் தொடர்புடைய முன்தகைமைகளை உறுதிசெய்தல், விலைப்பட்டியல்களை வழங்குதல், சந்தைப்படுத்தல் நிறுவனங்களால் (இலங்கை பெற்றோலிய கூட்டத்தாபனம்) கையாளப்பட வேண்டிய விநியோகத்தர்களிடம் இருந்து காசு சேகரித்தல் போன்ற பணிகள் கம்பனியினால் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஆகையினால் கம்பனியானது அதன் பெற்றோலிய உற்பத்தி களஞ்சியப்படுத்தல், விநியோகித்தல் என்ற முக்கிய நோக்கெல்லைக்கு வெளியில் ஈடுபட்டது என்பது அவதானிக்கப்பட்டது. மேலும், அத்தகைய செயற்பாடுகள் இலங்கை அரசாங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், எல்ஐஓசி என்பவற்றுக்கு இடையில் கைசாத்திடப்பட்ட 2023 டிசம்பர் 30 ஆம் திகதி இடப்பட்ட பொதுவான பயன்பாட்டாளர் வசதி பகிர்தல் உடமையாளர் உடன்படிக்கையில் உள்ளடக்கப்படவில்லை.

2.2.4 கம்பனியின் மூலவளங்கள் பின்வருவன தவிர 2018 ஆம் ஆண்டின் 19 அம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(ஏ) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு அமைவாக ஏற்புடைய நேரக் கட்டமைப்பினுள்

# கணக்காய்வு அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

மற்றும் சட்டங்களுக்கு இசைவாக சிக்கனமாகவும், வினைத்திறன் மிக்கதாகவும் செயல்திறன் வாயந்ததாகவும் பெற்றுக்கொள்ளப்பட்டு பயன்படுத்தப்படவில்லை என்பதை குறிப்பிடுதல்.

அ. கம்பனியானது 2018 இல் கொலன்னாவ நிரப்பு நிலையத்தில் 06 அம் வலயத்தில் புதிய பம்பி நிலையத்தினை நிர்மாணிக்க தொடங்கியிருந்தது. தனியொரு நிர்மாண பொதியாக பம்பி நிலையத்தை நிர்மாணிப்பதற்கு பதிலாக கம்பனி, பம்பி நிலைய கட்டடத்தை நிர்மாணித்தல், குழாய் ஆதரவு நிர்மாணம், மின்சார பொருத்துகள், முற்றம் அபிவிருத்தி போன்ற ஐந்து வேறான நிர்மாணங்களாக ஆரம்பத்தில் இப்பணியினை பிரித்து சாதாரன கூடை தொகுதியாக ஆக்கியதுடன் ஐந்து தனியான ஒப்பந்ததாரருக்கு இவ் ஐந்து நிர்மாணங்களையும் கம்பனி வழங்கி இருந்தது. பம்பி நிலைய கட்டடம், மின்சார பொருத்துகள் மற்றும் முற்றம் அபிவிருத்தி என்பவற்றின் நிர்மாண நடவடிக்கைகள் 2019, 2020 ஆண்டு காலப்பகுதியில் நிறைவுசெய்யப்பட்டிருந்தன. எனினும், 2023 மே 31 வரையிலும் குழாய் ஆதரவு நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை மற்றும் பம்பி நிலையத்தை இணைக்கின்ற குழாய் இணைப்பு நிர்மாணத்தின் பெறுகை நடவடிக்கைகள் செய்யப்பட்டிருக்கவில்லை மற்றும் நிலைத்துாண் நிரப்பி மற்றும் தாங்கிப் பண்ணை என்பன தொடங்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. இதன் விளைவாக பம்பி நிலையமானது உத்தேசிக்கப்பட்ட பயன்பாட்டிற்கு நிபந்தனை அல்ல என்பதுடன் ரூ. 115.2 மில்லியன் தொகை மீளாய்வு ஆண்டின் இறுதி அளவில் செலவிடப்பட்டிருந்தமை செயற்பாடற்ற சொத்தாக அது உருவாவதற்கும் காரணமாக இருந்து ஒப்பந்த பொதி ஆக்கபூர்வமற்றது என்பதும் அவதானிக்கப்பட்டது.

ஆ. கொலன்னாவ நிரப்பு நிலையத்தில் 7000 கனமீற்றர் கொள்ளளவுடன் கூடிய இரு களஞ்சியத் தாங்கிகளையும் 15000 கனமீற்றர் கொள்ளளவுடன் ஒரு களஞ்சிய தாங்கியினையும் பெற்று, நிர்மாணித்து தொடங்குவதற்கு கம்பனி உள்நாட்டு கம்பனி ஒன்றுக்கு விலைகோரலை வழங்கி இருந்தது. சீமெந்து, மணல், தொழிலாளர்கள் போன்ற முக்கிய மூலப்பொருட்களை (அடிப்படைகள் தவிர) அனேகமனவற்றை கொள்வனவு செய்வதற்கும் தொழிநுட்ப அலுவலர்களை உள்நாட்டில் ஆட்சேர்க்கும் நிலையில் தெரிவுசெய்யப்பட்ட விலைக்குறிப்பிட்டாளர் இருந்த போதிலும் விலை குறிப்பீட்டாளர் வெளிநாட்டு நாணயத்தில் (ஐக்கிய அமெரிக்க டொலர்) விலைகோரலை சமர்ப்பித்திருந்தார். எனினும், வரிவான விலைக்குறிப்பீட்டு மதிப்பீட்டில் மேற்குறித்த விடயங்களை தொழிநுட்ப மதிப்பீட்டுக்குழு பரிசீலனையில் கொண்டிருந்ததா என்பதனை உறுதிசெய்வதற்கு போதுமான சான்றுகள் இருக்கவில்லை. மேலும் ஒப்பந்ததாரர் ஐக்கிய அமெரிக்க டொலர் நியதிகளில் இடைக்கால விலைப்பட்டியல்களை சமர்பித்து இருந்ததுடன் இடைக்கால விலைப்பட்டியல் கொடுப்பனவு திகதி அன்று நிலவிய செலாவனி வீதத்தில் கம்பனி ரூபாயில் இடைக்கால பட்டியல்களை தீர்ப்பனவு செய்திருந்தது. அதற்கமைய ஐக்கிய அமெரிக்க டெலருக்கு எதிராக ரூபாப் பெறுமதி இறக்கத்தின் மேலதிக செலவினை கம்பனி ஏற்றக்கொள்ள வேண்டி இருந்தது. வெளிநாட்டு செலாவனி இழப்பினை குறைப்பதற்கு விலைக்குறிப்பீட்டு ஆவணத்தை தயாரிப்பதில் பற்றாக்குறை, தொழிநுட்ப மற்றும் நிதியில் நோக்கு இரண்டிலும்

விலைக்குறிப்பீட்டை சமர்ப்பிப்பதற்கான காரணங்களில் ஒன்று ஒப்பந்தம் விலைமாறுபாட்டுக்கு உட்படாமையாகும்.

**2.2 ஏனைய விடயங்கள்**

அ. இலங்கை அரசாங்கம் எல்ஐஓசி என்பவற்றுக்கு இடையிலான 2007 ஜனவரி 5ம் திகதி இடப்பட்ட தீர்பனவு உடன்படிக்கையின் 3 ஆம் பிரிவுக்கு அமைய சீனக்குடா நிரப்பு நிலையத்தில் இருந்து எல்ஐஓசி மூலம் பெற்றோலிய உற்பத்திகளை விநியோகிப்பது நாட்டின் பெற்றோலிய உற்பத்திகள் செயன்முறைப்படுத்தலில் ஐந்து சதவீத உயர்ந்தபட்சத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டிக்க வேண்டும் என்பதுடன் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் பெற்றோலிய விநியோகம் சபுகஸ்கந்த சுத்திகரிப்பு சாலையில் இருந்தான விநியோகங்கள் தவிர 5 சதவீத உயர்ந்தபட்சத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். எனினும், விநியோக செயன்முறையினை கண்காணிப்பதற்கு கம்பனியினால் முறையான முறைமை நிறுவப்பட்டிருக்கவில்லை. ஆகையினால் கம்பனியின் செயன்முறைப்படுத்தல் கட்டடங்களில் இருந்து வருமானம் இலக்கும் அபாயம் காணப்பட்டது.

2019 மே 21 அன்று இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் சீபொஸ்டேலி நிறுவனம் என்பவற்றுக்கு இடையிலான உடன்படிக்கைக்கு அமைவாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் எதிர்கொள்கின்ற கப்பல் தாமத கட்டணங்கள் மற்றும் கசிவு இழப்புகளை சீபொஸ்டேலி லிமிடட் நிறுவனத்திடம் இருந்து அரவிடுவதற்கு ஒப்பந்தத்தில் ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் பரஸ்பர இணக்கமின்றி 2022 இல் சீபொஸ்டேலி நிறுவனத்திடமிருந்து இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மூலம் ரூ. 486.3 மில்லியன் கப்பல் தாமத கட்டணங்களும் ரூ. 115.3 மில்லியன் கசிவு கட்டணமும் அறவிடப்பட்டிருந்தது.

இ. 09 மொத்தச்சாலை காணிகளின் சொத்தான்மை இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு உரித்தளிக்கப்பட்டுள்ளதுடன் கம்பனி இக்காணிகளை குத்தகை அடிப்படையின் கீழ் பயன்படுத்துகின்றது. இக்காணிகளை பயன்படுத்துவதற்கு இலங்கை புகையிரத திணைக்களத்துடனான குத்தகை உடன்படிக்கை 2013 டிசம்பர் அன்று காலாவதியாகி இருந்ததுடன் புதிய உடன்படிக்கைகளில் கைச்சாத்திடவோ அன்றில் ஏற்கனவே உள்ள உடன்படிக்கையினை மீள புதுப்பிக்காது இவ் உடன்படிக்கை காலாவதியின் பின்னரும் கம்பனி இக்காணிகளை தொடர்ந்தும் பயன்படுத்துகின்றது. எனினும், இது தொடர்பில் நிதியில் கூற்றுகளில் கம்பனி தொடர்புடைய வெளிப்படுத்தல்களை செய்திருக்கவில்லை.

ஈ. கம்பனிக்குச் சொந்தமான மற்றும் வாடகைக்கு பெறப்பட்ட பவுசர்களை பயண்படுத்தல். அதற்குச் சொந்தமான மொத்தச் சாலைகளுக்கும் பதிவுசெய்யப்பட்ட விநியோகஸ்தர்களுக்கும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் எல்ஐஓசி வாடிக்கையாளர்களுக்கும் பெற்றோலிய உற்பத்திகளை விநியோகித்தல் கம்னியின் பிரதான தொழிலாகும். இந்நோக்கத்திற்காக 130 கம்பனிக்குச் சொந்தமான பவுசர்களும் 581 வாடகைக்கு பெறப்பட்ட பவுசர்களும் 2022 டிசம்பர்

# கணக்காய்வு அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

இறுதியில் உள்ளவாறு காணப்பட்டன. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

i. 2022 டிசம்பர் மாதத்திற்கான SAP (ERP முறைமை) முறைமையின் வாகன செயலாற்று அறிக்கைக்கு அமைவாக கம்பனியின் கணிசமான எண்ணிக்கையிலான சொந்தமான பவுசர்கள் உச்சமட்ட அளவில் பயன்படுத்தப்பட்டிருந்தது. இம் மாதம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனைக்கு அமைவாக 130 கம்பனிக்குச் சொந்தமான பவுசர்களில் 68 பவுசர்கள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை / மாதகாலப்பகுதியில் ஒரு பயணம் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டதுடன் பயன்படுத்தப்பட்ட பவுசர்களில் 18 பவுசர்கள் மாத காலப்பகுதியில் தனி ஒரு நாளில் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தன.

ii. கம்பனி அதற்குச் சொந்தமான பவுசர்களை உச்ச பயனுள்ள விதத்தில் பயன்படுத்தாதிருந்த போதிலும் சாரதிகள் மற்றும் சுமையாட்களுக்கான சம்பளங்கள், கூலிகள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் அத்துடன் வாகன உரிமம் பெறல் உள்ளடங்கலாக அதன் பவுசர் தொகுதிகளின் பராமரித்தல் போன்ற நிலையான நிருவாகச் செலவுகளின் கணிசமான தொகை கம்பனியினால் செலவிடப்பட்டிருந்தது. இதன் விளைவாக பவுசர் தொகுதிகள் குறைவாக பயன்படுத்தப்பட்டமை காரணமாக கம்பனிக்கு ஏற்பட்ட குறைந்தது நிலையான செலவுகளையாவது மீட்பதற்கு கம்பனி இயலாதிருந்தது.

iii வெளிவாரி போக்குவரத்து சேவை வழங்குனர்களை தெரிவுசெய்கின்ற போது கம்பனி அரசாங்க பெறுகை வழிகாட்டல்களை பின்பற்றி இருக்கவில்லை. அதற்கமைய, வாடகைக்கு பெற்றுக்கொள்ளப்பட்ட பவுசர்களின் பெறுகைச் செயன்முறையின் வெளிப்படைத்தன்மை கணக்காய்வில் சந்தேகத்திற்கிடமானதாக இருந்தது.

iv 2022 டிசம்பர் மாதத்திற்கான வாடகைக்குபெறப்பட்ட பவுசர் செயலாற்றுகை அறிக்கையின் பிரகாரம் பதிவுசெய்யப்பட்ட பவுசர்களில் 182 பவுசர்கள் அல்லது 31 சதவீதம் மாத காலப்பகுதியில் ஏதேனும் பயணம் வழங்கப்பட்டிருக்காத அதேவேளை பதிவுசெய்யப்பட்ட பவுசர்களில் 138 பவுசர்கள் அல்லது 24 சதவீதம் 11 நாட்களுக்கு குறைவாகவே பயணங்கள் வழங்கப்பட்டிருந்தன. எனினும் பதிவுசெய்யப்பட்ட தெரிவுசெய்யப்பட் 55 பவுசர்களில் அல்லது 9.5 சதவீதமானவை 6 மாத காலப்பகுதியில் 24 நாட்களுக்கு பயணங்கள் வழங்கப்பட்டிருந்தவை உள்ளடங்கலாக மாதத்தின் போது 20 நாட்களுக்கும் அதிகமாக பயணங்கள் வழங்கப்பட்டிருந்தன. ஆகையினால் தனியார் பவுசர்களுக்கு பயணங்களை ஒதுக்கீடு செய்யும் அடிப்படை கணக்காய்வில் தெளிவாக இருக்கவில்லை.

உ. கம்பனியின் நிதிக் கூற்றுகளுக்கு அமைவாக மீளாய்வுக்கு உட்படுகின்ற ஆண்டின் இறுதியில் உள்ளவாறு வர்த்தக மற்றும் ஏனைய செலுத்தப்படத்தக்க நிலுவை ரூ. 2,041.2 மில்லியமான இருந்தது. இதில் 182

செலுத்தப்படத்தக்க கணக்குகள் தொடர்பில் ரூ. 24 மில்லியன் கொண்ட தொகை ஐந்து ஆண்டுகளுக்கு மேல் தீர்ப்பனவு செய்யப்படாது காணப்பட்டது.

ஊ. **அலுவலர் கடன்**

கம்பனி அதன் அலுவலர்களுக்கு மோட்டார் வாகன கடன்கள், வீடமைப்பு கடன்கள், இடர் கடன்கள், சிக்கனக் சங்க கடன்கள், விசேட கடன், தொந்தரவுக் கடன், முற்பணங்கள் போன்ற பல எண்ணிக்கையிலான கடன்களை அறிமுகப்படுத்தியுள்ளது. 2022 டிசம்பர் 31 இறுதியில் உள்ளவாறு மொத்த கடன் நிலுவை ரூ. 3,148 மில்லியன் ஆகும். இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

i. கிடைக்கப்பெறுகின்ற தகவல்களுக்கு அமைய அலுவலர்களுக்கு கடன் வசதிகளை வழங்குவதற்கும் அறவிடுவதற்கும் முறையான கொள்கை ஒன்று கம்பனியின் மனிதவளங்கள் திணைக்களத்தினால் நிறுவப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை. ஆகையினால் மீளாய்வுக்கு உட்படுகின்ற ஆண்டி இறுதியில் உள்ளவாறு தவணைதவறிய கடன் நிலுவைகள் ரூ. 32 மில்லியனாக இருந்தன.

ii. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்ட குறிப்புக்களின் பிரகாரம் ஊழிர்களுக்கு பாதகமின்றி மேற்குறித்த பிரச்சினையை தீர்ப்பதற்கு வர்த்த வங்கிக்கு அல்லது நிதி நிறுவனத்திற்கு கடன் திட்டத்தை பெற்றுக்கொள்ளும் முக்கியத்துவம் பற்றி கலந்துரையாடப்பட்டிருந்தது. எனினும் இது தொடர்பில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினால் வழங்கப்பட்ட பரிந்துரைகளுக்கு கம்பனி இன்று வரை முறையான கவனம் செலுத்தியதா என்பதை கணக்காய்வு உறுதி செய்ய முடியாதிருந்தது.

**ஏ. வாகன நிருவாகம்**

i. ஒவ்வொரு வாகனத்திற்கும் வாகன இயக்க அறிக்கையிடல் பயன்படுத்துகின்றமைக்கு பதிலாக கம்பனி நாளாந்த வாகன பயணத்தை அறிக்கையினை பயன்படுத்தி இருந்தது. அதற்கமைய, கோவைக்கு இணைக்கப்பட்டுள்ள பயண அறிக்கைக்கு மாற்றங்களை தவறாக மேற்கொள்வதற்கு மற்றும் தவறாக கையாள்வதற்கும் சாத்தியம் காணப்பட்டது. மேலும் எரிபொருள் நுகர்வு பற்றிய விபரங்கள், எரிபொருள் உட்செலுத்தல், எரிபொருள் சமநிலைப்படுத்தல் மற்றும் வாகனத்தின் இயங்கு நிலை பற்றிய சாரதியின் கருத்துக்கள் என்பன பயண அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் சாரதியின் கடமைக்கு வருதல் மற்றும் கடமை முடித்தல் நேரம் பற்றிய விபரங்களும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் மூலம் கண்காணிக்கப்பட்டிருக்கவில்லை.

ii. வாகனத்தின் எரிபொருள் நுகர்வு கிரமமாக கம்பனியின் வாகன திருத்தல் பிரிவினால் கண்காணிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் வாகன பதிவீடுகள் வாகன பழுபார்த்தல்கள் மற்றும் பராமரித்தல்கள் பதிவுகளை பேணி இருக்கவில்லை. ஆகையினால் வாகன நிருவாகம் மற்றும் மீதான

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

உள்ளக கட்டுப்பாடுகள் எரிபொருள் நுகர்வு பராமரித்தல் கண்காணிப்பு என்பன திருப்திகரமான மட்டத்தில் இருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

ஏ. கம்பனி மீளாய்வுக்கு உட்படுகின்ற காலப்பகுதியில் பொதுச் திறைசேரிக்கான செயலாளரிடம் இருந்து முன்கூட்டியே அனுமதியை பெற்றுக்கொள்ளாது ஒப்பந்த அடிப்படையில் 15 ஆட்களை ஆட்சேர்த்திருந்தது.

டப்லிவ் பீ சி .விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# நிதியியல் நிலைக் கூற்று

2022 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு

| சொத்துக்கள் | குறிப்பு | 2022 ரூ. | 2021 ரூ. மீளக்குறிப்பிடபட்டது |
|---|---|---|---|
| **நடைமுறையற்ற சொத்துக்கள்** | | | |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் | 10 | 16,582,140,151 | 16,516,996,810 |
| குத்தகைச் சொத்துகளை பயன்படுத்துவதற்கான உரிமை | 10.6 | - | 2,408,512 |
| அருவச் சொத்துக்கள் | 11 | 36,898,958 | 66,674,599 |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் | 14.1 | 1,434,856,012 | 1,560,844,565 |
| | | 18,053,895,122 | 18,146,924,485 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| பொருட் பதிவேடு | 12 | 862,523,461 | 682,055,187 |
| வர்த்தகம் மற்றும் ஏனைய வரவுகள் | 13 | 10,596,319,671 | 11,089,317,954 |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் | 14.2 | 1,681,713,979 | 1,757,378,627 |
| கிடைக்கப்பெறத்தக்க வருமான வரி | | 280,560,047 | 66,195,469 |
| காசும் காசுக்கு சமமானவைகளும் | 15 | 2,006,109,225 | 2,256,929,658 |
| | | 15,427,226,383 | 15,851,876,895 |
| **மொத்த சொத்துக்கள்** | | 33,481,121,505 | 33,998,801,381 |
| **பங்குரிமையும் பொறுப்புக்களும்** | | | |
| மூலதனம் மற்றும் ஒதுக்கு | | | |
| குறிக்கப்பட்ட மூலதனம் | 16 | 7,500,000,000 | 7,500,000,000 |
| மூலதன ஒதுக்கு | 16.1 | 979,000,000 | 979,000,000 |
| பிடித்துவைக்கப்பட்ட வருமானம் | | 18,749,877,607 | 19,520,691,240 |
| **மொத்த பங்குரிமை** | | 27,228,877,607 | 27,999,691,240 |
| **நடைமுறையற்ற பொறுப்புக்கள்** | | | |
| வரையறை செய்யப்பட்ட நலக் கடப்பாடு | 17 | 1,283,872,850 | 1,609,324,160 |
| போடப்பட்ட வரிப் பொறுப்புகள் | 8.1 | 2,090,996,061 | 1,609,811,239 |
| பயன்பாட்டு உரிமை குத்தகை பொறுப்பு | | - | - |
| | | 3,374,868,911 | 3,219,135,398 |
| **நடைமுறை பொறுப்புகள்** | | | |
| வர்த்தகம் மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவை | 18 | 2,877,374,987 | 2,066,274,173 |
| பயன்பாட்டு உரிமை குத்தகை பொறுப்பு | | - | 2,665,004 |
| செலுத்த வேண்டிய வருமான வரி | | - | 711,035,566 |
| **மொத்த பொறுப்புகள்** | | 2,877,374,987 | 2,779,974,743 |
| **மொத்த பங்குரிமையும் பொறுப்புகளும்** | | 33,481,121,505 | 33,998,801,381 |

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் இந்நிதியியல் கூற்றுகள் இணங்குகின்றன என சான்றுபடுத்துகின்றேன்.

தலைவர் -நிதி

இந்நிதியில் கூற்றுகளை தயாரித்து எடுத்துரைப்பது பணிப்பாளர் சபையின் பொறுப்புடமையாகும். பணிப்பாளர் சபைக்காக அதன் சார்பில் ஒப்பமிட்டது

பணிப்பாளர் தலைவர் / முகாமைத்துவப் பணிப்பாளர்

08 தொடக்கம் 36 ஆம் பக்கங்கள் மீதுள்ள கணக்கீட்டு கொள்கைகளும் குறிப்புகளும் இந்நிதிக் கூற்றுகளை முழுமையாக்கும் பாகத்தில் ஒன்றாகும்.

2023 பெப்ரவரி 28
கொழும்பு

# அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்று

2022 டிசம்பர் 31 அன்று முடிவுற்ற ஆண்டுக்கானது

| | குறிப்பு | 2022 ரூ. | 2021 ரூ. மீளக்குறிப்பிடபட்டது |
|---|---|---|---|
| வருமானம் | 3 | 9,433,316,086 | 14,276,189,292 |
| நேரடிச் செலவுகள் | | (6,806,068,685) | (8,369,310,193) |
| **மொத்த இலாபம்** | | 2,627,247,401 | 5,906,879,099 |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் | 4 | 1,308,502,495 | 705,511,809 |
| ஏனைய தொழிற்பாட்டு செலவு | 4.1 | - | (174,338,317) |
| நிருவாகச் செலவுகள் | | (4,925,116,033) | (5,061,376,456) |
| **தொழிற்பாட்டு இலாபம்** | | (989,366,137) | 1,376,676,135 |
| நிதி வருமானம் | 5 | 285,281,394 | 201,571,237 |
| **வரிக்கு முந்தைய இலாபம்** | 6 | (704,084,743) | 1,578,247,372 |
| வருமான வரிச் செலவுகள் | 7.1 | (354,612,056) | (409,035,758) |
| **ஆண்டுக்கான இலாபம்** | | (1,058,696,799) | 1,169,211,614 |
| **தொடர்ந்துவருகின்ற காலங்களில் இலாபம் அல்லது நட்டத்திற்கு** | | | |
| **வகைப்படுத்தப்படாத ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்** | | | |
| வரையறை செய்யப்பட்ட நல கடப்பாடுகள் மீதான கணிப்பீட்டு இலாபம்/நட்டம் | 17 | 411,261,666 | 428,606,379 |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் மீதான வரி | 8.1 | (123,378,500) | (102,865,531) |
| ஆண்டுக்கான வரியினைக் கழித்து மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் | | 287,883,166 | 325,740,848 |
| **ஆண்டிற்கான மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம், வரி கழித்து** | | (770,813,633) | 1,494,952,462 |
| **பங்கொன்றிற்கான உழைப்பு** | 9.2 | (1.41) | 1.56 |

08 தொடக்கம் 36 ஆம் பக்கங்கள் மீதுள்ள கணக்கீட்டு கொள்கைகளும் குறிப்புகளும் இந்நிதிக் கூற்றுகளை முழுமையாக்கும் பாகத்தில் ஒன்றாகும்.

# பங்குரிமையில் மாற்றங்கள் கூற்று

2022 டிசம்பர் 31 அன்று முடிவுற்ற ஆண்டுக்கானது

| | குறிக்கப்பட்ட மூலதனம் ரூ. | மூலதன ஒதுக்கு ரூ. | பிடித்துவைக்கப்பட்ட வருமானம் ரூ. மீளக்குறிப்பிடபட்டது | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|
| **2022 ஜனவரி 01 அன்றுள்ளவாறு மீதி** | 7,500,000,000 | 979,000,000 | 18,739,200,294 | 27,218,200,294 |
| ஆண்டுக்கான இலாபம் | | | 1,169,211,614 | 1,169,211,614 |
| முன்னைய கால மாற்றங்களுக்கான சரி செய்தல் | | | (2,425,950) | (2,425,950) |
| மிகை வரிக்கான சீராக்கம் | | | (711,035,566) | (711,035,566) |
| ஏனைய அனைத்தையம் உள்ளடக்கிய வருமானம் | | | 325,740,848 | 325,740,848 |
| மொத்த அனைத்தையம் உள்ளடக்கிய வருமானம் | - | - | 781,490,946 | 781,490,946 |
| **2022 டிசம்பர் 31 இல் மீதி** | 7,500,000,000 | 979,000,000 | 19,520,691,240 | 27,999,691,240 |
| | | | | |
| ஆண்டுக்கான இலாபம் | | | (1,058,696,799) | (1,058,696,799) |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் | | | 287,883,166 | 287,883,166 |
| மொத்த அனைத்தையம் உள்ளடக்கிய வருமானம் | - | - | (770,813,633) | (770,813,633) |
| **2022 டிசம்பர் 31 இல் மீதி** | 7,500,000,000 | 979,000,000 | 18,749,877,607 | 27,228,877,607 |

# காசுப் பாய்ச்சல் கூற்று

2022 டிசம்பர் 31 அன்று முடிவுற்ற ஆண்டுக்கானது

| | குறிப்பு | 2022<br>ரு. | 2021<br>ரு.<br>மீளக்குறிப்பிடபட்டது |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து (பயன்படுத்தப்படும்) காசுப்பாய்ச்சல்** | | | |
| வருமான வரிக்கு முன்னர் இலாபம் | | (704,084,743) | 1,595,321,623 |
| **சீராக்கங்கள்** | | | |
| நிதி வருமானம் | 5 | (285,281,394) | (201,571,237) |
| நிதிச் செலவு | 5.2 | - | - |
| ஊழியர் கடன் சேதஇழப்பு ஒதுக்கீடு | | (9,483,126) | 33,641,168 |
| பொருட் பதிவேடு மற்றும் ஏனைய வர்த்தக பெறத்தக்கவை சேதஇழப்பு இழப்பிற்கான ஒதுக்கீடு | | 324,325 | 157,894,565 |
| ஆதனம் பொறித் தொகுதி மற்றும் உபகரண விற்பனை மீதான நட்டம் (இலாபம்) | 4 | (3,808,632) | 69,236 |
| வரையறுக்கட்ட தன்மை திட்டங்களுக்கான ஏற்பாடு | | 270,587,099 | 242,758,885 |
| பெறுமானத் தேய்வு | 10.2 | 846,452,285 | 893,144,073 |
| அசையா சொத்தின் பெறுமதிக்குறைப்பு | 11.2 | 29,775,640 | 28,186,363 |
| குத்தகை சொத்து பயன்படுத்தவதற்கான உரிமை பெறுமதிக்குறைப்பு | 10.5 | 2,408,512 | 8,461,853 |
| குத்தகை வட்டி- குத்தகை சொத்து பயன்படுத்தவதற்கான உரிமை | 10.6 | - | 335,753 |
| **தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னர் தொழிற்பட இலாபம்/(நட்டம்)** | | 146,889,965 | 2,758,242,283 |
| பதிவேட்டுப் பொருட்களில் (அதிகரிப்பு) / இலாபம் | | (180,792,599) | (21,580,466) |
| வர்த்தக மற்றும் ஏனைய பெறத்தக்கவைகளில் (அதிகரிப்பு) / குறைவு | | 492,998,283 | (2,383,015,907) |
| ஏனைய நிதியியல் சொத்துகளில் (அதிகரிப்பு)/குறைவு | | 211,136,327 | (218,393,508) |
| வர்த்தக மற்றும் ஏனைய செலுத்தத்தக்கவைகளில் (அதிகரிப்பு)/குறைவு | | 824,595,179 | 716,132,860 |
| **தொழிற்பாடுகளில் இருந்து ஈட்டப்பட்ட (பயன்படுத்தப்பட்ட) காசு** | | 1,494,827,155 | 851,385,262 |
| செலுத்தப்பட்ட வருமான வரி | | (211,170,312) | (650,205,907) |
| செலுத்தப்பட்ட மிகை வரி | | (711,035,566) | - |
| செலுத்தப்பட்ட வரையறை செய்யப்பட்ட நலன் | 17 | (184,776,742) | (220,472,106) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கையில் இருந்து ஈட்டப்பட்ட / (பயன்படுத்தப்பட்ட) தேறிய காசுப்பாய்ச்சல்** | | 387,844,535 | (19,292,751) |
| **முதலீட்டு நடவடிக்கையிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | | |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் கையகப்படுத்தல் | 10.1 | (925,467,991) | (1,357,927,201) |
| ஆதனம், பொறித்தொகதி மற்றும் உபகரணங்கள் விற்பனை மூலம் கிடைத்த வருமானம் | | 4,186,632 | - |
| நிதி வருமானம் | 5 | 285,281,394 | 201,571,237 |
| **நிதியளித்தல் நடவடிக்கைகளில் இருந்து ஈட்டப்பட்ட / (பயன்படுத்தப்பட்ட தேறிய காசுப்பாய்ச்சல்)** | | (635,999,965) | (1,156,355,964) |
| **காசு மற்றும் காசுக்கு சமமானவற்றில் தேறிய அதிகரிப்பு/(குறைவு)** | | | |
| கடன்களை திருப்பிச் செலுத்துதல் | | - | - |
| செலுத்தப்பட்ட பங்கிலாபம் | - | - | |
| குத்தகைக் கடன்கொடுநர் கொடுப்பனவு | | (2,665,004) | (9,442,200) |
| **நிதி நடவடிக்கைகளில் இருந்து / (பயன்படுத்தப்படும்) நிகர தேறிய காசுப்பாய்ச்சல்)** | | (2,665,004) | (9,442,200) |
| **காசு மற்றும் காசுக்கு சமமானவற்றில் தேறிய அதிகரிப்பு / (குறைவு)** | | (250,820,434) | (1,185,090,915) |
| ஆண்டின் ஆரம்பத்தில் காசும் காசுக்கு சமமானவையும் | 15 | 2,256,929,658 | 3,442,020,573 |
| **ஆண்டின் இறுதியில் காசும் காசுக்கு சமமானவையும்** | 15 | 2,006,109,224 | 2,256,929,658 |

08 தொடக்கம் 36 ஆம் பக்கங்கள் மீதுள்ள கணக்கீட்டு கொள்கைகளும் குறிப்புகளும் இந்நிதி கூற்றுகளை முழுமையாக்கும் பாகத்தில் ஒன்றாகும்.

# நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்

2022 டிசம்பர் 31 அன்று முடிவுற்ற ஆண்டுக்கானது

## 1. நிறுவனம் பற்றிய தகவல்கள்

### 1.1 பொது

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடெட் (கம்பனி) நிறுவனமானது 2007இன் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் 2003 ஒக்டோபர் 8 ஆம் திகதியன்று கூட்டிணைக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனியொன்றாவதுடன் இலங்கையில் வாழிடத்தைக் கொண்டுள்ளது. கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடெட், எரிபொருள் விநியோக நிலையம், கொலன்னாவ என்ற முகவரியில் அமையப்பெற்றுள்ளது.

### 1.2 முதன்மைச் செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்

ஆண்டின் போது கம்பனியின் முதன்மைச் செயற்பாடுகளானவை பெற்றோலியப் பொருட்களைக் களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகித்தல் ஆகியனவாகயிருந்தன.

### 1.3 தாய்க்கம்பனியும் இறுதியாக கட்டுப்படுத்துகின்ற தரப்பும்

பணிப்பாளர்களின் அபிப்பிராயத்தின் படி கம்பனியின் பொறுப்பேற்கின்ற தாய்க் கம்பனி இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமாகும்.

### 1.4 வெளியிடுவதற்கான அங்கீகாரத் திகதி

2022 டிசம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கான சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடெட்டின் நிதியியல் கூற்றுகள், 2023 பெப்பரவரி 28 ஆம் திகதிய பணிப்பாளர் சபையின் தீர்மானமொன்றுக்கு அமைவாக வெளியிடுவதற்காக அங்கீகாரமளிக்கப்பட்டது.

## 2. தயாரித்தல் அடிப்படை

### 2.1 இணங்குவித்தல் கூற்று

நிதியியல் நிலைக்கூற்று, அனைத்துமடங்கிய வருமானக்கூற்று, பங்குரிமை மாற்றக்கூற்று காசுப்பாய்ச்சல்கள் கூற்று மற்றும் நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள் ஆகியவற்றை உள்ளடக்குகின்ற கம்பனியின் நிதியியற் கூற்றுகள் இலங்கையின் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் எடுத்துரைக்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு தரநியமங்கள் (இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள்) இற்கமைவாகவும் 2007 இன் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்படுத்தல்களுக்கு அமைவாகவும் தயாரிக்கப்பட்டு எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

#### 2.1.1 அளவீட்டுஅடிப்படை

கம்பனியின் நிதியற் கூற்றுக்களானவை நிதியியல் நிலைக்கூற்றின் உள்ள பின்வரும் விடயங்களுக்கானவை தவிர வரலாற்றுக் கிரய அடிப்படை மீது தயாரிக்கப்பட்டுள்ளன:

- வரையறுக்கப்பட்ட நலக்கடப்பாடுகளுக்கான பொறுப்பானது காப்பீட்டு கணிப்பீட்டு அடிப்படையில் விலைமதிப்பீடு செய்யப்பட்டு தற்போதைய பெறுமதியில் இனங்காணப்பட்டுள்ளது.

#### 2.1.2 தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு

தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றுடன் தொடருவதற்கான கம்பனியின் இயலுமை பற்றிய மதிப்பீடொன்றினைப் பணிப்பாளர்கள் மேற்கொண்டுள்ளதுடன் முன்னறிகின்ற எதிர்காலத்திற்காக தொழிலினைத் தொடருவதற்கு கம்பனி மூலவளங்களைக் கொண்டுள்ளது என திருப்தியடைகின்றனர். கம்பனியின் தொடர்ந்தியங்கும் இயலுமை மீது ஏதேனும் குறிப்பிடத்தக்க சந்தேகத்தினை தோற்றுவிக்கக்கூடிய ஏதேனும் முக்கிய நிச்சயமின்மைகள் பற்றி சபை அறிந்திருக்கவில்லை. அத்துடன் கம்பனித் தொழிற்பாடுகளை தீர்த்துக்கட்டுவதற்கோ அல்லது நிறுத்துவதற்கோ அவர்கள் உத்தேசிக்கவில்லை. எனவே, நிதியியல் கூற்றுகள் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 2.2 தொழிற்பாட்டு மற்றும் எடுத்துரைப்பு நாணயம்

நிதியியல் கூற்றுகள், இலங்கை ரூபாவில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இது கம்பனியின் தொழிற்பாட்டு மற்றும் எடுத்துரைப்பு நாணயமாகும்.

### 2.3 ஒப்பீட்டுத் தகவல்கள்

கணக்கீட்டுக் கொள்கைகள் கம்பனியினால் ஒரேமாதிரியாக பிரயோகிக்கபட்டுள்ளதுடன் முன்னைய ஆண்டில் பயன்படுத்தப்பட்டவற்றுக்கு இசைவானதாகும். முன்னைய ஆண்டின் தொகைகளும் சொற்றொடர்களும் நடைமுறை எடுத்துரைப்புக்கு இணங்குவதற்கு அவசியப்படுகின்ற போது மீள்ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன.

### 2.4 முக்கிய கணக்கீட்டு தீர்வுகள், மதிப்பீடுகள் மற்றும் ஊகங்கள்

இலங்கை கணக்கீட்டு தரநியமங்களுக்கு அமைவாக கம்பனியின் நிதியியல் கூற்றுகளின் எடுத்துரைப்பானது கணக்கீட்டுக் கொள்கை பிரயோகத்தினையும் சொத்துகளின், பொறுப்புகளின், வருமானத்தின் மற்றும் செலவுகளின் அறிக்கையிடப்பட்ட தொகைகளையும் பாதிக்கின்ற தீர்வுகள், மதிப்பீடுகள் மற்றும் ஊகங்களை ஆக்குவதற்கு முகாமைத்துவத்தினைத் தேவைப்படுத்துகின்றது. இவ்வூகங்கள் மற்றும் மதிப்பீடுகள் பற்றிய நிச்சயமின்மைகள் எதிர்காலங்களில் சொத்துகளினது அல்லது பொறுப்புகளினது கொண்டுசெல்லும் தொகைக்கு பாதிப்புக்களை ஏற்படுத்துகின்ற முக்கிய சீராக்கமொன்றினைத் வேண்டுகின்ற விளைவுகளை ஏற்படுத்தலாம்.

மதிப்பீடுகளும் ஊகங்களும் முன்னெடுக்கப்படும் அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றன. கணக்கீட்டு மதிப்பீட்டுகளுக்கான திருத்தங்கள் மதிப்பீடு திருத்தப்படுகின்ற காலத்திலும் அத்துடன் பாதிக்கப்படும் ஏதேனும் எதிர்காலத்திலும் இனங்காணப்படுகின்றன.

# நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்

2022 டிசம்பர் 31 அன்று முடிவுற்ற ஆண்டுக்கானது

கம்பனியின் நிதியியல் கூற்றுகளில் தொகைகள் மீது மிக முக்கிய விளைவினைக் கொண்டுள்ள கணக்கீட்டு கொள்கைகளைப் பிரயோகிப்பதில் மதிப்பீடுகள், நிச்சயமின்மை மற்றும் முக்கிய தீர்புகள் பற்றிய மிக முக்கிய விடயப்பரப்புக்கள் பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

### (அ) ஊழியர் நலப்பொறுப்பு

வறையறை செய்யப்பட்ட நலத்திட்டங்கள் - பணிக்கொடையின் செலவும் அதேபோன்று தற்காலப்பெறுமதியும் காப்பு கணிப்பீட்டு விலைமதிப்பீடுகளைப் பயன்படுத்தி நிர்ணயிக்கப்படுகின்றன. காப்பு கணிப்பீட்டு பெறுமதிமதிப்பீடானது கழிவுவீதங்கள், எதிர்காலச் சம்பள அதிகரிப்புகள் மற்றும் ஏனைய முக்கிய தொடர்புடைய தரவுகள் பற்றிய ஊகங்களை மேற்கொள்வதனை ஈடுபடுத்துகின்றது. ஊழியர் நலங்களின் நீண்டகாலதன்மையின் விளைவாக அத்தகைய மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்க நிச்சயிமின்மைக்கு உட்படுத்தப்படுகின்றன. மேற்குறித்த முக்கிய ஊகங்கள் தொடர்பில் முகாமைத்துவத்தினால் கொண்டு நடாத்தப்பட்டவாறான அவற்றின் உணர்வுத்தன்மை பகுப்பாய்வுடன் சேர்த்து ஊகங்கள் பற்றிய மேலதிக விபரங்கள் மற்றும் உணர்வு பகுப்பாய்வுகளின் பெறுபேறுகள் என்பன 17.7 ஆம் மற்றும் 17.4ஆம் குறிப்புகளில் தரப்பட்டுள்ளன.

### (ஆ) வர்த்தக கிடைக்கப்பெறத்தக்கவை சேதஇழப்பு

வர்த்தக கிடைக்கப்பெறத்தக்கவை சேதம் இழந்துள்ளன என்ற பொருண்மையான சான்றுவுள்ளதா என்பது பற்றி நிதியில் நிலைக்கூற்றுத் திகதியில் கம்பனி மதிப்பீடு செய்கின்றது. தற்போதுள்ள கிடைக்கப்பெறத்தக்கவைகளின் நடைமுறை நிலைமை மற்றும் வரலாற்று ரீதியான சேகரிப்பு அனுபவம் என்பவற்றின் மீளாய்வொன்றின் அடிப்படையில் மதிப்பிழப்பு நட்டங்கள் கணிக்கப்படுகின்றன. எதிர்பார்க்கப்படும் உள்ளபடியான சேதஇழப்புகளை பிரதிபலிக்கும்படியாக அத்தகைய ஏற்பாடுகள் காலமுறையாக சீர்செய்யப்படுகின்றன. 13 மற்றும் 19 ஆம் குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்கப்பெறத்தக்கவை மீது 2022 காலப்பகுதியில் கம்பனி ஏதேனும் சேதஇழப்பை இனங்காணவில்லை.

### (இ) வருமான வரியும் பிற்போடப்பட்ட வரியும்

கம்பனி வருமான வரிக்குட்பட்டதாகும். வருமான வரிக்கான ஏற்பாடுகளைத் நிர்ணயிப்பதில் முக்கிய தீர்பு தேவைப்படுகின்றது. இறுதி வரி நிர்ணயம் நிச்சயமற்றதாகவுள்ள பல கொடுக்கல்வாங்கல்களும் கணிப்புகளும் காணப்படுகின்றன. மேலதிக வரிகள் செலுத்தப்பட வேண்டலாம் என்ற மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு எதிர்பார்க்கப்பட்ட வரி தொடர்பிலான பொறுப்புக்களை நிறுவனம் இனங்காண்கின்றது. இவ்விடயங்களின் இறுதி வரி வெளிப்பாடானது ஆரம்பத்தில் பதிவுசெய்யப்பட்டிருந்த தொகையிலிருந்து வேறுபடுகின்றவிடத்து அத்தகைய வேறுபாடுகளானவை அத்தகைய நிர்ணயம் மேற்கொள்ளப்பட்ட காலத்தின் நடப்பு மற்றும் பிற்போடப்பட்ட வருமான வரிச் சொத்துக்கள் அத்துடன் பொறுப்புக்கள் போன்றவற்றில் தாக்கம் செலுத்தும். மேலதிகத் தகவல்கள் 07ஆம் மற்றும் 08ஆம் குறிப்புக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

## 2.5 முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் சாரம்சம்

### 2.5.1 வெளிநாட்டு நாணய மாற்றங்கள்

நிதியியல் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இது கம்பனியின் தொழிற்பாட்டு மற்றும் எடுத்துரைப்பு நாணயமாகும். வெளிநாட்டு நாணயத்திலான கொடுக்கல்வாங்கல்கள், கொடுக்கல்வாங்கல் திகதியில் நிலவுகின்ற தொழிற்பாட்டு நாணய வீதத்தில் ஆரம்பத்தில் பதிவுசெய்யப்படுகின்றன. வெளிநாட்டு நாணயத்தில் மாற்றம் செய்யப்பட்ட நாணயச் சொத்துகளும் பொறுப்புக்களும் அறிக்கையிடும் திகதியில் நிலவுகின்ற தொழிற்பாட்டு நாணய மாற்றுவீதத்தில் மீள் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. அனைத்து வேறுபாடுகளும் அனைத்தையும் உள்ளடக்கிய வருமான கூற்றில் எடுக்கப்படுகின்றன. வெளிநாட்டு நாணயமொன்றில் வரலாற்று கிரய நியதிகளில் அளவிடப்படுகின்ற நாணயமல்லாத விடயங்கள், ஆரம்ப கொடுக்கல்வாங்கல் திகதியன்று உள்ளவாறான நாணயமாற்று வீதத்தினைப் பயன்படுத்தி மாற்றம் செய்யப்படுகின்றன. வெளிநாட்டு நாணயமொன்றில் சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்ட நாணயமல்லா விடயங்கள், சீர்மதிப்புப் பெறுமதி நிர்ணயிக்கப்பட்ட திகதியிலிருந்த நாணய மாற்று வீதங்களைப் பயன்படுத்தி மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

### 2.5.2 வருமானத்தினை இனங்காணுதல்

பொருளாதார நலன்கள் கம்பனிக்கு உட்பாயும் மற்றும் வருமானம் நம்பகமாக அளவிடப்படக்கூடியதாகவிருக்கும் என்ற நிகழ்வுள்ள என்ற ரீதியில் வருமானம் இனங்காணப்படுகின்றது. வருமானமானது கிடைக்கப்பெற்ற அல்லது கிடைக்கபெறத்தக்க பிரதிபலன்களின் வர்த்தக கழிவுகள், மீளளித்தல்கள், தள்ளுபடிகள் மற்றும் விறபனை வரிகள் (பெறுமதி சேர்க்கப்பட்ட வரி) ஆகியவற்றை கழித்து சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படுகின்றது.

எதிர்கால பொருளாதார நலன்கள் நிறுவத்தினுள் பாயும் அத்துடன் கீழே விவரிக்கப்பட்டவாறு கம்பனியின் நடவடிக்கைகள் ஒவ்வொன்றுக்கும் குறித்துரைத்த மூலப்பிரமாணம் நிறைவுசெய்யப்படுகின்ற நிகழ்வுள்ளது என்ற அடிப்படையில், வருமானம் நம்பகமாக அளவிடப்படக்கூடியதாகவுள்ள போது கம்பனி வருமானத்தினை இனங்காணுகின்றது. விற்பனையுடன் தொடர்புடைய அனைத்து எதிர்பாராச் செலவுகளும் தீர்க்கப்படும் வரை வருமானம் நம்பத்தகுந்தவாறு அளவிடத்தக்கதாக கருதப்படுவதில்லை.

### அ) சேவைகளை வழங்குதல்

சேவைகளை வழங்குவதில் இருந்தான வருமானமானது சேவைகள் வழங்கப்படுகின்ற அல்லது செயலாற்றப்படுகின்ற கணக்கீட்டுக்காலத்தில் இனங்காணப்படுகின்றது.

### முனையக் கட்டணம்

2003 இல் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் லங்கா ஐஓசி பீஎல்சி மற்றும் திறைசேரித் திணைக்களம் என்பவற்றுக்கிடையில் கைச்சாத்திடப்பட்டு அதனைத்தொடர்ந்து 2011 மற்றும் 2019 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட பொது பயன்பாட்டாளர் உடன்படிக்கைக்கு அமைவாக சந்தைப்படுத்தும் கம்பனிகளிடம் இருந்து அறவிடப்படுகின்ற தொழிற்படுத்தல் செலவுகளை இது உள்ளடக்குகின்றது. இது, அவர்களுக்கு உரித்தான பெற்றோலிய உற்பத்திகளை மாற்றல் செய்கின்றபோது இனங்காணப்படுகின்றது. முனையக் கட்டணமானது விற்பனை செய்யப்படும் பெற்றோலிய உற்பத்திகளின் லீட்டர் ஒன்றுக்காக அளவிடப்படுகின்றது.

### தொழிற்படுத்தல் இலாபம்

தொழிற்படுத்தல் இலாபமானது விலைகுறித்தல் சூத்திரத்தில் முன்கூட்டி நிர்ணயிக்கப்படுகின்ற வீதத்தினை அடிப்படையாக கொண்டு இனங்காணப்படுகின்றது. விற்பனை செய்யப்படும் பெற்றோலிய உற்பத்திகளின் லீட்டர் ஒன்றுக்காக தொழிற்படுத்தல் இலாபம் அளவிடப்படுகின்றது.

### போக்குவரத்து வருமானம்

புகையிரத கொள்கலன், குழாய்த் தொகுதி, பவுசர் வழங்குனர்கள் மீது ஏற்பட்ட போக்குவரத்து செலவின் அறவிடுகின்றது. வருமானமானது லீட்டர் அளவு மற்றும் பயணம் செய்த தூரம் ஆகியவற்றின் அடிப்படையில் இனங்காணப்படுகின்றது.

2022 நவம்பர் 24 அன்று நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தில் 2022 ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் வரலாற்று இலங்கை பவுசர் அமைப்பின் கட்டணங்களின் அறவீட்டுக்குப் பதிலாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் எல்ஐஓசி உடன் கைச்சாத்திடப்படவுள்ள புதிய உட்டன்படிக்கையின் 6 அம் இலக்க வாசகத்தின் பிரகாரம் லங்கா மொத்தச் சாலை எரிபொருள் விற்பனை மீது முனையங்களுக்கிடையிலான மொத்த எரிபொருள் பொக்குவரத்துக் கட்டணங்களை அறவிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

### ஆ) நிதி வருமானம்

நிதி வருமானமானது விளைவு வட்டி முறையினை பயன்படுத்தி திரளுகின்ற வட்டியாக இனங்காணப்படுகின்றது

### இ) ஏனையவை

ஏனைய வருமானமானது திரளுகின்ற அடிப்படையொன்றில் இனங்காணப்படுகின்றது.

முதலீடுகள் உள்ளடங்கலாக ஆதனம், பொறித்தொகுதி, மற்றும் உபகரணங்கள் அத்துடன் ஏனைய நடைமுறையற்ற சொத்துகளின் விற்பனையில் இருந்து தோன்றுகின்ற தன்மையிலான வருமானம் ஒன்றின் தேறிய பெறுகைகள் அல்லது இழப்புகள், சொத்துகள் கொண்டுள்ள தொகை மற்றும் தொடர்புடைய விற்பனை செலவுகளை விற்று அகற்றுவதன் மீதான பெறுகைகளில் இருந்து கழித்து வருமானக்கூற்றில் கணக்கிடப்படுகின்றது.

பிரதானமாக வருமானம் ஈட்டுகின்ற செயற்பாடுகளுக்கு இடைநேர்விளைவான செயற்பாடுகளில் இருந்து தோன்றுகின்ற அத்துடன் முக்கியத்துவம் அற்ற அதனை ஒத்த கொடுக்கல் வாங்கல்களில் குழுவொன்றில் இருந்து தோன்றுகின்ற பெறுகைகள் அல்லது இழப்புகள் ஒன்றுசேர்க்கப்பட்டு தேறிய அடிப்படை ஒன்றில் அறிகையிடப்பட்டு எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

## 2.5.3 செலவினத்தை இனங்காணல்

வியாபாரத்தினை தொழிற்படுத்துவதில் அத்துடன் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களை வினைத்திறன் மிக்க விதத்தில் பேணுவதில் ஏற்படுகின்ற அனைத்து செலவினமும் காலத்திற்கான அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்றில் அறவிடப்படுகின்றன.

## 2.5.4 வரி விதிப்பு

காலத்திற்கான வரிச்செலவானது நடைமுறை மற்றும் பிற்போடப்பட்ட வரி ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. வரியானது ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் அல்லது நேரடியாக பங்குரிமையில் இனங்காணப்படும் விடயங்களுடன் அது தொடர்புபடுகின்றது என்ற அடிப்படையிலானவை தவிர ஆண்டுக்கான இலாபத்தில் இனங்காணப்படுகின்றது. இவ்விடயத்தில் வரியானது முறையே ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் அல்லது நேரடியாக பங்குரிமையில் இனங்காணப்படுகின்றது.

### நடைமுறை வரிகள்

நடைமுறை மற்றும் முன்னைய காலங்களுக்கான நடைமுறை வருமான வரிச் சொத்துகளும் பொறுப்புகளும் வரிவிதிப்பு அதிகாரிகளிடம் இருந்து அறவிடப்பட அல்லது கொடுப்பனவு செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் தொகையில் அளவிடப்படுகின்றது. தொகையினை கணிப்பதற்கு பயன்படுத்தப்படும் வரி வீதங்களும் வரிச்சட்டங்களும் அறிக்கையிடும் திகதியன்று இயற்றப்பட்ட அல்லது கணிசமான அளவு இயற்றப்பட்டுள்ளவையாகும்.

வருமான வரிக்கான ஏற்பாடானது நிதியியல் கூற்றில் அறிக்கையிடப்பட்டுள்ளவாறு வருமான மற்றும் செலவின கூறுகளை அடிப்படையாக கொண்டதுடன் தொடர்புடைய வரிச்சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக கணிக்கப்படுகின்றது.

பங்குரிமையில் நேரடியாக இனக்காணப்படுகின்ற விடையங்களுடன் தொடர்புடைய நடப்பு வரியானது பங்குரிமையில் இனங்காணப்படுவதுடன் அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்றில் இனங்காணப்படுவதில்லை.

### பிற்போடப்பட்ட வரிவிதிப்பு

நிதியியல் அறிக்கையிடும் நோக்கங்களுக்காக சொத்துகள்

# நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்

2022 டிசம்பர் 31 அன்று முடிவுற்ற ஆண்டுக்கானது

மற்றும் பொறுப்புகளின் வரித்தளங்கள் மற்றும் நிதியியல் நோக்கங்களுக்காக அவை கொண்டுள்ள தொகை என்பவற்றிக்கிடையில் அறிக்கையிடும் திகதியில் தற்காலிக வேறுபாடுகள் மீது பொறுப்பு முறையினை பயன்படுத்தி பிற்போடப்பட்டு வரி ஏற்பாடு செய்யப்படுகின்றது.

பிற்போடப்பட்ட வருமான வரிப் பொறுப்புகளானவை வியாபார இணைப்பொன்று அல்லாத கொடுக்கல் வாங்கல் ஒன்றில், உள்ள சொத்து அல்லது பொறுப்பு ஒன்றின் ஆரம்ப இனங்காணுதலில் இருந்து தோன்றுகின்ற, கொடுக்கல் வாங்கல் நேரத்தில், கணக்கீட்டு இலாபத்தினையோ அன்றில் வரி விதிக்கத்தக்க இலாபத்தினையோ அல்லது நட்டத்தினையோ பாதிக்காத பிற்போடப்பட்ட வருமானவரிப் பொறுப்பு உள்ளவை தவிர அனைத்து வரிவிதிக்கத்தக்க தற்காலிக வேறுபாடுகளுக்குமென இனக்காணப்படுகின்றது.

பிற்போடப்பட்ட வருமானவரி சொத்துக்கலானவை கழிக்கத்தக்க தற்காலிக வேறுபாடுகளுக்கு எதிராக வரிவிதிக்கத்தக்க இலாபம் கிடைப்பெறும் என்ற நிகழ்வின் அடிப்படையில், அத்துடன் வியாபார இணைப்பொன்று அல்லாத கொடுக்கல் வாங்கல் ஒன்றில் சொத்து அல்லது பொறுப்பு ஒன்றின் ஆரம்ப இனக்காணுதலில் இருந்து தோன்றுகின்ற தற்காலிக வேறுபாட்டுடன் தொடர்புடைய பிற்போடப்பட்ட வருமானவரி சொத்து காணப்படுகின்றவிடத்து அத்துடன் கொடுக்கல் வாங்கல் நேரத்தில், கணக்கீட்டு இலாபத்தினையோ அன்றி வரிவிதிக்கத்த இலாபம் அல்லது நட்டத்தையோ பாதிக்காத பயன்படுத்தப்படாத வரி சொத்துகளினதும், பயன்படுத்தப்படாத வரி இழப்புகளினதும் முன்கொண்டு செல்லும் தொகை பயன்படுத்த கூடியதாக உள்ளபோது அனைத்து கழிக்கத்தக்க தற்காலிக வேறுபாடுகளுக்கும் இனக்காணப்படுகின்றது.

பிற்போடப்பட்ட வருமானவரி சொத்து ஒன்றின் கொண்டுசெல்லும் தொகையானது ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் மீளாய்வு செய்யப்படுவதுடன் பிற்போடப்பட்ட வருமானவரிச் சொத்தின் அனைத்தையும் அல்லது ஒரு பகுதினை பயன்படுத்தப்படுவதற்கு அனுமதிக்கப்படுவதற்கு போதிய வரிவிதிக்கத்தக்க இலாபம் கிடைக்கப்பெறும் என்ற நிகழ்வு இனிமேலும் இல்லையென்ற அடிப்படையில் குறைக்கப்படுகிறது.

பிற்போடப்பட்ட வருமானவரி சொத்துகளும் பொறுப்புகளும் அறிக்கையிடும் திகதியில் சட்டமாக்கப்பட்டுள்ள அல்லது பொருன்மையாக சட்டமாக்கப்பட்டுள்ள வரி வீதங்களை (அத்துடன் வரிச் சட்டங்கள்) அடிப்படையாகக்கொண்டு சொத்து தேறுகின்றபோது அல்லது பொறுப்பு தீர்ப்பனவு செய்யப்படுகின்றபோது ஆண்டுக்காக பிரயோகிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற வரிவீதங்களில் அளவிடப்படுகின்றன.

### மிகை விரி

### நிதியியல் கூற்றுகள் தயாரித்தல் அடிப்படை

மேலும், 2022இன் 14 ஆம் இலக்க மிகை வரிச் சட்டத்திலிருந்த தோன்றுகின்ற வரிப்பொறுப்பானது வருமான வரிகள் மீது 22.2 ஆம் இலக்க குறிப்பின் கீழ் வெளிப்படுத்தப்பட்டவாறு இலங்கை பட்டயக் கணக்களார் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட மாற்றுப் பரிகார கூற்றின் மூலம் பரிந்துரைக்கப்பட்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

விற்பனைகள் வரி (பெறுமதி சேர்க்கப்பட்ட வரியும் சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீடும்)

வருவாய்கள், செலவுகள் மற்றும் சொத்துகள் என்பன வரிவிதிப்பு அதிகாரிகளிடமிருந்து அறவிடப்பட முடியாததுள்ள சொத்துகள் அல்லது சேவை கொள்வனவொன்றின் மீது ஏற்பட்ட விற்பனைகள் வரிகள் தவிர விற்பனை வரித்தொகையினை கழித்து இனக்காணப்படுகின்றது அத்தகைய சந்தர்ப்பங்களில் விற்பனை வரியானது ஏற்புடையவாறு சொத்துச் செலவின் பாகமொன்றாக அல்லது செலவு விடையங்களின் பாகமொன்றாக அத்துடன் விற்பனை வரிகள் உள்ளடக்கப்பட்டுள்ள தொகையுடன் குறிப்பிடப்பட்டுள்ளவற்றின் கிடைக்கத்தக்க மற்றும் செலுத்தத்தக்கவையாக இனங்காணப்படுகின்றது. வரிவிதிப்பு அதிகாரிகள் தொடர்பில் அறவிடத்தக்க அல்லது செலுத்தத்தக்க விற்பனைகள் வரித்தொகையானது நிதியியல் நிலைமைக்கூற்றில் கிடைக்கத்தவைகளின் அல்லது செலுத்ததக்கவைகளின் பாகமொன்றாக உள்ளடக்கப்படுகின்றது.

### 2.5.5 நிதியியல் சாதனங்கள் - ஆரம்ப இனங்காணலும் அதனைத்தொடர்ந்த அளவீடும்

### 2.5.5.1 நிதியியல் சொத்துகள்

கம்பனியின் நிதிச்சொத்துக்களானவை காசு, மற்றும் குறுகியகால வைப்புகள் வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்கத்தவை அத்துடன் தொடர்புடைய தரப்பினர்களிடமிருந்தான நிலுவைத்தொகை ஆகியவற்றை உள்ளடக்குகின்றது.

### ஆரம்ப இனங்காணலும் அளவீடும்

இலங்கை கணக்கீட்டு நியமம் 39 இன் நோக்கலையினுள் நிதியியல் சொத்துக்கலானவை இலாபம் அல்லது நட்டமூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நிதியியல் சொத்துகள், கடன்கள் மற்றும் கிடைக்கத்தவை, முதிர்விற்காக வைக்கப்பட்டுள்ள முதலீடுகள், விற்பனைக்கு கிடைக்கத்தக நிதியியல் சொத்துகள் அல்லது பொருத்தமான விதத்தில் விளைவுமிக்க காப்பொன்றில் காப்பு சாதனங்களாக பெயர்குறிக்கப்பட்ட பெறுதிகள் என வகைப்படுத்தப்படுகின்றன. கம்பனியானது அதன் நிதியியல் சொத்துகளை வகைப்படுத்துவதனை ஆரம்ப இனங்கணுதலில் நிர்ணயிக்கின்றது.

இலாபம் அல்லது நட்டமூடாக சீர்மதிப்புப்பெறுமதியில் இல்லாத சொத்துகள் தொடர்பில் நேரடியாக சாட்டத்தக்க கொடுக்கல் வாங்கல்களுடன் சேர்ந்தது அனைத்து நிதியியல் சொத்துகளும் சீர்மதிப்புப்பெறுமதியில் ஆரம்பத்தில் இனக்காணப்படுகின்றன.

சந்தையில் (கிரமமான வர்த்தக வழிமுறை) ஒழுங்குவிதியினால் அல்லது சமவாயத்தினால் நிறுவப்படுகின்ற கால சட்டகம் ஒன்றினுள் சொத்துகளின் ஒப்படைப்பினை தேவைப்படுத்துகின்ற நிதியியல்

சொத்துகளின் கொள்வனவுகள் அல்லது விற்பனைகள், வர்த்தக திகதியன்று அதாவது சொத்தினை கொள்வனவு செய்வதற்கு அல்லது விற்பனை செய்வதற்கு கம்பனி பொறுப்பேற்கின்ற திகதியன்று சந்தை அமைவிடத்தில் இனக்காணப்படுகின்றது.

### தொடர்கின்ற அளவீடுகள்

நிதியியல் சொத்துகளின் வகைப்படுத்தல் மீது சார்துள்ள அவற்றின் அதனை தொடர்ந்த அளவீடானது பின்வருமாறு

### அ) கடன்களும் கிடைக்கத்தக்கவையும்

கடன்களும் கிடைக்கத்தக்கவையும் செயற்பாடுமிக்க சந்தை ஒன்றில் விலைகுறிக்கப்படாத நிலையான அல்லது நிர்ணயிக்கத்தக்க கொடுப்பனவுகளுடன் கூடிய பெறுதி அல்லாத நிதியியல் சொத்துக்களாகும். அத்தகைய நிதியியல் சொத்துகள் ஆரம்ப அளவீட்டின் பின்னர் விளைவு வட்டி வீத முறையினை பயன்படுத்தி மதிப்பிழப்பினை கழித்து பெறுமதி குறைக்கப்பட்ட செலவில் அதனைத் தொடர்ந்து அளவிடப்படுகின்றன. பெறுமதி குறைக்கப்பட்ட செலவானது கையகப்படுத்தல் மீதான ஏதேனும் கழிவு அல்லது கட்டுப்பணம் மற்றும் விளைவு வட்டி வீத முறையின் மிக முக்கிய பாகமொன்றான கட்டணங்கள் அல்லது செலவுகளை கருத்திற்கொண்டு கணிக்கப்படுகின்றது. விளைவு வட்டிவீத முறை பெறுமதிகுறைத்தலானது வருமானக் கூற்றில் நிதி வருமானத்தில் உள்ளடக்கப்படுகின்றது. மதிப்பிழப்பில் இருந்து தோன்றுகின்ற நட்டங்கள் நிதிச்செலவுகளில் வருமானக் கூற்றில் இனக்காணப்படுகின்றன.

### இனங்காணாமை

நிதியியல் சொத்து ஒன்று (அல்லது பொருத்தமான விடத்து நிதியியல் சொத்தொன்றின் பாகமொன்று அல்லது அதனை ஒத்த நிதியியல் சொத்துகளின் குழும பாகம்) பின்வரும் சந்தர்ப்பங்களில் இனங்காணப்படுவதில்லை:

- சொத்தில் இருந்தான காசுப்பாச்சல் கிடைப்பதற்கான உரிமைகள் காலாவதியாதல்.
- “கடந்துசெல்லல்” ஒப்பந்தம் ஒன்றின் கீழ் முக்கிய தாமதம் இன்றி மூன்றாம் தரப்பினர் ஒருவருக்கான சொத்தில் இருந்து காசுப்பச்சல்களை பெறுவதற்கு அல்லது கிடைக்கப்பெற்ற காசுப்பாச்சல்களை முழுமையாக கொடுப்பனவு செய்வதற்கு கடப்பாடு ஒன்றினை ஊகித்துள்ள போது கம்பனி அதன் உரிமைகளை மாற்றம் செய்துள்ளது அத்துடன் ஒன்றில் (அ) சொத்தின் கணிசமாக அனைத்து இடர் நேர்வுகளையும் அத்துடன் கைமாறுகளையும் கம்பனி மாற்றம் செய்து இருக்கின்றது (ஆ) சொத்தொன்றின் கணிசமாக அனைத்து இடர்களையும் அத்துடன் கைமாறுகளையும் கம்பனி இடமாற்றவோ அன்றில் பிடித்துவைத்தில்லாமல், ஆனால் சொத்தின் கட்டுப்பாட்டினை மாற்றம் செய்துள்ளது.

சொத்தொன்றிலிருந்து காசுப் பாய்ச்சலினைப் பெற்றுக்கொள்வதற்கு கம்பனி அதன் உரிமைகளை மாற்றம் செய்துள்ள போது அல்லது கடந்துசெல்லல் ஒழுங்கொன்றினை கைச்சாத்திட்டுள்ள போது அத்துடன் சொத்தினது கணிசமான அனைத்து இடர்களையும் அத்துடன் கைமாறுகளையும் மாற்றம் செய்தோ அன்றில் பிடித்து வைத்தோ அன்றி கட்டுப்படுத்தலினை மாற்றம் செய்தோ இல்லாத போது சொத்தானது கம்பனி அதில் தொடர்ச்சியாக ஈடுபடுகின்றது என்ற ரீதியில் இனம்காணப்படுகின்றது.

இத்தகைய சந்தர்ப்பத்தில் கம்பனியானது இணையப்பெற்ற பொறுப்பொன்றினையும் இனங்காண்கின்றது. மாற்றம் செய்யப்பட்ட சொத்தும் இணையப்பெற்ற பொறுப்பும் கம்பனி பிடித்துவைத்துள்ள உரிமைகளையும் கடப்பாடுகளையும் பிரதிபலிக்கின்ற அடிப்படையொன்றில் அளவிடப்படுகின்றன.

மாற்றல்செய்யப்பட்ட சொத்தின் மீதான உத்தரவாதமொன்றின் வடிவினை பெற்றுக்கொள்கின்ற தொடர்ச்சியான ஈடுபாடானது சொத்தின் அடிப்படை கொண்டு செல்லும் தொகையின் குறைவான மட்டத்தில் அளவிடப்படுவதுடன் மீள்கொடுப்பனவிற்காக கம்பனி வேண்டப்படக்கூடிய ஆகக்கூடிய பிரதிபலன் தொகையிலும் அளவிடப்படுகின்றது.

### நிதியியல் சொத்துகளின் சேதஇழப்பு

நிதியியல் சொத்தொன்று அல்லது நிதியியல் சொத்துகளின் குழுமமொன்று, சொத்தின் ஆரம்ப இனங்காணலின் பின்னர் இடம்பெற்ற ஒரு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நிகழ்வுகளின் விளைவாக (ஏற்பட்ட “இழப்பு நிகழ்வு”) மற்றும் நம்பத்தகுந்தவாறு மதிப்பிடக்கூடிய நிதிச்சொத்தின் அல்லது நிதிச்சொத்துக்களின் குழுமத்தின் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல் மீது அவ்விழப்பு நிகழ்வு தாக்கமொன்றினைக் கொண்டுள்ளது என பொருண்மையான மதிப்பிழப்புச் சான்று காணப்படுமெனில், அதன் போது மாத்திரம் மதிப்பிழந்ததாக கருதப்படுகின்றது. மதிப்பிழப்பு சான்றானது கடன்படுநர் அல்லது கடன்படுநர் குழுமமொன்று குறிப்பிடத்தக்க நிதிக்கஷ்டத்தினை அனுபவிக்கின்ற, தவணை தவறுகின்ற அல்லது வட்டியினை அல்லது முதன்மை கொடுப்பனவுகளை தவணை தவறுகின்ற அல்லது கடமை தவறுகின்ற, அவர்கள் வங்குரோத்து அடைகின்ற அல்லது ஏதேனும் நிதியியல் மறுசீரமைப்பு நிலையடைகின்ற மற்றும் அடைகின்ற குறிகாட்டிகளையும் தவணை தவறுவதன் ஒன்றுக்கொன்று தொடர்புள்ள நிலுவைகள் அல்லது பொருளாதார நிலைமைகளில் மாற்றங்கள் போன்ற மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களின் அளவிடப்பட்ட வீழ்ச்சியொன்று காணப்படுகின்றது. என்ற அவதானிக்கத்தக்க தரவுக்குறிகாட்டிகள் காணப்படுகின்றவற்றை உள்ளடக்கலாம்.

### கடன்கழிப்பில் கொண்டு செல்லப்படும் நிதியியல் சொத்துக்கள்

கடன்கழிப்பு செலவில் கொண்டு செல்லப்படும் நிதியியல் சொத்துக்களுக்காக கம்பனியானது தனிப்பட்ட ரீதியாக முக்கியத்துவமுடைய அல்லது தனிப்பட்ட ரீதியாக முக்கியத்துவமற்ற நிதியியல் சொத்துக்களுக்கான கூட்டான மதிப்பிழப்பு காணப்படுவதற்கு மெய்யான சான்றுதழ் உள்ளதா என்பதனை முதலில் மதிப்பிடுகின்றது. தனிப்பட்ட ரீதியாக மதிப்பிட்ட சொத்தொன்றுக்காக

# நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்

2022 டிசம்பர் 31 அன்று முடிவுற்ற ஆண்டுக்கானது

முக்கியமானதோ அல்லது முக்கியமற்றதோ மதிப்பிழப்பு மெய்யான சான்றொன்று காணப்படவில்லை என கம்பனி நிர்ணயிக்குமாயின் அது சொத்தினை அதனையொத்த கடன்இடர் பண்புகளுடன் கூடிய நிதிச்சொத்துக்களின் குழுமமொன்று உள்ளடக்குவதுடன் மதிப்பிழப்பிற்காக அவற்றை கூட்டாக மதிப்பீடு செய்கின்றது. மதிப்பிழப்பிற்காக தனியாக மதிப்பிழக்கப்பட்ட சொத்து மற்றும் மதிப்பிழப்பு நட்டத்திற்காக தொடர்ச்சியாக இனங்காணப்படவேண்டியவை மதிப்பிழப்பின் கூட்டான மதிப்பீடொன்றில் உள்ளடக்குவதில்லை.

சேதஇழப்பு நட்டமொன்று ஏற்பட்டு வருகின்றது என மெய்யான சான்றொன்று காணப்படுமாயின் நட்டத்தொகையானது சொத்துகள் கொண்டு செல்லும் தொகைக்கும் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களின் தற்போதைய பெறுமதிக்கும் இடையிலான (இன்னமும் ஏற்பட்டிருக்காத எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்புகள் நீங்கலாக) வேறுபாடாக அளவிடப்படுகின்றது. மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களின் தற்போதைய பெறுமதிகள் நிதியியல் சொத்தின் அடிப்படை விளைவுவட்டிவீதத்தில் கழிவுசெய்யப்படுகின்றன. கடனொன்று மாறுபடும் வட்டி வீதத்தினை கொண்டிருக்குமாயின், ஏதேனும் மதிப்பிழப்பு நட்டத்தினை அளவிடுவதற்கான கழிவுவீதமானது நடைமுறை விளைவு வட்டிவீதமாகவிருக்கும்.

சொத்தொன்று கொண்டு செல்லும் தொகையானது ஏற்புவரம்பு கணக்கொன்றினை பயன்படுத்துவதன் ஊடாக குறைக்கப்படுவதுடன் இழப்புத் தொகை வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றது. வட்டிவருமானமானது குறைக்கப்பட்ட கொண்டு செல்லும் தொகை மீது தொடர்ந்து திரட்டப்படுவதுடன் மதிப்பிழப்பு நட்டத்தினை அளவிடும் நோக்கத்திற்காக எதிர்கால காசுப்பாய்ச்சல்களை கழிவுசெய்வதற்கு பயன்படுத்தப்படும் வட்டி வீதத்தினை பயன்படுத்தி திரட்டப்படுகின்றது. வட்டிவருமானமானது நிதி வருமானத்தின் பாகமொன்றாக வருமானக்கூற்றில் பதிவுசெய்யப்படுகின்றது. எதிர்கால கடன் அறவீட்டுக்கு ஐயமற்ற எதிர்பார்க்கையொன்று காணப்படாத போது கம்பனிக்கான அனைத்து பிணைய உறுதிகளும் தேறிவுள்ள அல்லது மாற்றும் செய்யப்பட்டுள்ள போது கடன்கள் இணையப்பெற்ற ஏற்புவரம்புகளுடன் சேர்த்து பதிவழிப்புச் செய்யப்படுகின்றன. தொடர்ந்து வருகின்ற ஆண்டொன்றில் மதிப்பிழப்பு இனங்காணப்பட்ட பின்னர் நிகழ்கின்ற நிகழ்வின் காரணமாக மதிப்பிடப்பட்ட மதிப்பிழப்பு அதிகரித்தல் அல்லது குறைவடைதல் தொகை இருப்பின், முன்னர் இனங்காணப்பட்ட மதிப்பிழப்பு நட்டமானது ஏற்புவரம்புக் கணக்கினை சரிசெய்வதன் மூலம் அதிகரிக்கப்படுகின்றது அல்லது குறைக்கப்படுகின்றது. எதிர்கால பதிவழிப்பொன்று பின்னர் மீள அறவிடப்படுமாயின், அறவீடானது வருமானக்கூற்றின் நிதிச்செலவுகளுக்கு வரவு வைக்கப்படுகின்றது.

### 2.5.5.2 நிதியியல் பொறுப்புகள்

கம்பனியின் நிதியியல் பொறுப்புகளானவை வர்த்தக மற்றும் ஏனைய செலுத்தவேண்டியவை, தொடர்புடைய தரப்பினருக்கான நிலுவை, வங்கி மேலதிகப் பற்றுகள் மற்றும் வட்டியுடைய கடன்கள் மற்றும் கடனாக்கங்கள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன.

#### ஆரம்ப இனங்காணலும் அளவீடும்

இலங்கை கணக்கீட்டு நியமம் 39இன் நோக்கெல்லையினுள் நிதியியல் பொறுப்புகளானவை இலாபம் அல்லது நட்டம் ஊடாகசீர்மதிப்புப் பெறுமதியில் உள்ள நிதியியல் பொறுப்புகள்,கடன் மற்றும் கடனாக்கங்கள் அல்லது பொருத்தமானவாறு செயல்திறன்மிக்க காப்பொன்றில் காப்பு சாதனங்களாக நியமிக்கப்பட்ட பெறுதிகளாக வகைப்படுத்தப்படுகின்றன. கம்பனியானது அதன் நிதியியல் பொறுப்புகளின் வகைப்படுத்தலினை அதன் ஆரம்ப இனங்காணலில் நிர்ணயிக்கின்றது.

அனைத்து நிதியியல் பொறுப்புகளும் ஆரம்பத்தில் சீர்மதிப்புப்பெறுமதியில் இனங்காணப்படுவதுடன் கடன்கள் மற்றும் கடனாக்கங்கள் தொடர்பில் பெறுமதிக் குறைப்புச் செலவில் கொண்டு செல்லபடுகின்றன. இது நேரடியாக சாட்டத்தக்க செலவுகளை உள்ளடக்குகின்றது. ஆரம்ப சீர்மதிப்புப் பெறுமதிக்கும் உத்தேசத் தொகைக்கும் இடையிலான ஏதேனும் வேறுபாடு தொழிற்படுத்தல் வாடகை வருமானத்தின் கூறொன்றாக உள்ளடக்கப்படுவதுடன் ஏற்புடைய காலப்பகுதி மீது நேர்கோட்டு அடிப்படையில் இனங்காணப்படுகின்றது.

#### தொடர்கின்ற அளவீடுகள்

நிதியியல் பொறுப்புகளின் அளவீடானது பின்வருமாறு அவற்றின் வகைப்படுத்தலினை சார்ந்திருக்கின்றது.

#### அ) கடன்களும் கடனாக்கங்களும்

ஆரம்ப இனங்காணலின் பின்னர் வட்டியுடைய கடன்களும் கடனாக்கங்களும் விளைவு வட்டிவீத முறையினைப் பயன்படுத்தி பெறுமதி குறைப்புச் செலவில் தொடர்ந்து அளவிடப்படுகின்றன. பெறுகைகளும் இழப்புகளும், பொறுப்புகள் இனங்காணாமையின் போது அத்துடன் விளைவு வட்டிவீத முறை பெறுமதி குறைப்புச் செயன்முறையினூடகவும் வருமானக்கூற்றில் இனங்காணப்படுகின்றன.

கடன்கழிப்புச் செலவானது கையேற்பின் மீதான ஏதேனும் கழிவையும் அல்லது கட்டுப்பணத்தையும் விளைவு வட்டி வீதத்தின் முக்கிய பாகமொன்றான கட்டங்கள் அல்லது செலவுகளை கருத்திற்கொண்டு கணிக்கப்படுகிறது. விளைவு வட்டிவீத கடன்கழித்தலானது வருமானக்கூற்றில் நிதிச்செலவுகளில் உள்ளடக்கப்படுகின்றது.

#### இனங்காணாமை

பொறுப்பின் கீழுள்ள கடப்பாடு நிறைவேற்றப்படுகின்ற போது அல்லது இரத்துச் செய்கின்ற போது அல்லது காலாவதியாகின்ற போது நிதியியல் பொறுப்பொன்று இனங்காணப்படுவதில்லை. நடைமுறையிலுள்ள நிதியியல் பொறுப்பொன்று கணிசமாக வேறுபட்ட நியதிகளில் அதே கடன்வழங்குநரிடமிருந்து பதிலீடு செய்யப்படுகின்ற போது அல்லது தற்போது காணப்படுகின்ற பொறுப்பொன்றின் நியதிகள் கணிசமாக மாற்றியமைக்கின்ற போது அத்தகைய மாற்றம் அல்லது திருத்தம் மூலப்பொறிப்பின் இனங்காணாமையொன்றாகவும் புதிய பொறுப்பின் இனங்காணப்படுவதாகவும் கொள்ளப்படுவதுடன் தொடர்புடைய கொண்டு செல்லும் தொகைகளிலுள்ள

வேறுபாடு வருமானக்கூற்றில் இனங்காணப்படுகின்றது.

### 2.5.6 சீர்மதிப்புப் பெறுமதி அளவீடு

சீர்மதிப்புப் பெறுமதி என்பது அளவீட்டுத் திகதியன்று சந்தைப் பங்கேற்பாளர்களுக்கிடையிலான ஒழுங்கு முறையான கொடுக்கல்வாங்கலொன்றில் சொத்தொன்றினை விற்பனை செய்வதற்கு கிடைக்கப்பெறுகின்ற அல்லது பொறுப்பொன்றின் மாற்றலுக்கு கொடுப்பனவு செய்யப்படுகின்ற விலையாகும். சீர்மதிப்புப் பெறுமதி அளவீடானது பின்வருவனவொன்றில் இடம்பெறுகின்ற சொத்தினை விற்பனை செய்வதற்கான அல்லது பொறுப்பினை மாற்றுவதற்கான கொடுக்கல்வாங்கல் முன் ஊகத்தினை அடிப்படையாகக் கொண்டதாகும்:

- சொத்துக்கான அல்லது பொறுப்பிற்கான முதன்மைச் சந்தை

  அல்லது

- சொத்துக்கான அல்லது பொறுப்புக்கான முதன்மைச் சந்தை இல்லாதவிடத்து மிகவும் அனுகூலமான சந்தை

முதன்மை அல்லது மிக அனுகூலமான சந்தையானது கம்பனி அணுகத்தக்கதாக இருக்க வேண்டும். சொத்தொன்றின் அல்லது பொறுப்பொன்றின் சீர்மதிப்புப் பெறுமதியானது தமது அதிகூடிய பொருளாதார நலனுக்காக சந்தைப் பங்கேற்பாளர்கள் செயற்படுகின்றனர் என்பதனை ஊகிக்கின்ற சொத்தினை அல்லது பொறுப்பினை விலை குறிக்கின்றபோது சந்தைப் பங்கேற்பாளர்கள் பயன்படுத்துகின்ற ஊகங்களைப் பயன்படுத்தி அளவிடப்படுகின்றது.

நிதியியல் அல்லாத சொத்தொன்றின் சீர்மதிப்புப் பெறுமதி அளவீடானது சொத்தினை அதன் அதிகூடிய மற்றும் சிறந்த பயன்பாட்டில் பயன்படுத்துவதன் மூலம் அல்லது சொத்தினை அதன் அதிகூடிய மற்றும் சிறந்த பயன்பாட்டில் பயன்படுத்தும் மற்றுமொரு சந்தைப் பங்கேற்பாளருக்கு அதனை விற்பனை செய்வதன் மூலம் பொருளாதார நலன்களை ஈட்டுவதற்கான சந்தைப் பங்கேற்பாளர்ரொருவரின் இயலுமையினைக் கருத்திற் கொள்கின்றது.

சூழ்நிலைக்கு பொருத்தமான விலைமதிப்பீட்டு நுட்பங்களை கம்பனி பயன்படுத்தப்படுவதுடன் இதற்காக சீர்மதிப்புப் பெறுமதியினை அளவிடுவதற்கு தொடர்புடைய அவதானிக்கத்தக்க உள்ளீடுகள் பயன்பாட்டினை உச்சப்படுத்துகின்ற மற்றும் அவதானிக்க முடியாத உள்ளீடுகள் பயன்பாட்டை குறைகின்ற போதிய தரவுகள் கிடைக்கப் பெறுகின்றன.

நிதியியல் கூற்றுக்களில் சீர்மதிப்புப் பெறுமதி அளவிடப்பட்டுள்ள அல்லது வெளிப்படுத்தப்பட்டுள்ள அனைத்து சொத்துக்களும் பொறுப்புக்களும் மொத்தமாக சீர்மதிப்புப் பெறுமதி அளவீடுகளுக்கு முக்கியமாக விளங்குகின்ற குறைந்த மட்ட உள்ளீட்டினை அடிப்படையாகக் கொண்ட பின்வருமாறு விவரிக்கப்படும் சீர்மதிப்புப்பெறுமதி படிநிலையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன:

- மட்டம் 1- ஒரே மாதியான சொத்துகளுக்கு அல்லது பொறுப்புகளுக்கு செயற்பாடுமிக்க சந்தைகளில் குறிக்கப்பட்ட (சீர்செய்யப்படாத) சந்தை விலைகள்

- மட்டம் 2 - சீர்மதிப்புப்பெறுமதி அளவீட்டுக்கு முக்கியமானதாக விளங்குகின்ற குறைந்த மட்ட உள்ளீடு நேரடியாக அல்லது நேரடியற்று அவதானிக்கப்படுகின்ற விலைமதிப்பீட்டு நுட்பங்கள்

- மட்டம் - 3 சீர்மதிப்புப்பெறுமதி அளவீட்டுக்கு முக்கியமானதாக விளங்குகின்ற குறைந்தமட்ட உள்ளீடானது சீர்மதிப்புப்பெறுமதி வெளிப்படுத்தல் நோக்கத்திற்காக அவதானிக்கமுடியதாகவுள்ள விலைமதிப்பீட்டு நுட்பங்கள், சொத்தின் அல்லது பொறுப்பின் தன்மை, பண்புகள் மற்றும் இடர்நேர்வுகள் மற்றும் மேலே விளக்கப்பட்டவாறு சீர்மதிப்புப் பெறுமதி ஒழுங்குமுறை என்பவற்றின் அடிப்படையில் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் வகுப்புகளை கம்பனி நிர்ணயிக்கின்றது.

### 2.5.7 பதிவேட்டுப் பொருட்கள்

பாவணைக்குதவாத மற்றும் மெதுவாக நகருகின்ற பொருட்களுக்கு உரிய ஒதுக்கீடுகளை மேற்கொண்டபின்னர் குறைந்த செலவிலும் நிகர தேறத்தக்க பெறுமதியிலும் விலைமதிப்பிடப்படுகின்றன. நிகரதேறத்தக்க பெறுமதி என்பது நிறைவு செய்வதற்கு மதிப்பிட்ட செலவு மற்றும் விற்பனை செய்வதற்கு அவசியமான மதிப்பிடப்பட்ட செலவு என்பவற்றைக் கழித்து சாதாரண வியாபாரத்தில் பதிவேட்டு பொருட்களை விற்பனை செய்யக்கூடிய விலையாகும்.

பதிவேட்டுப் பொருட்களின் தற்போதைய அமைவிடத்திற்கு மற்றும் நிலைமைகளுக்கு அவற்றைக் கொண்டுவருவதற்கு ஏற்பட்ட செலவுகள் பின்வரும் செலவுச் சூத்திரத்தினைப் பயன்படுத்தி கணக்கிடப்படுகின்றன:

| | |
|---|---|
| திருத்தவேலைகளுக்கான நுகர் பொருட்கள், மோட்டார் உதிரிப்பாகங்கள் பொதுவான வன் பொருட்கள் | - நிறையேற்றப்பட்ட சராசரி அடிப்படையில் கொள்வனவுச் செலவில் |
| முடிவுப் பொருட்கள | - உண்மையான கொள்வனவுச் செலவில் |

### 2.5.8 ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள்

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள், நாளாந்த நன்நிலைப்படுத்தல் செலவுகள் நீங்கலாக, ஒன்றுசேர்ந்த பெறுமானத் தேய்வினையும் பெறுமதியில் ஒன்றுசேர்ந்த மதிப்பிழப்பினையும் கழித்து கிரயத்தில் குறிப்பிடப்படுகின்றன. அத்தகைய கிரயங்கள் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் பாகத்தினை மாற்றீடு செய்கின்றபோது ஏற்படுகின்ற செலவு, இனங்காணுதல் மூலப்பிரமாணத்தினை நிறைவு செய்யுமாயின், உள்ளடக்கப்படுகின்றது.

முன்னெடுக்கப்படும் மூலதனப் பணியானது பொறுப்பேற்கப்பட்டுள்ள மற்றும் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு இன்னும் பூர்த்தியடையாத நிலையிலுள்ள பணி மீது கொடுப்பனவு செய்யப்பட்ட அனைத்து

# நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்

2022 டிசம்பர் 31 அன்று முடிவுற்ற ஆண்டுக்கானது

தொகைகளையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

காணியானது முடிவற்ற ஆயுளை கொண்டிருப்பதாக கருதப்படுகின்றமையினால் பெறுமானத்தேய்வு செய்யப்படுவதில்லை. தேய்மானமானது பயன்பாட்டுக்காக கிடைக்கப்பெறுகின்ற திகதியிலிருந்து ஆரம்பிக்கின்ற அத்சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயன்பாடுமிக்க ஆயுட்காலங்களின் மீது அவற்றின் எஞ்சியுள்ள பெறுமதிகளுக்கு ஒவ்வொரு சொத்தினதும் செலவினை ஒதுக்கீடு செய்வதற்காக நேர்கோட்டு முறை அடிப்படையில் கணிக்கப்படுகின்றது. சொத்துக்கள் விற்பனை செய்யப்படுவதன் மீது சொத்தானது இனங்காணப்படாத திகதியில் பெறுமானத் தேய்வு நிறுத்தப்படுகின்றது.

சொத்தினது எஞ்சியுள்ள பெறுமதிகள், பயன்பாடுமிக்க ஆயுட்காலங்கள் மற்றும் பெறுமானத்தேய்வு முறை என்பன குறைந்தது ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் மீளாய்வுசெய்யப்பட்டு ஏற்புடதாயின் சீர்செய்யப்படும்.

சொத்தொன்றின் மதிப்பிடப்பட்ட மீளஅறவிடத்தக்க தொகையினை விட அது கொண்டுள்ள தொகை பெரிதாகவிருப்பின் சொத்து கொண்டுள்ள தொகையானது உடனடியாக பெறுமதி குறைக்கப்படும்.

கொண்டுள்ள தொகையுடன் பெறுகைகளை ஒப்பிடுவதன் மூலம் விற்பனைகள் மீதான வருவாய்களும் இழப்புகளும் நிர்ணயிக்கப்படுவதுடன் வருமான கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 2.5.9 குத்தகைக்கான கணக்கு - நிறுவனம் குத்தகைதாரராக இருக்கின்றவிடத்து

ஒப்பந்தம் ஒரு ஒப்பந்தமா அல்லது குத்தகையை உள்ளடக்கியதா என்பதை ஒப்பந்தத்தின் தொடக்கத்தில் நிறுவனம் மதிப்பிடுகிறது. பரிசீலனைக்கு ஈடாக ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அடையாளம் காணப்பட்ட சொத்தின் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தும் உரிமையை ஒப்பந்தம் தெரிவிக்கிறது. குறுகிய கால குத்தகைகள் தவிர, அனைத்து குத்தகைகளுக்கும் ஒரே அங்கீகாரம் மற்றும் அளவீட்டு அணுகுமுறையை நிறுவனம் பயன்படுத்துகிறது. குறைந்த மதிப்புள்ள சொத்துகளின் குத்தகை.குத்தகைக் கொடுப்பனவுகளைச் செய்வதற்கான குத்தகைப் பொறுப்புகள் மற்றும் அடிப்படை சொத்துகளைப் பயன்படுத்துவதற்கான உரிமையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உரிமைக்கான சொத்துக்களை நிறுவனம் அங்கீகரிக்கிறது.

#### பயன்பாட்டு உரிமை

சொத்து நிறுவனம் 2020 ஆம் ஆண்டில் பயன்படுத்துவதற்கான உரிமை சொத்துக்களை மறுபரிசீலனை செய்கிறது. பயன்பாட்டிற்கான சொத்துக்கள் செலவு, குறைவான திரட்டப்பட்ட தேய்மானம் மற்றும் குறைபாடு இழப்புகள் மற்றும் குத்தகைப் பொறுப்புகளின் மறுஅளவீடுகளுக்கு சரிசெய்யப்படுகின்றன. பயன்பாட்டிற்கான உரிமைச் சொத்துகளின் விலையானது, அங்கீகரிக்கப்பட்ட குத்தகைப் பொறுப்புகளின் எண்ணிக்கை, ஆரம்ப நேரடிச் செலவுகள் மற்றும் தொடக்கத் தேதியில் அல்லது அதற்கு முன் செய்யப்பட்ட குத்தகைக் கொடுப்பனவுகள் ஆகியவை அடங்கும். குத்தகைக் காலம் மற்றும் சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலம் ஆகியவற்றில் கீழ்க்கண்டவாறு பயன்படுத்துவதற்கான உரிமைச் சொத்துக்கள் ஒரு நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானம் செய்யப்படுகின்றன.

மோட்டார் வாகனங்கள் - இயக்க குத்தகை காலம் 5 ஆண்டுகள்

### 2.5.10 அருவச் சொத்துக்கள்

#### அ) தொழில்முயற்சி வளத்திட்டமிடல் (ERP) முறைமையும் உரிமக் கட்டணங்களும்

கொள்வனவு செய்யப்பட்ட மென்பொருள் பிரயோகங்களின் உரிமங்களுடன் தொடர்புடைய செலவுகளை உரிமக்கட்டணங்கள் உள்ளடக்குகின்றன. உரிமக்கட்டணங்கள் திரண்ட பெறுமதிக்குறைப்பினை கழித்து கிரயத்தில் கொண்டு செல்லப்படுகின்றன. பெறுமதிகுறைத்தலானது 5 வருடங்கள் கொண்ட அவற்றின் மதிப்பிடப்பட்ட பயன்பாடுமிக்க ஆயுட்காலங்களின் மீது உரிமங்களின் செலவினை ஒதுக்கீடு செய்வதற்கு நேர்கோட்டு முறையினைப் பயன்படுத்தி கணிக்கப்படுகின்றது.

### 2.5.11 காசும் காசுக்கு சமமானவையும்

காசு மற்றும் காசுக்கு சமமானவை என்பது கையில் உள்ள காசு, கேள்வி வைப்புக்கள் மற்றும் அறிந்த பணத்தொகைகளுக்கு உடனடியாக மாற்றக்கூடிய அத்துடன் பெறுமதி மாற்றத்தின் முக்கியமற்ற இடருக்குட்படுகின்ற குறுகிய கால உயர் திரவத்தன்மை முதலீடுகள் என வரையறை செய்யப்பட்டவையாகும்.

காசுப்பாய்ச்சல் கூற்று நோக்கத்திற்காக காசும் காசுக்கு சமமானவையும் கையுள்ள காசு, நிலுவையாகவுள்ள வங்கி மேலதிகப்பற்றுக்களைக் கழித்து வங்கியிலுள்ள வைப்புக்கள், ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. மூன்று மாதங்கள் அல்லது அதனைவிடக் குறைந்த அடிப்படை முதிர்ச்சிகளுடனான முதலீடுகளும் காசுக்கு சமமானவையாக கொள்ளப்படுகின்றன.

### 2.5.12 நிதியமல்லாத சொத்துக்களின் சேதஇழப்பு

வரையறையற்ற பயன்பாடுமிக்க ஆயுட்காலமொன்றினைக் கொண்டுள்ள சொத்துக்கள் பெறுமதி குறைப்புக்கு உட்படுவதில்லை என்பதுடன் பெறுமதி குறைப்புக்காக வருடாந்தம் பரீட்சிக்கப்படுகின்றன. பெறுமதிக்குறைப்பிற்கு உட்படுகின்ற சொத்துக்கள் அவை கொண்டு செல்கின்ற தொகை அறவிடப்பட முடியாமலிருக்கலாம் என குறித்துக் காட்டுகின்ற சூழ்நிலைகளின் நிகழுகின்றபோது அல்லது மாற்றங்களின் போதுமதிப்பிழப்பிற்காக மீளாயப்படுகின்றன. பெறுமதி இழப்பு நட்டமொன்று சொத்தின் கொண்டு செல்லுகின்ற தொகை அதன் அறவிடத்தக்க தொகையினை விஞ்சுகின்ற தொகைக்காக பெறுமதி இழப்பொன்று இனங்காணப்படுகின்றது. மீளஅறவிடத்தக்க தொகையானது விற்பதற்கான செலவுகள் மற்றும் பயன்பாட்டுப் பெறுமதி என்பவற்றைக் கழித்து சொத்தொன்றின் சீர்மதிப்புப் பெறுமதியின் உயர்வானதாகும். மதிப்பிழத்தலினை கணிப்பிடும் நோக்கத்திற்காக சொத்துக்கள் ஆக்குறைந்த மட்டங்களில் வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் இதற்காக வேறாக இனங்காணத்தக்க காசுப்பாய்ச்சல்கள் காணப்படுகின்றன (பணம் ஈட்டுகின்ற அலகுகள்).

### 2.5.13 ஏற்பாடுகள்

கடப்பாட்டினை தீர்ப்பனவு செய்வதற்கு பொருளாதார நலன்களை உள்ளடக்குகின்ற வள வெளிப்பாய்ச்சலொன்று தேவைப்படும் என்ற நிகழ்வு காணப்படுகின்றவிடத்து மற்றும் கடப்பாட்டின் தொகை பற்றி நம்பத்தகுந்த மதிப்பீடொன்றினை மேற்கொள்ளக்கூடியதாகவிடத்து கடந்த காலத்தின் விளைவொன்றாக கம்பனியானது தற்கால கடப்பாடொன்றினை (சட்டரீதியான அல்லது ஆக்கபூர்வமான) கொண்டுள்ளபோது ஏற்பாடுகள் இனங்காணப்படுகின்றன. ஏற்பாடு சிலவற்றை அல்லது அனைத்தையும் மீள்நிரப்பப்படுவதற்கு கம்பனி எதிர்பார்க்கப்படுகின்றபோது மீள்நிரப்பலானது தனியான சொத்தொன்றாக இனங்காணப்படுகின்றது ஆயினும் மீள்நிரப்பலானது தோற்றநிலையில் நிச்சயமானதாக இருக்கும்போது மாத்திரமாகும். ஏதேனும் ஏற்பாட்டுடன் தொடர்புடைய செலவானது ஏதேனும் மீள்நிரப்பலினை கழித்து வருமானக்கூற்றில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. பணத்தின் காலப்பெறுமதித் தாக்கம் முக்கியமானதாயின் பணத்தின் நடைமுறைச் சந்தை மதிப்பீடுகளை பிரதிபலிக்கின்ற வரிக்கு முந்திய வீதமொன்றில் எதிர்பார்க்கப்பட்ட எதிர்காலக் காசுப்பாய்ச்சல்களை அத்துடன் பொருத்தமானவிடத்து, பொறுப்பிற்கான குறித்துரைத்த இடர்நேர்வுகளையும் கழிப்பதன் மூலம் ஏற்பாடுகள் நிர்ணயிக்கப்படுகின்றன. கழிவுசெய்தல் பயன்படுத்துகின்றவிடத்து, காலப்போக்கின் காரணமாக ஏற்பாட்டிலுள்ள அதிகரிப்பானது வட்டிச் செலவொன்றாக இனங்காணப்படுகின்றது.

### 2.6 ஊழியர் நலன்கள்

#### அ) வரையரை செய்யப்பட்ட ஊழியர் நலன்கள் - பணிக்கொடை

கம்பனியானது ஒவ்வொரு ஆண்டும் "எதிர்வுகூறப்பட்ட அலகு வரவு முறை" இனைப்பைப்பயன்படுத்தி கணிப்பீட்டாளரின் ஆலோசனையுடன் வறையரைசெய்யப்பட்ட திட்டமொன்றான பணிக்கொடைக் கடப்பாட்டின் வாக்குறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய நலப்பெறுமதிகளை அளவிடுகின்றது. கணிப்பீட்டு வருவாய்களும் இழப்புகளும், அதுதோன்றுகின்ற காலத்தில் ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக்கூற்றில் இனங்காணப்படுகின்றன. பொறுப்பு இனங்காணப்படுவதில்லை.

**கணிப்பீட்டு வருவாய்களையும் இழப்புகளையும் இனங்காணுதல்**

கணிப்பீட்டு வருவாய்களும் இழப்புகளும் அவை தோன்றுகின்ற வருடத்தில் ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக்கூற்றில் இனங்காணப்படுகின்றன.

#### ஆ) வரையறை செய்யப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள்

கம்பனியானது வரையறை செய்யப்பட்ட பங்களிப்புத் திட்டமொன்றினையும் தொழிற்படுத்துகின்றது. வரையறை செய்யப்பட்ட பங்களிப்பு திட்டமொன்றுக்கு செலுத்தத்தக்க பங்களிப்பானது ஊழியர்கள் மூலம் கம்பனிக்கு வழங்கப்படும் சேவைகளுக்கான பங்கொன்றாகவுள்ளதுடன் 'ஆளணிச் செலவுகள்" இன் கீழ் செலவொன்றாக பதிவுசெய்யப்படுகின்றது. கொடுப்பனவு செய்யப்படாத பங்களிப்புகள், பொறுப்பொன்றாகப் பதிவுசெய்யப்படுகின்றன.

கம்பனியானது பின்வரும் திட்டங்களுக்கு பங்களிப்புச் செய்கின்றது.:

**ஊழியர் சேமலாப நிதியம்**

கம்பனியும் ஊழியர்களும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ஊழியரின் மாதாந்த மொத்த சம்பளத்தில் (மேலதிக நேரம் நீங்கலாக) முறையே 15% மற்றும் 10% இனை பங்களிக்கின்றன.

**ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்**

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையினால் பேணப்படுகின்ற ஊழியர் நிதியச் சபையினால் பேணப்படுகின்ற ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு ஊழியரின் மாதாந்த மொத்த சம்பளத்தின் மேலதிக நேரம் நீங்கலாக 3% இனை கம்பனி பங்களிக்கின்றது.

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியமானது ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையினால் பேணப்படுகின்றது.

#### இ) மருத்துவ நன்மைத் திட்டம்

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடெட் ஊழியர்களுக்கான மருத்துவ நன்மைத்திட்டமானது அலியான்ஸ் இன்சூரன்ஸ் கம்பனி லிமிடெட் மூலம் முகாமைசெய்யப்படுகின்றது. கம்பனி மூலமான காப்புறுதிச் செலவு ஆண்டின்போது செலவொன்றாக இனங்காணப்பட்டுள்ளது.

### 2.7 பங்குடமையாளர்கள் ஒப்பந்தம் மற்றும் பங்குவிற்பனை கொள்வனவு உடன்படிக்கை - பொதுப்பயன்பாட்டாளர் வசதிகள் காலாவதியாதல்

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை இந்தியக் கம்பனி பீஎல்சி மற்றும் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடெட் ஆகியவற்றுக்கிடையிலான பங்குடமையாளர்கள் உடன்படிக்கையும் - பொதுப்பாயன்பாட்டாளர் வசதிகள், 2008 டிசெம்பர் 31 அன்று காலாவதியாகியிருந்தது. சொல்லப்பட்ட ஒப்பந்தத்தின் மீளப்புதுப்பித்தல் அல்லது நீடித்தல் நிறைவுசெய்யப்படவில்லை என்பதுடன் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட வருமானமும் செலவினங்களும் சொல்லப்பட்ட நியதிகளையும் கம்பனியின் பணிப்பாளர்களால் அனுமதிக்கப்பட்டுள்ள அதனைத் தொடர்ந்த ஏதேனும் மாற்றங்களையும் கருத்திற் கொண்டதன் பின்னர் இந்நிதியியல் கூற்றுகளில் கணக்கில் கொள்ளப்பட்டுள்ளன.

# நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்

2022 டிசம்பர் 31 அன்று முடிவுற்ற ஆண்டுக்கானது

| | | 2022 ரூ. | 2021 ரூ. மீளக்குறிப்பிடபட்டது |
|---|---|---|---|
| **3.** | **வருமானம்** | | |
| **3.1** | **செயன்முறைப்படுத்தல் வருமானம்** | | |
| | முன்னைய வருமானம் | 6,891,331,880 | 8,363,888,241 |
| | தொழிற்படுத்தல் இலாபம் | 2,492,318,423 | 2,983,425,462 |
| | | 9,383,650,303 | 11,347,313,703 |
| | **சேவைகளை வழங்குதல்** | | |
| | போக்குவரத்து வருமானம் | 49,665,783 | 2,928,875,589 |
| | | 49,665,783 | 2,928,875,589 |
| | **மொத்த வருமானம்** | 9,433,316,086 | 14,276,189,292 |
| **4** | **ஏனைய தொழிற்படுத்தல் வருமானம்** | | |
| | அலுவலர் கடன் மற்றும் எனையவை மீதான வட்டி | 699,532,464 | 457,423,182 |
| | ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் | 3,808,632 | (69,236) |
| | வாடகை வருமானம் | 11,922,876 | 10,941,824 |
| | விடுவிப்பு கட்டணங்கள் | 2,290,000 | 4,930,000 |
| | ஆய்வுகூடப் பரிசோதனைக் கட்டணங்கள் | 188,028,587 | 99,938,982 |
| | தனியார் பவுசர் சாரதிகளை சுமையார்ளுக்கான பயிற்சி | 9,764,294 | 3,368,649 |
| | கழிவு விற்பனைகள் | 19,004,039 | 9,718,504 |
| | தீயணைப்பு கருவிகளின் சேவை | 72,590 | 441,132 |
| | அளவீட்டுக் கட்டணங்கள் | 6,262,750 | 6,657,077 |
| | செலாவணி இலாபம் / நட்டம் | 356,398,600 | 92,104,967 |
| | நானாவித வருமானம் | 8,053,489 | 18,055,837 |
| | சுற்றுலாவிடுதி பங்களா வருமானம் | 507,800 | 95,400 |
| | மீளளிக்கப்படாததகேள்வி வைப்புகள் | 2,856,374 | 1,905,491 |
| | நீண்டகால கடன் கொடுனர்களின் மீதி நிலுவையின் பதிவழிப்பு | - | - |
| | | 1,308,502,495 | 705,511,810 |
| **4.1** | **மீளப்பெறமுடியாத கடன்களின் பதிவழிப்பு** | - | 174,338,317 |
| | | - | 174,338,317 |
| **5.** | **நிதி வருமானம்** | | |
| | **நிதி வருமானம்** | | |
| | ரெபோ முதலீடுகளின் மீதான வட்டி | 58,806,447 | 29,087,636 |
| | வைப்புகள் மீதான வட்டி | 226,474,947 | 172,483,601 |
| | | 285,281,394 | 201,571,237 |

| | 2022<br>ரூ. | 2021<br>ரூ.<br>மீளக்குறிப்பிடபட்டது |
|---|---|---|
| **6. வரிக்கு முந்திய இலாம்** | | |
| **அறவிடுதல்/வரவு வைத்தலுக்கு பின்னர் குறிக்கப்பட்டது** | | |
| **நேரடிச் செலவுகளில் உள்ளடக்கப்பட்டவை** | | |
| தனிப்பட்ட செலவு | 3,190,140,824 | 3,188,058,702 |
| ஆண்டுக்கான பெறுமானத் தேய்வு விதிப்பனவு | 681,494,842 | 727,384,093 |
| **நிருவாகச் செலவில் உள்ளடக்கப்பட்டவை** | | |
| பணிப்பாளர்களின் வேதனாதிகள் | 4,500,145 | 7,957,893 |
| பணிப்பாளர்களுக்கான கட்டணங்கள் | 1,737,500 | 2,090,000 |
| ஆளணிச் செலவு | 3,555,055,732 | 3,720,333,582 |
| வரையறை செய்யப்பட்ட நல கடப்பாடு ஆண்டுக்கான விதிப்பனவு | 270,587,099 | 242,758,885 |
| கணக்காய்வுக் கட்டணம் | 2,780,000 | 1,920,000 |
| ஆண்டுக்கான பெறுமானத் தேய்வு விதிப்பனவு | 164,957,443 | 165,759,980 |
| ஆண்டுக்கான மதிப்புக் குறைப்பு விதிப்பனவு | 29,775,640 | 28,186,363 |
| ஊழியர் கடனுக்கான பற்றாக்குறைக்கான கொடுப்பனவுகள் / (திருப்புதல்கள்) | (9,483,126) | 33,641,168 |
| பதிவேட்டுப் பொருள் மேலதிக ஏற்பாட்டின் திரும்பல் | 324,325 | 630,498 |

## 7. வரிச் செலவுகள்

2022 டிசம்பர் 31, 2021 டிசம்பர் 31 இல் ஆடிவுற்ற ஆண்டுகளுக்கான வருமான வரிச் செலவுகளில் பிரதான கூறுகள் பின்வருமாறு

| | 2022<br>ரூ. | 2021<br>ரூ.<br>மீளக்குறிப்பிடபட்டது |
|---|---|---|
| **7.1 வருமான வரி கூற்று** | | |
| **நடப்பு வருமான வரி** | | |
| நடப்பு வரிச் செலவு | - | 505,568,268 |
| முன்னைய ஆண்டு தொடர்பில் நடப்பு வரிகளின் குறைந்த / மேலதிக | (3,194,266) | (6,928,800) |
| **பிற்போடப்பட்ட வரி** | | |
| பிற்போடப்பட்ட வரிவிதிப்பு வரவு (குறிப்பு 08) | 357,806,322 | (89,603,710) |
| **நிதிக்கூற்றில் அறிக்கையிடப்பட்ட வருமான வரிச் செலவு / (வரவு)** | 354,612,056 | 409,035,758 |

# நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்

2022 டிசம்பர் 31 அன்று முடிவுற்ற ஆண்டுக்கானது

## 7. நிதிச் செலவுகள் தொடர்ச்சி

### 7.2

2022 டிசம்பர் 31 இல் மற்றும் 2021 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுகளுக்காக நியதிச்சட்ட வரி வீதத்தினால் கணக்கீட்டு இலாபத்தின் வரிச் செலவுகள் மற்றும் உற்பத்திகளுக்கு இடையிலான இணக்கம் பின்வருமாறு

| | 2022<br>ரூ. | 2021<br>ரூ.<br>மீளக்குறிப்பிடபட்டது |
|---|---:|---:|
| வரிக்கு முன்னர் கணக்கீட்டு இலாபம் | (704,084,743) | 1,595,321,623 |
| ஒன்று சேர்க்கப்பட்ட அனுமதிக்கப்படாத விடயங்கள் | 911,087,610 | 1,388,180,547 |
| ஒன்று சேர்க்கப்பட்ட அனுமதிக்கப்பட்ட விடயங்கள் | (1,855,359,290) | (1,168,462,126) |
| | (1,648,356,423) | 1,815,040,044 |
| வட்டி வருமானம் | 431,467,843 | 291,494,405 |
| மொத்த நியதிச்சட்ட வருமானம் | (1,216,888,580) | 2,106,534,449 |
| கழிக்குக: பயன்படுத்தப்பட்ட முன்கொண்டு செல்லப்பட்ட வரி இழப்புகள் | - | - |
| வரிவிதிக்கத்தக்க இலாபம் / (நட்டம்) | (1,216,888,580) | 2,106,534,449 |
| வரிவிதிக்கத்தக்க வருமானத்திற்கான வருமான வரி | - | 505,568,268 |
| நடப்பு வருமான வரிச் செலவுகள் | - | 505,568,268 |

## 8. பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புகள்

### 8.1 பிற்போடப்பட்ட வரி

பின்வருவனவற்றுடன் தொடர்புடைய பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் வருமானவரி

| | நிதியியல் நிலைக் கூற்று | | அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக்கூற்று | | ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக்கூற்று | |
|---|---:|---:|---:|---:|---:|---:|
| | 2022<br>ரூ. | 2021<br>ரூ. | 2022<br>ரூ. | 2021<br>ரூ. | 2022<br>ரூ. | 2021<br>ரூ. |
| **பிற்போடப்பட்ட வரி பொறுப்பகள்** | | | | | | |
| வரி நோக்கங்களுக்கான | | | | | | |
| மூலதனச் ஒதுக்கீடுகள் | 2,483,277,026 | 1,999,721,176 | 483,555,850 | (79,614,948) | - | |
| அருவர் சொத்துக்கள் | 7,589,171 | 10,292,598 | (2,703,427) | 3,585,265 | - | |
| | 2,490,866,197 | 2,010,013,774 | | | | |
| **பிற்போடப்பட்ட வரி சொத்துக்கள்** | | | | | | |
| பொருட் பதிவேடுகள் | 5,122,349 | 4,020,042 | (1,102,308) | (151,320) | - | |
| ஏற்பாடுகள் | 9,585,932 | 9,944,696 | 358,764 | (8,073,880) | - | |
| வரையறை செய்யப்பட்ட நலத் திட்டங்கள் | 385,161,856 | 386,237,798 | (122,302,557) | (5,348,827) | (8,042,309) | 102,865,531 |
| வரையறை செய்யப்படாத நலத் திட்டங்கள் | - | - | - | - | - | |
| | 399,870,137 | 400,202,535 | | | | |
| பிற்போடப்பட்ட வருமானம் | | | | | | |
| **தேறிய பிற்போடப்பட்ட பொறுப்பு/(சொத்துக்கள்)** | 2,090,996,061 | 1,609,811,239 | 357,806,322 | (89,603,711) | 123,378,500 | 102,865,531 |

## 8.2 வருமான வரி வீதத்தில் மாற்றத்தின் தாக்கம்

30.0% விளைவு வட்டி வீதத்தினை பயன்படுத்தி பிற்போடப்பட்ட வரி கணிக்கப்பட்டுள்ளது. தனி வரி வீதங்கள், வரிவிதிக்கத்தக்க வருமானத்தில் வேறுபட்ட மட்டங்களுக்கு பிரயோகிக்கப்பட்டு 2022.12.31 அன்றுள்ளவாறு பிற்போடப்பட்ட வரிப்பொறுப்பபில் 481,184,822/- அதிகரிப்பதற்கு வழிவகுத்தது.

2022 இன் 45 ஆம் இலக்க உண்ணாட்டரசிறை (திருத்தம்) சட்டத்தை (2022 டிசம்பர் 19 அன்று சான்றுப்படத்தப்பட்டது) அநுசரித்து, 2022.10.01 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் வணிக வருமானத்தில் இருந்து கிடைக்கும் நிறுவன வருமான வரி 30 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டடுள்ளது. பிற்போடப்பட்ட வரியானது இகநி 12- வருமான வரிகள் இற்கு அமைவாக பொறுப்பு முறையின் அடிப்படையில் கணிக்கப்பட்டுள்ளமையினால், 2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட தற்காலிக வேறுபாடுகளுக்கு 30 சதவீதம் கொண்ட புதிய வரி வீதம் பிரயோகிக்கப்பட்டுள்ளது. வருமான வரி வீதிதங்களில் இம்மாற்றம் 2022.12.31 அன்று உள்ளவாறு கம்பனிக்கு ரூ. 564 மில்லியன மற்றும் ரூ. (27 மில்லியன்) கொண்ட பிற்போடப்பட்ட வரிச்செலவுகளுக்கு/(திரும்பல்களுக்கு) வழிவகுத்தது.

## 9. பங்கொன்றிற்கான உழைப்பு

**9.1** பங்குரிமையாளர்களுக்கு உடமையாக்கத்தக்க காலத்திற்கான தேறிய இலாபத்தினால் பிரிப்பதன் மூலம் கணிக்கப்படுகின்றது. காலத்தின் போதும் முன்னைய காலத்தின் போதும் நிலுவையாக உள்ள சாதாரண பங்களின் நிறைவேற்றப்பட்ட சராசரி எண்ணிக்கையானது மிகை ஊதியம் வழங்கல் போன்ற வழங்கலின் நேரொத்த மாற்றம் ஒன்று இன்றி நிலவையாக உள்ள சாதாரண பங்குகளின் எண்ணிக்கையில் மாற்றம் செய்கின்ற நிகழ்வுக்காக சரி செய்யப்படுகின்றது.

**9.2** பின்வருவன பங்கொன்றுக்கான உழைப்பினை கணிப்பதில் பயன்படுத்தப்படும் வருமான மற்றும் பங்குத் தரவுகளை பிரதிபலிக்கின்றது

| | 2022<br>ரூபா | 2021<br>ரூபா<br>மீளக்குறிப்பிடபட்டது |
|---|---|---|
| **தொகுதியாக பயன்படுத்தப்பட்ட தொகை** | | |
| பங்கொன்றிற்கான அடிப்படை உழைப்பிற்கான சாதாரண பங்கு உரிமையாளர்களுக்கு உடமையாக்கத்தக்க தேறிய இலாபம் | (1,058,696,799) | 1,169,211,614 |
| **பகுதி எண்ணிக்கையாக பயன்படுத்தப்படும் சாதாரண பங்குகளின் எண்ணிக்கை** | | |
| வழங்கலில் உள்ள சாதாரண பங்குகளின் நிறையேற்றப்பட்ட சராசரி எண்ணிக்கை | 750,000,000 | 750,000,000 |
| பங்கொன்றிற்கான அடிப்படை உழைப்பிற்கு ஏற்படையது பங்கொன்றிற்கான உழைப்பு | (1.41) | 1.56 |

# நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்

2022 டிசம்பர் 31 அன்று முடிவுற்ற ஆண்டுக்கானது

## 10. ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்

### 10.1 மொத்த கொண்டு செல்லும் தொகை

| கிரயத்தில் | இருப்பு 01.01.2022 ரூபா | சேர்த்தல்கள் ரூபா | இடமாற்றங்கள் ரூபா | அகற்றுதல்கள் ரூபா | இருப்பு 31.12.2022 ரூபா |
|---|---|---|---|---|---|
| நிரந்தர காணி | 4,805,518,404 | | | | 4,805,518,404 |
| நிரந்தர கட்டிடம் | 1,795,929,730 | 982,270 | 116,577,664 | (804,000) | 1,912,685,664 |
| களஞ்சிய தாங்கி | 7,000,110,481 | | 1,670,269,925 | (7,663,000) | 8,662,717,406 |
| மோட்டார் வாகனங்கள் | 1,870,359,156 | | | | 1,870,359,156 |
| குழாய்த்தொகுதி | 7,796,662,802 | 26,858,632 | | | 7,823,521,434 |
| தளபாடங்கள் பொருத்திகள் மற்றும் உபகரணங்கள் | 2,324,542,855 | 39,939,690 | 22,003,591 | (2,022,195) | 2,384,463,941 |
| கணினிகள் | 333,993,614 | 8,010,300 | | | 342,003,914 |
| தனி இரட்டை நிலை இறக்கும் மிதவை | 3,330,770,472 | 26,588,798 | 9,119,003 | | 3,366,478,272 |
| பம்புகளும் நிலைத் தூண்களும் | 1,502,334,782 | 5,587,793 | | | 1,507,922,575 |
| பெறுமானம் தேயத்தக்க சொத்துக்கள் | 707,203 | 194,155 | | | 901,358 |
| **சொத்துக்களின் மொத்த ஆகுசெலவு** | 30,760,929,500 | 108,161,638 | 1,817,970,183 | (10,489,195) | 32,676,572,126 |
| **முன்னெடுக்கப்படும் மூலதனப்பணி** | 2,041,175,887 | 817,306,353 | (1,817,970,183) | (11,694,929) | 1,028,817,128 |
| | 32,802,105,387 | 925,467,991 | - | (22,184,124) | 33,705,389,254 |

### 10.2 பெறுமானத் தேய்வு

| கிரயத்தில் | இருப்பு 01.01.2022 ரூபா | சேர்த்தல்கள் ரூபா | இடமாற்றங்கள் ரூபா | அகற்றுதல்கள் ரூபா | இருப்பு 31.12.2022 ரூபா |
|---|---|---|---|---|---|
| நிரந்தர கட்டிடம் | 783,387,307 | 53,338,770 | | (426,001) | 836,300,076 |
| களஞ்சிய தாங்கி | 3,090,992,422 | 175,798,767 | | (7,663,000) | 3,259,128,189 |
| மோட்டார் வாகனங்கள் | 1,740,591,332 | 96,733,511 | | | 1,837,324,843 |
| குழாய்த்தொகுதி | 4,054,524,635 | 290,251,620 | | | 4,344,776,255 |
| தளபாடங்கள் பொருத்திகள் மற்றும் உபகரணங்கள் | 1,989,588,093 | 77,635,727 | | (222,759) | 2,067,001,061 |
| கணினிகள் | 268,876,732 | 33,838,165 | | | 302,714,898 |
| தனி இரட்டை நிலை இறக்கும் மிதவை | 3,116,473,815 | 85,663,081 | | | 3,202,136,896 |
| பம்புகளும் நிலைத் தூண்களும் | 1,240,045,364 | 33,047,862 | | | 1,273,093,226 |
| பெறுமானம் தேயத்தக்க சொத்துக்கள் | 628,878 | 144,781 | | | 773,659 |
| | 16,285,108,578 | 846,452,285 | - | (8,311,760) | 17,123,249,103 |

| | 2022<br>ரூபா | 2021<br>ரூபா<br>மீளக்குறிப்பிடபட்டது |
|---|---|---|
| **10.3 தேறிய புத்தகப் பெறுமதி** | | |
| நிரந்தர காணி | 4,805,518,404 | 4,805,518,404 |
| நிரந்தர கட்டிடம் | 1,076,385,588 | 1,012,542,424 |
| களஞ்சிய தாங்கி | 5,403,589,218 | 3,909,118,059 |
| மோட்டார் வாகனங்கள் | 33,034,313 | 129,767,824 |
| குழாய்த்தொகுதி | 3,478,745,179 | 3,742,138,167 |
| தளபாடங்கள் பொருத்திகள் மற்றும் உபகரணங்கள் | 317,462,880 | 334,954,762 |
| கணினிகள் | 39,289,016 | 65,116,882 |
| தனி இரட்டை நிலை இறக்கும் மிதவை | 164,341,377 | 214,296,658 |
| பம்புகளும் நிலைத் தூண்களும் | 234,829,349 | 262,289,418 |
| முன்னெடுக்கப்படும் மூலதனப்பணி | 1,028,817,128 | 2,041,175,887 |
| பெறுமானம் தேயத்தக்க சொத்துக்கள் | 127,699 | 78,326 |
| **ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் கொண்டு செல்லும் மொத்தப் பெறுமதி** | 16,582,140,151 | 16,516,996,810 |

**10.4** நிதியாண்டில், நிறுவன சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களளை மொத்த மதிப்பு ரூபா. 925,467,991 (2021 -ரூபா.1,357,927,201). மொத்தமாக செலுத்துதல்கள் ரூ. 925,467,991 (2020 - ரூபா. 1,357,927,201) சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களை வாங்குவதற்காக இவ்வாண்டில் செய்யப்பட்டது. ஆண்டில் ரூ. 1,817,970,83 செயல்பாட்டில் இருந்து முக்கிய சொத்துகளுக்கு மாற்றப்பட்டது.

**10.6. பயன்பாட்டு உரிமைச் சொத்து**

ஆண்டு காலப்பகுதியில் அங்கீகரிக்கப்பட்ட பயன்பாட்டு உரிமைச் சொத்துக்கள் மற்றும் நகர்வுகள் ஆகியவை கீழே காட்டப்பட்டுள்ளன.

| | 2022<br>ரூபா | 2021<br>ரூபா<br>மீளக்குறிப்பிடபட்டது |
|---|---|---|
| **செலவு** | | |
| டிசம்பர் 31 இல் உள்ள இருப்பு | 42,309,263 | 42,309,263 |
| 01 ஜனவரி இல் SLFRS 16 ஐ ஏற்றுக் கொண்டதன் விளைவு | | |
| சேர்த்தல் மற்றும் மேம்பாடு | - | - |
| **டிசம்பர் 31 அன்று உள்ளவாறு மீதி** | 42,309,263 | 42,309,263 |
| **திரட்டப்பட்ட பெறுமதிக் குறைப்பு** | | |
| டிசம்பர் 31 இல் உள்ள இருப்பு | 39,900,751 | 31,438,898 |
| ஆண்டுக்கான கட்டணம் | 2,408,512 | 8,461,853 |
| **டிசம்பர் 31 அன்று உள்ளவாறு மீதி** | 42,309,263 | 39,900,751 |
| **டிசம்பர் 31இல் தேறிய புத்தக மதிப்பு** | - | 2,408,512.10 |

# நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்

2022 டிசம்பர் 31 அன்று முடிவுற்ற ஆண்டுக்கானது

## 10.7. பயன்பாட்டிற்கான உரிமை குத்தகை பொறுப்பு

குத்தகை பொறுப்புகளின் கொண்டு செல்லும் தொகைகள் மற்றும் அக்காலகட்டத்தின் நகர்வுகள் கீழே குறிப்பிடபட்டுள்ளன.

| | 2022<br>ரூபா | 2021<br>ரூபா<br>மீளக்குறிப்பிடபட்டது |
|---|---|---|
| டிசம்பர் 31 இல் இருப்பு | 2,665,004 | 11,771,450 |
| 01 ஜனவரி 2020 இன்படி SLFRS 16 ஐ ஏற்றுக் கொண்டதன் விளைவு | | |
| வட்டி திரட்டுதல் | - | 335,753 |
| கொடுப்பனவுகள் | (2,665,004) | (9,442,200) |
| **டிசம்பர் 31 அன்று உள்ளவாறு மீதி** | - | 2,665,004 |
| **டிசம்பர் 31 அன்று உள்ளவாறு மீதி** | | |
| தற்போதைய பொறுப்பு - | 2,665,004 | |
| நடப்பு அல்லாத பொறுப்பு | - | - |
| | - | 2,665,004 |

## 10.8 சொத்துக்களின் பயன்பாடுமிக்க ஆயுட்காலம் பின்வருமாறு மதிப்பிடப்பட்டுள்ளது

| | 2022 | 2021 |
|---|---|---|
| நிரந்தர கட்டிடங்கள் | 35 வருடங்கள் | 35 வருடங்கள் |
| களஞ்சியத் தாங்கிகள் | 40 வருடங்கள் | 40 வருடங்கள் |
| மொத்த தாங்கிகள் | 30 வருடங்கள் | 30 வருடங்கள் |
| குழாய்த்தொகுதி | 30 வருடங்கள் | 30 வருடங்கள் |
| பம்பிகள் | 20 வருடங்கள் | 20 வருடங்கள் |
| வாகனங்கள் | | |
| - புதிய கையகப்படுத்தல்கள் | 5 வருடங்கள் | 5 வருடங்கள் |
| - அங்கீகரிக்கப்பட்ட பொருட்கள் | எஞ்சியிருக்கும் பயன்பாடு மிக்க ஆயுட்கால மீது | |
| நிலைத் தூண்கள் | 15 வருடங்கள் | 15 வருடங்கள் |
| உபகரணங்கள் | | |
| - இலத்திரனியல் | 5 வருடங்கள் | 5 வருடங்கள் |
| - ஏனைய | 10 வருடங்கள் | 10 வருடங்கள் |
| தளபாடங்களும் பொருந்துகளும் | | |
| - வன்பொருள் | 5 வருடங்கள் | 5 வருடங்கள் |
| - ஏனையவை | | |
| முத்துராஜவெல ஏனைய சொத்துக்கள் | | |
| - இரட்டை நிலை இறக்கும் மிதவை | 10 வருடங்கள் | 10 வருடங்கள் |
| - PLEM | 10 வருடங்கள் | 10 வருடங்கள் |
| - குழாய்த்தொகுதி | 20 வருடங்கள் | 20 வருடங்கள் |
| கணனிகள் | 04 வருடங்கள் | 04 வருடங்கள் |

## 11. அருவச் சொத்துக்கள்

| | ERP முறைமை ரூபா | SAP ERP அனுமதி பத்திரம் ரூபா | தன்னியக்க முறைமை குழாய்த்தொகுதி ரூபா | மொத்தம் ரூபா |
|---|---|---|---|---|
| **11.1 மொத்த கொண்டு செல்லும் தொகை** | | | | |
| 2022.01.01 அன்று உள்ளவாறு | 561,374,796 | 9,380,250 | 37,793,560 | 608,548,606 |
| சேர்தல்கள் | - | - | - | - |
| அகற்றல்கள் | - | - | - | - |
| 2022.12.31 அன்று உள்ளவாறு | 561,374,796 | 9,380,250 | 37,793,560 | 608,548,606 |

| | ERP முறைமை ரூபா | SAP ERP அனுமதி பத்திரம் ரூபா | தன்னியக்க முறைமை குழாய்த்தொகுதி ரூபா | மொத்தம் ரூபா |
|---|---|---|---|---|
| **11.2 பணமதிப்பிழப்பு** | | | | |
| 2022.01.01 அன்று உள்ளவாறு | 494,700,197 | 9,380,250 | 37,793,560 | 541,874,007 |
| ஆண்டிற்கான கட்டணம் | 29,775,640 | - | - | 29,775,640 |
| 2022.12.31 அன்று உள்ளவாறு | 524,475,838 | 9,380,250 | 37,793,560 | 571,649,648 |
| **11.3 2021.12.31 இன் தேறிய புத்தக மதிப்பு** | 66,674,599 | - | - | 66,674,599 |
| **11.4 2022.12.31 இன் தேறிய புத்தக மதிப்பு** | 36,898,958 | - | - | 36,898,958 |

**11.5** அருவச் சொத்துக்களின் மொத்தத் தொகைகளை ரூ.459,670,405 (2021 - ரூபா .459,670,405).

## 12. பொருட்பதிவேடுகள்

| | 2022 ரூபா | 2021 ரூபா மீளக்குறிப்பிடபட்டது |
|---|---|---|
| திருத்துவதற்கான பொது வன்பொருட்கள் | 457,139,827 | 409,024,236 |
| மோட்டார் உதிரிப்பாகங்கள் | 326,871,796 | 259,905,274 |
| நுகர் பொருட்கள் | 80,814,725 | 24,164,078 |
| முடிவுறுத்தப்பட்ட பொருட்கள் | | |
| லங்கா பெற்றோல் LP-95 | - | - |
| லங்கா பெற்றோல் LP-92 | 1,623,931 | 602,667 |
| லங்கா ஓட்டோ டீசல் LAD | 13,147,680 | 5,109,105 |
| | 879,597,959 | 698,805,360 |
| மெதுவாக நகரும் பதிவேட்டுப் பொருட்களுக்கான ஏற்பாடு | (17,074,498) | (16,750,173) |
| | 862,523,461 | 682,055,187 |

# நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்

2022 டிசம்பர் 31 அன்று முடிவுற்ற ஆண்டுக்கானது

| | 2022 ரூபா | 2021 ரூபா மீளக்குறிப்பிடபட்டது |
|---|---|---|
| **13. வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்கத்தக்கவைகளும்** | | |
| வர்த்தக கிடைக்கத்தக்கவை -தொடர்புடைய தரப்பினர் (குறிப்பு 13.1) | 8,492,160,381 | 9,317,649,253 |
| கிடைக்கத்தக்கவை | 97,380,718 | 81,040,415 |
| வைப்புகள், முற்பணங்கள், மற்றம் முற்கொடுப்பனவுகள் (குறிப்பு 13.3) | 2,006,778,573 | 1,690,628,286 |
| | 10,596,319,671 | 11,089,317,954 |

**13.1 வர்த்தக கிடைக்கத்தக்கவை -தொடர்புடைய தரப்பினர்**

| | உறவு | | |
|---|---|---|---|
| இலங்கை பெற்றொலியக் கூட்டுத்தாபனம் தேறிய மதிப்பக் குறைப்பு (குறிப்பு 13.2) | தாய் நிறுவனம் | 8,000,362,924 | 8,607,570,164 |
| மதிப்புக் குறைப்பு கழித்து லங்கா ஐஓசி பிஎல்சி (குறிப்பு 13.2) | ஏனைய முக்கிய பங்குடமையாளர்கள் | 491,797,457 | 710,079,090 |
| | | 8,492,160,381 | 9,317,649,253 |

**13.2** 2022 டிசம்பர் 31இல் உள்ளவாறு வர்த்தக கிடைப்பனவுகளில் வயதுப்பகுப்பாய்வு கீழே தரப்பட்டுள்ளது.

| | மொத்தம் | 0-30 நாட்கள் | 31-90 நாட்கள் | 91-180 நாட்கள் | 181-365 நாட்கள் | 365 நாட்களுக்கு மேல் |
|---|---|---|---|---|---|---|
| **இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்** | | | | | | |
| | 8,000,362,924 | 2,266,424,266 | 1,366,137,408 | 252,083,086 | 421,814,386 | 3,693,903,778 |
| | 8,000,362,924 | 2,266,424,266 | 1,366,137,408 | 252,083,086 | 421,814,386 | 3,693,903,778 |
| **லங்கா ஐஓசி பிஎல்சி** | 491,797,457 | 247,793,345 | 41,489,800 | 2,257,085 | - | 200,257,227 |
| | 491,797,457 | 247,793,345 | 41,489,800 | 2,257,085 | - | 200,257,227 |

| | 2022 ரூபா | 2021 ரூபா மீளக்குறிப்பிடபட்டது |
|---|---|---|
| **13.3 வைப்புகள், முற்பணங்கள் மற்றும் முற்கொடுப்பனவுகள்** | | |
| வைப்புகள், முற்பணங்கள் மற்றும் முற்கொடுப்பனவுகள் | 803,026,712 | 681,671,234 |
| முற்கொடுப்பனவு செய்யப்பட்ட அலுவலர் நலன்கள் | 1,203,751,861 | 1,008,957,052 |
| | 2,006,778,573 | 1,690,628,286 |

| | 2022 ரூபா | 2021 ரூபா மீளக்குறிப்பிடபட்டது |
|---|---|---|
| **14. ஏனைய நிதியியல் சொத்துக்கள்** | | |
| கம்பனி அலுவலர்களுக்கான கடன்கள் | | |
| மோட்டார் வாகனக் கடன்கள் | 183,570,349 | 217,195,096 |
| வீடமைப்புக் கடன்கள் | 1,453,812,070 | 1,590,350,388 |
| இடர் கடன்கள் | 1,158,360,899 | 1,221,725,914 |
| ஏனைய கடன்கள் | 352,779,779 | 330,388,025 |
| | 3,148,523,097 | 3,359,659,422 |
| (-) மதிப்பு குறைப்புக்கான ஒதுக்கு | (31,953,105) | (41,436,231) |
| | 3,116,569,992 | 3,318,223,191 |
| **14.1 நடைமுறையற்ற நிதியியல் சொத்துக்கள்** | | |
| மோட்டார் வாகனம் கடன்கள் | 146,856,279 | 173,756,077 |
| வீடமைப்புக் கடன்கள் | 1,319,952,838 | 1,428,524,719 |
| (-) மதிப்பு குறைப்புக்கான ஒதுக்கு | (31,953,105) | (41,436,231) |
| | 1,434,856,012 | 1,560,844,565 |
| **14.2 நடைமுறை நிதியியல் சொத்துக்கள்** | | |
| மோட்டார் வாகனக் கடன்கள் | 36,714,070 | 43,439,019 |
| வீடமைப்புக் கடன்கள் | 133,859,231 | 161,825,669 |
| இடர் கடன்கள் | 1,158,360,899 | 1,221,725,914 |
| ஏனைய கடன்கள் | 352,779,779 | 330,388,025 |
| | 1,681,713,979 | 1,757,378,626 |
| **15. காசும் காசுக்கு சமமானவையும்** | | |
| சாதகமான காசும் காசுக்கு சமமானவை மீதிகள் | | |
| காசு மற்றும் வங்கி இருப்புக்கள் | (47,051,772) | (257,060,110) |
| குறுகிய கால முதலீடுகள் | 2,053,160,997 | 2,513,989,768 |
| **காசுப்பாய்ச்சல் அறிக்கையின் நோக்கத்திற்காக மொத்த காசு மற்றும் காசுக்கு சமமானவை** | 2,006,109,225 | 2,256,929,657 |

## 16. முழுமையாக செலுத்தப்பட்ட சாதாரண பங்குகள்

| | 2022 எண்ணிக்கை | 2022 ரூபா | 2021 எண்ணிக்கை | 2021 ரூபா |
|---|---|---|---|---|
| முழுமையாக செலுத்தப்பட்ட சாதாரண பங்குகள் | 750,000,000 | 7,500,000,000 | 750,000,000 | 7,500,000,000 |

## 16.1 மூலதன ஒதுக்கு

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் இருந்து இணைக்கப்பட்டு சொத்துக்களை மாற்றும் போது, மூலதன இருப்பு ரூ. 979,000,000 மூலதனமாக்கல் செயல்முறையின் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்டது.

# நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்

2022 டிசம்பர் 31 அன்று முடிவுற்ற ஆண்டுக்கானது

| | 2022 ரூபா | 2021 ரூபா மீளக்குறிப்பிடபட்டது |
|---|---|---|
| **17. வரையறை செய்யப்பட்ட நலக் கடப்பாடுகள்** | | |
| **ஜனவரி 01 அன்று உள்ளவாறு மீதி** | 1,609,324,159 | 2,015,643,759 |
| நடப்பு சேவைச் செலவு | 85,514,820 | 81,507,384 |
| வட்டிச் செலவு | 185,072,279 | 161,251,501 |
| கணிப்பீட்டு (இலாபம்) நட்டம் | (411,261,666) | (428,606,379) |
| கொடுப்பனவு செய்யப்பட்ட நலன்கள் | (184,776,742) | (220,472,106) |
| டிசம்பர் 31 அன்றுள்ளவாறு மீதி | 1,283,872,850 | 1,609,324,159 |

**17.1** இலங்கை கணக்கியல் நியமம் 19 மூலம் விதந்துரைக்கப்பட்டவாறு, கணிப்பிட்டு தொழில்சார் நிறுவனமான மெர்சர்ஸ் எக்சூரியல் அன்ட் மனேஜ்மன்ட் கன்ஸல்டன்ஸ் பிறைவட் லிமிடெட் நிறுவனத்தினால் 2022 டிசம்பர் 31 நிலவரப்படி ஓய்வூதிய நன்மைகள் தேவைப்பாட்டின் உண்மையான மதிப்பீடு "உய்த்தறியப்பட்ட அலகு கணக்கு முறைமை" பயன்படுத்தப்பட்டு கணிப்பீடு செய்யப்பட்டது.

### 17.2 கோட்பாட்டு ரீதியான கணிப்பீட்டு வீதங்கள்

பெறுமதிக்கு அடிப்படையான கோட்பாட்டு கணிப்பீட்டு நிதியியல் வீதங்கள் பின்வருமாறு

| | 2022 | 2021 |
|---|---|---|
| கழிவு வீதம் | 18.50% | 11.50% |
| சம்பள உயர்வு வீதம் | 3 ஆண்டுகளுக்கொரு முறை 30% | 3 ஆண்டுகளுக்கொரு முறை 25% |
| ஊழியர் புரள்வு | 1% | 1% |

| | 2022 ரூபா | 2021 ரூபா |
|---|---|---|
| **17.3 வரையறை செய்யப்பட்ட நலக் கடப்பாட்டு திட்டத்தின் முதிர்வுத் தோற்றப்பாடு** | | |
| ஒரு வருடத்திற்கு குறைவு | 172,740,147 | 162,355,684 |
| 1-2 வருடங்களுக்கு இடைப்பட்டது | 156,115,292 | 154,674,908 |
| 2-5 வருடங்களுக்கு இடைப்பட்டது | 366,290,752 | 385,374,669 |
| 5 வருடங்களை தாண்டியது | 588,726,658 | 906,918,900 |
| | 1,283,872,850 | 1,609,324,160 |

அறிக்கையிடல் காலத்தின் முடிவில் வரையறுக்கப்பட்ட நலக் கடப்பாடுகள் திட்டத்தின் சராசரி கால அளவு நிறைவேற்று தர ஊழியர்களுக்கு 5.4 ஆண்டுகள் மற்றும் நிறைவேற்றுத்தரமற்ற ஊழியர்களுக்கு 5.7 ஆண்டுகள் ஆகும். நிறைவேற்றுத் தர ஊழியர்களின் சராசரி மீதமுள்ள பணி வாழ்க்கை 10.5 ஆண்டுகள் மற்றும் நிறைவேற்றுத்தரமற்ற ஊழியர்களுக்கு 11.4 ஆண்டுகள்.

### 17.4 உண்மையான மதிப்பீட்டில் பயன்படுத்தப்படும் அலுவலர்களின் உணர்திறன்

காப்பு கணிப்பீட்டில் ஈடுபடுத்தப்பட்ட உணர்வுத்தனமை ஊகங்கள் 2022ம் ஆண்டு தொடர்பில் வரையறை செய்யப்பட்ட நலப் பொறுப்பு அளவீட்டில் இடம்பெற்ற முரணற்ற மாறிலிகளுடன் ஈடுபடுத்தப்பட்ட முக்கிய ஊகங்களின் நியாயமான சாத்தியமான மாற்றத்திற்கான உணர்வுத்தனமையினை பின்வரும் அட்டவணை எடுத்துக் காட்டுகிறது.

| உணர்வுத்தன்மை மட்டம் | கழிவு வீதம் | | எதிர்கால சம்பள அதிகரிப்பு வீதம் | |
|---|---|---|---|---|
| | அதிகரிப்பு 1% | குறைவு -1% | அதிகரிப்பு 1% | குறைவு -1% |
| வரையறை செய்யப்பட்ட நலக்கடப்பாடு மீதான தாக்கம் | 1,224,838,494 | 1,348,482,311 | 1,303,819,083 | 1,264,286,601 |

| | | 2022 ரூபா | 2021 ரூபா மீளக்குறிப்பிடபட்டது |
|---|---|---|---|
| **18. வர்த்தகம் மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவை** | | | |
| வர்த்தகம் செலுத்தப்படத்தக்கவை -தொடர்படைய தரப்பு | (18.1) | 836,158,852 | 403,967,660 |
| - ஏனையவை | | 388,987,224 | 284,207,201 |
| ஏனையவை செலுத்தத்தக்கவை | | 800,007,581 | 885,169,318 |
| திரண்ட செலவுகள் உள்ளடங்களாக நானாவித கொடுநர் | | 852,221,330 | 492,929,994 |
| | | 2,877,374,987 | 2,066,274,173 |
| **18.1 வர்த்தக செலுத்தப்படத்தக்கவை-தொடர்புடைய தரப்பினர்** | **உறவுமுறை** | | |
| இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | தாய் நிறுவனம் | 836,158,852 | 403,967,660 |
| | | 836,158,852 | 403,967,660 |

